# கிளிமலர்

இதழ்-01



மாவட்ட செயலகமும்
மாவட்ட கலாசார அதிகார சபையும்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிமலர்

## இதழ் : 01

மாவட்டச் செயலகமும்
மாவட்ட கலாசார அதிகார சபையும்
கிளிநொச்சி
**2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலின் விபரம்

நூலின் பெயர் : கிளிமலர்

நூல் வகை : ஆண்டிதழ்

முதற்பதிப்பு : மார்கழி - 2019

பதிப்புரிமை : கிளிநொச்சி மாவட்ட கலாசார அதிகாரசபை
மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி

தாள் வகை : 80gsm

பிரதிகள் : 300

அளவு : B5

பக்கங்கள் : 170

வெளியீட்டெண் : 01

அட்டை வடிவமைப்பு : சு.பிரணந்தன்
மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி

அச்சுப்பதிப்பு : சிவா பதிப்பகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட செயலக தொலைநோக்கும் செயற்பணியும்

## தொலைநோக்கு - Vision

நவீன மயப்படுத்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் ஊடாக பயனுறுதி மிக்க மக்கள் சேவையை வழங்கல்

## செயற்பணி - Mission

அரச கொள்கைகளுக்கு அமைவாக வினைத்திறனைப் பயன்படுத்தி சிறந்த ஒருங்கிணைப்பின் மூலம் மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் சமூக பண்பாட்டு விழுமியங்களை உயர்த்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் உள்ளே


| | |
|---|---|
| 01. தமிழ்மொழி வாழ்த்து | v |
| 02. மாவட்ட கீதம் | vi |
| 03. தமிழ்த்தாய் வாழ்த்து | vii |
| 04. மலர்க்குழு | viii |
| 05. கிளிநொச்சி மாவட்ட கலாசார அதிகார சபை விபரம் | ix |
| 06. ஆசிச் செய்திகள் | x - xiii |
| 07. வாழ்த்துச் செய்திகள் | xiv - xxvi |
| 08. வெளியீட்டுரை | xxvii |
| 09. கலை மரபில் (பாரம்பரியத்தில்)சிலரின் கால்த் தடங்கள். | 01 - 40 |
| 10. கிளிநொச்சி மாவட்டமும் கலை கலாசாரமும் | 41 - 45 |
| 11. கிளிநொச்சி மாவட்டத் தொன்மையான இசைக்கலைகள் | 46 - 48 |
| 12. தமிழ்த்தேச கலைச்சொத்து காமன்கூத்து | 49 - 52 |
| 13. கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திப் பணியில் நான் முகம் கொடுத்த பிரச்சினைகளும் சவால்களும் | 53 - 60 |
| 14. நாமும் எமது கலாசாரத் தனித்துவமும் | 61 - 64 |
| 15. மறுவாழ்வு | 65 - 68 |
| 16. தமிழர்களின் தொன்மைக்கலை "பறைஇசை" | 69 - 73 |
| 17. இயக்கச்சி கோட்டையும் இன்றைய நிலையும் | 74 - 78 |
| 18. பூநகரிப் பிரதேச இடப்பெயராய்வு ஓர் அறிமுகம் | 79 - 102 |
| 19. பூநகரியில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களும் அவற்றின் வளர்ச்சிப் போக்கும் | 103 - 108 |
| 20. பூநகரிப் பிரதேசத்தில் அருகிவரும் நிலையிலுள்ள அருங்கலைகளை பேணிப்பாதுகாத்தல் | 109 - 117 |
| 21. குடியேற்றத்திட்டங்களில் கனகபுரம் படித்த வாலிபர்குடியேற்றத்திட்டத்தின் வளர்ச்சி | 118 - 127 |
| 22. இரணைமடு | 128 - 129 |
| 23. அறநெறியும் அண்மைக் காலப் போக்கும் | 130 - 132 |
| 24. கிளி மண்ணில் கத்தோலிக்கம் - ஒரு வரலாற்றுப் பார்வை | 133 - 138 |
| 25. கடந்து போகும் வாழ்க்கையிலும் கடந்து போகாத கடவுச்சீட்டு | 139 - 142 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீக்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டக் கீதம்

இயற்றியவர் : திருமதி பி.மதுரநாயகம்
உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி

இசையமைப்பு : கு.அற்புதன்
கலைக்குவியம், கல்வியங்காடு

இராகம் : பிருந்தாவன சாரங்கா

பாடியவர் : திருமதி.கௌ.ஜெயபாரதி

செந்நெல் களனிசூழ் செந்திருவே வாழ்க
சீர்நிறை கிளிநொச்சி அன்னையே வாழ்க
கன்நெல் தமிழ் வளர்க்கும் கலையளகே வளர்க
கல்வி செல்வ வளம் செழிக்கும் நிறைமதியே ஒளிர்க
வாழ்க, வளர்க, ஒளிர்க ....

இரணைமடுக்குளம் இதமாய இயங்கும்
ஏற்றம்மிகு நீர்ப்பாசனம் எங்கும் பசுமை சேர்க்கும்
கைத்தொழில் கடற்றொழிலும் காத்திரமாய் ஓங்கும்
சுற்றுலாத்துறை வளமும் சுந்தரமாய்த் திகழும்
வாழ்க, வளர்க, ஒளிர்க ....

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளையென்னும்
பிரதேச செயலகங்கள் கொண்ட எங்கள் மாவட்டம்
பாரம்பரியக் கலைகளும் தொன்மை வரலாறும்
பாரில் என்றும் புகழ் பரப்பும் பண்புமிகு மாவட்டம்
வாழ்க, வளர்க, ஒளிர்க ....

நாட்டுக்குகந்த பிரஜைகளை நாளும் உருவாக்கும்
கூட்டுவலு நிறைந்த மாந்தர் குலவும் எங்கள் மாவட்டம்
மாறும் உலகின் சவால்களை வெல்லும் மாவட்டம்
மானிடநேயம் காக்கும் மாண்புமிகு மாவட்டம்
வாழ்க, வளர்க, ஒளிர்க ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே (1)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (2)

மனோன்மணியம்
பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

1. **திரு.சுந்தரம் அருமைநாயகம்**
   அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

2. **திரு.சிவபாதசுந்தரம் சத்தியசீலன்**
   மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம்,
   கிளிநொச்சி.

3. **திரு.நடராசா திருலிங்கநாதன்**
   மேலதிக அரசாங்க அதிபர் (காணி),
   மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

4. **திரு.தங்கவேலாயுதம் பிருந்தாகரன்**
   உதவி பிரதேச செயலர் - மாவட்ட செயலகம், கிளிநொச்சி

5. **திரு.காசிநாதர் இராசதுரை**
   மாவட்ட கலாசார உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம்,
   கிளிநொச்சி.

6. **திருமதி.விஜயசுந்தரம் சுகுணாளினி**
   மாவட்ட கலாசார உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம்,
   கிளிநொச்சி.

7. திரு.வை.மகேந்திரராசா - உப தலைவர் (கி.மா.க.அ.சபை)
8. திரு.ம.றோமியல் - செயலாளர் (கி.மா.க.அ.சபை)
9. திரு.பொ.கார்த்தி - பொருளாளர் (கி.மா.க.அ.சபை)
10. திரு.ப.ஸ்ரீவனஜன் - உறுப்பினர் (கி.மா.க.அ.சபை)
11. திரு.கு.ரெஜினோல்ட் - உறுப்பினர் (கி.மா.க.அ.சபை)
12. திரு.வ.ஏழுமலைப்பிள்ளை - உறுப்பினர் (கி.மா.க.அ.சபை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு



**இருப்பவர்கள் - இடமிருந்து வலமாக**

திரு. கா. இராசதுரை (மாவட்ட கலாசார உத்தியோகத்தர்), திரு. சி. சத்தியசீலன் (மேலதிக அரசாங்க அதிபர்), திரு. சுந்தரம் அருமைநாயகம் (அரசாங்க அதிபர்), திரு. ந. திருலிங்கநாதன் (மேலதிக அரசாங்க அதிபர் - காணி), திரு. த. பிருந்தாகரன் (உதவி மாவட்ட செயலாளர்), திருமதி. வி. சுகுணாளினி (மாவட்ட கலாசார உத்தியோகத்தர்)

**நிற்பவர்கள் - இடமிருந்து வலமாக**

திரு. பெ. புண்ணியராஜ் (உறுப்பினர் - மா.க.அ.ச), திரு. பொ. கார்த்தி (பொருளாளர் - மா.க.அ.ச), திரு. கு. ரெஜினோல்ட் (உறுப்பினர் - மா.க.அ.ச), திரு. வ. ஏழுமலைப்பிள்ளை (உறுப்பினர் - மா.க.அ.ச), திரு. ப. ஸ்ரீவனஜன் (உறுப்பினர் - மா.க.அ.ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட கலாசார அதிகார சபை



**இருப்பவர்கள் - இடமிருந்து வலமாக**

திருமதி.மா.அருந்தவராணி (நிர்வாக உத்தியோகத்தர்), திரு.த.பிருந்தாகரன் (தலைவர்), திரு.சுந்தரம் அருமைநாயகம் (போசகர்), திரு.சி.குகபாலன் (கணக்காய்வாளர்), திரு.கா.இராசதுரை (ஒருங்கிணைப்பாளர்)

**நிற்பவர்கள் - இடமிருந்து வலமாக**

செல்வி.வே.சுபிதா (உறுப்பினர்), திரு.செ.தனபாலசிங்கம் (உறுப்பினர்), சிவஸ்ரீ.ந.பிரபாகரக்குருக்கள் (ஆலோசகர்), திரு.செ.கஜானன் (உறுப்பினர்), திரு.வ.ஏழுமலைப்பிள்ளை (உறுப்பினர்), திரு.க.குலோந்திரராசா (உபசெயலாளர்), திரு.கு.ரெஜினோல்ட் (உறுப்பினர்), திரு.ப.ஸ்ரீவனஜன் (உறுப்பினர்), திரு.பொ.கார்த்தி (பொருளாளர்), திரு.பெ.புண்ணியராஜ் (உறுப்பினர்), திருமதி.ஜெ.வராகினி (உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கிளிநொச்சி மாவட்ட கலாசார அதிகார சபை
## நிர்வாக சபை விபரம் - 2019

| தொ.எ | பதவி | | பெயர் |
|---|---|---|---|
| 01 | தலைவர் | | திரு.த.பிருந்தாகரன் |
| 02 | உப தலைவர் | | திரு.நா.வை.மகேந்திரராசா |
| 03 | செயலாளர் | | திரு.ம.றோமியல் |
| 04 | உப செயலாளர் | | திரு.க.குலேந்திரராசா |
| 05 | பொருளாளர் | | திரு.பொ.கார்த்தி |
| 06 | நிர்வாக உத்தியோகத்தர் | | திருமதி.மா.அருந்தவராணி |
| 07 | ஒருங்கிணைப்பாளர் | | திரு.கா.இராசதுரை |
| 08 | நிர்வாக உறுப்பினர்கள் | 1 | திரு.கு.றெஜினோல்ட் |
| 09 | | 2 | திரு.ப.ஸ்ரீவனஜன் |
| 10 | | 3 | செல்வி.வே.சுபிதா |
| 11 | | 4 | திரு.செ.கஜானன் |
| 12 | | 5 | திரு.அ.ஞானசீலன் |
| 13 | | 6 | திருமதி.ட.மரியகுளோடிற்றாசுகி |
| 14 | | 7 | திரு.பெ.புண்ணியராஜ் |
| 15 | | 8 | திருமதி.ஜெ.வராகினி |
| 16 | | 9 | திரு.நா.வேலாயுதம் |
| 17 | | 10 | திரு.சிவ.ஏழுமலைப்பிள்ளை |
| 18 | | 11 | திரு.செ.தனபாலசிங்கம் |
| 19 | | 12 | திருமதி.ம.றீற்றாஜென்சி |
| 20 | ஆலோசகர்கள் | 13 | சிவஸ்ரீ.ந.பிரபாகரக்குருக்கள் |
| 21 | | 14 | வண.T.S.யோசுவா அடிகள் |
| 22 | கணக்காய்வாளர் | | திரு.சி.குகபாலன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஶ்ரீ ஜெகஜெகதீஸ்வரக்குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி



வன்னி பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் என்று சொல்லும் போது மனம் குளிர்கிறது. காரணம் இங்கே பலதரப்பட்ட கலை அம்சங்கள் கலைத்திறன்கள் ஒளிந்து கிடக்கின்றன. அவற்றை எடுத்துக் காட்டுவதற்கோ அல்லது வெளிப்படுத்துவதற்கோ சரியான சூழ்நிலை, சந்தர்ப்பம், இதுவரை உருவாவில்லை என்பதே முதற் காரணம் எனலாம். ஆனால் இலை மறை காயாக இருக்கும் அனைத்து வடிவங்களையும் கலாசார அதிகார சபையினர் ஒரு மரத்தின் கீழ், ஒரு குடையின் கீழ் என்று சொல்வார்களே அதே உதாரணத்திற்கு அமைவாக ஒரு நூலின் மூலம், ஒரு மலர் வெளியீட்டின் மூலம் அனைத்து மக்களும் அறியும் வண்ணம் ஒருங்கமைத்திருப்பதையிட்டு மிகவும் மன மகிழ்ச்சியுடன் மனதாரப் பாராட்டுகின்றேன்.

அழிந்து வரும் கலைகளில் நாட்டுக்கூத்து, கதை கலாட்ஷேபம், வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம் என்பவற்றுக்கு முக்கிய இடம் இருந்தது. அவை மனிதன் வாழ்வில் தேவையான கருத்துக்களையும், நல்ல தத்துவங்களையும் மற்றும் நடைமுறைகளையும் எடுத்துக் கூறுவதாக இருந்தது. இப்பொழுது வழங்கப்படும் கலைகளில் காமமும் களியாட்டமும் மிதமிஞ்சி இருக்கின்றன.

எனவே வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினை உணர்வதற்கும் முன்னேற்றத்திற்கும் நல்லதொரு எடுத்துக்காட்டாக அமையும் இந்த மலர் வெளியீடு கிளிநொச்சி வாழ் மக்களையும், உலகம் வாழ் தமிழ் மக்களையும், நல்லதொரு வாழ்வையும், சிறந்த சமுதாயத்தையும் உருவாக்கும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. எனவே மலர் சிறப்பாக அமைந்து மென்மேலும் வளர எனது நல்லாசியையும் வாழ்த்துக்களையும் கூறுவதில் பெருமை அடைகின்றேன்.


சுபமஸ்த்து

*சிவஸ்ரீ ஜெகஜெகதீஸ்வரக்குருக்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மறைக் கோட்ட முதல்வரின் ஆசிச்செய்தி



கிளிநொச்சி மாவட்டத்திற்கே உரித்தான கலைப் பாரம் பரியங்களை வெளிக்கொணரும் நோக்கிலும் அழிந்து செல்லுகின்ற கலை வடிவங்களைப் பாதுகாக்கின்ற வகையிலும் கிளிநொச்சி மாவட்ட கலாசார அதிகார சபையினாலே வெளியிடப்படுகின்ற மலர் வெளியீட்டுக்கு எனது ஆசிச்செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு

முன்தோன்றிய மூத்தகுடி" தமிழ்க்குடி என்ற பழைமை செழுமை நிறைந்த எம்மரபின் வேர்களை மார்தட்டிப் பெருமையுற பேசுகின்றது புறப்பொருள் வெண்பா மாலை.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று உலகத்தையே சொந்தங் கொண்டாடிய சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனாரின் வாரிசுகள் நாம்.

அப்பன், ஆச்சி, பாட்டன், பூட்டி ஆண்டாண்டு காலங்களாய் நெஞ்சாங்கூட்டுக்குள்ளே இருத்தி நேசித்த தமிழை, கலைகளை, கலாசாரத்தை வாழையடி வாழையாக நீளும் எம் வரலாறுகளை அடுத்த தலைமுறைக்கு கவனமாகக் கொடுப்பது காலத்தின் கட்டளை என்பதனை உணர வேண்டிய உன்னத தருணம். ஓர் இனத்தை அழிக்க வேண்டுமாயின் அதன் மொழிகள், கலைகள், கலாசாரம், பண்பாடு இவைகளை அழித்தால் மட்டும் போதும் ஓர் இனம் தன் அடையாளத்தை இழந்து தானாகவே அழிந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நாம் விழித்துக் கொள்ள வேண்டிய உச்ச தருணம். கிளிநொச்சி மண்ணின் பாராம்பரியத்தின் தொன்மையின் களம் குறைந்திடாது காத்திடும் மிகக் காத்திரமான முயற்சி. கைநழுவிப் போகும் எம் முதுபெரும் சொத்துக்களை கவனமாகக் காத்திடும் முயற்சி சிறப்பானது.

"தமிழனென்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா"

என்ற வார்த்தைக்கு அர்த்தம் கொடுக்கு முகமாக நாளைய தமிழனின் வரலாறு உங்கள் பெயர்களையும் சுமந்து கொண்டு கம்பீரமாக நடக்கும். உங்கள் பாரிய பணியும் முயற்சியும் வெற்றி பெறவும், மேலும் பல்லாண்டுகள் தமிழ் இனத்திற்கு மகத்தான சேவைகளைப் புரிய, எல்லாம் வல்ல இறைவன் தொடர்ந்து மேலான கொடைகளை உங்கள் அனைவருக்கும் வாரி வழங்கி துணை புரியுமாறு இறைவனை வேண்டி எனது நல்லாசிகளை இனிதாக வழங்குகின்றேன், வாழ்த்துகின்றேன்.

*அருட்பணியாளர் ஜே.அ. ஜேசுதாஸ்,*
*மறைக்கோட்ட முதல்வர்,*
*புனித திரேசாள் ஆலயம்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌலவி F.M பறூஸ் அவர்களின்
## ஆசிச் செய்தி



பசுமையும், செழுமையும் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்திற்கே உரித்தான கலைப்பாரம்பரயங்கள் ஏராளம் அவைகளை வெளிக் கொண்டுவரும் நோக்கமானது சந்தோசம் மிக்க ஒன்றாகும். இன்றைய இயந்திர வாழ்க்கைக்குப் பழகிவரும் சமூக வட்டத்தில் இம்மலர் எதிர்காலத்தில் மணம் வீசும் என்று வாழ்த்தி இம்மலர் வெளியீட்டின் சேவையைப் போற்றி வெற்றியின் பாதையைத் தொட இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

F.M பறூஸ்
ஸலாம் ஜும்மா மஸ்ஜித் பள்ளிவாசல்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட கலாச்சார மலர் வெளியீட்டிற்கான வாழ்த்துச்செய்தி



கிளிநொச்சி மாவட்ட கலாசார அதிகார சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தின் கலைப் பாரம்பரியங்களை வெளிப்படுத்தம் வகையிலும் கலைவடிவங்களை பாதுகாக்கின்ற வகையிலும் வெளியீடு செய்யப்படுகின்ற "கிளிமலர்" இதழ்-01 நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன்.

கிளிநொச்சி மாவட்டமானது தனக்கே உரிய தனித்துவமான கலைப்பாரம்பரியங்களையும் தொன்மை மிகு கலை வடிவங்களையும் இற்றைவரை தன்னகத்தே கொண்டு திகழ்வதுடன் பேணி பாதுகாப்பதிலும் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்வதிலும் கரிசனையுடன் செயற்பட்டு வருவதனை பார்க்கின்ற பொழுது மாவட்டத்தின் அரச அதிபர் என்ற வகையில் பேரானந்தம் அடைகின்றேன்.

ஓர் இனத்தின் இருப்பு தொன்மை பண்பாட்டுப் பாரம்பரியம், கலாசாரம் என அத்தனையையும் பலப்படுத்துபவை அவ்வினத்தவர் வழிமுறையாகப் பின்பற்றி வரும் கலை மரபுகளே அக்கலை மரபுகளின் அடிப்படையினை மாற்றமடையாது பேணுவது காலத்தின் தேவையாகும் அக்கலை பண்பாட்டு மரபுகளை பேணுதலோடு ஆவணப்படுத்தும் முயற்சியினை மேற்கொள்ள எத்தனிக்கும் மாவட்ட கலாசார அதிகார சபையின் முயற்சி மிகுந்த போற்றுதலுக்குரியதாகும்.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம் முயற்சியானது படைப்பாளர்களுக்கும் எழுத்தாளர்களும் களம் அமைத்து கொடுப்பதுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் கலைத்துறைசார் வரலாற்றில் முக்கிய பதிவாகவும் இருக்கும் என்பது பேருண்மையாகும் இம் மலரானது மிகச்சிறப்பாக தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என பிரார்த்திப்பதுடன் இதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி பாராட்டுதல்களையும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*சுந்தரம் அருமைநாயகம்*
*அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்*
*கிளிநொச்சி மாவட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார அலுவல்கள் பணிப்பாளரின் செய்தி



உணர்ச்சி பூர்வமான உள்ளம் படைத்த மானிட சமூகத்தை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்துவதே கலையின் நோக்கமாகும். அந்த வகையில் மனக்கிளர்ச்சியினை கட்டுப்படுத்திய மென்மையான உணர்வு மிக்கதோர் சமூகத்தை உருவாக்குவதில் கலையின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

புராதன பண்டிதர்கள் உலகை ஒரே கலைக் கூடமாக நோக்கினர். அவர்கள் அவற்றை உலகளாவிய கலை, சிற்பம், நன்னெறி, கலையும் விஞ்ஞானமும் என வகைப்படுத்தினர். அவ் அழகியற்கலை, கவின்கலை, என்பன கலை இலக்கிய நூல் வடிவங்களாக தொழில்நுட்ப கலாசாரம் ஒன்றை நோக்கி முன்னேறியுள்ளன. அவ்வாறானதொரு பின்னணியில் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், கலாசார அதிகார சபையும் இணைந்து ஏற்பாடு செய்கின்ற பிரதேச இலக்கிய விழாவில் மாவட்டத்திற்கே உரித்தான கலைப்பாரம்பரியத்தை வெளிக்கொணருதல் என்ற தொனிப் பொருளில் நூலை வெளியிடுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கைக் கலைத்துறையில் கலைஞர்களை உற்சாகப் படுத்துதல், தேசிய அளவிலான வளர்ச்சியின் பரந்த விளம்பரம் மற்றும் பொதுமக்களின் மனப்பான்மை என்பவற்றை நனவாக்கம் பிரதேச இலக்கிய விழாக்கள் சிறந்ததொரு தெளிவான அனுபவமாகும். கலைஞர்களை ஊக்குவித்தல் மற்றும் இலக்கியம் படைத்தல் ஆகியவற்றை மூத்த கலைஞர்களிடையே மெருகேற்றுவதில் கலாசார அதிகார சபைகள் பாரிய பங்களிப்புச் செய்கின்றன என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச கலாசார விழாக்களை ஏற்பாடு செய்கின்ற கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட செயலக கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக சிறப்பு மலர் ஒன்றை வெளியிட கிளிநொச்சி மாவட்ட செயலக கலாசார அதிகார சபை எடுத்த முயற்சியானது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் கலை ஆக்கத்திறனை வெளிப் படுத்துகின்ற அனைத்து படைப்பாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலை வாழ்க்கை வழிகளை மேலும் பிரகாசப்படுத்துவதால் தேசிய தரத்தின் கலைஞர்கள் உருவமெடுக்க இறைவன் அருள் அவர்கட்கு கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

*அனுஷா கோகுல பர்னாந்து*
*பணிப்பாளர்*
*கலாசார அலுவல்கள் திணைக்களம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் மாவட்ட கலாசார அதிகார சபையும் இணைந்து வெளியிடப்படும் கன்னிப்படைப்பான "கிளிமலர்" இதழ்-01 சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆக்க இலக்கியங்களையும் அழிந்து போகும் கலைகளையும் அடுத்த சந்ததியினருக்குக் கொண்டு செல்வதில் கலைஞர்களின் பங்களிப்பு மிகவும் கனதியானது. இவற்றை அச்சுருவில் வெளிக்கொண்டு வந்து எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்வதற்கு வழிவகை செய்வது சிறப்பானதாகும்.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சியின் கரைஎழில் ஆகவும், கண்டாவளையின் வளைஓசை நாதங்களாகவும், பூநகரியின் பூந்துணர் நறவங்களாகவும், பச்சிலைப்பள்ளியின் பசுந்துளிர் இதழ்களாகவும் வருடந்தோறும் மலரச் செய்து தங்கள் ஆவணப்படுத்தும் பணிகளை செவ்வனே செய்து வருகின்றார்கள். அதற்கு இணையாக மாவட்ட மட்டத்திலும் மலர் வெளிவர தொடங்குவது இன்னும் வலுச்சேர்க்கின்றது.

காலத்தின் கண்ணாடிகள் எனப்படும் இலக்கியங்களை மாவட்டத்தில் வாழ்கின்ற படைப்பிலக்கியவாதிகளின் ஊடாக பதிவு செய்து ஒரு தலைமுறையினரிடமிருந்து இன்னுமொரு தலைமுறையினருக்கு வரலாற்றுச் சான்றுகளை கொண்டு செல்கின்ற சீரிய பணியினை இம்மலர் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் என்பது திண்ணம்.

எதிர்காலத்தில் எமது வரலாறுகள், பாரம்பரியங்கள், கலை கலாசாரங்கள் போன்ற ஆக்கங்களை சுமந்து வெளிவர வேண்டும் என வாழ்த்துவதோடு இக்கிளிமலர் நூற்றாண்டுகள் கடந்து தன் பணியினை செய்ய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

*திரு. சிவபாதசுந்தரம் சத்தியசீலன்*
*மேலதிக மாவட்ட செயலர்*
*கிளிநொச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஒரு சமூகத்தின் அல்லது ஒரு பிரதேசத்தின் வாழ்வியல் முறைகளைப் படம் பிடித்துக் காட்டுவனவே அச்சமூகத்தின் அல்லது அப்பிரதேசத்தின் கலாசாரப் பண்பாடுகளாகும். அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் தனித்துவமான தனக்கே உரித்தான கலாசார, பண்பாடுகள் காணப்படுகின்றன. இருப்பினும் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் உலக மயமாக்கல் காரணமாக மனிதனின் வாழ்வியல் முறையில் ஏற்படும் மாற்றங்கள் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் பொருத்தமானதாகும்.

அதன் அடிப்படையில் மக்கள் வாழ்வியல் முறையில் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பானது எனினும் ஒவ்வொரு காலகட்டத்திலும் எமது சமூகம் எவ்வாறான கலாசார, பண்பாடுகளைக் கொண்டிருந்தது என்பதனை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்ல வேண்டியது அவசியமானதாகும். இதற்காக ஒவ்வொரு காலப்பகுதியிலும் காணப்படுகின்ற கலாசார பண்பாட்டு விடயங்களை ஆவணப்படுத்தப்படவேண்டியது அவசியமானதாகும்.

இவ்வடிப்படையில் கிளிநொச்சி மக்களின் வாழ்வியல் தொடர்பான ஆக்கங்களை உள்ளடக்கிய மலரினை வெளியிடுவது காலத்தின் தேவையாக காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற கலை மரபுகள் தொடர்பாக மட்டுமன்றி சில பிரதேசங்கள் தோற்றம், வளர்ச்சி என்பன தொடர்பான கட்டுரைகளையும் தன்னகத்தே கொண்டு இம்மலர் வெளிவருவது எமது வரலாறுகள் தொடர்பான தகவல்களை ஆவணப்படுத்தும் முக்கிய விடயமாக காணப்படுகிறது.

இம்மலர் சிறந்த முறையில் வெளியிடப்படுவது தொடர்பாக எனது மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு வருடந்தோறும் பொருத்தமான ஆக்கங்களை உள்ளடக்கி இம்மலர் தொடர்ந்து வெளிவர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ந.திருலிங்கநாதன்,*
*மேலதிக அரசாங்க அதிபர் (காணி)*
*கிளிநொச்சி மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மாவட்ட கலாசார அதிகார சபையினால் வெளியிடப்படும் கலாசார மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்கின்ற எழுத்தாளர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலும் அவர்களின் ஆக்கங்களை உலகிற்கு சான்றுப்படுத்தும் வகையிலும் இந்நூல் வெளியிடப்படுவது பாராட்டத்தக்க விடயமாகும்.

கிளிநொச்சி மாவட்டமானது பாய்ந்தோடும் ஆறுகளும் பரந்த வயல் வெளிகளும் வளர்ந்த காடுகளும் அமைந்த இயற்கை எழில் நிறைந்த மாவட்டமாகும். நாக வழிபாடுகளின் சிறப்புக்களை எடுத்தியம்பும் மாவட்டமாகவும், தொன்மை மிக்கதான கலை பண்பாட்டு விழுமியங்களை கொண்டமைந்த மாவட்டமாகவும் திகழ்கின்றது.

இவ்வாறான விழுமியங்களை ஆவணங்கள் மூலம் சான்றுப் படுத்துவதென்பது இக்காலத்தில் முக்கிய தேவைப்பாடாகும். அதனை உணர்த்தும் வகையில் பல நபர்களின் தேடல்களுடனும், படைப்புக்களுடனும் இம்மலரானது வெளிவருவது பாராட்டுதற்குரியது. இம்முயற்சிக்கு ஒத்துழைத்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*திருமதி. சுஜீவா சிவதாஸ்,*
*உதவிப்பணிப்பாளர்,*
*பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மாட்டச் செயலகமும், மாவட்டக் கலாசார அதிகார சபையும் இணைந்து வெளியிடும் கலாசார மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

ஒரு சமூகத்தின் கலை, கலாசார விழுமியங்களே அச்சமூகத்தின் தனித்துவத்தை உலகிடை அடையாளப்படுத்தி நிற்கின்றன என்பது வரலாற்று உண்மையாகும். கலையின் வாழிடம் அதன் போக்கிடம் எல்லாமே இயற்கைதான். இயற்கையில் இருக்கும் இந்த விலைமதிப்பற்ற கலைப் புதையலை மனித உணர்வுகள் தரிசிக்கின்ற போது கலை முழுமை பெறுகின்றது. ஆதலால் தான் மனிதன் கலையை ஆத்மார்த்தமாக நேசிக்கின்றான்.

இலக்கண இலக்கியச் செறிவுகளால் தனக்கென ஒரு தனிப்பட்ட அடையாளச் சிறப்பைக் கொண்டுள்ள தமிழ் மொழியில் இல்லாத அம்சங்களே இல்லை எனலாம். சங்ககாலம் முதல் இன்று வரை ஆராய்ந்தால் மனிதனின் சாதிப்புக்கள் அனைத்தும் சல்லடை போட்டு பேசப்பட்டுள்ளதை வழிவழியாக வந்த இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

அறிவின் வழி விரியும் கற்பனைகளின் புலக்காட்சியும் உருக்களின் வழி விரியும் உண்மைகளின் புறக்காட்சியும் என மனிதனைச் சூழ்ந்து கொள்ளும் சமூக ஊடகங்களின் தகவற் சுனாமியில் ஒவ்வொரு மனிதனும் வாசிக்க வேண்டிய வரலாற்றின் பக்கங்களும் படிமங்களும் தப்பிப்பிழைத்திடல் கடினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் போரும் இழப்பும் வாழ்வாகிப் போன கிளிநொச்சி மாவட்டத்தின் இருப்பினையும் இல்லாமல் போன அதன் உண்மைகளின் புறக்காட்சிகளையும் கண்களில் சேகரித்து மேவிப்பாயும் வரலாற்று வெள்ளத்தில் வழிந்தோடி விடாமல் தூக்கி நிறுத்திப் பாதுகாத்து நூல் வடிவில் நம்கரங்களில் தர இருக்கும் இம்முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் மாவட்டச் செயலாளர், கலாசார உத்தியோகத்தர்கள், மலர்க்குழுவினர் அனைவருக்கும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*ப.ஜெயராணி,*
*பிரதேச செயலாளர்,*
*பிரதேச செயலகம்,*
*பச்சிலைப்பள்ளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பில் உயர்ந்து பார் புகழ் ஓங்குக!



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் கிளிநொச்சியின் பண்பாட்டுப் பெட்டகமாக வெளிவரும் கலாசார மலருக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன். எம் இனத்தின் வாழ்வும், வனப்பும், இருப்பும், அதன் பண்பாட்டுப் பெருமையும் உலகெல்லாம் வியந்து பாராட்டப்பட்டு வருவது அனைவரும் அறிந்த பேருண்மை.

அவ்வகையில் கிளிநொச்சியும் இங்கு வாழும் தமிழினமும், சிறப்பாக விதந்து நோக்கத்தக்க வகையில் சீரிய பண்பாட்டு செழுமை கொண்டு அமைந்தவை. வயலும், வரப்பும், வாய்க்காலும் குளமும் என எம் வாழ்வு இயற்கையோடு செழித்து நிற்கிறது. அவ்வாழ்வியலின் தொன்மையையும் பெருமையையும் எம் அடுத்த சந்ததிக்கு எடுத்து காட்டுவதற்காக ஓர் ஆவணப்படைப்பாக இக்கலாசார மலர் வெளிவந்திருப்பது கலையையும் பண்பாட்டையும் கிளிநொச்சியையும் நேசிக்கும் அனைவருக்கும் மகிழ்வைத்தரும் நிகழ்வாகும். அவ்வகையில் இம்மலர் மேலும் பல்லாண்டுகள் தொடர்ந்து வெளிவந்து எம்தேசத்தின் புகழை உலகறியச் செய்ய வாழ்த்துகின்றேன். நூலாக்கத்துக்கு உழைத்த அரசாங்க அதிபர் உள்ளிட்ட மாவட்ட கலாசார அதிகார சபையினருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

*த. முகுந்தன்,*
*பிரதேச செயலாளர்,*
*பிரதேச செயலகம்*
*கரைச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வனப்பு மிக்க வளங்கள் நிறைந்த மாவட்டம் என சிறப்பித்துக் கூறப்படும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் நெறிப்படுத்தலின் கீழ் கிளிநொச்சி மாவட்ட செயலகமும், மாவட்ட அதிகார சபையும் இணைந்து கலை பண்பாட்டு அம்சங்களை வெளிக்கொணரும் நோக்கில் வெளிவர இருக்கும் கலாசார மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் அழிவடைந்து வரும் பார்பரிய பண்பாட்டுப் பெருமைகளைப் பேணிப்பாதுகாக்கும் நோக்கிலும், எதிர்கால சந்ததியினருக்குக் கையளிப்புச் செய்யும் பொருட்டு வருடம் தோறும் பிரதேச செயலகங்களில் பிரதேச மலர் வெளிவருவது போல கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் புதிய முயற்சியாக இவ் ஆண்டிதழ் வெளிவருவது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

மனித வாழ்வில் இன்றியமையாதது கலை உணர்வாகும். ஒரு மனிதன் மனிதனாக ஆளுமை உள்ளவனாக தனித்துவம் மிக்கவனாக சமூகத்தில் வாழ வைக்கும் பேறானது கலைக்கு உண்டு. அத்தகைய கலை உணர்வை உயிர்ப்பது பண்பாடாகும். ஒவ்வொரு இனமும் தனக்கென தனித்துவம் மிக்கதான விழுமியங்களை கொண்டவை ஆயினும் காலப்போக்கில் ஏற்படும் மாறுதல்களும், மருவுதல்களும் மரபுரீதியான பண்பாட்டில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

அந்த வகையில் காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம் முயற்சியானது மாவட்ட எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் இலை மறை காயாக உள்ள எழுத்தாளர்களையும் வெளிக்கொணருகின்றது. மாவட்ட அபிவிருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும். இத்தகைய மலர் வருடந்தோறும் மலர எல்லாம் வல்ல இறைவனின் இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

*சி.ச.கிருஸ்ணேந்திரன்*
*பிரதேச செயலர்,*
*பிரதேச செயலகம்,*
*பூநகரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், மாவட்ட கலாசார அதிகார சபையும் இணைந்து இவ்வாண்டு முதல் வெளியிடப்படவுள்ள கிளிமலர் நூல் புதுப்பொலிவுடன் வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். பண்டைய காலங்களில் கலை, கலாசாரம், பண்பாடு என்பன மானிட வாழ்வோடு பின்னிப்பிணைந்ததாக விளங்கியது. அக்காலகட்டத்தில் வேலைக்களைப்பைப் போக்கிடவும் இன்ப, துன்ப நிகழ்வுகளின் போதும், மருத்துவச் செயற்பாடுகளுக்கும், தொழில் விருத்திக்கும் கலைகள் பெரும் உந்து சக்தியாக இருந்துள்ளன. அதனை புராண இதிகாசங்கள், மற்றும் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. சிறந்த கட்டுக்கோப்பான, முன்மாதிரியான சமுதாயத்தை உருவாக்குவதற்கு கலாசாரம் இன்றியமையாததாகும்.


அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கலாசாரத்தின் பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தும் பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி இக் கலாசார விழா மலர் வெளிவருவது பாராட்டக்கூடிய விடயமாகும். பலரது திறமைகளைத் தாங்கிவரும் இம்மலரானது ஆண்டு தோறும் மலர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*த. பிருந்தாகரன்,*
*பிரதேச செயலாளர்,*
*பிரதே செயலகம்*
*கண்டாவளை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட கலாசார உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி



ஓங்கியுயர்ந்த தென்னந்தோப்புக்களையும் செந்நெல் வயல் நிலங்களையும் கற்பகதருக்களையும் பன்நெடுங்காடுகளையும் கடல்நீரேரிகளையும் உழைக்கின்ற உணர்வுள்ள மனித வளங்களையும் பிரதேசத்தின் மீது பற்றுள்ள கலையுணர்வுமிக்க கலை விருட்சங்களையும் கொண்ட இயற்கை எழில்மிகு மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் விளங்குகின்றது.

பண்பாட்டு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான வரலாறு, சிறப்பான பண்பாடு, மகிழ்வான கலை கலாசார மரபுகள், வழக்காறுகள், இதமான வாழ்வியல் முறைகள் என்பவற்றினை கொண்ட பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டம் இருந்துள்ளது. என்பதனை ஆய்வாளர்களது கண்டுபிடிப்புக்களும், ஆய்வுகளும், முன்மொழிவுகளும் எடுத்தியம்புகின்றன.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக இப்பண்பாட்டு அம்சங்கள் அழிவடைந்தும், நலிவடைந்தும், காலமாற்றத்தால் மாறியும் போயுள்ளன. அதனால் மாவட்டத்திற்கே உரித்தான கலைப் பாரம்பரியங்களையும் பண்பாட்டம்சங்களையும் அழிய விடாது பேணிப்பாதுகாத்து அவற்றினை மரபு பிறளாது எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்க வேண்டியது கட்டாய தேவையாகும்.

அந்தவகையில் இவற்றினைக் கருத்தில் கொண்டு கட்டுரைகளாக, கவிதைகளாக, அனுபவப் பகிர்வுகளாக தொகுத்து வெளிவருகின்ற "கிளிமலர்" இதழ் - 01 எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலரினை வெளியிடுவதற்கு நிதியினை வழங்கிய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கும் அறிவுரைகளையும் ஆலோசனை களையும் வழங்கி ஊக்கமளித்த அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்கள், உதவி மாவட்ட செயலர் ஆகியோருக்கும் ஆசிச்செய்தி, மற்றும் வாழ்த்துச் செய்தி, கட்டுரைகள் என்பவற்றினை வழங்கியவர்களுக்கும் பிரதேச செயலர்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட கலாசார அதிகார சபையினர், மலர்க்குழுவினர் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் தொடர்ந்தும் இந்நூல் வெளிவர இறையருள் கிட்ட வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*கா. இராசதுரை*
*மாவட்ட கலாசார உத்தியோகத்தர்,*
*மாவட்ட செயலகம்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

வன்னியில் வளங்கள் பல நிறைந்த மாவட்டம் என்று சிறப்பித்துக் கூறப்படும் கிளிநொச்சியில் அரச அதிபர் மதிப்பிற்குரிய திரு.சுந்தரம் அருமைநாயகம் அவர்களின் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடாத்துகின்ற மாவட்டப் பண்பாட்டு விழாவில் "கிளிமலர்" இதழ் : 01 என்னும் நூலினை காலத்தின் தேவைக்கேற்ப கலை ஆவணமாக கலாசார அலுவல் திணைக்கள நிதி அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட காலாசார அதிகாரசபையும் மாவட்ட செயலகமும் இணைந்து வெளியிடுவது பெருமகிழ்வாகும்.

எம்மைப் பொறுத்தவரை இந்நூல் மண்ணை, மக்களை, கலையை, பண்பாட்டை ஆவணமாக்கும் என்பதற்கப்பால், எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பெரு முயற்சி என்று கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத பெருமை இம் மாவட்டத்திற்கு உண்டு. அவரவர் தம்பணியைச் செய்வதற்கு பூரண சுதந்திரம் கிடைத்தமையால் இது ஓர் ஆரம்பம் என எண்ணி அடையாளங்கள் மற்றும் வரலாறு, கலை, இலக்கியம், ஆய்வுகள் இந்நூலில் இடம் பெறுவது சிறப்பானதாகும். அறிஞர்களின் பணி இன்னும் தொடர வேண்டும் என்பதுடன், இப்பாரிய முயற்சிக்கு பங்களித்த அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு வருடந்தோறும் இம் மலர் வெளிவர ஒத்துளைப்பு வழங்க வேண்டுமென வேண்டிக்கொண்டு அனைவரையும் பாராட்டி வாழ்த்தி இந்நூலை வெளியிடுகின்றோம்.

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கலை மரபில் (பாரம்பரியத்தில்) சிலரின் கால்த் தடங்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கலை மரபினை ஒரு குடும்பத்தின் வாழையடி வாழையாகவும் ஒரு குமுகாயத்தின் அல்லது இனத்தின் தொடர்ச்சியாகவும் கலை மரபினை இழுத்துச் செல்வதையும் காணலாம். இதனடிப்படையில் "வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள், வாழ்கின்றவர்கள் பாடமடி" என்பதன் அடிப்படையில் சில கலைஞர்கள் அவர்களின் செயற்பாடுகளை வெளிப்படுத்த வேண்டிய தேவை எழுகின்றது. இங்கு கரைச்சி, கண்டாவளையைச் சேர்ந்த கலை மரபினரில் சிலர் மட்டுமே விரித்துரைக்கப்பட்டுள்ளனர். கால இடைவெளி போதாமைால் பளை, பூநகரி பகுதிக் கலைஞர்கள் உள்வாங்க படவில்லை. இனி வரும் காலத்தில் அதற்கான முயற்சி எடுக்கப்படும்.

"நலத்தின் கண் நாரின்மை தோன்றின் அவனை
குலத்தின்கண் ஐயப் படும்" (குறள் 958)

இங்கு வள்ளுவப் பெருந்தொகை கூறுவது: இங்கு: நலம் என்பது மொழியை, இனத்தை, நாட்டைக்குறிப்பதாகும். அதாவது ஒருவனுக்கு இம்மூன்றிலும் பற்றின்மை (நாரின்மை) என்றால் அவனது பிறப்பு இழிவுக்குரியதாய் மற்றவர் பழிப்பிற்குரியதாய் ஐயங்கொள்ள வைத்துவிடும் என்பதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைஞன்**

ஒரு கலைஞனின் படைப்புக்கள், செயற்பாடுகள் மட்டும் பற்றி எழுதிவிட்டால் அவனது ஆவணப்படுத்தலுக்கு போதுமானதல்ல. அவனுடைய கலையுலக உள்நுளைவுக்கு முன் அவனது பின்னணி என்ன? அவன் கடந்துவந்த வழி எப்படிப்பட்டது? அவனது குடும்ப நிலை எப்படிப்பட்டது? போன்ற பல வினாக்களின் விடைகளோடு உட்புகுந்து வெளிவந்தால் தான் அவனை முழுமையாக புரிந்துகொள்ளமுடியும் அண்மைக்காலங்களில் நான் சந்தித்த பல கலைஞர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றார்கள். அவர்கள் தமது கலைசார்ந்த எந்த முயற்சியையும் முன்னெடுக்க வளம் கொண்டவர்களாக இல்லை. தம் அன்றாட வாழ்வுற்கே திண்டாடுமிவர்கள் தங்கள் ஆக்கங்களை (இலக்கியம், ஆய்வுகள், சிறுகதைகள், புதினங்கள், கூத்துக்கள், நாடகங்கள், இசை, இசைக்கருவி போன்றன).

ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாமல் சோர்வடைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இதன் காரணமாகவே அவர்கள் ஒரு அடிதன்னும் எடுத்து வைக்க முடியாமல் திணறுகின்றனர்.

இப்படியானால் எப்படி மரபுவழியாக, வழக்காறாக, தலைமுறை தலைமுறையாக தம் ஏழ்மையிலும் இழுத்து வரப்பட்ட இக்கலைமரபு தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியுமா? இவற்றின் மறுமலர்ச்சிக்கு ஏற்ற வழிமுறைதான் உண்டா? இன்றய நடைமுறைகள் இயற்கையை, பண்பாட்டை, ஒழுக்கவியலை, பண்பாட்டின் மிகப்பெரிய கூறான கலை மரபை (பாரம்பரியம் - பரம்பரை) அழிவின் விளிம்பிலிருந்து காப்பாற்ற முடியுமா? என்பவை கேள்விக்குறியாகவே உள்ளன. கலை மாந்தர் சீர்வாழ்வுக்குரியது. ஆனால் பலர் கலை கலைக்காகவென்ற மனப்பாங்கில் தங்கள் போற்றுதலுக்காக கலைவிழாக்களை ஏற்படுத்தி தங்கள் புகழ்பாடச்செய்கின்றனர். கலைஞன் புறக்கனிக்கப்பட்டவனாக, வாய்பார்த்திருப்பவனாக மட்டுமே இருக்கின்றான். இது இன்றைய நடப்பியல் (யதார்த்தம்). கலை விழாக்களிலே விருதுகள் கொடுக்கப்படுகின்றன. பொது அமைப்பாக இருந்தாலும் இது இவ்விழாவை நடத்துபவரே முடிவு செய்கின்றார். அரச உயர் பதவியில் பெருந்தொகையை மாத ஊதியமாக பெறும் ஒருவருக்கு அதியுயர் கலை விருது வழங்கப்படுகிறது. அவரிடம் கலைக்கான எந்தத் தகுதியும் இராது. இன்று இங்கு மிக மலிந்த செயற்பாடு முழத்துக்கு முழம் கோவில்கள், கோடிக்கணக்கில் செலவீடுகள், புலம்பெயர்ந்தவர்கள் முன்னணியில் நிக்கின்றனர். அது போதாது என்று உள்ளூரிலும் தண்டல், சிலர் பிளைத்துக் கொள்கின்றார்கள். இந்த நிதிகளை ஒன்று திரட்டி (ஒவ்வெரு ஊரிலும்) அந்த ஊரின் கலை மரபுகள் (பாரம்பரியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சி பெறச்செய்ய முடியும், அந்த ஊரின் உடல், உள நலத்தைப் பேணும் வகையில் பல செய்ய முடியும். தழிழனின் (தனிமனித, அரச சார்பற்ற, அரச கட்டுமானங்கள்) செயற்பாடுகள் விழலுக்கு இறைக்கும் நீராகவே காட்சி தருகிறது.

அன்று தமிழ் வாழவேண்டும் என்ற ஒரேயெரு நோக்கோடு கலைஞர்கள் (புலவர்கள்) கொடை வள்ளல்களால் ஆற்றுப்படுத்தப்பட்டனர். குமணன் என்ற கொடையாளன் வறுமைப்பட்ட புலவனுக்குப் தன் தலையையே நல்க முன்வந்தான். சங்க கால ஔவைக்கு அதியமான் நெடுமான் ஆஞ்சி நீடு வாழ நெல்லிக்கனி ஈய்ந்தான் சடையப்ப வள்ளல் இருந்திராவிட்டால் கம்பன் எங்கே? கம்பனின் கவித்துவம் எங்கே? கம்பனின் இராமாயணம் எங்கே? சிந்தித்துப் பார்ப்பீர்களா?

எழுதுவோர், சொற்பொழிவாற்றுவோர் என்ன செய்கின்றனர் முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர். கலை மரபு (பாரம்பரியம்) அழியும் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறதாம். அக்கறைப்பாடு இல்லையாம். இது சரியா? யார் அக்கறைப்பட வேண்டும் கொடை வள்ளல்களா? அரச கட்டுமானங்களா? நாகபந்தக் கவிதை புகழ் வன்னியூர் கவிராயர் திரு சவுந்தரநாயகமவர்கள் 1973 ஆம் ஆண்டு கிளிநொச்சி ஈசுவரன் திரை அரங்கில் பண்பாட்டு(கலாச்சார)ப் பகுதியினரால் நடத்தப்பட்ட கலை விழாவில் கவியரங்கமும் முதன்மை நிகழ்வாக நடாத்தப்பட்ட போது அதில் இவரும் கலந்து கொண்டார். இவர்களுக்கு போக்குவரத்து செலவு வழங்கப்படாது என கூறப்பட்டதாம். கவிஅரங்கில் கடைசியாக கவி படித்த கவிராயர் "கலை விழா நடத்தி மகிழ்வு காணும் கிளிநொச்சி கலாச்சாரப் பகுதியினர் கலைஞர், கவிஞர்களின் கையை கடிக்காமல் கடுகளவேனும் கொடுத்துதவுதல் வேண்டும்" என்றாராம்.

இது தான் இன்று வரையுள்ள கலை மரபின் (பாரம்பரியத்தின்) அதாவது கவிஞர், கலைஞர்களின் நிலை. இங்கு கரைச்சி செயலர் பிரிவை உள்ளடக்கிய பகுதியில் வாழந்த வாழுகின்ற கலை மரபிற்கு (பாரம்பரியம்) அளப்பரிய தொண்டாற்றிய தொண்டாற்றிக் கொண்டிருக்கின்ற கலைஞர் சிலரைப் பற்றிய தகவல்களைக் குறிப்பிடுவதன் மூலமாக தொடர்ந்து வரும் இளம் தலைமுறையினருக்கு அவர்களும் இதில் அக்கறைப்பட்டு வரும் காலத்தில் தமிழனின் பண்பாட்டு மரபுகளான இயல், இசை, நாடகமென்ற முத்தமிழும் நிலைபெற குறித்தவர்களில் வாழ்வு முறை கட்டாயமாக எடுத்துக்காட்டாய் விளங்கும் என்பதில் எந்த ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. இங்கு கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில் உள்ள ஏனைய செயலர் பிரிவுகளான கண்டாவளை, பளை, பூநகரி போன்ற இடங்களில் வாழ்ந்த வாழுகின்ற கலைஞர்களின் தகவல்களை சேகரிப்பதற்கான கால இடவெளி போதாதென்ற காரணத்தினால் அவர்கள் உள்வாங்கப்படவில்லை.

தகவல்கள் என்பது உண்மை சார்ந்ததாக இருக்க வேண்டும். இருந்தாலும் சிலரைப்பற்றிய தகவல்கள் வேறு நூல்களில் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியும் ஆனாலும் அவை அவர்களின் பளைய நேர்காணலினூடாகப் பெறப்பட்டு இருந்ததால் அது ஏற்புடையதாய் இருக்க முடியும். ஒவ்வொருவரின் செயற்பாடுகளும், திறமைகளும் அவர்களின் ஆற்றல்களும் அவர்களாளேயே தெளிவுபடுத்தப்படும் போது அது உன்மையானதாகவே கொள்ளப்படும். சிலர் தங்களைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்த கூச்சப்படுகின்றனர், ஏனெனில் இவர் தன்னைப் பற்றி தன் குடும்பத்தைப் பற்றி தற்பெருமை பேசுகிறார் என அடுத்தவர் நினைத்து விடக்கூடும் என்ற தாழ்வு மனப்பாண்மையே இதற்கு காரணம். இன்று ஊடகங்கள் பலவித பல்துறை சார்ந்த நேர்காணல்களை அத்துறை சார்ந்தவர்கள் ஊடாகவே ஏனையோருக்கு அறியத்தருகிறது. ஒருவர் தன் வரலாற்றுச் செயற்பாடுகளைத்தானே எழுத வேண்டும். அப்போது தான் அதன் நம்பகத் தன்மை பொருள் பொதிந்ததாகவே இருக்கும்.

எமது முன்னோர்கள் தம்மை தம் செயற்பாடுகளை, வரலாறு, மருத்துவம், வாணியல், நாகரீகம் என்ற எதுவுமே ஆவணப்படுத்தப் படாததால் வந்தான் வரத்தான் எல்லாம் தமிழன் கண்ட அத்தனைத் துறைகளையும் தனதென்று தனதாக்கிக் கொண்டான். இற்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன் “உலகத் தமிழன் தனிநாயகம் அடிகள் கூறும் போது இந்தியப் பண்பு, இந்திய கலைகள், இந்திய நாகரீகம், இந்திய மொழிகள் எனக்கூறுவனவெல்லாம் தமிழ் பண்பு, தமிழ் நாகரீகம், தமிழ் கலைகள் தமிழ்மொழிக்கிளைகளையே. ஆனால் பல்லாண்டுகளாக நடுநிலை கடந்தோர் இவ்வுண்மையை மறைத்தும் திரித்தும் ஒழித்தும் நூல்களை யாத்தமையினால் (தமிழ் தற்குறிகளும் இனைந்து) இன்று இவ் உன்மையை கூறுவதும் மக்கள் மனதில் ஐயத்தை உண்டுபண்ணுவதாய் உள்ளது என்பார்.

எனவே தான் மக்கள் விழிப்பாய் இருந்து சிறுவர்களுக்கு, இளைஞர்களுக்கும் தமிழ் இலக்கணத்தின் சிறப்பையும் கலைகளின் சிறப்பையும் உணர்த்தல் வேண்டும். தமிழருடைய வரலாற்றைக் கற்பிக்க வேண்டும். நம் பண்பாட்டின் பழக்கவழக்கங்களை குடும்பங்களில் கைவிடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்க வேண்டும் என்று கூறுவார். (தந்தை செல்வா நினைவுப்பேருரை) மேழ (சித்திரை) த் திங்கள் 1980)

அத்தோடு கிறீத்தவர்களின் தமிழ்க்கொடை தமிழர் சான்றோர் பகுதி 2, 3 என்ற நூலில் தமிழரின் இசை ஆய்வு வல்லார் குறிப்பிடும் போது 12000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழங்கி வந்த ஒன்றை இப்போது சொல்வது சற்று வியப்பாகத் தோன்றுமென்றாலும் தொன்மை மறைந்து மற்றவர்கள் தங்களுடையதென்று கூறும் காலத்திலாவது தமது பிறப்புரிமையையும் முத்தமிழிலொன்றான இசைத்தமிழின் தொல் மேன்மையும் சொல்லாதிருந்தால் அது தமிழனாய்ப் பிறந்த ஒருவரின் தாழ்நிலைக் காரியமென்பார். (கருணாமிர்த சாகரம் முதல் பொத்தகம் - 4 பாகம்) ஆபிரகாம் பண்டிதர்.

**வண.துரைசாமி சிவஞானம் யோசுவா அடிகள்**

தனது பள்ளிக்காலத்திலேயே கூத்து, நாடகத்துறையில் ஏற்பட்ட விருப்பமேலீட்டால் இவர் தனது 15 ஆவது அகவையிலேயே நாடகங்கள் எழுதுவதையும் நண்பர்களை சேர்த்து பழக்குவதிலும் தானும் அதில் பங்கேற்று நடிப்பதிலும் கூடிய ஈடுபாடு காட்டத் தொடங்கியவராவார். தனது 16ஆவது அகவையில் 1990 ஆம் ஆண்டில் "காட்சி, எங்கள் ஊர், சின்னப்பூக்கள்" போன்ற நாடகங்களை எழுதி தானும் பங்கேற்று நடித்து அரங்கேற்றியுள்ளார். 1992 - 1993 காலப்பகுதியில் தமிழ் நாட்டு சேலம் மாவட்டம், பவளத்தானூரில் உள்ள ஏதிலிகள் (அகதி) முகாமில் கண்மணி நாடகக் குழுவை ஏற்படுத்தி அங்கு நடனம், நாடகங்களை எழுதி அதில் தானும் பங்கேற்று நடித்துள்ளார். மீண்டும் 1993 - 1994 பாரதிபுரம் (கிளிநொச்சி) தென்னிந்தியத் திருச்சபையில் "விடுதலை, மாற்றம்" என்ற நாடகங்களை எழுதி, பழக்கி, நடித்து அரங்கேற்றியவருமாவார். இவருக்கு கிறித்தவத்தில் ஏற்பட்ட பற்றுறுதியினால் இறையியல் கற்பதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள இறையியல் கல்லூரியில் தனது இறையியல் பட்டயத்தைப் பெற்றுக் கொண்டதோடு அங்கு "சுடர், அன்பழைப்பு" என்ற நாடகத்திலும் நடித்தவர். வேதநாயகம் சாத்திரிகளின் வரலாலற்றையும் கதைச் சொற்பொழிவாக (கதாப்பிரசங்கமாக) நடாத்தியுள்ளார். தொடர்ந்து தனது "கலைமாணி (கிறித்தவம்) பட்டத்தை யாழ் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டார் (2002). 1998 இல் இருந்து கோவில் குரு முதல்வராகவும் செயற்பட்டார். இக் காலப்பகுதியில் உணவு, மின்சாரம், போக்குவரவு வாய்ப்புக்கள் அருகியிருந்தது. அத்தோடு 20ஆண்டுகளுக்கு மேலாய் (1998 - 2018) "முத்தன் கண்ட யேசு" என்ற நாட்டுக் கூத்தையும் "பறபாசு" என்ற நாடகத்தையும் எழுதி நெறிப்படுத்தி தானும் இணைந்து நடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ஆம் ஆண் "இரட்சணிய யாத்திரீகம்" என்ற இசை நாடகத்தை எழுதி வட்டுக்கோட்டை - கொட்டைக்காட்டில் தானும் பங்கேற்று மேடையேற்றினார். அத்தோடு 1998 - 2009 காலப்பகுதியில் கோவில் குரு முதல்வராயிருந்த காலத்தில் "இன்பச்சோலை சமாதானக் கோட்டை" ஆகிய மிகவும் பொருள் வலுக்குன்றிய பகுதியில் கல்வியில் முன்னேற்றம் ஏற்படுத்த "மக்கள் கல்வி நிலையங்கள்" (6) ஆறை தொடக்கி வைத்தார். அத்தோடு இப் பிள்ளைகள் (வறிய) தங்கிப்படிப்பதற்கான ஆண்கள், பெண்கள் விடுதிகளை இங்கிலாந்தைச் சேர்ந்த "சிமித்" என்பாரின் நினைவாக அவரின் துணைவியார் "யெனிபர் சிமித்" அவர்களின் நிதி உதவியைக் கொண்டு தொடங்கினார். போர் முடிந்தபின் அவை மூடப்பட்டு விட்டன. 1999 காலப்பகுதியில் தொழுநோயினால் தாக்குண்ட நோயாளர்களுக்கான மருத்துவ முகாம்களையும் நடாத்தச் செய்தார்.

2004 இல் போர் நிலைமை சீரான போது இந்திய தொழுநோயாளர் நிறுவன உதவியுடன் அவர்களுக்கான மீள்(புனர்) வாழ்வு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தவும் தொடங்கினார். இன்று இங்கிலாந்து உவேல்சு நாட்டு தொழுநோயாளர் சங்கங்களின் உதவியோடு வடமாகாணம் முழுவதிற்குமான செயற்திட்டம் வரையப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2002 தொடக்கம் "காவேரிகலா மன்றத்தை" நிறுவி போதை, வறுமை ஒழிப்பு, பெண்கள் வன்முறை, சிறுவர் சீரழிப்பு, மக்களை தொழு நோய் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு அழித்தல், அரச சேவைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நாடகங்கள், தெருக் கூத்துக்களுக்கான 1000 க்கு மேற்பட்ட கதைகளை எழுதி நெறியாள்கை செய்து அரங்கேற்றி உள்ளார்.

இவர் தனது முனைவர் பட்டப்படிப்புக் கோட்பாடாக "சமூக முன்னேற்றமும் நல்லாழுமை" யாகக் கொண்டு "குமுகா(சமுதா)யத்தை அடிப்படையாகக்கொண்ட அரங்கை போரின் வடுக்களில் இருந்து விடுபடப் பயன்படுத்த" என்ற தலைப்பில் எழுதி தமது முனைவர்(கலாநிதி) பட்டத்தை உலகப் பல்கலைக்கழனத்தின் ஊடாக 2014 இல் பெற்றுக்கொண்டவர். அரச சார்பற்ற கு(ச)முக பண்பாடு நிறுவனமாக காவேரிக் கலாமன்றம் இயங்கிக்கொண்டு இருக்கிறது. இதன் "நிறைவேற்றுப் பணியாளராக" 2010 இல் இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். கோவில் குரு முதல்வர் என்ற பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு காவேரிக்கலா மன்றத்துடன் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மன்றமானது தொழு நோயாளர்களை நடுவகப்படுத்தி இந்நோயால் தாக்குண்ட குமுகாய (சமுதாய) இளைஞர்களுடன் தொடங்கப்பட்டதாகும். போர்ச்சூழல் காரணமாக மன்றத்தின் செயற்பாடு யாழ்குடா நாட்டுள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. போரால் இடருற்றிருந்த மக்களுக்கு தெருக்கூத்து பண்பாட்டு நிகழ்வின் ஊடாக உடல் உள நலத்தைப் பேணும் வகையில் குமுக, பண்பாட்டு ஒழுகலாறுகள் வெளிப் படுத்தப்பட்டன. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின் காவேரி கலா மன்றத்தின் (கா.க.ம) செயற்பாடுகள் வன்னி பெருநிலப்பரப்பிற்கு விரிவு படுத்தப்பட்டது.

அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் பங்களிப்போடு, கா.க.ம. இடம்பெயர்ந்து மீள் குடியேற வந்த மக்களுக்கு நலம் பேணல், உளவியல் ஆற்றுகை, கல்வி, தொடர்ந்து செய்யக்கூடிய வாழ்விற்கு தேவையான பயிர் செய்கை ஆகியவற்றைச் செயற்படுத்த உதவிகள் வழங்கப்பட்டன. அத்தோடு தொழுநோயால் நலிவுற்ரவர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் வடமாகாணம் அடங்கலாக இங்கிலாந்து, வேல்சு நாடுகளின் தொழு நோயாளர் சங்கங்களின் பங்களிப்போடு கா.க.மன்றமே உதவியதென்கிறார் வண.யோசுவா அடிகளார். தற்போது குமுகத்தில் கா.க.மன்ற 44 அலுவலர்கள் செயற்படுகின்றனர். அத்தோடு நாடகம், கூத்து மூலம் மக்களோடு இணைந்து இருப்பது மாத்திரமல்லாது இத்துறையில் முன்னேற்ற, மறுமலர்ச்சி பெறச்செய்ய முழுமூச்சுடன் செயற்படுபவராகவே காணப்படுகிறார். “வாழ்வு நிகழ்வரங்கு (பிளேபக் தியேட்டர்)” நிகழ்வில் தேர்ந்த அவுத்திரேலியர்கள் கா.க.ம ற்கு அறிமுகப்படுத்திய இன்நடைமுறையை தாம் ஒழுங்காகச் செயற்படுத்துவதாகவும் கு(ச)முக சூழலுக்கேற்றதாக “கனவரங்கு” மிகப் பொருத்தமுடையதாக உள்ளது என்று கூறுவதோடு 2012 ஆம் ஆண்டில் இருந்து “வாழ்வு நிகழ்வரங்கு” வடிவத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தி தேசிய, உலக கலைஞர்களுடன் இணைந்து பல இடங்களிலும் கதை, நெறியாள்கை செய்து நாடகங்கள், கூத்துக்கள் அரங்கேற்றப்படுகிறதாம்.

2015 இல் “நண்பர்களின் அரங்கு - இலங்கை” என்ற தேசிய நாடக நிறுவனத்தின் நிறுவுநர்களின் ஒருவராகவும் (தலைவர், செயலாளர்) செயற்படுகின்றார். தமிழர் (2010-2019) தாய் இசையான பறை இசையையும், அதற்கு என்று ஒரு இசைக்குழு ஒன்றை உருவாக்கி, நாடு முழுவதிலும் தமிழ் பண்பாட்டின் அடையாளமாகவும் தேசிய ஒருமைப்பாட்டிற்கான இசையாகவும் ஊக்குவித்து மேடை ஏற்றப்படுகிறது. 2015 இல் இருந்து இன்று வரை குமுகாய மாற்றத்திற்கான “பசுமை அரங்கை” கலை இயக்கத்தை உருவாக்கி கடந்த கால கசப்பான கதைகளில் இருந்து விடுபடவும் எதிர்கால கனவுகள் குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளை நாடகங்களாக உருவாக்கி கதை, எழுத்துருவாக்கம், நெறியாழுகை, ஒருங்கிணைந்து நடித்தல் போன்ற பல் ஆளுமை, செயற்றிறன் மிக்க துடிப்புள்ள இன்றைய குமுகாயத்திற்கு வேண்டிய ஒருவராக காட்சி தருகின்றார்.

இவர் யாழ் தென்னிந்திய திருச்சபையின் பேராயத்தால் நடாத்தப்படும் உதய தாரகை (தமிழ்ப்பிரிவு) செய்தித் தாளின் தூது சிற்றிதழின் பதிப்பாசிரியராகவும் பதிப்பக முகாமையாளராகவும் சில ஆண்டுகள் செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் இவர் எழுதி வெளியிட்ட நூல்களில் குறிப்பிடத்தக்கவை " ஒரு நதியின் ஊற்று, மண், அழகான காலங்கள்" என்பன இறையியல் சார்ந்தும் "மௌனத்தின் ஒலி மலையில் கசிந்த உதிரம், சுகமான காலங்கள்" என்பன நாடகங்களாகவும், "கரிக்காட்டுப்பூக்கள்" என்ற கவிதை நூலையும், 2018 இல் சாமி என்ற சிறுகதைத் தொகுப்பினையும் எழுதி வெளியிட்டுள்ளார். இச்சிறு கதை "அரச சிறுவர் இலக்கியத்திற்கான விருதினைப் பெறுகிறது. (பாராட்டப்பட வேண்டியது)"

இவரால் உருவாக்கப் பெற்ற அமைப்புக்களையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டி உள்ளது. "யீவ ஒளி மன்றம் - வட்டுக்கோட்டை", " காவேரி கலா மன்றம் 2002", "12 பெண்கள் சுய உதவிக்குளுக்கள் வலிகாமம் 2002-2010", "சுழிபுரம் கங்காதேவி சங்கத்தை" மீளக்கட்டி எழுப்பி 20 உயர் வலு மீன்பிடிப் படகுகளை சங்கத்திற்கு பெற்றுக் கொடுத்தமை 2004, "மலையாளபுரம் திருவள்ளுவர் சிறுவர் பாடசாலையை நிறுவுதல் 2011", " வட்டக்கச்சி மாயவனூர் பெண்கள் கலாச்சார (பண்பாட்டு) மன்றத்தை உருவாக்கம் 2015", " வடமாகாணத் தொழு நோயாளர் சங்கத்தை உருவாக்கல் 2017", "கிழக்கு மாகாண தொழு நோயாளர் சங்கம் உருக்கல் 2018", போன்ற இன்னோரன்ன குமுகாயம், இனம், தேசியம் சார்ந்து செயற்படுத்தி வருகிறார். இறையியலோடு இணைந்து கலை விழுமியங்களை ஊன்றுகோலாக்கி, உடல் உள ஆற்றுகைகளின் ஊடாக சிதைந்து சீரழிந்து போயுள்ள குமுகத்தை (குடும்பங்கள் - குமுகாயம்) மீட்டெடுக்க தன்னை ஈகியாக்கிச் செயற்படுகின்றார்.

இவர் உறுப்பினராய் இருந்து செயற்பட்ட அமைப்புக்கள், நிறுவனங்கள், யீவஒலி வாலிபர் சங்கம், கிளி. நகர றோட்டறிக்கழகம், காவேரி கலா மன்றம், இலங்கை மக்கள் பேரவை, கிளி.கரைச்சி பண்பாட்டுப் பேரவை, கிளி.மாவட்ட பண்பாட்டுப் பேரவை, வன்னி கிறித்தவ ஒன்றியம், வன்னி கிறித்தவ பேரவை போன்ற பலவற்றைக்குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு இவர் பல மகாநாடுகளில் கலந்து கொண்டும், காவேரிக் கலா மன்றத்தோடு இணைந்து சில மாநாடுகளை நடத்தியும், சிலவற்றில் கட்டுரைகள் வாசித்துள்ளார். என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக சிங்கப்பூரில்(2013) நடந்த வாழ்வு நிகழ்வரங்கு 2012 கண்டி, சமாதான அரங்க மாநாடு 2013, யாழ்ப்பாணத்தில் தேசிய ஒன்று கூடலாகவும் காவேரிக் கலா மன்றத்தின் ஒத்துளைப்போடும், உலக அரங்க விழா 2014 கொழும்பு இதில் போரும் மதமும் என்ற ஆய்வுக்கட்டுரை வாசித்தும், உலக சமாதான மாநாடு 2015 (சமாதானத்தில் மதம்) இதில் போரும் மதமும் என்ற கட்டுரை வாசித்தும், நாடுகள் பற்றி கற்றுக் கொள்ளும் வருடாந்த மகா நாடு இங்கிலாந்தில், சிறப்பு ஆவிக்குரிய கற்றல் மகா நாடு இச்ரவேல் 2015 உலகத் தொழு நோயாளர் மாநாடு 2016 பீக்கிங் சீனா, உலக வேளான் மகா நாடு சுயல் தென் கொரியா 2018, வளர்முக நாடுகளில் நிலை நிறுத்தக்கூடிய முன்னேற்ற (அபிவிருத்தி)த்திற்கான மாநாடு, சிறப்புக் கற்கை காபர் அடம் பல்கலைக்கழகம் இங்கிலாந்து 2019 ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவரின் பலதரப்பட்ட ஆளுமைகளை இன்னும் எழுதிக் கொண்டே போகலாம். இருந்தாலும் இவர் பெற்ற நன் மதிப்புக்களை (கௌரவிப்பு) சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். கிளி.கரைச்சி பண்பாட்டுப் பேரவையின் "கரைஎழில்" விருது, கிளி மாவட்ட பண்பாட்டுப் பேரவையின் "கலைக்களி" விருது, கொழும்பு கூட்டு முன்னேற்ற அறக்கட்டளையின் "தொழு நோயத் தொடர்பு" க்கான விருது, உலக அரங்க விழாவின் "நாட்டுப் பணியாளர்" விருது உலகப் பல்கலைக்கழகத்தின் மதிப்பார்ந்த (கௌரவ) "நீதியின் காவலன்" விருது, போரின் பின்னான குமுக முன்னேற்றம், தொழு நோய் தடுப்பிற்கான பங்களிப்புக்காக வழங்கப்பட்டது. "மன நலம் மன்னுயிர் காக்கம்" என்ற உலக வாழ்வியல் தந்த திருவள்ளுவப் பெருந்தகையின் கூற்றிற்கு வரைவிலக்கணமாய், "வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள், வாழுகின்றவர்கள் பாடமடி" என்று வாழ்ந்து காட்டும் வன.முனைவர் து.சி.யோசுவா அடிகளாரை அடியொற்றி வாழ ஒவ்வொருவரும் திடம் கொள்ள வேண்டும்.

**வளவை வளவன் (மா.செல்லத்தம்பி)**

செல்லத்தம்பி என்ற பெயர் கொண்ட வளவை வளவன் 01.11.1946 இல் யாழ் வலிகாமம் பகுதியில் உள்ள வளலாயில் பிறந்தவர். தன் ஊர்ப் பற்றின் காரணமாய் தன் பெயரை வளவை வளவன் எனச்சூட்டிக் கொண்டார். இவர் இயல்பிலேயே புரட்சிச் சிந்தனையாளர், படைப்பாளி, கவிதை, சிறுகதை, உருவகக் கதைகள், நாடகங்கள், ஆய்வுகள் (விமர்சனங்கள்) எனப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளங்களிலும் தனது இயல்பான நடப்பியல் சார்ந்த பகுத்தறிவு, வரலாற்று மாற்றங்கள் போன்றவற்றை தமது படைப்புக்களின் மூலம் வெளிப்படுத்தும் இயல்பினர். புதையல்களாய் உள்ள வரலாற்றுக் கட்டுரைகளின் ஆழமான பார்வையின் வெளிப்பாட்டினால் அறிஞர் பெருமக்கள் கு(ச)முகவியலாளர் களின் மனங்களைப் பற்றிக் கொண்டவர். போரின் சுவடுகளைச் சுமந்து கொண்டு வன்னியின் இயற்கையோடு வாழ்ந்து கொண்டிருப்பவர். குமுகத்தின் (குடும்பம்-குமுகாயம்) வாழ்வியல் போராட்டங்களை மனிதக் குறைபாடுகளை, உறவுச்சிக்கல்களை, பெண்ணியம், இன முரண்பாடுகள் என்று குமுகத்தின் சகல அளவீடுகளையும் (பரிமாணங்களையும்) உள்வாங்கி புரட்சிகர இலக்கிய வாழ்வைத் தனதாக்கிக் கொண்டவர். இடர் உற்ற மக்களின் இடர் நீக்கும் வழிகளைத் தன்படைப்புக்களில் வெளிக்காட்டி நிற்பவர். கூட்டுறவுப் பதிப்பக முகாமையாளராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர்.

இவர் பல நூறு கவிதைகளையும், 63 சிறுகதைகளையும், நான்கு குறு புதினங்(நாவல்)களையும், ஐந்து மேடை நாடகங்களையும், ஒரு தொடர் நாடகத்தையும், 60 ஓரங்க இலக்கிய நாடகங்களையும், மொழி, இன, விடுதலையையும் வெளிப்படுத்தும் வகையில் யாத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவரது பரிசு பெற்ற சிறுகதையான "அழுவதற்காக பிறந்தோம்" கிழக்குப் பல்கலைக் கழக சிற்றிதழில் "மூன்றாம் கண் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டதாகும்.

12 நூல்களை யாத்து நிறைவு செய்திருந்த வேளை இறுதிப் போரின் போது அனைத்தையும் இழந்து வருந்துகின்றார். இவர் தினக்குரல் செய்தித் தாளுக்கு வழங்கிய நேர்காணலில் (07.03.1999) கூறியதை இங்கு மீள் பதிவு செய்யப்படுகிறது. " சொல்லி அழுதால் தீர்ந்து விடும். அதைச் சொல்லத்தானே வார்த்தையில்லை" என்ற திரைப்படப் பாடல் தான் நினைவிற்கு வருகிறது. நான் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து எனது படைப்புக்கள், பத்திரிகைத் துணுக்குகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், கவிதை நூல்கள், நாவல், சிறுகதை, நாடகங்கள், கட்டுரைகள், அரசியல் சமுக வெளியீடுகள், துறை சார் நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள், கையெழுத்து ஏடுகள் எனப்பல, குறுக்கிச் சொல்வதானால் என்னிடம் ஒரு நூலகமே இருக்கின்றது. ஆனால் இன்று..... படிக்க.... எழுத... ஒரு தாளுக்குக் கூட முடியவில்லையே என்ற ஆதங்கந்தான் நிறைந்துள்ளது. ஈழத்தமிழனின் தலையெழுத்துக்கு நான் மட்டும் விதிவிலக்கா என்ன? என்று அமைதியுறவும் முடியாத நிலை" என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தென்மராட்சியில் குடியிருந்த காலத்தில் (10 வருடங்கள்) இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினால் "தென்மராட்சியில் இலக்கியப் பெருமகன்" என்ற விருதையும் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். அவர் வளவைத்தம்பி, விந்தன், மணிமாறன், பனம்பாரன் என்ற பெயர்களையும் ஆக்கங்களில் பயன்படுத்தியுள்ளதாகவும் தெரிகிறது. இவரது ஆக்கங்களின் பட்டியல். 1969 -அறிஞர் அண்ணா காலமான போது "சுதந்திரனின்" அண்ணா கவிதாஞ்சலி மலரில் 56 கவிஞர்களின் கவிதைகளில், இவரின் முதல் கவிதை முதலில் வெளியிடப்பட்டது. 1974 - "வேதனை புயல்" என்ற சிறுகதை வீரகேசரி வார இதழில் வெளியானது. 1979 - பனம் பொருள் அபிவிருத்தி கூ.சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசு கிட்டியது.

1984 - யாழ் இலக்கிய வட்டமும் மல்லிகையும் இணைந்து நடாத்திய கனக செந்திநாதன் நினைவு குறுநாவல் போட்டியில் "சங்கரன்" என்ற நூலுக்கு பாராட்டுப் பரிசு வழங்கப்பட்டது. (1983- இனப்படுகொலையின் முதல் வெளியீடு). 1987 இல் மீரா வெளியீடாக இதை வெளியிட்டது. 1980 - முரசொலி நடத்திய குறு நாவல் போட்டியில் "பேசாத கோபுரங்கள்" 2 ஆம் பரிசைப்பெற்றது. மதுரகவி நாகராசன் நினைவாக நடத்திய சிறுவர் கவிதைப் போட்டியில் 3 ஆம் பரிசு வழங்கப்பட்டது (இலக்கிய வட்ட வெளியீடு) நான் வெளியீட்டில் "மௌனங்கள் கலையும் போது" நாவலின் 3 ஆம் பகுதியை இவர் முடித்து வைத்தாராம்.

1987- "நான் இதழ், (சஞ்சிகை) தினகரன் கத்தோலிக்க மஞ்சரியும்" இணைந்து நடத்திய குறுநாவல் போட்டியில் "மாணித்த மானுடன்" 1 ஆம் பரிசைப் பெற்றது. (நான் சஞ்சிகை வெளியீடு) 1988 "ஒரு குடும்பத்தின் கதை" (இந்தியப்படையின் கெடுபிடிகள் சார்ந்த) சிறுகதை தொகுதி, சொர்ணம் வெளியீட்டகத்தில் பதிப்பித்துக் கொண்டிருந்த போது இந்திய அமைதிப்படையினால் பதிப்பகம் தீக்கிரையாக்கப்பட்டது. 1993 - இவரது ஆக்கமான உருவக்கதைகள் "உண்மைகள்" வெளியிட்டது. 1994 தமிழின்பம் இலக்கியப் போட்டியில் உருவகக் கதைகளுக்கான 1 ஆம் பரிசு வழங்கப்பட்டுளது. இவர் யாத்த "குடிசை" குறுநாவலுக்கும் முதலாம் பரிசு கிடைத்தாம்.

**இவரின் பரிசு பெற்ற கவிதைகள்:** 1978 பனம் பொருள் கூட்டுத்தாபனம் நடாத்திய கவிதைப் போட்டியிலும், 1985 நான் சிற்றிதழ் நடத்திய கவிதைப் போட்டியிலும், 1986 - வகவம் (கொழும்பு) நடத்திய இலங்கை அளவிலான கவிதைப் போட்டியிலும் முதலாம் பரிசை வென்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வட்டத்தின் கவிதைப் போட்டியிலும் மூன்றாம் (3) பரிசை வென்றுள்ளார். **இவர் எழுதிய கவிதை நூல் பட்டியல் நீண்டது.** அன்னைக்கோர் அரிய மடல், கண்மணிக்கோர் கடிதம், நினைவுகள், காவியம் சுட்ட பழங்களும் சுடாத பிணங்களும் (முள்ளிவாய்க்கால் படுகொலை). **பரிசு பெற்ற சிறுகதைகள்,** 1979 - பனம் பொருள் அபி.கூ.சங்கப் போட்டியில் "போராளிகள்", 1984 - மட்டக்களப்பு "தாரகை" சிற்றிதழ் நடத்திய போட்டியில் சங்கமம், 1985 - தினகரன் நடத்திய போட்டியில் "இந்த மண்ணில் தான் இதுகளும்" என்ற சிறுகதைகளுக்கான 2 ஆம் பரிசுகளையும், 1986 - யாழ்.சன.சமு.நிலை.சமாசம் நடாத்திய போட்டியில் "உண்மைகள் என்ற சிறுகதைக்கு 1ஆம் பரிசையும், 1986 - வவுனியா நீர்ப்பாசன திணைக்களம் நடத்திய போட்டியல் "சுமைதாங்கள்" 2 ஆம் பரிசையும், 1994 - யாழ் இலக்கிய வட்டம் 25 ஆம் ஆண்டு நினைவுப் போட்டியில் "சவுக்காரம்" 1 ஆம் பரிசைத் தட்டிக்கொண்டன.

1990 இல் பிரான்சு தமிழ் ஒருங்கிணைப்பு தனிநாயகம் அடிகளார் நினைவாக நடத்திய சிறுகதைப்போட்டியில் "மரத்துப் போன மானுடம் சிறுகதைக்கு பரிசுப்பணம் ரூபா 15 000 வழங்கப்பட்து. 2003 - பூபாள ராகங்கள் தினக்குரலோடு இணைந்து நடாத்திய சிறுகதைப்போட்டியில் "அழுவதற்காக பிறந்தோம்" சிறுகதை சிறப்புப் பரிசைப் பெற்றுக் கொண்டது. "3 ஆம் கண் என்ற கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில இதழ் இக்கதையை மொழி பெயர்த்து விட்டது. 2004 பூபாள ராகங்கள் தினக்குரலோடு இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் "உறவுகள்" 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் எழுதிய நாடகங்கள் - "சிதறிய சிலம்பு" கோப்பாய் கோட்டம் நீர்வேலி வலைய மட்டத்தில் முதலாம் பரிசை வென்றது "மனம் திறந்த போது" யாழ் சன சமுகு நிலையங்கள் நடத்திய போட்டியில் முதலாம் பரிசை பெற்றுக்கொண்டுள்ளது. "நீதிக்கு இது ஒரு போராட்டம்" பூநகரி கூட்டுறவு சங்கம் நடத்திய போட்டியில் முதலிடத்தைப் பெற்றது. இவற்றை விட "ஈழத்துச் சோக்கிரட்ரீசு" என்ற தொருநாடகத்தையும் "மந்த மாருதம்" 60 இலக்கிய ஒரங்க நாடகங்களின் தொகுப்பாயும் உள்ளது. 2004 இல் சமாதான காலத்தில் இலங்கை அரச நாடகப் போட்டியில் "வெண் வெடிகள் பறக்கின்றன" கொழும்பில் அரங்கேற்றப்பட்டு 2 ஆம் பரிசைத் தனதாக்கிக் கொண்டுள்ளது. இதைவிட வரலாற்றுக் கட்டுரைகளின் தொகுப்பாக 324 பக்கங்களுடனும், பேரா, சண்முகதாசவர்களின் முன்னுரையுடன் எழுதப்பட்ட "புதையல்கள்" நூலும் "உண்மைகள்" உருவகக் கதைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இறுதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் அனைத்துப் படைப்புக்களும் "முள்ளியில்" அழிந்து போயின எனக்கண்ணீர் வடிக்கின்றார். இன்று அவர் தன்னை தனிப்படுத்திக் கொண்டு உடல் நலக்குறைவோடும், வாழ்வின் வலிகளைச் சுமந்து கொண்டும், அவற்றை மீட்டுக் கொண்டும் இவர் போன்றவர்கள் இன்றும் ஒடுக்கப்பட்டவர்களாக, மறக்கப்பட்டவர்களாக, மறந்தவர்களாக மேலாண்மை (அதிகார வர்க்கம்) காரரால் புறந்தள்ளப்படுவது இன மேம்பாட்டிற்கோ கலை மரபு (கலைப்பாரம்பரியம்) வளர்ச்சிக்கோ, உயர்ச்சிக்கோ துனை நிற்கப்போவதில்லை.

## பெ.திருச்செல்வம் (தில்லை நடராசன்)

இவர் தங்கம்மா, சதாசிவம் பெஞ்சமினின் மகனாக யாழ்ப்பாணத்தில் 1931 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு 5 ஆவது அகவையில் தாயாரும், 6 ஆவது அகவையில் தந்தையாரும், 7 ஆவது அகவையில் உடன் பிறந்த அக்காவும் இயற்கையெய்தியதால் இவருக்கு உற்றார், உறவுகள் யாரும் இருக்க வில்லை. ஆனாலும் இவரது தந்தையாரின் உடன் பிறப்பான அக்கா இவரை யாழ் தூயவளனார் பள்ளி விடுதியில் சேர்த்து விட்டார். அங்கு சின்ன வகுப்பில் இளம் வயதிலேயே நன்றாகக் கற்கத் தொடங்கினார். படிக்கும் பொழுதே ஓவியம்(சித்திரம்) சிற்பம், நாடகம், விளையாட்டு ஆகிய துறைகளில் மிக விருப்போடு ஈடுபாடு காட்டியதாலும் 5 ஆம் வகுப்பில் இருக்கும் போதே ஓவியம் வரையத் தொடங்கியதாகவும் அதை வெளியில் விற்பனை செய்து கிடைக்கும் பணத்தில் தனக்கான பொத்தகங்களை வாங்கிப் படித்ததாகவும் கூறுகின்றார். 1949 இல் க.பொ.த வகுப்பில் சிறந்த பெறுபேறுகளுடன் சித்தியடைந்துள்ளார். பள்ளிக்காலங்களில் (15-19) அங்கு நடந்த விளையாட்டுப் போட்டிகளில் குண்டு எறிதல், ஈட்டி எறிதல், பருதிவட்டம் எறிதல், ஓட்டம், பாய்தலில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று சிறந்த விளையாட்டு வீரனாகவும் மிளிர்ந்துள்ளார். இவரிடம் இப்போட்டிகளில் பெற்ற 117 சான்றிதழ்கள் உள்ளன பின் ஆசிரியச் சான்றிதழ் தேர்வில் தேறி அப்பள்ளியிலேயே 3 ஆண்டுகள் ஆசிரியராக கடமையாற்றினார்.

தனது 21 ஆம் அகவையில் வேளாண் திணைக்களத்தில் பொறிகள் இயக்கும் பயிற்சி பெற்று பணியாற்ற தொடங்கியுள்ளார். 1961 ஆம் ஆண்டிலேயே கிளிநொச்சி கனகபுரத்திற்கு குடும்பத்துடன் குடியேறினார். இவர் காலம் தொட்டு ஓய்வு பெறும் வரை வேளாண் திணைக்கள உள்ளக பயிற்சி நிலையத்தில் கடமையாற்றத் தொடங்கினார். அதே வேளை இவரது நாட்டமும் ஓவியம், சிற்பம், நாடகம், நடனம், கவிதை, கட்டுரை, விளையாட்டு, நெறியாள்கை, ஒப்பனை போன்ற கலைகளில் சிறந்து விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுதுறைகளில் 35-40 வயதுக்கால எல்லையில் சிறந்து வியங்கியதன் காரணமாய் இவர் சனாதிபதி பரிசுக்கு தொரிவு செய்யப்பட்டார். வேளாண் திணைக்களத்தில் நுண்உயிர் ஓவியங்கள் வரையப்பணிக்கப்பட்டதால், அத்திணைக்களத்திற்காக 1500 க்கு மேற்பட்ட ஓவியங்களை தீட்டி உலக வங்கியின் பாராட்டையும் பெற்றவர் ஆவார். இவ் ஓவியங்களில் இன்று இவரிடம் 15 வரைபடங்கள்தான் உள்ளன. மிகுதி ஓவியங்கள், இவர் யாத்த கவிதைகள், நாடகங்கள், பல நூறு நூல்கள் இறுதிப்போரின் போது (2009) அழிக்கப்பட்டு விட்டதாக தனது 88 ஆவது அகவையிலும் கண்ணீர் வடிக்கின்றார். கடந்த 4000 ஆண்டுகளாக தொடரும் இன்னல் நிறைந்த வாழ்வு தமிழனுக்கு.

1965 காலப்பகுதியில் ஆணழகன் போட்டிகளில் கலந்து முதலாம், இரண்டாம் இடங்களைத் தக்க வைத்திருக்கின்றார். அருணோதயா விளையாட்டுக் களகத்தின் உதைபந்தாட்டக் குழுவில் இணைந்து பல போட்டிகளிலும் இணைந்து பங்குபற்றியதாகக் கூறுவார். திரு சத்தியமூத்தியின் நெறியாள்கையில் தேவன் அவர்களின் தலைமையில் வீரசிங்கம் மண்டபத்தில் " நிலவுத்தூது" என்ற குமுகாய வசூல் நாடகத்தில் சுதாகரன் என்ற கதைமுதல்வனாக (கதாநாயகன்) நடித்து மிகுந்த பாராட்டைப் பொற்றாராம். இவர் எழுதிய நாடகங்கள் 40 க்கு மேற்பட்டவையாம். அவற்றில் குறிப்பிடத்தக்கவை "வாய்மை, அறத்தின் சுவடு, பரதன், சேரன் செங்குட்டுவன், பண்டாரவன்னியன், குகன், ஆட்டநத்தி, கடமையின் காவலன், பாதுகை, சங்கிலியன் என்பனவாகும். குமுக(சமுக) சந்தர்ப்ப நாடகங்களில் திருநகர் திருவீரசிங்கம் அவர்களுடன் இணைந்து நடித்தார். இவர் தான் எழுதிய நாடகங்களுக்கான (இலக்கிய, தொன்ம,குமுக) பாடல்களையும் யாத்துள்ளார். நாடகத்தில் போடும் வேடங்களுக்கான ஆடை, அணிகலன்கள், வேல், சுலம், வாள், கொம்பு, கேடயம், மூடி, காலணிகள் போன்ற அனைத்தையும் தன் கைப்படவே செய்துள்ளார். இவரது கைவண்ணத்தில் செதுக்கப்பட்ட சிற்பங்கள், மரத்தினால் ஆக்கப்பட்ட கலைப்பொருட்கள், ஓவியங்கள் மேற்குறிப்பிட்ட ஆடை அணிகலன்கள் அத்தனையும் கொள்ளையிடப்பட்டன. அழிந்து போயின என்பார்.

இறைவன், குமுகம், கலை, நீதி, காதல், தேவாரம், பக்குவம், சட்டம், காமம், கற்பனை, பிறப்பு, ஊழ்வினை, மரணம், நான், அழகு, உயிர், உடல், உணவு, அறியாமை, உண்மை, பொய், மதம், மலர, விதை, இருள், ஒளி, தற்கொலை, ஆசை, ஞானம், விஞ்ஞானம் என்ற பல்வேறுபட்ட பார்வையில் நின்று எழுதிய கவிதைக், கட்டுரைகள், சிந்தனை உணர்வுகள் மறைந்தும், மாறியும் அழிந்து போய்விட்டதை நினைத்து வெம்மி வெடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிமலையாய் குமுறுகின்றார். ஒவ்வொன்றையும் நினைவுபடுத்திக் கேட்கும் போது அவர் தரும் தகவல்களோடு கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடிக் கொண்டிருக்கிறது.

திருத்தி எழுதப்பட்ட "கடமையின் காவலன்" என்ற நாடகம் நாட்டின் பல இடங்களிலும் மேடை ஏற்றப்பட்டும் போட்டிகளில் கலந்தும் சிறந்த நாடகத்திற்கான பரிசையும், இவர் சிறந்த நடிகருக்கான பரிசையும் பெற்றுள்ளனர். இந் நாடகம் கும்பகர்ணனை கடமையின் காவலனாகக் கொண்டு யாக்கப்படடு ஐந்து இடங்களில் மேடை ஏற்றப்பட்டு எல்லா இடங்களிலும் சிறந்த நடிகருக்கான பரிசை இவருக்குப் பெற்றுக் கொடுத்தது. கவிஞர் திரு நாகராசரால் எழுதப்பட் "பரதன்" என்ற நாடகம் இவரால் திருப்பித் திருத்தியெழுதப்பட்டது. "பரதன்" நாடகம் இரண்டு முறை மேடை ஏற்றி அதிலும் சிறந்த நடிகருக்கான பரிசைப் பெற்றவராவர். "அறத்தின் சுவடு" நாடகத்தில் பரதனாக நடித்து சிறந்த நடிகருக்கான பாராட்டையும், பரிசையும் பெற்றுக் கொடுத்துள்ளது. "வாய்மை" என்ற நாடகத்தில் குகனாக நடித்து நடிகன் விருதைத் தட்டிக் கொண்டார். "சேரன் செங்குட்டுவனில்" செங்குட்டுவனாக நடித்த போது இந் நாடகம் தணிக்கைச் சபையால் அதன் தமிழ் வீச்சால் மொழி மேலாண்மை (ஆதிக்கம்) என்று கூறி அந் நாடகத்திற்கு தடை விதிக்கப்பட்டது. தமிழனே! சற்றுச் சிந்தித்துப்பார்! உலகத்தில் உள்ள அத்தனை இனங்களும் தமிழ்மொழி, தம்மினம், தம்நாடு பற்றிப் பேசலாம், மற்ற நாடுகளின் மீது மேலாண்மை செலுத்தலாம், பெரும்பான்மை, சிறுபான்மை இனத்தின் மேல் வல்லாண்மை செலுத்தலாம் ஆனால் தமிழன் மட்டும் தான் அடிப்படை உரிமைக்காக வாய் திறக்கக் கூடாது. திறந்தால் அது இன முரன்பாடாம். (துவேசமாம்) தமிழ் தற்குறிகளும் கூப்பாடு, மேற்குறித்த நாடகத்தடை இதன் வெளிப்பாடு தானே. "ஆட்டநந்தி" யில் ஆட்டநந்தி யாக நாட்டியம் பயின்ற போது காலில் ஏற்ப்பட்ட நேர்ச்சியால் (விபத்து) அந்த நாடகம் மேடை ஏறவில்லை. சங்கிலியன் நாடகத்திலும் சங்கிலியனாக நடித்து பாராட்டைப் பெற்றார்.

மொத்தமாக 9 போட்டி நாடகங்களில் நடித்து சிறந்த நடிகன் என்ற விருதை ஐந்து முறையும், பரதனாக நடித்து இரண்டு முறையும், குகனாக நடித்து இரண்டு முறையும், சிறந்த நடிகர் என்ற பாராட்டைப் பெற்றார். சங்கிலியன், பண்டாரவன்னியன், நிலவுத்தூது (சுதாகரன்) போன்ற நாடகங்களில் கதை முதல்வனாக (கதாநாயகன்) பாராட்டுகளைப் பெற்றவருமாவார். "ச்டார்" (விண்மீன்) நாடக மன்றத்தின் நாடகமான "பண்டாரவன்னியன்" நாடகத்தை திருத்தி எழுதி அதில் பண்டாரவன்னியனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்துப் பெரும் புகழ் பெற்றவராவார். இன்று இவரிடம் இருப்பது கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பேரவையின் "கலைக்கிளி" விருதும், அரச தேசிய கலைவல்லார் (கலாபூசணம்) விருதுமேயாகும் - 2013. இறுதிப் போருக்கு (2009) முன்பெற்ற எந்த விருதுகளோ பாராட்டுச் சான்றிதழ்களோ எவையுமே இல்லை. அத்தனையும் கொள்ளையிடப்பட்டும், அழிக்கப்பட்டும், மண்ணோடு மண்ணாக்கப்பட்டும் விட்டன.

கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக (அகழாய்வு, மொழியியல் ஆய்வினூடாக வெளிப்படுத்தப்பட்டவை) வேற்றினத்தவரான மந்தை மேய்த்து சிந்துவெளியில் ஊடுருவி நாகரிகத்தின் (கரப்பா, மொகஞ்சதாரோ) உச்சியிருந்த தொல் சிந்து மக்களைக் கொன்று குவித்து அவர்களின் உடைமைகளை அழித்த வேதமொழியாள (இருக்கு வேதம் செப்பும்) ரிலிருந்து தொடங்கிப் பின் பாரசீகரும், ஐரோப்பியரும், மிச்சமிருந்த மருத்துவம், அறிவியல், வானியல், மொழியியல், (இயல், இசை, நாடகம்) அத்தனையையும் தட்டிப் பறித்துத் தமதாக்கிக் கொண்டும் மூலங்களை மொழிபெயர்ப்புச் செய்தபின் அம்மூலங்களை அழித்துச் சிதைத்தது போல் நிலைமைகள் இன்றும் தொடர்கின்றன. அதற்கு மேற்குறித்த கலைஞர்கள் சான்றாகின்றனர். இடையிடையே இயற்கைச் சீற்றங்களாலும் (ஆழிப்பேரலை, நிலநடுக்கம், வெள்ளப்பெருக்கு, சூறாவளி) போன்ற பல அழிப்புக்கள் ஏற்பட்டதாலும் தமிழன் கூனிக்குறுகிப் போயுள்ளான்.

அவனது தன்மான உணர்வு "நலமெடுத்த நாம்பனுக்கு" இணையானது என்னார் உதவிக் கல்விப் பணிப்பாளராய் இருந்த திரு.க.மகேசன் தனது நூலான சைவநெறி (தமிழ் வழக்கு) எதிர்வேதநெறி (ஆரிய வழக்கு) என்ற நூலில் (1995) திரு. திருச்செல்வமவர்கள் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலான தியானம், ஆன்மீகம் என்ற கோட்பாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார். அவரது வார்த்தையில் கூறுவதானால் "உயிர்களின் பிறப்பு, வாழ்வு என்பது மரணத்துக்காய் மலரும் பூ போன்றது. அது அழகும் நறுமணமும் மிக்கது. இது மரணத்தின் மலர்ச்சி. இவை தொடரும் சூனியமானவை என யாரும் காண்பதில்லை. யாவும் மிகுதியான பொய்" என்கின்றனர்.

இதை நாம் எப்போது கூறுகின்றோம் ? 55 – 60 வயதைத் தாண்டிய பின்தான் பொய் என்கின்றோம். 35 – 40 ஆண்டுகள் நாம் மனம் போல் வாழ்ந்துவிட்டு மிகுதிக் காலத்தையே பொய் என்கின்றனர். இது முதுமையின் காலம், இது படைப்பின் இயங்குமுறை, இதைமாற்ற எந்த வழிவகையும் இல்லை. இது ஒரு தொடர் சுழற்றிமுறைச் செயற்பாடு. மண்ணிலிருந்து வந்தோம், மீண்டும் மண்ணுக்கே போகின்றோம் அவ்வளவு தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் க. செ. வீரசிங்கம்**

இவர் திருநகர் தெற்கை நிலைத்த வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்தவர், கிளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளராக இருந்து செயற்பட்டவர். இவர் 1963 ஆண்டு காலகட்டத்தில் "இளம் கலைஞர் கலை வளர்ச்சி மன்றத்தை" நிறுவினார் இவர் நாடகத்தின் மூலமாக மக்கள் நடுவில் நல்ல கருத்துக்களை ஊட்டும் நோக்கமாய்க் கொண்டமை நாடகத்துறையில் இறங்கக் காரணமானது. 1965 இல் கூட்டுறவாளர் விழாவில் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறும் ஊழல், மோசடிகளை நடுவகப்படுத்தி அவற்றை மக்கள் நடுவில் கொண்டு சென்று ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தனது முதல் நாடகத்தை அரங்கேற்றி கலையில் மற்றவர்களுக்கும் விருப்புவரச் செய்தார். இந்நாடகத்தில் முதன்மை நடிகனாக இருந்து ஏனையோரையும் பழக்கி, அந்நாடகப் போட்டியில் வெற்றி பெற்றார்.

இவர் 20 இற்கு மேற்பட்ட நாடகங்களை மேடையேற்றியுள்ளார். "கடமையின் காவலன்" என்ற பெயரோடு இராவணனின் கதையை மேடையேற்றிய போது இவருக்குப் பெரும் புகழும், பாராட்டும் பரிசும் கிடைத்துள்ளது. ஆனால் இவருக்கு மிகவும் சிறப்பைக் கொடுத்த நாடகம் "காத்தவராயன் சிந்துநடைக் கூத்தாகும்" இந்த நாடகப் படியை இவருக்குக் கொடுத்துதவியவர் பரந்தனைச் சேர்ந்த அண்ணாவி செல்லத்துரை என்பவர். இதற்குக் கதைவசனங்களை உருவாக்கித் திருத்தியெழுதி மேடையேற்றினார். முதன் முதலில் திரை மூடாது தொடர்ந்து நாடகம் நடக்கும் முறையை அறிமுகப்படுத்தியவரும் திரு. க. செ. வீரசிங்கமவர்களே. இந்நாடகத்திற்கான பாட்டு பின்னணி இசை அமைப்பு என்பன கலைவல்லார் (கலாபூசணம்) திரு.அப்பச்சி வல்லிபுரம் அவர்கள் பொறுப்பேற்றுத் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். இந்நாடகமானது பொன்விழாக் கண்ட நாடகமாகும்.

சமூக சந்தர்ப்ப நாடகங்களில் இவருடன் இணைந்து கலைவல்லார் (கலாபூசணம்) திருச்செல்வமவர்களும் பங்கேற்று நடித்துள்ளார். கடமையின் காவலன் எனற நாடகத்தில் திரு. க. செ. வீரசிங்கமவர்களுடன், திரு. பெ. திருச்செல்வமவர்களும் இணைந்து நடித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வரலாற்று நாடகமென்ற வகையில் சிகிரியாக் காவலன் என்ற நாடகத்தையும் எழுதி, நடித்து, அரங்கேற்றினார். பொதுவாக இவரது நாடகங்களுக்கான ஆடை அணிகலன்களை இவரே தயாரித்துக் கொண்டார் எனலாம். இது மாத்திரமல்லாது திரு.வீரசிங்கம் அவர்களை நாடகக் கலைஞராகவும், திரு.திருச்செல்வம் அவர்களை ஓவியக் கலைஞராகவும், அன்று கிளிநொச்சி துணை அரச முதல்வராய் இருந்த செங்கை ஆழியான் சனாதிபதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்குத் தெரிவு செய்து அனுப்பியதாகவும் கலைவல்லார் (கலாபூசணம்) திரு. இரத்தினசிங்கம்அவர்களுடனான நேர்காணலில் குறிப்பிடுகின்றார்.

இந்த மண்ணிலே வாழ்ந்து இலக்கியத்திற்கு, கலைக்கு தொண்டாற்றுபவர்களை (கோயில் ஓதுவார்களாக இருந்தாலும்) பாராட்ட, நன்மதிப்பளிக்கத் தவறக் கூடாதென்ற பரந்துபட்ட நோக்கோடு நமது நாடக விழாவிலே இலக்கிய எழுத்தாளர் திருவாட்டி.க.தாமரைச்செல்வி அவர்களையும், வரகவி – கணேசபுரம் திரு.கந்தையா அவர்களையும் நன்மதிப்பு (கௌரவிப்பு) செய்துள்ளார். பாராட்டப்படவேண்டிய முன்மாதிரியான நடவடிக்கையே. திரு.வீரசிங்கம் அவர்களுக்கு தங்கச்சங்கலி என்ற நாடகத்தை எழுதிக்கொடுத்த திரு.நா.யோகேந்திரநாதன் அவர்களையும் தனது நேர்காணலில் நன்றியோடு பாராட்டுகின்றார்.

**கலைவல்லார் (கலாபூசணம்) அமரர் கண்டாவளைக் கவிராயர்.**

கண்டாவளைக் கவிராயர் என்று கூறப்படுகின்ற திரு. சி.கு இராசையா அவர்கள் அன்று யாழ்மாவட்டத்துடன் இணைந்திருந்த கிளிநொச்சி அரச முதல்வர் பைந்தர (பிரதேச)த்தில் உள்ளடக்கப்பட்ட ஊரா(கிராமமா)ன கண்டாவளையில் 1928 ஆம் ஆண்டு பிறந்தவராவார். தனது 5 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பை வரணியில் பண்டிதர் திரு. வேலுப்பிள்ளையிடமும் பின் கரவெட்டியில் இருதயக் கல்லூரியில் ஆங்கிலமும், தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பண்டிதர் திரு. க. சச்சிதானந்தசிவம் அவர்களிடமும் கற்றவர். இளம் வயதில் முதல் சிறுகதை எழுதத் தொடங்கியவர். இவரது சிறுகதைகள், கவிதைகள், ஐக்கியதீபம் சிற்றிதழ், ஈழநாடு, சுடர், சித்திரன், வீரகேசரி ஆகிய செய்தித் தாள்களில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் மழுவராய முதலி மரபு வழி வந்தவராம் என்பர். இவர் கிளிநொச்சி மாவட்டத்திலேயே 1956 – 1986 ஆம் ஆண்டுவரை ஊரக(கிராம) அலுவலராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

இவரது பணிக்காலத்தில் தர்மபுரம் ஊரை (கிராமத்தை) அமைப்பதில் பெரும்பங்காற்றியதோடு அங்கு ஒரு பள்ளியும் உருவாக்க இந்துசபை இராசரத்தினத்தின் உதவியோடு நிறுவ முன்னின்று உழைத்தவராவார். (இன்று இப்பள்ளி தர்மபுரம் உயர்நிலைப்பள்ளியாகக் காட்சி தருகின்றது). காலப்போக்கில் இப்பள்ளியை அரசு பொறுப்பேற்றுக்கொண்டது. முரசுமோட்டையிலும் முருகானந்தாக் கல்லூரிக்கும் பலரின் ஒத்துழைப்போடு நூறு அடி நீளமான மண்டபமொன்றை அமைத்துக் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சமயம், அக ஈகம் (ஆன்மீகம்) போன்றவற்றிலும் மிக ஈடுபாடு கொண்டவர். 1992இல் நண்பர்களுடன் காசி (இந்தியா) விசுவநாதரையும், விசாலாட்சி அம்மையாரையும் சென்று வணங்கி அருள் பெற்று வந்தவர். ஓய்வு காலத்தில் தர்மபுரம் "கச்சதூரிபாய்" இல்லத்தை அங்கு இருந்த 25 பிள்ளைகளை நல்ல முறையில் வழிநடத்தி வந்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவரது ஆக்கங்கள் அதிகமானவை சமயம் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன. இவர் முப்பதுக்கும் அதிகமான திருப்பள்ளியெழுச்சி ஊழறு பதிகம், வினையறு பதிகம், தோத்திர மாலை என்பவற்றோடு நாற்பதுக்கும் மேலான இந்திய இலங்கைக் கோயில்கள் மேல் பதிகம் பாடியுள்ளார். இவருக்கு 1986 ஆம் ஆண்டிற்கான தேசிய விருதும், கவிமணிப் பட்டமும், "கந்தகோட்ட மானியம்" என்ற காவியத்திற்கு சாகித்திய மண்டலப் பரிசும், "கோபுர வாயில்" நூலுக்குச் சிறந்த சைவ நூலுக்கான பரிசும் பெற்றுள்ளார். அத்தோடு 2000 ஆண்டிற்கான ஆளுநர் விருதும், 2001 ஆம் ஆண்டிற்கான தேசிய அரச விருதான கலைவல்லார் (கலாபூசணம்) விருதும் வழங்கப்பட்டுள்ளன. இவரது நூல்களில் சிலவற்றை "ஐக்கிய நாடுகள் நூலக காங்கிரசு" கொள்வனவு செய்து ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழக நூலகங்களுக்கு வழங்கப்பெற்றதாகவும் அறியக் கிடக்கிறது.

இவரை தினக்குரல் நேயர்களுக்காக 10.08.2003 அன்று அமரர் திரு.க.இரத்தினசிங்கம் அவர்கள் கவிதைகள் பற்றி வினா எழுப்பிய போது அதுபற்றி அவர் கூறிய விளக்கம் இங்கு பதிவு செய்யப்படுகின்றது. கவிதையில் இரு பார்வை இருக்கிறது. ஒன்று தோன்றுகின்ற உணர்வுகளை, பட்டறிவை (அனுபவம்) வெளிப்படுத்துவது, இது உணர்வு வாயிலான கவிதை, மற்றையது சில கருத்துக்களைச் சொல்வதற்காக எழுதுவது. கவிதை என்றால் அதற்கு யாப்பு, இலக்கணம் இருக்கிறது. அதற்கமைய எழுதுவது தான் கவிதை. புதுக்கவிதை என்று கூறப்படுவது உரைநடை யாப்பில் அமைந்தது. அது ஒரு குறுஞ்சொல் உரைநடை. அதை ஒருவர் மனனம் செய்யவோ இசையமைத்துப் பாடவோ முடியாது. எடுத்துக்காட்டாக (எ.கா) மரபுக் கவிதையில் இரு அடிகளைக் கொடுத்தால் மிகுதி இரு அடிகளை எந்தவொரு கவிஞனும் பாடி நிறைவு செய்து விடுவான். ஆனால் புதுக்கவிதையில் அதைச் செய்ய முடியாது. அடுத்து என்ன வருமோ என்று எவருக்கும் தெரியாது. எழுதுபவருக்குத் தான் வெளிச்சம். மரபுக் கவிதையில் சொல்நயம், சொற்புணர்ச்சி, எதுகை, மோனை, தளை என எவ்வளவோ வாசிப்பவர் கற்றறிய முடியும். புதுக்கவிதை அப்படியல்ல, சொல்பவர் தன் கருத்தைக் கூறுகிறாரேயன்றி வேறொன்றுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை நடையில் எழுதிவிட்டு அதைக் கவிதையென்பது அவலை நினைத்து உரலை இடிப்பது போலாகுமென்பார். அது கவிதையுமல்ல, அவர் கவிஞனுமல்ல. கவிதை மந்திரத்திற்குச் சமனானது. சரியான இடத்தில் அமைந்தால் அது பொறியாக இயங்கும் ஆற்றலுடயது என்பார்.

**கலைவல்லார் (கலாபூசணம்) அமரர் திரு. க. இரத்தினசிங்கம்**

இவரது பெற்றோர கிளிநொச்சி மாவட்டத்தின் முதல் அரச குடியேற்றத் திட்டமான கணேசபுரத்தில் காணி பெற்றுக் குடியேறியவர்கள். இக் கந்தையா இணையரின் மூத்த மகனாக அமரர் திரு. இரத்தினசிங்கமவர்கள் 1940 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தனது குடும்ப பொருள் வளக் குறைவைக் கண்டு தனது 12 அகவையிலே பள்ளி செல்வதைத் தவிர்த்து தந்தையாருக்குப் பக்கத்துணையாகச் செயற்படத் தொடங்கினார். சிறுவந்தொட்டே வாசிப்பு, சொற்பொழிவு, கூத்து, நாடகஙகளை பார்த்து தனக்குத் தேவையானவற்றை உள்வாங்கிக் கொள்ளும் தன்மையினால் தனது 16 – 18 வயதிலே கவிதைகள், கட்டுரைகள் எழுதத் தொடங்கியவராவார். இவரது முதல் கவிதை 1959 இல் சுதந்திரன் செய்தித் தாளில் வெளிவந்ததென்பர். இவரது பலவிதமான சிறுகதைகள், கட்டுரைகள் வீரகேசரி, தினகரன், போன்ற செய்தித் தாள்களிலும் அமுதம், கலைச்செல்வி, ஆனந்தசாகரம், மல்லிகை போன்ற சிற்றிதழ்களிலும் வெளிவந்துள்ளன.

இவர் பரந்தன் வேதியல் (இரசாயனத்) தொழிற்சாலையில் 1966 இல் இருந்து தொழில்பார்த்து ஓய்வு பெற்றவர். ஆனாலும் வன்னியின் புறுச்சூழல்களால் தடம் புரளாது தொடர்ந்து கலை, இலக்கிய, செய்தித்தாள் பணியில் ஈடுபட்டார். தனது இறுதி நாள் வரை இப்பணியைத் தொடர்ந்தார். இலைமறை காய்களாய், புறக்கணிப்புக்கும், இருட்டடிப்பிற்கும் உட்பட்டவர்களாய் காணப்பட்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள், குமுகத் தொண்டர்களை நாடிச் சென்று அவர்களின் வெளியீட்டு விழாக்களிலும் கலந்து, அவர்களின் தகைமைகளை அறிந்து நேர்காணல்களின் மூலமாக அவர்களை வெளியுலகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டினார். இவரின் செயற்பாடுகள் இக்கலைஞர்களின் உயர்ச்சிக்கும், அவர்களுக்கு மேலும் தம் துறையில் சிறப்புற உந்து ஆற்றலாய் இருந்தது. இவர் கிளிநொச்சி மாவட்டம் என்று நின்றுவிடாது யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பல்துறை (மருத்துவம், சமயம், கலை) சார்ந்த பலரையும் சந்தித்து இத்தமிழ் குமுகாயத்திற்கு எது தேவையோ அதைப் பெற்றுக் கொடுப்பதே அவர் நோக்கமாய் இருந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகத் தொடக்கத்தில் 1970களில் புகழ்பெற்ற வன்னிக் கவிராயர் எனப் பலராலும் அறியப்பட்ட இலுப்பைக்குளம், நேரியகுளம் நாகபந்தனக் கவிதை வித்தகர் அமரர் திரு. சௌந்தரநாயகத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தவர். கவிராயர் தமது நூலை வெளியிட பண முடக்கத்தில் இருப்பதைக் கண்டு தன் இயலாமையிலும் அதற்குப் பணம் வழங்கி அந்நூல் 1974 இல் வெளிவரக் காரணமாய் இருந்தவர். கோடையாளன். இவர் நேர் கண்டவர்களின் செவ்விகளைத் தொகுத்து இரு பிரிவுளாக வெளியிடும் நோக்கோடு தனது முதல் தொகுதியில் 32 பேரின் பேட்டிகளைத் தொகுத்து கிளிநொச்சி மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையின் முதல் வெளியீடாக அதிக பெண் படைப்பாளிகளை உள்வாங்கி "மண்ணின் வேர்கள்" என்ற தொகுப்பை வெளியிட்டார். இது அன்று கிளி மாவட்ட அரச முதல்வரும் கலை பண்பாட்டுப் பேரவையின் தலைவராய் இருந்த மதிப்பிற்குரிய அமரர். திரு. தி. இராசநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழா இறுதிப் போரின்போது இடித்துத் தரைமட்டமாக்கப் பட்ட கிளி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் ஆவணித் திங்கள் 2006 ஆம் ஆண்டில் நடபெற்றது. இதில் பல கலைஞர்கள் நன்மதிப்பு (கௌரவிப்பு) செய்யப் பெற்றனர். இதில் நானும் ஒருவன். அவர் வெளியிட்ட நூலில் எனது முதல் அவருடனான நேர்காணலும் உண்டு. அன்று அவர் என்னை வெளியுலகிற்குக் காட்டினார் இதன் பின்னரே நான் எழுத்துலகத்துள் நுழைந்தேன். இப்படிப் பலரை அவர் வெளிக்காட்டியுள்ளார். அவர் வாழும் காலத்தில் அவரால் தனது இரண்டாவது தொகுதியை வெளியிட முடியவில்லை. அவரின் செயற்பாடுகளுக்காக சில கலைமன்றங்கள் பாராட்டி நன்மதிப்புச் செய்தனர் இவர் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத் துறையோடு இணைந்து செயற்பட்டவர்.

ஆனாலும் சில வேளைகளில் செய்தியூடகங்களை நெறியாள்கை செய்பவர்கள் மாறுகின்ற போது புதிதாக வருபவர் தமக்கானவர்களை தெரிவு செய்து கொண்டு ஏனையோரை புறம் தள்ளி விடும் போக்கு (எனது ஆள்) எல்லாக் காலங்களிலும் நிலைபெற்ற ஒன்று. இதற்கு திரு. இரத்தினசிங்கம் விதிவிலக்கா என்ன? கடைசி நாட்களில் அவரும் ஒதுங்கியே வாழ்ந்தார். ஆனாலும் இவரது எழுத்துக்கள், ஊடகம் போன்ற செயற்பாடுகளுக்காக இலங்கை பண்பாட்டு (கலாசார) அமைச்சு அரச தேசிய விருதான கலைவல்லார் (கலாபூசணம்) விருது 2012 ஆம் ஆண்டுக்கானதை வழங்கி நன்மதிப்பு (கௌரவிப்பு)ச் செய்தது. அத்தோடு 2013 இல் இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்ற தொடக்க விழாவில் இவரின் பணிகளைப் பாராட்டி நன்மதிப்புச் செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நா.வை. குமரிவேந்தன்**

இவர் நெடுந்தீவில் பிறந்தவர். தொடக்கக் கல்வியை நெடுந்தீவிலும், பின் இடை, உயர் நிலைக் கல்வியை யாழ்ப்பாணத்திலுள்ள யாழ்ப்பாணக் கலலூரியில் கற்றுத் தொழில் கல்வியை மொறட்டுவைப் பல்கலைக் கழகத்திலும் கற்று மின் பொறியியல் துறை சார்ந்த நிறுவனமொன்றில் தொழில் பார்த்தார். தனது 5 ஆவது அகவையை எட்டிய போது குமுகத் தொண்டில் இணைத்துக் கொண்டு இவரது ஊர் மிகப் பின்தங்கிய ஊராய் இருந்த காரணத்தினால் அங்கு பிறந்த பிள்ளைகள் க.பொ.த (சாதாரணம்), க.பொ.த (உயர்தரம்) வகுப்புக்களில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற பிள்ளைகளுக்கு இவர் பொருளாளராயிருந்த தனிநாயக அடிகள் சி. கூ. சங்கம், அன்பளிப்புக்கள் வழங்கியும் நன்மதிப்பு (கௌரவிப்பு)ம் செய்ய மூலகாரணாயிருந்து செயற்பட்டார். தனது பிள்ளைகளின் கல்வி காரணமாகவும், நடுநிலையற்ற தொழில் கொள்வோர் நிலைப்பாட்டாலும் தனது 55 ஆவது அகவையில் ஓய்வு பெற்றார். தனது பிள்ளைகளின் கல்வி காரணமாய் தமிழ்நாடு சென்றவர் அங்குகிடைத்த நட்பால் (மதுரைத்தமிழர்) பொறிஞர் அகன் என்பார்) தமிழ்படித்தார்.

அதே காலப்பகுதியில் கிளி மாவட்டத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராக 2005 – 2008 வரை செயற்பட்டார். அக்காலகட்டத்தில் நடத்தப்பட்ட திருவள்ளுவர் விழா (இருநாள்) மிகச் சிறப்புடையதாய் அமைந்தது. இவ்விழாவைத் தொடர்ந்து திரு.க.இரத்தினசிங்கம் அவர்கள் தினக்குரல் நேயர்களுக்காகச் செவ்வி கண்டு அதை 03.09.2006 தினக்குரல் செய்தித்தாளில் வெளிப்படுத்தினார். இவரே இவரை வெளியுலகிற்கு வெளிப்படுத்திய பண்பாளராவார். இவரில்லத்தில் நடந்த முதல் திருமணம் தமிழ் திருக்குறள் நெறித் திருமணமாக தைப்பொங்கல் நாள் 2006 இல் நடத்தப்பட்டதை, இவரை நேர்கண்டு "வெள்ளிநாத"த்தில் பாராட்டி எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். சிலபல காரணங்களால் 2009 இன் பின் தமிழ் சங்கத்திலிருந்து விலகிக்கொண்டார்.

இவர் தமிழ் கலப்பற்றதாய், இலக்கண வரம்பை மீறாது, கொச்சை, பைந்திர (பிரதேச) வழக்குகளை தவிர்த்து எழுதப்பட வேண்டும் என்பதிலும், தமிழர்கள் அனைவரும் தமிழ்ப்பெயர் தாங்கவேண்டும் என்பதிலும், கையொப்பங்கள் தமிழில் மட்டும் இடம்பெற வேண்டும் என்பதிலும் தமிழர் உள்வீட்டு நிகழ்வுகளில், கோவில் பூசை வழிபாடுகளில் தமிழ் மட்டுமே கோலோச்ச வேண்டும் என்பதிலும் மிகப் பிடிவாதம் கொண்டவர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் (இயறகை) என்ற கொள்கையுடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளே இவரது வேதம். தமிழர் ஆண்டின் முதல் நாளாக தைப்பொங்கல் நாளைக் கொண்டு திருவள்ளுவர் ஆண்டு (கி.பி ஆண்டு + 31) முறையைத் தமிழர் பின்பற்ற தமிழ் நாட்காட்டியையும் வெளியிடுகின்றார்.

இவரது இரு பிள்ளைகளுக்கு திருக்குறள் நெறித் திருமணமாகவும், இருவருக்குக் கிறீத்தவத் திருமணமாகவும், ஒருவருக்கு இந்து திருமணமாகவும் செய்து வைத்துள்ளார். இவரும் வடமாகாணத்தில் மன்னார் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலும், கண்டி, கம்பளை, கொழும்பு ஆகிய இடங்களிலும் இன்று வரை தமிழ் திருக்குறள் நெறித் திருமணங்களை நிறைவேற்றி வருகின்றார். இவரது இயற்பெயரான மகேந்திரராசாவை ; "மகேந்திரம்" வடமொழியில் தமிழ், தமிழன் தோன்றிய குமரிநாட்டையும், "ராசா" வடமொழியில் மன்னன், வேந்தன், கோன் என்ற தழிழ்ச் சொற்களையும் குறிப்பதால் தனது பெயரைக் "குமரிவேந்த"னென கொண்டு பலராலும் அறியப்பட்டுள்ளார். இவரது குடும்ப உறுபினர்களும் தமிழ்ப்பெயர் தாங்கியுள்ளனர்.

இவர் குடுமி வைத்து தமிழன் பண்பாட்டுடன் காட்சி தருபவர். இவர் 08.02.2010 இல் சியோன்மலை, சோழபுரம், விருதுநகர, தமிழ்நாடு, பாவாணர் கோட்டத்தில் நடைபெற்ற தேவநேயப்பாவாணர் பிறந்தநாள் விழாவில் "செந்தமிழன்" என்ற பெயர் சூட்டி துண்டு போர்த்தி நன்மதிப்பு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் யாத்த முதல் நூல் "பெய்யெனப் பெய்யும் மழை" பல கட்டுரைகளைக் கொண்டுள்ளது. முடிந்தவரை தனித்தமிழில் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் தமிழ் நாட்டில் கோயம்பேட்டில் இவர் வீட்டுக் கடைசித் திருமணத்(திருக்குறள் நெறித் திருமணம்) தின் போது திருமணத்தை நடத்தி வைத்திய முனை பேரா. திருமாறன் (திருசசி) அவர்களால் அவரது அணிந்துரையோடு 2010 இல் வெளியிட்டு வைக்கப்பெற்றது. இம் முதல் நூல் பலரின் பாராட்டையும் பெற்றதாகும். இது இவரைத் தொடர்ந்து எழுதவும், ஆய்வுகளைச் செய்யவும் மிகவாய்த் தூண்டியது. இந்நூலைத் தொடர்ந்து இவர் "ஏகலைவன்" கல்விக்காகப் பதினைந்து வயதிலிருந்து கற்று செய்து வரும் "ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி அல்லது ஓகநெறி" நூலையும் யாத்து அத்துடன் "பெய்யெனப் பெய்யும் மழை" என்ற நூலையும் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் 14.05.2011 இல் வெளியிட்டார்.

இந்த ஓகநெறி நூலில் இனிய தமிழ்ப்பெயர்கள், தமிழ் நாட்காட்டி, தமிழ் இலக்கங்களையும், (80 ஆண்டுகளுக்கு முன் தமிழர் பயன்படுத்தியது) தமிழ் ஞாயிற்று மாதங்களையும், புதன் கிழமைக்குப் பகரமாக அறிவன் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிக்கிழமைக்குப் பகரமாக (பதிலாக) காரி என்றும் பயன்படுத்தப்படுகின்றது. இவர் தனது ஆக்கங்களை தினக்குரல், வீரகேசரி, சுடர்ஒளி போன்ற செய்தித் தாள்களில் வெளிப்படுத்த முயன்ற போது தினக்குரல் இவருக்கு ஓரளவு ஒத்தாசை வழங்கியது. வீரகேசரியில் முளையிலே கிள்ளியெடுப்பவர்கள் இருந்ததால் ஓரிரு ஆக்கங்களை விட ஏனையவற்றை வெளியிடவில்லை. இதனால் செய்தித்தாள்களுக்கு எழுதுவதை விட்டு தனது கருத்துக்களை, ஆய்வுகளை நூலாக வெளியிடத் தொடங்கினார். இந்நூல்கள் பரிசிற்காகவோ, விற்பனைக்காகவோ எழுதப்படவில்லை. குறித்த இந்நூல்களில் பத்துப் பத்துப் படிகள் கிளிநொச்சி, வவுனியா, நெடுந்தீவிலுள்ள 36உயர் நிலைப்பள்ளி நூலகங்களுக்கு அன்பளிப்பாக நேரில் சென்று கையளிக்கப்பட்டது.

இவரின் மூன்று ஆக்கங்களான, மதுரை எரிகிறது, தமிழியச் சான்றோர், அகனின் விழிப்புக் கதைகள் என்ற மூன்று நூல்களும் கிளி. கரைச்சி பைந்திர (பிரதேச) சபை மண்டபத்தில் இரா. தானியல் நாகலிங்கம் அரங்கில 29.01.2013 இல் வெளியிடப்பட்டதோடு இவரால் இலங்கைக் குமரித்தமிழ்ப் பணிமன்றம், குடும்ப நிறுவனமாக நிறுவப்பட்டது. நிறுவனத்தின் நோக்கம் மொழி, பண்பாடு, ஒழுக்கம், மீட்பு, காப்பு, வளர்ப்பு என்பவையாகும். இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக குமுகாய தொண்டர்கள், உருத்திரபுரம் ச.மு.அருளம்பலம், திருவையாறு சண்முகநாதன், திருநகர் ம.தெய்வேந்திரம், விசுவமடு அ.தர்மலிங்கம் போன்றோருக்கும், கலைஞர்களான திருநகர் நடராசா, அமரர் .கு.இரத்தினசிங்கம், அமரர் திருவாட்டி நே.நாகம்மா, திரு.ஆனந்தராசன், வாணி பதிப்பகம், வவுனியா திரு. செல்வநாயகம், மூத்த உழவர் க.பசுபதிப்பிள்ளை ஆகியோர் நன்மதிப்புச் செய்யப்பெற்றனர். அத்தோடு கிளிநொச்சி கல்வி வலய உயர்நிலைப் பள்ளிகள், துணுக்காய் கல்வி வலய உயர்நிலைப்பள்ளி நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பாக வழங்க மடல்கள் அனுப்பியும் ஒரு சில பள்ளிகளே அவற்றைப் பெற்றுக்கொண்டன.

29.03.2015 இல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இவர் யாத்த "உலக உயர்தனிச் செம்மொழி செந்தமிழ்", "தமிழர் மெய்யியல் கோட்பாடு, தமிழர் இலக்கிய, இலக்கணம் (ஓர் அறிமுகம்)" ஆகிய நூல்கள் வெளியிடப்பெற்றன். சிறப்பு நிகழ்வாக யாழ் மாவட்ட உயர்நிலைப்பள்ளி நூலகங்கள் 96 இற்கு இவர் அதுவரை யாத்த ஆறு நூல்களின் மும்மூன்று படிகள் (18) அன்பளிப்புச் செய்ய மடல்கள் அனுப்பிய போது 74 பள்ளிகளுக்கு மேல் கலந்து நூல்களை பெற்றுக்கொண்டன. இது பள்ளி முதல்வர், ஆசிரியர்களின், மாணவர் சார்ந்த அக்கறையை வெளிப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21.02.2017 இல் உலகத் தாய்மொழி நாளையும், "கிறிஸ்தவர்களின் தமிழ்க்கொடை தமிழியற்சான்றோர் பகுதி 2,3" நூல் வெளியீட்டையும், பல் தொழில்சார் மூத்த குடிகள் (30 பேர்) நன்மதிப்பையும், (அகவை 80 இகு மேற்பட்டோர்) வளர்ந்தோர்க்கான கட்டுரைப்போட்டி, நெடுந்தீவுக் கோட்ட மட்ட பள்ளிகளுக்கடையிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள், வளர்ந்தோருக்கான நன்மதிப்பும், பரிசில்களும், கலைநிகழ்வுகளில் பங்குகொண்ட அனைவருக்கும் (மாணவர்கள், தனிப்பட்டவர்கள், நெறியாள்கை செய்தவர்கள் உட்பட) சான்றிதழ்கள் பரிசில்கள்,8 பளளி நூலகங்களுக்கு (8) நூல்கள் அன்பளிப்பு, யாழ் கரிகணன் நிறுவனத்தார் அன்பளிப்புச் செய்த நாவலர் சிலைகள் பள்ளிகள், அரச பணமனைகளுக்கு அன்பளிப்பு, பல்கலைக்கழகப் புகுமுக மாணவர்களுக்கான (7 பேர்) அன்பளிப்பு, நன்மதிப்பு போன்றன குமரித் தமிழ் பணி மன்றமும், யாழ் இந்தியத் துணைத்தூதராயிருந்த மதிப்பிற்குரிய திரு. ஆறுமுகம் நடராசன் அவர்களின் ஒத்துழைப்போடும் பெருவிழாவாக நெடுந்தீவு தேவானந்தா பண்பாட்டு மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது.

இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டியும் உலகத் தமிழ்மொழி நாளை முன்னிட்டும் நடத்தப்பட்ட இலங்கை தழுவிய கட்டுரைப்போட்டி, கிளி கல்வி வலய மாணவர்க்கிடையில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியும், கிளி மாவட்ட பல்தொழில் சார் மூத்த குடிகள் (பெண்கள் உட்பட) நன்மதிப்பும், கிளி கல்வி வலய, முல்லைத்தீவு கல்வி வலய, துணுக்காய் கல்வி வலய க.பொ.த சாதாராணம் வரையுள்ள பள்ளிகள், உயர்நிலைப் பள்ளி நூலகங்களுக்கான நூல்கள் அன்பளிப்பும், இவர் யாத்த "தமிழ் எழுச்சி (பாநூல்)", "சமயப் பண்மையியம் அகஈ(ஆன்மீ)கமும்", "கிறித்தவர்களின் தமிழ் கொடை தமிழியச் சான்றோர் பகுதி 2,3" நூல் மீள் வெளியீடும், மன்றச் செயலாளர் த. நிரஞ்சலன் யாத்த "வலிய கனவுகள்" என்ற கவிதை நூல் வெளியீடும் 03.03.2018 அன்று கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் காவேரிக்கலாமன்றத்தின் ஒத்துழைப்போடு அரங்கேற்றப்பட்டது. இம்மூத்த குடிகள் (பெண்கள், கலைஞர்கள் உட்பட) என்போர் தமிழர் தமிழ் மொழியை, பண்பாட்டை, ஒழுக்கவியலை, கலை மரபை, (பாரம்பரியத்தை) கட்டிக்காத்து, வளர்த்து எம் உடல் உள மேம்பாட்டிற்கு தமது அர்த்தத்தை வேர்வையாக்கித் தம்மை ஈகம் செய்பவர்கள் எனவே அவர்கள் வாழும் காலத்தில் அவர்கள் பாராட்டப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாவில் பைந்திரச் (பிரதேச) செயலகங்களூடாகவே மூத்தோர் தகவல்களைக் கோரிய போது அவர்களால் கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் கிளி.மாவட்ட மூத்தோர் பட்டியல் தயார்ப்படுத்தப்பட்டு 4 பேரின் பெயர்கள் அந்தந்தப் பைந்திர செயலாளர்களுக்கும், முகவரி தரப்பட்டவர்களுக்கும் நேரடியாகவும், மடல்கள் அனுப்பி இவர்களுக்கு நன்மதிப்பு, அன்பளிப்பு, போக்குவரத்துச் செலவு வழங்கவும் அனுப்பப்பட்ட மடல்களிலும் குறிப்பிட்டிருந்ததாம். ஆனால் 40 பேரில் 12 பேர் மட்டுமே வரவு தந்தனர். அவர்களுக்குக் கூறியபடி நன்மதிப்புச் செய்யப்பட்டது. கிளி.வலய பள்ளி கட்டுரைப் போட்டிகளிலும், 10 இற்கும் குறைவான பள்ளிகளே பங்குபற்றின.அவர்களுக்கும் நன்மதிப்புச் செய்யப்பெற்று சான்றிதழ்கள், அன்பளிப்புக்களும் வழங்கப்பெற்றன. பள்ளி நூலகங்களுக்கு (6000 உரூபா பெறுமதியான நூல்கள்) அன்பளிப்புச் செய்ய முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி) வலயங்களிலுள்ள 12 பள்ளிகளுக்கு மடல்கள் அனுப்பியும் 30 பள்ளிகளிற்குக் குறைவான பள்ளிகளே கலந்து நூல்களைப் பெற்றுக்கொண்டன. திறந்த கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி ஓரளவிற்கான கட்டுரைகள் வழங்கியவர்களுக்கும் நன்மதிப்பு, அன்பளிப்பு போக்குவரத்துச் செலவுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தமிழ் நாட்காட்டி வெளிவந்து கொண்டிருக்கின்றது.

2015 யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பெற்றுக்கொண்ட உயர்நிலைப்பள்ளி நூலாக அன்பளிப்பு நூல்கள் பற்றிய சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முதல்வரின் கருத்து : “மெல்லத் தமிழினிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்” என்ற பாரதியின் கூற்றுமெய்ப்பிக்கப்பட்டுவரும் இன்றைய நவீன உலகில் தமிழ் மீது தீராத பற்றும், அயராத ஆய்வு நோக்கும் கொண்ட தாங்கள் தமிழியல் சார் இலக்கிய ஆக்க முயற்சியில் கொண்டுள்ள புலமைக்கும் சான்று பகர்வனவாக தங்கள் நூல்கள் அமைந்துள்ளன. அறிவுப் புலமையைக் கூட வர்த்தக நோக்கமாக்கும் இன்றைய கல்வியியலாளர் மத்தியில் தங்களது படைப்புக்களையும், தமிழர் நாட்காட்டியையும் பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்குவதிலிருந்து தங்கள் உயரிய மனப்பாங்கு புலனாகின்றது. தங்களது தரமான படைப்புக்கள் எம் மாணவர்களுக்கு அறிவொளியூட்டும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தமிழ் அன்னைக்குத் தாங்கள் செய்யும் மகத்தான பணி மேலும் சிறக்க வாழ்த்துவதோடு, நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (திருவாட்டி. டி.துசிதரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு இவரின் நூல்கள், ஆய்வுகள் குறித்த முனை. பேரா. திரு. சி. சிவலிங்கராசா அவர்களின் கருத்து : நண்பர் குமரிவேந்தன் ஆழ்ந்தகன்ற புலமையர், பொறியியல் துறையில் பட்டம் பெற்றவர். இலக்கிய இலக்கண முயற்சிகளில் புதுவிதமான சிந்தனையைப் புகுத்தியவர்களுட் பலர் விஞ்ஞானத் துறை சார்ந்தவர்கள். இந்த வரிசையில் இவரைக் கணக்கில் வைக்க வேண்டும். தனித் தமிழ் பற்றுடையோராய் தமிழியல் ஆய்விலே இடையறாது ஈடுபட்டிடும் இவர் பல நூல்களை எழுதியுள்ளார். இவரது தமழ நாட்காட்டியைப் பார்த்து வியக்காதவர் இல்லையெனலாம். குமரி வேந்தனின் ஓயாத தேடலும், ஒழியாத ஆய்வுகளும் தொடர வேண்டும் என்பது எமது விருப்பமாகும். தமிழ் பற்றுக் காரணமாக தமிழ் பண்பாட்டை பேண வேண்டுமென்றே உந்துதல் உடையவர். சொல்வதொன்று செய்வதொன்று என்று வாழாமல் தாம் தழுவிய, நம்பிய கொள்கைக்கு மிகவும், விசுவாசமாக இருப்பவர். போய்மையில்லா புகழுக்குரியவர். (கிறீத்தவர்களின் தமிழ்க்கொடை, தமிழியச் சான்றோர் பகுதி 2, 3 நூலுக்கு போசிரியர் அவர்கள் வழங்கிய அணிந்துரையிலிருந்து).

இதே நூலின் வாழ்த்துரையில் யாழ் இந்தியத் துணைத் தூதர் மாண்புமிகு திரு.ஆ.நாடராசன் இந்நூலின் ஆசிரியர் நா.வை.குமரவேந்தன் என அழைக்கப்படும் எனது நண்பர் மகேந்திரராசாவின் தமிழ்ப் பணி பாராட்டத்தக்கது. ஏற்கனவே தமிழில் நாட்காட்டியினை வெளியிட்டு உத்தமப் பணியாற்றியவர். கல்வியாளர் அனைவராலும் நன்கு அறியப்பட்டவர். பல ஆய்வு நூல்களை தமிழ் கூறு நல்லுலகிற்கு நல்கியவர். இந்து, இசுலாம், கிறித்தவ மத வேறுபாடுகள் அற்று தமிழ் வளர்த்த அனைத்து அறிஞர்களின் தொகுப்பாக ஒரு ஆய்வு நூலை ஆசிரியர் பதிப்பிக்க வேண்டும் என்பது என் அவா என்பார்.

இதே நூலின் மதிப்புரையில் முனை.பேரா.திரு.க.நாகேசுவரன் சிந்தனை வல்லோன், பண்முகத் தேடலில் மூழ்கி முத்தெடுக்கும் ஆய்வறிவாளர். நூலில் ஆங்காங்கு விடய தானங்களை அள்ளித் தெளித்துள்ளார். ஆர்வ மேலீட்டினால் முறைமையும், ஒழுங்கும் பேணப்படுதல் வேண்டும் என்னும் அவாவினால் சற்றுக் கடுந்தொனியில் விடயங்களை எழுதியுள்ளார். சீர்திருத்த வேகமும் காணப்படுகின்றது. தமிழ் நெஞ்சன் குமரிவேந்தனது கொள்கை மிக உயர்ந்தது. பாவணார் கொள்கையிலே திளைத்த இவர் தமிழர் யார்? அயலவர் யார் என்பதை அவரே போல் துணிந்து எழுதுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது முதல் நூல் இலங்கை பேராசிரியர் ஒருவருக்குக் கிடைத்த போது அவர் அதைப் பார்த்து விட்டு நூலாசிரியர் நூலின் அணிந்துரைக்கு எவ்வளவு பணம் கொடுத்து பெற்றதாக இவரை கேட்டிருக்கிறார். இதனால் அதன் பின் இவர் யாத்த ஏழு நூல்களுக்கும் யாரின் உரைகளும் இல்லாது என்னுரை அல்லது முன்னுரையைத் தானே எழுதி வெளியிட்டிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தனது தனிப்பட்ட தேவைக்காக ஒருமுறை அமரர் திரு. நாகேசுவரன் பைந்திர(பிரதேச) செயலாளர், கரைச்சி அவர்களைச் சந்தித்தபோது இவரைத் தன்முன்னாலே இருத்தி இவரின் நூல்கள் செயற்பாடுகளை எழுதித் தரக்கோரி இவர் மறுத்த போதும் அதைப் பெற்று 2015 ஆம் ஆண்டுக்கான "கரைஎழில் விருது (இலக்கியம்)" பெறச் செய்ததாகவும் தொடர்ந்து மாவட்ட விருதான " கலைக்கிளி" விருதை (தமிழ் பணி) 2016 இலும், அரச கலைவள்ளார் (கலாபூசணம்) விருதை (இலக்கியத்துறை) 2017 இலும், வடமகாண முதலமைச்சர் விருதினை (உரையியல்) 2017 இலும் பெற்றதாகவும் குறிப்பிடுவார். 2018 இல் முருகாமலை சிறி முருகன் கோவில், தெல்தேனியா, கண்டியில் திரு சி. முத்தையா (காற்பந்து வீச்சாளர் முரளிதரனின் தந்தையார்) தலைமையில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் "சமூகப் பணிக்கான விருதை: நடுவக (மத்திய) மகாண முதலமைச்சர் சரத் எக்கநாயக்க வழங்கி நன்மதிப்பு செய்துள்ளனர். இவர் செந்தமிழன், குடுமிவேந்தன், தமிழையா, தமிழ்அந்தணர் என்னும் பெயர்களாலும் அழைக்கப் படுகின்றார்.

**கலைவல்லார் (கலாபூசணம்) திருநகர் நடராசா**

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் 1939 இல் பிறந்து தற்போது கிளி திருநகரில் வாழ்ந்து வருகிறார். இவர் இ.என்.இராசா திருநகர் நடராசா என்ற பெயர்களில் சிறுகதைகள், கட்டுரைகளை பெருவாரியாக எழுதிக் குவிக்கின்றார். இன்றும் எழுதிக் கொண்டிருக்கின்றார். இவர் கிட்டத்தட்ட 150க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் குறைந்தளவிலான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகளில் சிலவற்றைத் தொகுத்து முதற்தொகுதியை "ஓய்வு" என்ற தலைப்பில் 2012 இலும் இரண்டாம் தொகுதி கரைசேராப் படகுகள்" நூலை யீவநதியுடன் இணைந்து கரைச்சிப் பண்பாட்டுப் பேரவையும் வெளியிட்டுள்ளன. மூன்றாவது சிறுகதைத் தொகுதி நூலும் வெளிவர இருப்பதாகக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவம் தொட்டு கதைகள் வாசிப்பது இவரது பழக்கமாய் இருந்திருக்கிறது. இவர் மு.வரதராசன், இரா.பி.சேதுப்பிள்ளை, அறிஞர் அண்ணா, அகிலன், யெகசிற்பியன், போன்றோரின் நூல்களை விரும்பிப் படித்துள்ளார். பள்ளி மாணவராக இருந்தபோது தானும் கட்டுரை, சிறுகதைகளை, இதழ்கள், சிற்றிதழ்கள், செய்தித்தாள்களுக்கு எழுத விரும்பி பூண்டுலோயாவிலிருந்து மு. க.சுப்பிரமணியத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த வெற்றிமணி இதழின் மாணவ உறுப்பினராக இணைந்து சிறுகதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளார்.

அப்பொழுது இலங்கையில் வீரகேசரி, தினகரன் செய்தித் தாள்களே முன்னணியில் நின்றன. முதலில் வீரகேசரிக்கு சிறுகதைகள் சில அனுப்ப அவர்கள் அதை வெளியிடாததால் சில காலம் பொறுத்த தினபதிச் செய்தித் தாளுக்கு அனுப்பிய "வாடா மல்லிகை" என்ற சிறுகதை அதில் வெளிவந்தது. தொடர்ந்து எழுதியுள்ளார். சிறிது காலத்தில் தினபதி நின்று விட்டதால் தொடர்ந்து சுதந்திரன், மல்லிகை, தினக்குரல், மித்திரன், வீரகேசரி, வண்ணவானவில் போன்ற செய்தித் தாள்களில் இவரது சிறுகதைகள் வெளிவரத் தொடங்கின.

இவரது இலக்கிய வளர்ச்சிக்கு தினக்குரல் செய்தித்தாளே பக்கபலமாயிருந்துள்ளது. இச் செய்தித்தாளில் திரு. புண்ணியாமின் என்பவரால் " இவர்கள் நம்மவர்கள்" என்னும் தலைப்பில் இவரை அறிமுகப்படுத்தியதோடல்லாமல் அதை நூல் வடிவத்திலும் பதிக்கப்பட்டதாம். இவர் எழுதிய சிறுகதைகள் வரிசையில் " இங்கும் தீபாவளி" என்ற சிறுகதை பலராலும் பாராட்டப்பட்டதாகும். "முதலாளியும் தொழிலாளியும், பசுவும் கயிறும், இதயக் கோவிலும் இறைவழிபாடும், தாயும் சேயும், வள்ளுவரும் திருக்குறளும்" போன்ற சிறுகதை கட்டுரைகளையும் செய்தித்தாள்களினூடாக வெளியிட்டுள்ளார். தேனீக்கள் சாக்கடையில் உட்கார்ந்தாலும் அவை தேனை மட்டும் தான் சேகரிக்கும். அதே போல் அவர் தொழிலுக்குச் சென்ற இடங்களில் கண்டவற்றை , பட்டறிந்தவற்றை தன் கதைகளுக்கு கருவாக்கியுள்ளார் என்பதையும் வெள்ளிடை மலையாய்த் துலங்கும். இந்த அடிப்படையிலேயே " வாழ்க்கைப் பயணம், ஏமாறச் சொன்னதும் நானோ, மனிதர்கள் பலவிதம்" போன்ற சிறுகதைகளைக் குறிப்பிட முடியும்.

இவரைக் கவர்ந்த எழுத்தாளர்களாக இவர் குறிப்பிடுகின்றவர்கள் மறைந்தும் மறையாத இரசிகமணி கனகசெந்திநாதன் தனது இறுதி மூச்சுவரை தானும் எழுதி எழுத்தாளர்களையும் ஊக்குவித்து இலக்கிய வளர்ச்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டாற்றியவர். வல்லான் (வித்துவான்) க.செபரத்தினம், செங்கையாழியான், அ. பாலமனோகரன், கே.எசு. ஆனந்தன் போன்றோரையும் குறிப்பிடுவார். ஒரு எழுத்தாளனும் ஓக (யோக) நெறியாளனும் கிட்டத்தட்ட ஒரு நிலைப்பட்டவர்களாகவே காட்சி அளிக்கின்றனர். ஓக நெறியாளன் தான் புலன்களை குவித்து இடையறா ஒரு நிலைச் சிந்தனையோடு இருப்பது போல் எழுத்தாளன் தன் கதைக்கான கதை உறுப்பினரை (கதைப் பாத்திரங்கள்) பற்றிய ஒருமுகப்படுத்திய சிந்தனையின் வெளிப்பாடாகவே எழுதுகின்றான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

“ஓய்வு” என்ற தொகுதியில் உள்ளடக்கப்பட்ட சிறுகதைகள் “ சுட்ட சங்கு, நினைவுகள் சுமக்கும் நெஞ்சம், ஓய்வு, இங்கும் தீபாவளி, பாதை தவறிய கால்கள், தீர்ந்த முடிவு, நிறைவு, நில்லுங்கோ நானும் வாறேன், எங்கே போவது, சென்று வருகிறேன், ஒளி விளக்கு, கமலச்சந்திரன், மலரட்டும் ஒரு புது யுகம், உணர்வுகள் உறங்குவதில்லை, கூண்டிலே குற்றவாளி, ஏமாறச் சொன்னது நானோ, சைக்கிள் பயணம், காற்றோடு பறந்த கடதாசி, வாழ்க்கைப் பயணம், மனிதர்கள் பலவிதம், வெற்றியும் வேதனையும், அவனும் அவளும், மணலும் அலையும் போன்றனவும் கரைசேராப்படகுகள் சிறுகதைத் தொகுதியில் உள்ளடக்கப்பட்ட சிறுகதைகள், சமூகம், தெளிவு இல்லாத உண்மைகள், அப்படியும் சில மனிதர்கள், போரில் புலர்ந்த வாழ்வு, ஈர்ப்பு, குறையும் நிறையும், மனிதநேயம் என்பனவாம்.

கிட்டதட்ட 50 ஆண்டுகளுக்கு மேல் தனது குடும்பத்திற்காக கொத்தனார் தொழிலினூடாக உழைப்பைத் தேடிக் கொண்டு தனது கலைத் தொண்டினூடாக வாழ்வில் அடுத்தவருக்கு எந்தவித இன்னல்களையும் கொடுக்காத நடுநிலையோடும் பண்போடும் வாழ்ந்தவரும் ஆன்மீகச் சிந்தனையாளரும் ஆவார். இவர் தனது கல்வித்தகமைக்கேற்ப (இன்றைய உயர்தரம் அன்றைய 9ஆம் வகுப்பு) தகுதிவாய்ந்த அரச தொழிலை பெற்றிருக்க முடியும். ஆனால் அவர் யாரிடமும் கைகட்டி நிற்க விரும்பாததால் அரச தொழிலைப் தவிர்த்தார். இவரது 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கியத்துறை சார்ந்து மக்களை நடுவகப்படுத்தி அவர்களின் உயர்ச்சிக்காய் ஆக்கங்களை வழங்கி உயிர்ப்பூட்டியதைப் பாராட்டி வடமாகாண ஆளுநர் விருதையும், இலங்கை அரசின் 2010 ஆம் ஆண்டிற்கான கலைவல்லார் (கலாபூசணம் இலக்கியம்) விருதை பண்பாட்டு அலுவல்கள் அமைச்சிடம் இருந்தும், 2011ஆம் ஆண்டில் கிளி கரைச்சிப் பண்பாட்டு பேரவையின் கரை எழில் விருதையும், 2012 ஆம் ஆண்டில் கிளி மாவட்டப்பண்பாட்டுப் பேரவையிடமிருந்து “கலைக்கிளி” விருதையும் பெற்றுள்ளார் என்பது பாராட்டத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலை வல்லார் (கலாபூசணம்) அமரர் திரு.அ.வல்லிபுரம்**

இவர் யாழ்ப்பாணத்தில் அப்பச்சி அன்னபூரணம் இணையரின் மகனாக 1941 இல் பிறந்தவராவர். இவர் தனது தொடக்க கல்வியை திருநெல்வேலி முத்துத்தம்பிப் பள்ளியிலும் (வித்தியாலயம்), பின் ஜெயந்திநகர், இந்துக் கல்லூரியிலும் கற்றவராவர். இவரின் தந்தையார் காத்தவராயன் கதை பாடல் நாடகமாக அம்மன்கோவில்களில் அரங்கேற்றுவதைப் பார்த்து இவரும் சிறுவயதில் இருந்தே அதில் நாட்டமும் ஈடுபாடும் கொண்டுள்ளார். அமரர் வல்லிபுரம்அவர்கள் 1980ஆம் ஆண்டுகளில் நாடக(கூத்து) அரங்கேற்றுதலைத் தொடங்கி கிளிநொச்சிப்பகுதியில் எல்லா அம்மன் கோவில்களிலும், காத்தவராயன் கூத்தையும், காத்தவராயன் பாடல்களையும் இரவு நேரங்களில் மேடையேற்றியுள்ளார். பல மணித்தியாலய நிகழ்வாக நடத்திய இக் கூத்தை அரைமணி, ஒருமணி கூத்தாக சுருக்கியும் அதன் தாளம், ஒப்பனை, உடுக்கு, நெறியாள்கை போன்றவற்றையும் இவரே நெறிப்படுத்தியுள்ளார்.

இவர் தந்தையாருக்கு அடுத்த நிலையில் நல்லூரைச் சேர்ந்த அண்ணாவியார் பொன்னப்பா என்பாரையும், குஞ்சுப் பரந்தனைச் சேர்ந்த அண்ணாவியார் செல்லத்துரை அவர்களுமே தமக்கு காத்தவராயன் கூத்தையும் முறைப்படிம் அக்குவேர் ஆணிவேராக கற்க மூலகாரணமாக இருந்தார்கள் என்பர். தமது நாடகத்துறை வளர்ச்சிக்கு அரிச்சுவடானது திருநெல்வேலி முத்தமிழ் காலாமன்றமே என பெருமைபட கூறுகின்றார். இவர் தொடக்கத்தில் திருநகர் தெற்கு அமரர் திரு. வீரசிங்கம் அவர்களுடன் இணைந்து இளைஞர் கலைவளர்ச்சி நாடகமன்றத்தை நிறுவி பல இளைஞர்களையும் இணைத்து காத்தவராயன் கூத்து, வரலாற்று நாடகங்கள், சமூகநாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளது.

திரு. வீரசிங்கம் அவர்கள் காலமான பின் 2000ஆம் ஆண்டில் முத்துமாரி அம்மன் நாடகமன்றத்தை தொடக்கி அதன் அனைத்துச் செயற்பாடுகளையும் இவரே இயக்கி வந்தார். அத்தோடு சிறீவள்ளி, ஏழுபிள்ளை நல்லதங்காள், கோவலன் கண்ணகி, மனிதம் வாழவேண்டும், ஏரோதன்,ஏமாந்தன் என்ற நாடகங்கள் சிந்துநடைக் கூத்தாகவும், அரங்கேற்றியுள்ளார். இவர் தனது நாடகங்களையும் கூத்துக்களையும் கோவில் திருவிழாக்காலங்களிலும், சமயம் சார்ந்த முதன்மையான நாட்களிலும் மேடையேற்றியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். குறிப்பாக கிளிநொச்சி முருகன் கோவில், இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோவில், மலையாளபுரம் கற்பக முத்துமாரியம்மன் கோவில், தோணிக்கல் நாகபூசணி அம்மன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற சமய இடங்களிலும் கரைச்சி பண்பாட்டுப் பேரவை, கிளி பண்பாட்டுப் பேரவை, திருநகர் விளையாட்டுக் கழகம் ஆகிய இடங்களிலும் அரங்கேற்றப்பட்டுள்ளன.

இவர் தமிழர்களின் கலைமரபுகள் (பாரம்பரியம்), அழிந்துவிடக் கூடாது, அதைக் கட்டிக்காத்து வருங்காலத் தலைமுறையினருக்கு உறுதியான ஒன்றாய் விட்டுச் செல்லவேண்டும் என்பதில் உணர்வாலும் செயலாலும் வாழ்ந்து காட்டியவராவார். இவர் பின் நாட்களில் பள்ளி மாணவர் நடுவில் இக்கலை மரைபை கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கோடு பள்ளி மாணவர்களின் தமிழ்நாள் (தின)ப் போட்டிக்காக பாரதி பள்ளி, கிளி இந்துக்கல்லூரி, கனகபுரம் உயர்நிலைப்பள்ளி, மகாதேவா குருகுலம்(ஆச்சிரமம்) போன்ற இடங்களில் சிந்துநடைக்கூத்து பழகியதன் பயனாக அப்பள்ளிகள் மாவட்ட மட்டத்தில், தேசிய மட்டத்திலும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கதும், பாரட்டப்படத்தக்கதும், பெருமைப்படத்தக்கதும் ஆகும்.

அத்தோடு இவரின் மாணவர்கள், இலங்கையில் தேசிய அளவிலும், புலம்பெயர் நாடுகளிலும், இந்நாடகங்கள், கூத்துக்களை மேடையேற்றி வருவதாகக் பெருமையடையக் கூறுகின்றார். இவருக்குக் கிடைத்த நன்மதிப்புக்கள்: 1995இல் பாரதி பள்ளி, பாரதிபுரம், 2004இல் கிளிமாவட்டத் தமிழ்ச்சங்கம், 2007இல் தமிழீழ முதுபெரும் கலைஞர், 2008 இல் கனகபுரம் கற்பகப்பிள்ளையார் கோவில், 2012இல் கிளி இந்துக்கல்லூரி, உருத்திரபுரம் உயர்நிலைப்பள்ளி, கனகபுரம் உயர்நிலைப்பள்ளி ஆகியனவும் 2013இல் மகாதேவா குருகுலம் (ஆச்சிரமம்), மலையாளபுரம், கற்பக முத்துமாரியம்மன் கோவில், கொக்குவில் மேற்கு காளியம்மன் கோவில் போன்ற நிறுவனங்கள் பாராட்டி பொன்னாடை போர்த்தியுள்ளன. இவர் தனது கலைத் தொண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூத்த கலைஞர்களை ஒன்றுகூட்டித் தனது நாடக மன்றத்தினல் அவர்களை நன்மதிப்புச் (கௌரவிப்பு) செய்தமை தனது மறக்கமுடியாத நிகழ்வாகச் சுட்டுகின்றார். இவரது வாழ்நாளில் வழங்கப்பட்ட "கலைவல்லார் (கலாபூசண)" விருதை பண்பாட்டு அலுவல்கள் அமைச்சும்,2011இல் "கரைஎழில்" பட்டத்தினையும் கரைச்சி பண்பாட்டுபேரவையும், செயலகமும், 2012இல் "கலைக்கிளி" பட்டத்தை மாவட்டப் பண்பாட்டுப் பேரவையும் செயலகமும் 2014இல் வடமாகாண "முதலமைச்சர்" பட்டத்தினையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாட்டி தாமரைச்செல்வி**

இவர் பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் இரதிதேவி கந்தசாமி ஆகும். இவர் யாழ்ப்பாணம் இந்து மகளீர் கல்லூரியின் பழைய மாணவியாவார். படிக்கும் காலத்தில் இருந்தே நூல்கள் வாசிப்பதில் நாட்டம் கொண்டு மு.வரதராசன், கல்கி, அகிலன், யெகசிந்பியன் போன்றோரின் நூல்களை அதிகம் விரும்பிப் படித்துள்ளார். இவரின் தொடர்ந்த வாசிப்பே எழுத்துலகத்தில் புகுவதற்கு ஏதுவாயும், தூண்டலாயும் இருந்துள்ளது எனலாம். 1973ஆம் ஆண்டிலிருந்து இலங்கை வானொலிக்குப் பல ஆக்கங்களை எழுதியிருக்கின்றார். இவரது ஆக்கங்கள், செய்தித்தாள்கள், இதழ்கள் (சஞ்சிகை), சிற்றிதழ்கள், குறிப்பாக இலங்கையில் வெளியாகும் தினக்குரல், வீரகேசரி, ஈழநாடு, ஈழநாதம், தினகரன், தாரகை, ஞானம், விளக்குப் போன்ற ஊடகங்களினூடாகவும், தமிழ் நாட்டின் குங்குமம், ஆனந்த விகடன், மங்கை போன்றவற்றின் ஊடாகவும் தனது ஆக்கங்களை வெளிப்படுத்தியுள்ளார். இவரது முதல் சிறுகதை வீரகேசரிச் செய்தித்தாள் ஊடாக முதன்முதலில் 1974இல் வெளிவந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து இன்றுவரை 200ற்கு மேற்பட்ட சிறுகதைகளையும், புதினங்கள்(நாவல்) ஆறையும், குறு புதினம் இரண்டையும் யாத்து செய்தித் தாள்கள், இதழ்கள், சிற்றிதழ்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். இவருடைய ஆக்கங்கள் பிரான்சின் பாரிசு நகரத்தில் இருந்து வெளியாகும் ஈழநாடு, களத்தில் எரிமலை, ஈழமுரசு ஆகிய செய்தி ஊடகங்களினூடாகவும், வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டம் தனித்துவமாக இயங்கத் தொடங்கிய 1984ம் ஆண்டிற்கு சற்றுமுன்னதாக 1970ஆம் ஆண்டுவாக்கிலேயே இப்பைந்திரத்தில்(பிரதேசத்தில்) இலக்கியம் சார்ந்த செயற்பாடுகள் தொடங்கியது. இக்காலகட்டத்தில் புதினங்கள் (நாவல்), சிறுகதைகளென சில படைப்புக்கள் வெளிவரத் தொடங்கின. இருந்தாலும் போதிய அளவில் வெளிவரவில்லை என்றே கூறவேண்டும். இருந்தாலும் 1974ஆம் ஆண்டளவில் எழுதத் தொடங்கிய தாமரைச் செல்வி அவர்களால் கிளிநொச்சி மாவட்டத்தில் இலக்கிய மதிப்புக்கள் (விழுமியங்கள்) குறிப்பிடத்தக்க அளவு உயர்ச்சியும் பெருமையும் கொண்டது எனலாம்.

முதலில் மக்களின் குமுகாய இடர்பாடுகள் பற்றியவற்றை நடுவகப்படுத்தியே கதைகள், புதினங்கள் எழுதப்பட்டன. ஆனால் இனவன் முறைகள் பூதாகரமாக வெடித்தபோது மக்களின் இன்னல்கள், இடர்பாடுகள், இடப்பெயர்வுகள், பசிபட்டினி, உடல்உள பிணிகள், கொலை, கொள்ளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் வன்முறைகள், வெளிக்கிளம்பியபோது இவற்றைக் கருவாகக் கொண்டு இலக்கிய எழுத்தாளர்கள், புதிய நோக்கோடும், மக்களை ஆற்றுப்படுத்தவும், வெளியுலகம் இவற்றை அறிந்து கொள்ளவும் பல சிறுகதைகளும், புதினங்களும் யாக்கப்பெற்றன. தாமரைச் செல்வி அவர்களின் இல்லம் (குமரபுரம்) ஆனையிறவுப் படைமுகாமிற்கு அண்மித்ததாய் இருந்ததால் 1987இல், பின் 1990 இவரின் வீடு எரிக்கப்பட்டுள்ளது. இதுதான் அப்பகுதியிலிருந்த அவர்கள் முகம் கொடுத்த துயர் நிறைந்த வாழ்க்கையாயிருந்தது. தாமரைச்செல்வி அவர்கள் 1990 ஆண்டின் பின் அவரால் யாக்கப்பெற்ற அனைத்து நூல்களுமே மேற்குறித்தவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு யாக்கப்பெற்றவையாகும்.

இவர் யாத்த சிறுகதைகளில், இடைவெளி, வாழ்க்கை, அழுவதற்கு நேரமில்லை, தீர்வு, ஊனம், ஒரு மழைக்கால இரவு, ருனா என்பவை குறிப்பிடத்தக்கவை. இதில் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்புச் செய்யப்பட்டவை "இடைவெளி (தகப்)", வாழ்க்கை(தலைவர்) என்பனவாகும். அத்தோடு காகிதப்பூக்கள், இங்கேயும் சில இழப்புக்கள், கதாநாயகிகள் ஆகிய சிறுகதைகள் இலக்கியத்தகுதிகாண் ஆய்வாளர்களால் (விமர்சகர்கள்) பாராட்டப்பட்டவையாகும். இவர் ஓவியக் கலையிலும் சிறந்த விற்பன்னராயிருந்தார் என்பதும், கவிஞர் செவ்வந்தி மகாலிங்கம் அவர்களின் "முத்துக்குவியல்" என்ற கவிதை நூலுக்கான அட்டைப்பட ஓவியத்தை தாமரைச்செல்வி அவர்கள் வரைந்து கொடுத்து தனது ஆற்றலை அதில் வெளிப்படுத்தியுள்ளார்.

இவர் எழுதிய புதினங்களில்( நாவல்) குறிப்பிடத்தக்கவை, தடைகள், விண்ணிலல்ல விடிவெள்ளி, தாகம் போன்றனவும் சிறு புதினங்கள் வரிசையில்: வீதியெல்லாம் தோரணங்கள், வேள்வித்தீ ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவர் எழுதிய 200ற்கு மேற்பட்ட சிறுகதைகளில் 20ற்கு மேற்பட்ட சிறுகதைகள் பல்வேறு போட்டிகளில் பரிசையும், பாராட்டையும் பெற்றிருக்கின்றன. குறுபுதினங்களில் (நாவல்) "அவர்கள் தேவர்களின் வாரிசுகள்" கலாவல்லி இதழின் பாராட்டுப் பரிசையும், 1983இல் "ஒரு உயிரின் விலை" தகவல் இலக்கிய முதல் பரிசையும், 2010இல் "கசிந்துருகிக் கண்ணீர் மல்கி" சிறப்புப் பரிசையும், "வீதியெல்லாம் தோரணங்கள்" யாழ் இலக்கிய வட்டமும், வீரகேசரியும் இணைந்து நடத்திய கனகசெந்திநாதன் நினைவுக்குறுநாவல் போட்டியில் 2ஆம் பரிசையும், "வேள்வித்தீ" முரசொலியின் முதல் பரிசையும் பெற்றது. 1992இல் யாழ் இலக்கியப் பேரவையின் 2ஆம்பரிசை "விண்ணிலல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிவெள்ளி" என்ற புதினத்திற்கும், 1993இல் "தாகம்" என்ற நாவலுக்கு இரண்டாம் பரிசையும், விருதும் பாத்தாயிரம் ரூபா அன்பளிப்பும் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1987, 1990 களின் வீடெரிப்பின் போதும், 1996 இன் இடப்பெயர்வின் போதும், தனது ஆக்கங்கள், வெளிவந்த செய்தித்தாள்கள், இதழ்கள், பரிசுச்சான்றிதழ்கள், நல்லநூல்கள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு விட்டதாம். இருந்தாலும் பரிசுபெற்ற கதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட மனங்கொண்டுள்ளாராம் என்பர். இவர் தம் எழுதிய கதைகள் எல்லாமே பிடிக்குமென்றும் குறிப்பாக " இங்கேயும் சில இழப்புக்கள், ரூனா, ஒரு மழைக்கால இரவு, பாவம் அழுவதற்கு நேரமில்லை, இடைவெளி" என்பனவாம்.இவரின் இன்னும் சில நூல்கள் மொழி பெயர்ப்புச் செய்யப்பெற்றுள்ளன. "முகம் அற்றவர்கள்", "எங்கேயும் எப்போதும் (த இன்னவிற்றபிள்)" போன்றனவற்றைக் குறிப்பிடமுடியும். தொகுப்புக்களாக ஒரு மழைக்கால இரவு 1998 - வடகிழக்கு மாகாண இலக்கிய விருதைப் பெற்றது. அழுவதற்கு நேரமில்லை 2002, வன்னியாச்சி 2005 என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவர் கிளிநொச்சி மாவட்டத்தின் பெருமையும், சிறப்புமிக்க மக்களையே நடுவகப்படுத்தி அவர்கள் நடுவிலே வாழ்ந்ததும் அவர்களோடு இடர் இன்னல்களைச் சுமந்தும் தன் ஆளுமைகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்திய, இலக்கிய உருவாக்க எழுத்தின் வைப்பகமெனக் கூறிடின் மிகையாகாது. என்றும் இவரின் பெயர் உலகுவாழ் தமிழ் மக்கள் வாயில் உச்சரிக்கப்படும் பெயராயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

**திரு.நா.யோகேந்திரநாதன்**

இவர் வடமராட்சியின் ஒரு சிறிய ஊரான கரணவாயில் பிறந்தார். சிறுவம் தொட்டே எழுத்து, நாடகமென்றால் இவருக்கு மிகவும் பிடித்ததாம். இவர் உடுப்பிட்டி அமெரிக்கன் திருச்சபை (விடையூழியர்) கல்லூரியில் க.பொ.த. வரை கற்றவர். இவருக்கு அங்கு குருவாகவும், வழிகாட்டியாகவும் இருந்தவர் எம் பெருமாள் என்ற ஆசிரியர். அங்கு தனது உணர்வுகளை நாடகமாக்கி மேடையேற்றினாராம். இவரது தந்தையாரும் ஒரு இடதுசாரியாகவும், அவர் கொண்டு வரும் "தேசாபிமானி" என்ற செய்தித்தாளினூடாக யோகேந்திரநாதனவர்கள் சீர்திருக்கருத்துக்களை உள்வாங்கியுள்ளார். அதேநேரம் சிறந்த எழுத்தாளர்களான கல்கி, அகிலன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெகசிற்பியன், நா.பார்த்தசாரதி, யெயகாந்தன் ஆகியோரின் நூல்களை விரும்பிப் படித்துள்ளார். இவையே அவரை நாடகம், சிறுகதை எழுதத் தூண்டியதெனலாம்.

இவர் 1963 இல் எழுதிய சிறுகதை ஈழநாடு நடத்திய போட்டியில் இரண்டாம் பரிசைத்தட்டிக் கொடுத்து இவரை எழுத்துலகத்துள் உள்ளிடுத்தியதெனலாம். அப்போது ஈழநாடு செய்தித்தாளின் ஆசிரியராயிருந்த அமரர் திரு. முருகானந்தம் கதையின் கரப்பொருளைப் பாராட்டியும் குறை நிறைவுகளைச் சுட்டி தென்பூட்டியதால் அதே செய்தித்தாளில் "பாசத்தளை" என்ற குறும்பு தினத்தை தொடராக எழுதியுள்ளார். இதே ஏட்டில் "வானத்தாமரை" குறும்பு தினத்தை எழுதிய போது அது பலரின் மனதைத் தொட்டதால் எழுத்தாளன் என்ற தகுதிக்கு உரித்துடையவரானார்.

இதே காலப்பகுதியில் வீரகேசரியில் ஒரு சிறுகதையும், சிந்தாமணியில் இரண்டு சிறுகதைகளும் வெளிவந்தன. இதனால் ஒரு செய்தித்தாளை வெளியிட விரும்பித் தனது கணையாளியை விற்று ஒரு இலக்கிய ஏடாக "தமிழருவி" என்ற பெயரில் தொடக்கி அதன் வெளியீட்டோடு மூடப்பட்டது. மீண்டும் மேன்னாள் அரச முதல்வர் தில்லை நடராசாவுடன் இணைந்து "மாணவன்" என்ற ஏட்டைத் தொடங்கி அதுவும் இடையில் நிறுத்தப்பட்டது. ஆனாலும் குமுகக் கொடுமைகள் நடுவில் பெண்ணழிவு, பாலியல் முறைக்கேடு, சாதிய வேற்றுமை, அடித்தட்டு மக்களை துன்புறுத்தல், மேலாண்மை செலுத்துவோரின் ஊழல், மோசடி, கையூட்டுப் போன்றவற்றிற்கு எதிராக ஏதாவது செய்ய எத்தனித்தது அன்றைய பொதுவுடமைக் கட்சியான பீக்கிங் சார்பு சமவுடமை கட்சியில் சேர்ந்து முழுநேரப் பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இருந்த போதும் "வசந்தம்" செய்தித்தாளுக்கும் தன்னாலான பங்களிப்பைச் செய்துள்ளார். வானொலிக்கு "சுழியோட்டம்" என்ற நாடகத்தை எழுதி வழங்கி நாடகத்துறையுள் காலடியெடுத்து வைத்துள்ளார். தொடர்ந்து இலங்கை வானொலிக்காக 19 நாடகங்களை எழுதினார். இதில் " காட்டுநிலா" என்ற நாடகம் பலமுறை ஒலிபரப்பப்பட்டுள்ளது. இவர் போட்டிற்கு எழுதிய அவள் அக்காவிட்டாள்" என்ற சிறுகதைக்கு ஈழமுரசு 3ஆம் பரிசை வழங்கியுள்ளது. ஆனால் "தகவம்" காலாண்டுப் போட்டியில் இச்சிறுகதை முதலாம் இடத்தைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சார்ந்த விடுதலைப் போராட்ட உணர்வின் மேலீட்டால் இந்தியப்படை இங்கு நிலைகொண்டிருந்த காலத்தில் "கொடூரசங்காரம்" என்ற நாடகத்தை இந்தியப்படையின் வன்பறிப்புக்கு எதிராக கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டது. 1990 இற்கும் பின் " ஏவற்பேய்கள்" என்ற வீதி நாடகத்தை கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அரங்கேற்றப்பட்டது. தொடர்ந்து " வியர்வைத்துளிகள்" கேள்விகள் போன்ற மேடை நாடகங்களையும், நாட்டுக்கூத்து, தெருக்கூத்துக்களையும் அரங்கேற்றியபோது இவை பாராட்டுக்குரியவையாயின, வெளிச்சம், இதழின் ஆசிரியர் குழுவின் உறுப்பினர் " ஈழநாதம்" செய்தித்தாளின் முதன்மை ஆசிரியப்பணிக்கு அமர்த்தப்பட்டார். இக்காலப் பகுதியில் இவ்விதழ் செய்தித்தாள்களில் கட்டுரைகள், சிறுகதைகள், எழுதிக்கொள்ளும் நாடகங்களை நெறியாள்கை செய்து கொண்டும் இருந்தார். இவர் எழுதிய "உயிர்த்தெழுகை" என்ற தொடர் நாடகம் பலராலும் போற்றப்பட்ட, புகழப்பட்ட நாடகமாகும். அத்தோடு " கவிதா நிகழ்வு" என்ற தலைப்பில் உள்ளூர் வானொலியில் கவிதை சார்பான நிகழ்ச்சியையும் தொடர்ந்து வழங்கியவர்.

அத்தோடு குறும்படங்களான சுழியோட்டம், எதிர்காலம் இருளல்ல, சந்தணமரம், எல்லைக்கற்கள் போன்றவற்றிற்கும் கதை, வசனம் எழுதி நெறியாள்கை செய்துமிருக்கிறார். இடப்பெயர்வில் மட்டுமல்லாது 1971இல் யே.வி.பி கிளர்ச்சிக் காலத்திலும் பின் 1987, 1988 இந்தியப்படையின் இருப்பினாலும் தான் இழந்தவை குறிப்பிட்டுக்கூற முடியாதவையாம். (நூல்கள், இவரது எழுத்தாவணங்கள் அனைத்தும்) என்பார். யே.வி.பி கிளர்ச்சியின் போது இரண்டு ஆண்டுகள் மறைந்திருந்து வாழ்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நூறுக்கு மேற்பட்ட சிறுகதைள், இருநூறுக்கு மேற்பட்ட வானொலி நாடகங்கள், ஐம்பதிற்கு மேற்பட்ட மேடை நாடகங்கள், நான்கு குறும்படங்களுக்கான கதை வசனம் எழுதி நெறியாள்கையும் செய்தவராவார். 2006இல் கிளிநொச்சியில் 12 சிறுகதைத் தொகுதியை தொலைநோக்கி என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். 2014 களில் சுடரொலியில் மௌன மனவெளிகள் என்ற புதினத்தை எழுதினார்.

கனடா தமிழ் வானொலி நடத்திய சிறுகதைப்போட்டியில் 2011இல் சுடலை காத்தல் என்ற நூல் முதலாம் பரிசைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. மன்னாரில் 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் எங்கள் பொழுது விடியும் என்ற ஆக்கத்திற்கு முதலாம் பரிசு கிடைத்துள்ளது. இவர் போர்கால இலக்கியமாக நீந்திக் கடந்த நெறுப்பாறு என்னும் நூலின் முதல் பாகத்தை 2015 இலும், இரண்டாம் பாகத்தை 2017 இலும், மூன்றாம் பாகத்தை 2019 இலும் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதினங்களை இவரின் பார்வையில் உலக வரலாற்றிற்கு வீரத்தாலும், தியாகத்தாலும், இரத்தத்தாலும், கண்ணீராலும் தமிழ் மக்கள் வழங்கிய ஒரு வீர காவியத்தின் ஒரு சில துளிகளை என் தூவல் (பேனா) முனையில் தொட்டெழுத விரும்பினேன். இது பெரும் கடலை குடிக்க நினைக்கும் கரிக்குருவியின் நப்பாசைதான். ஆலையில்லா ஊரில் இலுப்பைப்பூ சக்கரை தானே. இங்கு ஒரு புதினம் (நாவல்) போர்க்கால இலக்கியமாகப் பதிவு செய்யப்படும் போது இது வரலாற்றிற்கு காத்திரமான பங்களிப்பை வழங்குகிறது என்பது வெள்ளிடை மலை.

தொல்காப்பியம் கூறும் புறத்திணையியல் போர் பற்றிய தகவல்களை விரிவாகக் கூறினாலும், இன்று இலங்கைத் தமிழர்கள் முகங்கொடுத்தது எவ்வகை இலக்கியமென்பதை நுண்மான் நுழை புலத்தோடு ஆராய்ந்தால் இது போர் இலக்கியமல்ல போர் கால இலக்கியமென்று வரையறை செய்ய முடியும். அதாவது மக்கள் வாழ்விடங்களே போர்களமாக மாறி மக்கள் போராளிகளாக மாறி போரியலும், வாழ்வியலும் ஒன்றாய்ப் பின்னிப் பிணைந்த நிலையில் போரே வாழ்வாகவும் வாழ்வோட்டமே போராட்டத்தின் ஒரு பகுதியாகும் மாறி மக்கள் அனைவருமே போரின் சகலவிதமான வலிகளையும் கொடுரங்களையும் அதன் தவிர்க்க முடியாத தேவையின் அடக்கு முறைகளையும் பட்டறிந்த மக்கள் பற்றிய இலக்கியங்கள் போர்கால இலக்கியங்களாகி வரலாற்றை சுமந்து வாழும் ஆவண இலக்கியமாகவும் திகழ்கின்றன. ( முன்னுரை நீந்திக் கடந்த நெறுப்பாறு 2 ஆம் பாகம்) இவர் கிளிநொச்சி மண்ணின் மூத்த படைப்பாளியாகவும் திருவையாறு முதலாம் பகுதியை நிலைத்த வாழ்விடமாகக் கொண்டவர். இவர் உதவி அஞ்சல் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். எனது தம்பி அமரர் நா.வை.குகராசாவின் (மணியண்ணன்) நண்பரும், ஒன்றித்த சிந்தனையும், செயற்பாடும், இடதுசாரி சிந்தனையோடும் செயற்பட்டவர்கள். தாங்கள் வடித்துக் கொண்ட கொள்கையில் இன்று வரை தடம் பிரளாதவர்கள்.

## மேலும் சில கிளி. மாவட்டத்தின் கலை இலக்கிய புலமையர்

பொன் தில்லைநாதன், இதயராசன், விவேக் கருணாகரன், பெருமாள் கணேசன், சந்திரபோசு சுதாகர், கோகுல இராகவன், பரந்தன் ஊரான், செங்கையாழியான், மரு.ச.முருகானந்தன், கோப்பாய் சிவம், பவானி சிவகுமாரன், மகேந்திரன், சிதம்பர திருச்செந்தி நாதன், போராளி எழுத்தாளர் எனப்பலர் கலைத்துறைக்கான பங்களிப்பை இலக்கியம் சார்ந்து (சிறுகதை, புதினம், கவிதை போன்ற பல) (ப.261275 வரை கிளிமாவட்டத் தொன்மையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலங்கள் - 2014) நாடகம் (கூத்து, இசைநாடகம், வசன நடை நாடகம், இசை வசன நடை போன்ற) புன்னை நீராவியைச் சேர்ந்த திரு.வி.வேலாயுதம்பிள்ளை (1932), தட்டுவான் கொட்டியைச் சேர்ந்த ஆ.பாலசுப்பிரமணியம் (1956), திருநகர் வடக்கைச் சேர்ந்த ஆ.வல்லிபுரம், (1941), ஐயனார்புரம் வை.ஜெயம்பிள்ளை (1944), அ.அன்ரன்தாசு, நாச்சிக்குடா ச.பத்திநாதன் நாச்சிக்குடா, ஞானியர்மடம் சி.இரத்தினம் (1934), சின்னப்பல்லவராயன்கட்டு சி.செல்வரத்தினம் (1949) முட்கொம்பன் கெ.குலேந்திரன், இரணைமாதாநகர் சூ.சந்தியா, நாச்சிக்குடா செ.யோகராசா, கொல்லங்குறிச்சி மகாலிங்கம் நெற்புலவு த.யெகங்நாதன் (1951), அல்லிப்பளை வ.உதயகுமார் (1963) ,தர்மங்கேணி செ.சுந்தரம்பிள்ளை (1951), மாசார் வே.சுப்பிரமணியம் (1934), புலோப்பளை நீக்கிலாப்பிள்ளை (1936), புலோப்பளை யே.அல்பிரட் (1942), புலோப்பளை மி.அலேசு, அதே இடத்தைச் சேர்ந்த வ.செல்லத்துரை (1947), கிளாலி நீ.யெயரட்ணம் (1953), வண்ணாங்கேணி செ.தனபாலசிங்கம் (1947), இயக்கச்சி மு.செல்வம் இவர்களில் பலரும் அண்ணாவியார் களாக, நெறியாள்கை செய்பவர்களாக, நடிப்பவர்களாக இசை, இசைக்கருவி வழங்குபவர்களாக, ஆளுநர், மாவட்ட, பைந்திர(பிரதேச) விருதுகளைப் பெற்றவர்களாக உள்ளனர். இவர்கள் அரங்கேற்றிய கூத்துக்கள் நாடகங்களாவன கோவலன் கண்ணகி, பவளக்கொடி, நல்லதங்காள், அரிச்சந்திரா, காத்தவராயன், அல்லி அர்ச்சுனா, பதிபக்தி, காத்தான்கூத்து, மார்க்கண்டேயபுராணம், அரிச்சந்திர மயான காண்டம், சத்தியவான் சாவித்திரி, ஞானசௌந்தரி, சந்தியோகுமையோர், கண்டியரசன், பொன்னூல் செபமாலை, அங்தோனியார், வள்ளி திருமணம், பரதம், இராமாயணம், தேவசகாயம், வரப்பிரசாதம், செபமாலை மாதா, அருளப்பர், மத்தேயு, மௌழம்மா, புனிதவதி, கற்பகமாயா, கிறித்தோப்பர், பாரேசன், எசுத்தாக்கி, யோசேப்பு, சங்கிலியன், ஒரு சிரசு பரிசாகிறது போன்ற நாடகங்களை இசைக்கூத்துக்களாக (சிந்துநடை, தெருக்கூத்துப் பாணியில்) பல நாடக, இசை, கலை மன்றங்களை உருவாக்கி நெறிப்படுத்தியுள்ளனர். (கிளி.மா.தொன்மையின் மூலங்கள் ப 303 - 305)

கலை வளர்ப்புப் பணியில் ஈடுபட்ட பலர் மறைந்தும் மறக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். அந்த வகையில் கண்டாவளைப் பகுதியில் கள்ளப்புட்டி கந்தையா (முத்தப்பா), சின்னத்துரை, வைரமுத்து, பச்சிலைப்பள்ளி மாசார் கனகசபை கந்தையா, இராசு (மணிமாச்ட்டர்), சோரன்பற்று வல்லியப்பர், கந்தை இவரிடம் பயின்ற சி.கணபதிப்பிள்ளை, பெரியபளை பொன்னையா, தருமதக்கேணி சுந்தரம்பிள்ளை, கிளாலி பேதுரு வசுத்தியாம்பிள்ளை, இராசையா, வண்ணாங்கேணி பெரியான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் செல்லையா, புலேப்பளை பெரியதம்பி, பேராலை விசுவநாதர், முழங்காவில் தில்லையம்பலம், கறுக்காய்த்தீவு விசுவலிங்கம், தம்மையா இவரின் மகன் துரைச்சாமி, செட்டியார் குறிஞ்சி செல்லத்துரை, சின்னத்தம்பி, கதிரவன், வலைப்பாடு சீமான், சித்தாத்துரை, நெற்புலவு மு.பொன்னையா, சுப்பப்பா மணியம் போன்ற சிறந்த அண்ணாவியர் களாக கலைக்காய் அதன் தொடர்ச்சிக்காய் வாழ்ந்தவர்கள் (கிளி.மாவ.தொன்மையின் மூலங்கள் ப 299 - 300)

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!!
மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!

முதன்மைக் குறிப்பு :- இத் தொகுப்பில் முடிந்தவரை வேற்று மொழிகளான வடமொழிகளான வடமொழி, சமற்கிருதம், ஆங்கிலச் சொற்கள், எழுத்துக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

*நா. வை. மகேந்திரராசா,*
*நிறுவனர் இலங்கைக் குமரித் தமிழ்ப் பணி மன்றம்,*
*துணைத்தலைவர், கிளிமாவ. பண்பாட்டு (கலாசார) அதிகாரசபை,*
*ஜெயந்திநகர், கிளிநொச்சி.*

**உசாத்துணை நூல்கள்**


1. மண்ணின் வேர்கள் :- 2006 க. இரத்தினசிங்கம்
2. கிளிநொச்சி மாவட்ட தொன்மையின் மூலகங்கள் :- 2014
3. கிறிஸ்த்தவர்களின் தமிழ்க் கொடை தமிழியச் சான்றோர் பகுதி 2,3 :-2016 நா.வை.குமரிவேந்தன்
4. தமிழர் மானிடவியல் :- 2002 முனை. பக்தவக்சல பாரதி
5. பண்பாட்டு மானிடவியல் :- 2002 முனை. பக்தவத்சல பாரதி
6. நீந்திக்கடந்த நெறுப்பாறு பாகம் 2 :- 2017 நா.யோகேந்திரநாதன்
7. நேர்காணல் :- திரு.பெ. திருச்செல்வம்
8. நேர்காணல் :- மா. செல்லத்தம்பி (வளவை வளவன்)
9. நேர்காணல் :- வண. முனை. யோசுவா அடிகள்
10. நேர்காணல் :- திரு.இ.நடராசா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்டமும் கலை கலாசாரமும்

இடம் பொருள் ஏவலைக் கொண்டே ஒரு இடத்தின் கலை கலாச்சாரத்தை கணிக்கலாம். ஆரம்ப காலத்தில் சிறு சிறு பகுதிகளாக இருந்த கிளிநொச்சி படிப்படியாக வளர்ந்து இன்று மாவட்டமாக உயர்ந்து நிற்கிறது. இடத்தால் உயர்ந்தாலும் மனிதர்களின் மனத்தால் உயரவில்லை என்றே சொல்ல வேண்டும். காரணம் ஆரம்ப காலத்து மக்களின் கலை கலாசாரங்களும் இன்றைய மக்களின் கலை கலாசாரமும் வேறுபட்டு நிற்கின்றன.

அன்றைய மக்களிடம் தர்ம நெறியும் தயாள குணமும் தன்னலம் இல்லாத செயலும் நிறைவாக இருந்தன. இன்றைய மக்களிடம் தண்டிக்கும் குணமும் தவறான மனமும் தர்மநெறி இல்லாத செயலும் நிறைந்து கிடக்கின்றன. பூச்சியத்தை இலக்கமாக வைத்துக் கூட்டிப் பார்க்கும் கொள்கையும் மலிந்து கிடக்கின்றன. இது வாழ்ந்த – வாழும் கிளிநொச்சி வாழ் மக்களின் குணாதிசியங்களின் சுருக்கம்.

கிளிநொச்சி மாவட்டம் வேடிக்கையும் விசித்திரமும் நிறைந்த தொன்மையான நீண்ட வரலாற்றைக் கொண்டது. இலங்கை பிரிட்டிசாரின் ஆட்சிக்குள் இருந்த காலகட்டத்தில்தான் இரணைமடுக்குளம் நவீன மயமாக்கப்பட்டது. குளத்தைச் சார்ந்தே குடியேற்றங்கள் நடைபெற்றன. அதன் ஆக்க வேலைகளுக்காக தமிழகத்தில் இருந்து அழைத்துவரப் பட்டவர்களும் இலங்கையைச் சேர்ந்த சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் எனப்பலரும் குடியேற்றப்பட்டார்கள் நீர்ப்பாசனத்திற்கான செயலகத்தை அமைத்து அதைச்சார்ந்த பகுதியிலேயே அதன் ஊழியர்கள் குடியேற்றப்பட்டார்கள். அந்தப்பகுதியே பரவிப்பாஞ்சான் என்று அழைக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் வெள்ளைக்காரர்களே பொறியியலாளர்களாக கடமையாற்றினார்கள். கிளிநொச்சி மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இரணைமடுக்குளமே காரணியாக அமைந்தது. மக்களும் பாரம்பரியமான கலை கலாச்சாரப் பண்புகளில் இருந்து விலகாமல் அறம் காத்து வாழ்ந்தார்கள். எல்லோரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக விவசாயத்தில் ஈடுபட்டார்கள். இடையிடையே இயற்கைப்பசளைகளே பயன்படுத்தப்பட்டன இயந்திர உதவி எதுவும் இல்லை. எருதுகளையும், எருமை மாடுகளையும் உழுவதற்கும் சூடுமிதிப்பதற்கும் பயன்படுத்தினார்கள். ஏனைய மக்களின் பணவருவாய்க்கும் குறைவின்றி வரம்புகட்டு, அரிவுவெட்டு, சூடுமிதிப்பு போன்ற தொழில்கள் குறைவின்றி மாறி மாறி நடைபெற்று வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடுமிதித்த பின்னர் வயற்பரப்பெங்கும் தவறிச் சிதறிக் கிடக்கும் நெல்மணிகளை பல்வகைப்பறவை இனங்கள் வந்து உண்டு களித்துப் பசிமாறிச் செல்லும் வீட்டுத்தலைவன் தொழிலுக்குச் செல்ல தலைவி வீட்டில் இருந்து அம்மியில் அரைத்து உரலில் குத்தி மண்ணில் வனைந்த பானை, சட்டியில் சத்தான உணவுகளைத் தயாரித்து சந்தோசமான வாழ்க்கையும் தேக ஆரோக்கியமும் சந்தான விருத்தியும் பெற்று வாழ்வியல் சடங்குகளால் கலை இலக்கியம் படைத்தவர்கள். அன்றைய கால கிளிநொச்சி மக்கள் மேடை அமைத்து ஆடிப்பாடி நடிக்காமலும் ஓரிடத்தில் உட்கார்ந்து எழுதாமலும் வாழ்ந்த வாழ்க்கையை நிஜ வடிவில் வாழ்ந்து காட்டி கலை இலக்கியங்களைப் படைத்த பெருமை வாய்ந்தவர்கள். மனித வாழ்க்கையின் வடிவத்தைத் தான் ஒவ்வொரு கலைஞனும், கவிஞனும் இலக்கியமாகப் படைத்திருக் கிறார்கள் என்பதை எந்த இலக்கிய வாதிகளாலும் மறுக்கவும் முடியாது மறக்கவும் கூடாது. இன்றைய வாழ்க்கைதான் நாளைய சரித்திரம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அன்றைய மக்கள் கருங்கல்லைக் கடவுளாக நம்பினார்கள். ஆன்மா லயப்பட்டு ஆங்காங்கே ஆலயங்களை உருவாக்கினார்கள். பாரம்பரிய வழிமுறைகளைத் தவற விடாது பூசை உற்சவங்களை புனிதமாக நடாத்தினார்கள். இயற்கையாக இறை சக்தியாக மதித்து அதனோடு இணைந்து வாழ்ந்தார்கள். அதனால் கிளிநொச்சி செல்வம் கொழிக்கும் இடமாகத் திகழ்ந்து வந்தது.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் கிளிநொச்சி சந்தை கூடும். அன்று கிளிநொச்சி திருவிழாக்கோலம் காணும் மக்கள் எல்லோரிடத்திலும் பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். பற்பல ஊர்களிலும் இருந்தும் சிங்கள வணிகர்கள் வெள்ளிக்கிழமை மாலையில் அங்குள்ள பொருட்களை வாகனத்தில் ஏற்றி வருவார்கள். விடியும் வரை வியாபாரப் பரிமாற்றம் நடக்கும். வாழைக்குலைகள், கருவாடு போன்றவற்றை வாங்கிக்கொண்டு செல்வார்கள். தமிழர் சிங்களவர் இன வேற்றுமை இன்றி ஒருவருக்கொருவர் நண்பர்களாகப் பழகினார்கள். இல்லறத்துப் பெண்கள் தான் சந்தைக்கு நடந்து சென்று சாமான்களை வாங்கிக்கொண்டு நடந்து வீட்டுக்கு வருவார்கள். கர்ப்பிணித் தாய்மார்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அதனால் தான் இயற்கை வழிப்பிரசவமாக மழலைகளைப் பெற்று மகிழ்சியாக வாழ்ந்தார்கள். கிளிநொச்சி வைத்தியசாலை வெறிச்சோடிக்கிடக்கும். ஓரிருவரைத்தான் அங்கு காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை உணவுகளையும் உண்டு ஒழுக்கமான ஒழுங்கு நடைமுறைகளையும் கடைப்பிடித்து வந்ததால் வைத்தியசாலைக்குச் சென்று மருந்து வாங்கும் சாத்தியம் அவர்களுக்குக் கிட்டவில்லை.

சண்முகா, பராசக்தி, ஈஸ்வரன் போன்ற தியேட்டர்களும் உருவாகி இருந்ததால் பொழுது போக்கிற்கும் குறை இருக்கவில்லை. சனிக்கிழமைகளில் மாட்டுவண்டி கட்டி குடும்பம் குடும்பமாக சினிமாப்படம் பார்க்கச் சென்று அன்றைய பொழுதை களிப்போடு கழித்தார்கள். சற்றுத் தொலைவில் உள்ள கோயில்களிற்கும் திருவிழா காலங்களில் மாட்டுவண்டியில் தான் போய்வருவார்கள். பட்டப்படிப்போ பண்டிதர் பட்டமோ பெறாவிட்டாலும் பாடசாலையில் படித்த அனுபவ அறிவோடு எதனையும் பகுத்து அறியும் பேராற்றல் மிகுந்தவர்களாக வாழ்ந்தார்கள். இரண்டாவது தலைமுறை முடிந்து மூன்றாவது தலைமுறையில் கிளிநொச்சி நவீன மாற்றத்தைக் காண ஆரம்பித்தது. விஞ்ஞானமும் பெருவிருட்சமாக வளர்ந்ததால் கடந்த கால மக்களால் கட்டிக்காத்து வந்த பாரம்பரியமான கலாசாரங்கள் மாற்றம் கொள்ளத் தொடங்கின. ஆன்மீகத்தில் நம்பிக்கை வைத்து மெஞ்ஞான உணர்வு வழிநின்று வாழ்ந்து வந்த மக்களின் கவனம் விஞ்ஞானத்தின் பக்கம் திரும்பியது.

விஞ்ஞானம் என்பது ஒரு புதிரான சக்தி அது நன்மையாகவும் தீமையாகவும் பிரகாசிக்கும் விஞ்ஞானத்தைக் கடந்தவன் தான் மெஞ்ஞானி. மக்களால் இயங்கி வந்த தொழில்சார்புகள் அனைத்தும் இயந்திரமாக மாறின. முன்னரைப் போல் புதிர் எடுத்து மண்பானையில் பொங்கி அரிவிவெட்டிச் சூடு மிதித்தல் போன்ற பல நாட்கள் செய்ய வேண்டிய வேலைகளை ஒரே நாளில் அரிவிவெட்டி சூடுமிதித்து நெல்லாக்கிக் கொடுத்தன இயந்திரங்கள். இதனால் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. நெல்குத்தல் அரிசி தானிய வகைத்திரித்தல் அனைத்தையும் இயந்திரங்களே செய்துவருகின்றன. அத்தோடு விளைச்சலை அதிகப்படுத்த காய்களைப் பழுக்க வைக்க, பாண்களை ஊத வைக்க இப்படிப்பலவற்றிற்கும் இறக்குமதி செய்யப்படும் இரசாயன மருந்து வகைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் மக்கள் உண்ணும் உணவுகள் எல்லாவற்றிலும் உயிர் ஊட்டச் சத்தில்லாத நச்சுத்தன்மையே காணப்படுகின்றது.

கடலில் பிடிக்கப்படும் மீன்கள் கூட நச்சுத்தன்மையானவை. நைலோன் வலையால் பிடிக்கும் மீன்கள் இவை கூட நச்சுத்தன்மை வாய்ந்தவை தான். இவைகளை உண்பது மட்டுமல்ல சரியான உடல் உழைப்பும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாகத்தான் தீராத நோய்களால் மக்கள் பீடிக்கப்படுகின்றார்கள். எல்லோரும் வைத்தியசாலைக்கு ஓடுகின்றார்கள் வைத்தியசாலை பொங்கி வழிகிறது. வைத்தியசாலையும் விஸ்தரிக்கப்படுகின்றது. பட்டப்படிப்பு படித்ததற்காக அனுபவம் குறைந்த வைத்தியர்களும் நியமிக்கப் படுகின்றார்கள். பிறநாட்டிலிருந்து புதிது புதிதான மருந்து வகைகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன. அம்மருந்துகள் எல்லாம் வேகம் கூடியவை. ஒரு நோய்க்கு மருந்து கொடுக்க இன்னொரு நோய் பற்றிக்கொள்கின்றது.

உண்ணும் உணவுகளாலும் உடல் உழைப்பு இல்லாத வாழ்க்கை முறைகளாலும் இன்றைய மக்கள் வீங்கிப் பருத்த உடம்புகளோடு வீதிகளில் நடமாடித்திரிகிறார்கள். இதில் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். பெண் என்பவள் மகாசக்தி சென்ற காலப் புராணங்களிலும் காவியம் படைத்தவள் மழையைப் பெய்யெனப் பெய்வித்தவள் இன்றைய நிலையில் பெண்கள் இல்லற தர்மத்திலிருந்து விலகி உத்தியோகம் செய்வதுதான் தங்களுக்குப் பெருமையாக நினைக்கிறார்கள் நாளுக்கு நாள் பெண் ஆதிக்கம் விரிவடைந்து உத்தியோகம் புருஷலட்சணம் என மாற்றி உயர்ந்து நிற்கிறார்கள். இது பெருமைக்குரிய போற்றப்பட வேண்டிய விடயம்தான். ஆனால் இது இல்லற தர்மத்திற்கு முரண்பட்டது. இயற்கைக்கு புறம்பானது. ஒருபுறம் இப்படி இருக்க, மறுபுறத்தை ஊன்றிக் கவனித்தால் நாட்டின் நிலை சீர்கெட்டுக் கிடக்கிறது. மக்களின் சீவாதாரம் வீழ்ச்சியடைந்து விட்டது வாழ்க்கைச் செலவுகள் கூடிவிட்டன. இந்நிலையில் ஒரு குடும்பத்தில் இருவர் உழைத்தால்தான் வாழலாம் என்ற நிலைவந்து விட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான கோயில்கள் இருக்கின்றன. அவை யாவும் இந்து சமய கலாச்சாரத்தினைக் களத்தின் உதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பூசை, திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. அந்தணர்கள் அரச மரியாதையுடன் சொந்த வாகனங்களும் வாங்கி வைத்து வலம் வருகிறார்கள். பணத்தையே முக்கியமாகக் கொண்டு வியாபார நிலையம் போல் கோயில்களில் பூசைகள் நடைபெறுகின்றன.

பருவமழை இல்லாத காரணத்தால் இதுவரை காணாத வரட்சியை கிளிநொச்சி மாவட்டம் இன்று சந்தித்துக் கொண்டிருக்கின்றது. காரணம் அறம் பேணாத மக்களின் வாழ்க்கைநெறி முழுக்க முழுக்க விஞ்ஞானத்தையே நம்பியதால் ஏற்பட்ட விளைவு இயற்கையோடு மக்கள் இணைந்து வாழவில்லை. பாரம்பரிய கலாச்சாரத்தைப் பேணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் ஓதிடும் வேதியர்க்கு ஓர்மழை
நீதி தவறா நெறியினர்க்கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கோர் மழை
மாதம் மூன்று மழை எனப் பெய்யுமே
அரிசி விற்றிடும் அந்தணர்க்கோர் மழை
வரிசை தப்பிய மன்னவர்க்கோர் மழை
புருஷனைக் கொன்ற பூவையரக்கோர் மழை
வருஷம் மூன்று மழை எனப்பெய்யுமே.

இது ஒரு சிறிய உதாரணம் இவை நம்மோர்கள் சொல்லிவைத்த உண்மையான ரகசியம். இதை இன்றைய மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதை காலம்தான் பதில் கூறவேண்டும்.

*இளையதம்பி நடராசா*
*திருநகர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மையான இசைக்கலைகள்

தமிழர்கள் நுண்கலைகளில் வல்லவர்கள் அவர்களின் நுட்ப அறிவு, இசைக்கலை, ஆடற்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை போன்ற கலைகளை வளர்க்க வல்லனவாக இருந்தன. மக்களின் வாழ்க்கையோடு இசையானது பின்னிப் பிணைந்ததாகப் காணப்படுகின்றது. இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு உரித்தான தொன்மையான கலைகள் பற்றி அறிதலே நமது நோக்கமாகும். இந்த வகையில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேசங்களின் கலைகள் இசையுடன் பின்னிப்பிணைந்து கூத்துக்கள், இசைநாடகங்கள், புராணநாடகங்கள், நாட்டார் இசை என்பன ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளமையைக் காணலாம்.

இவ்வகையான பாரம்பரிய ஆற்றுப்படுத்துகைகளை கலை ஆர்வலர்களுக்குப் பயிற்றுவித்து மேடை ஏறச் செய்கின்ற அண்ணாவிமார்களும் அப்பிரதேசத்தில் காணப்படுகின்றனர். தொடர்தும் இவர்கள் தமது சேவையை ஆற்றி வருகின்றமையை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

இம்மாவட்டத்தின் தொன்மையான கலைகளில் ஒன்றான கூத்துக்கலை சிறப்பு வாய்ந்த ஒன்றாகும் இதில் நாட்டுக்கூத்து, அறக்கூத்து. காமன்கூத்து எனப் பல வகையில் அடங்குகின்றன. நாட்டுக் கூத்தானது ஒரு இரவுக் கதையாகவே அரங்கேற்றப்பட்டு வந்தது இது மரபுவழி ஆற்றுகையாக விளங்குகின்றது. பளைப் பிரதேசத்தில் கிளாலி, புலோப்பளை ஆகிய இடங்களில் சிந்து நடைக் கூத்தினை அரங்கேற்றி வரும் அண்ணாவியரின் பங்களிப்பு பராட்டத்தக்கது. காத்தவராயன் கதைகளை அபிநயத்துடன் தாளநயம் சேர்த்து பாடல்கள் பாடி கதாகாலட்சேபமாக ஒருவரே பல பாத்திரங்களை ஏற்று அபிநயக்கப் பாடுவதையும் காணலாம். இன்றும் கலைஞர்களுக்கு கூத்துக்களைப் புகட்டி மேடை ஏற்றும் அண்ணாவிமார்கள் இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தட்டுவன்கொட்டி, புளியம்பொக்கணை, புன்னைநீராவி போன்ற பிரதேசங்களில் அறக்கூத்து இடம்பெற்றுள்ளது. இது பிரதானமாக கண்ணகை ஆலயங்களிலேயே அரங்கேற்றம் பெற்றன. இது தவிர காமன் கூத்தும் கல்மடுநகர், கட்டைக்காடு பகுதிகளில் பிரபல்யம் அடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்கலையிலிருந்தே பிற ஆடற்கலைகள் தோன்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

எமது மக்களிடையே காணப்படும் வெளிப்பாடுகளை உணர்த்தும் சமூக நாடகங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் அரங்கேற்றப்பட்டு வந்து 1950 - 1970 வரையான காலப்பகுதியானது இசை நாடகக்கலையின் பொற்காலமாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும். இக்காலப்பகுதியில் 100 இற்கும் மேற்பட்ட நாடகக்கலைஞர்கள் உருவாகி இருக்கின்றார்கள். நாடகங்களில் இசைநாடகங்கள், புராணநாடகங்கள் என்பன அதிக ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இசைநாடகங்களானது காதல், சோகம், வீரம், பிரிவு, பக்தி போன்ற உணர்ச்சிகளை உள்ளடக்கி மேடை ஏற்றுகின்ற நிலை காணப்படுகின்றது. கூடுதலான இசையுடன் குறைந்த அளவிலான வசனநடைப் பிரயோகங்களைப் கொண்டே இசை நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டு வந்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் ஒப்பீட்டளவில் பளைப் பிரதேசத்திலேயே அதிகமாக இசைநாடகங்கள் மேடை ஏற்றப் பட்டுள்ளன.

புராண நாடகங்களானவை பொழுது போக்கிற்காகவும், நேர்த்திக் கடனுக்காகவும் நல்லொழுக்கநெறி புகட்டுவதற்காகவும் மேடை ஏற்றப்பட்டது. இக்காலத்தில் பாத்திரங்களை ஏற்று நடித்தவர்களின் பெயர்களைக் கூறும்போது அவர்கள் நடித்த பாத்திரத்தின் பெயரையும் சேர்த்துக்கூறும் வழக்கம் இருந்துள்ளது. இது கலைஞர்களின் நடிப்பானது மக்களின் மனதில் எந்தளவிற்குப் பதிந்துள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. இது கலைஞர்களின் கலையினை வெளிப்படுத்துகின்ற தன்மை, மக்களின் கலைமீதான ஆர்வம் என்பவற்றைத் தெட்டத் தெளிவாக விளக்குகின்றது.

கிளிநொச்சி பிரதேசத்தில் உடுக்கு வாத்தியம் அடித்து தெய்வக் கதைகள் பாடப்படும் பாரம்பரியம் காணப்பட்டது. வைரவர், முனியப்பர், காளி, கிருஸ்னர், ஐயனார் போன்ற சிறு தெய்வ வழிபாடுகள் பிரசித்தமான கோவில்களில் உடுக்கடித்து தெய்வக்கதைகள் பாடப்பட்டிருப்பினும் அம்மன் கோவில்களில்தான் இந்நிகழ்வானது பிரபல்யமாக உள்ளது. இதற்குப் புளியம் பொக்கணை நாகதம்பிரான் கோவில், பொறிக்கடவை அம்மன் கோவில், அறத்தி அம்மன் கோவில் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கடித்து இசையுடன் பாடல் இசைக்கும் முறையும் உள்ளது. உடுக்கு இசைப்பதன் மூலம் பூசகருக்கு தெய்வ உரு ஏற்றி மக்களுக்கு அருள்வாக்கு அளிக்கும் செயல் இருந்துள்ளது. இவ்வழக்கம் இன்றும் சிறுதெய்வக் கோவில்களில் காணப்படுகின்றது.

மேலும் பறைமேளம் அடித்து கூத்தாடும் செயற்பாடும் உள்ளது. ஒவ்வொரு தெய்வங்களிற்கு ஏற்ற மாதிரி பறைமேளம் அடிக்கப்படுகின்றது. இம்முறையும் சிறுதெய்வக் கோவில்களில் பிரசித்தமானது. கிராமிய இசைக்கலையும் கிராம மக்களின் உணர்வுகள் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. இதில் தாலாட்டுப் பாடல், ஏற்றப்பாட்டு, கும்மிப்பாட்டு, ஒப்பாரிப்பாட்டு, அரிவு வெட்டுப் பாடல் போன்றவை மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவையாக காணப்படுகின்றன. இவை தவிர வில்லிசை, கதைபடித்தல், தெம்மாங்குப்பாடல் போன்றவையும் சிறப்பிடம் பெற்றன. இவற்றிற்கு கண்டாவளை, கலவெட்டித்திடல் ஆகிய இடங்கள் சிறப்புற்று விளங்குகின்றன.

மேலும் கரகாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், பொம்மலாட்டம், கும்மி, கோலாட்டம், காவடியாட்டம் போன்ற நடன வகைகளும் முக்கியம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. கலைகளெல்லாம் உலகிலே மனிதனை மனிதனாக்குகின்ற அதேவேளை வாழ்வியல் உண்மைகளை வெளிப்படுத்துகின்ற ஓர் பல்லூடகமாக விளங்குகின்றது. அத்துடன் மனிதன் தன் கவலைகளை மறந்து சிரித்து வாழ வழிகோலுவதாகும். இவை யாவும் தற்கால கலைஞர்களின் எண்ணங்களால் எட்டப்பட்டு உயிர் கொடுக்கவேண்டிய தேவையை உணர்த்துகின்றது.

*சி.ஜெயதர்ஜினி*
*அபிவிருத்தி உத்தியோகத்தர்*
*பிரதேச செயலகம் பளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேச கலைச்சொத்து காமன்கூத்து

ஈழத்திரு நாட்டிலே கலைமகள் யாவராலமும் போற்றி வளர்க்கப்பட்டன. அவற்றில் சுதேசியக் கலைகள், விதேசியக் கலைகள் என போற்றி வளர்க்கப்பட்ட கலைகள் இன்று எழுத்துருவில் இல்லை, மேடையேற்ற யாருமில்லை. மக்களின் ரசனையும் பாதை மாறி வேறொங்கோ சென்றுகொண்டிருக்கின்றது.

பொதுவாக முத்தமிழையும் வளர்க்கும் விதத்தில் பாமரர்களின் அபிமானத்தைப் பெற்றமையினால் நாட்டுக்கூத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரே மேடையில் பலமுறையோ அன்றேல் ஊருக்கு ஊர் சென்று மேடையேற்றப்பட்டு வந்த காலம் இருந்தது. நாட்டுக்கூத்து, விலாசம், நாடக அலங்காரம், இசைநாடகமென பல பெயர்களிலும் மேடையேற்றங் கண்டாலும் பாடல், இசை, வடிவம், ஆட்டமுறை, உடையலங்காரம், மேடையமைப்பு என்பவற்றில் வேறுபாடுகள் இருந்தாலும் ஒவ்வொரு கலைக்கும் ஒவ்வொரு சிறப்புண்டு என்பது யதார்த்தமானதாகும்.

அந்தவகையில் மலையகத் தமிழர்களின் மரபுவழிக் கலைவடிவங்களான "காமன்கூத்து, பொன்னர்சங்கர், பொம்மலாட்டம், அர்ச்சுனன் தபசு, ஒப்பு, தப்பு போன்ற பிரபல்யம் பெற்ற மரபுக் கலைவடிவங்கள் இன்று தமிழர் பிரதேசங்களில் அழிவடைந்து வருகின்றன.

தமிழினத்தின் கலைச்சொத்தான காமன்கூத்து இன்று யாவராலும் மறைக்கப்பட்டு மறுக்கப்பட்டு அடையாளம் இழந்து போய்விடக்கூடாது என்பதற்காக இந்தக்கருத்தை முன்வைக்கின்றேன். எந்தக்கூத்துக்கும் நாடகத்திற்கும் இல்லாத பெருமையை, அதனை ஆரம்பிக்கும் தெய்வீக நடைமுறையை, அதன் கலை கலாசார விழுமியங்களை யாவரும் அறிந்து கொள்ள வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழில் நாட்டார் வழக்காற்றியல் பிரதேச ரீதியாக பிரதி நிதித்துவமும், பெரும் செல்வாக்கும் பெற்றுள்ளது. அவ்வகையில் ஈழத்தின் பல பிரதேசங்களில் பாரம்பரியமான பல்வேறு நாட்டாரியற் கலைகள் முத்திரை பதித்து வந்திருக்கினறன. இவற்றில் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டார் வழக்காற்றுக் கலைகளிலே காமன்கூத்து ஒரு சான்று ஆகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கூத்து மலையகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இக்கலை ஆற்றப்பட்டு வந்துள்ளது.

உயிர்களின் இயக்கம் தெய்வமாக விளங்கும் காமனை தெய்வமாகக் கொண்டு ஆற்றப்படும் சடங்கு வடிவான கூத்தே காமன்கூத்து ஆகும். உயிர்களிடத்து காதல் (காமம்) உணர்வினை மிகுவித்து சந்ததி விருத்தியை ஏற்படுத்தி இயங்க வைக்கின்ற காமனுக்கு நன்றி செலுத்தும் வகையிலான ஒரு கலைவடிவமாக இக்கூத்து விளங்கி வந்ததைக் காணலாம். காமனைப் பற்றிய செய்திகள் வேதகால ஆரம்பத்தில் இருந்தே கூறப்படுகின்றன. இதை விட கலித்தொகை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களும் கந்தப்புராணம் போன்ற புராணங்களும் காமதேவனைப் பற்றிக் கூறுகின்றன.

இந்துமத வழிபாட்டு மரபிலே காமனுக்கு ஆலயம் அமைத்து வழிபடும் முறைமை இருந்துள்ளது. காமனுக்கு விழா எடுக்கும் காலங்களில் இந்துக்கள் காமன்கூத்தை ஆடிமகிழ்வார்கள். கம்பம் ஊன்றிக் கோவில் அமைத்து இக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது. இக்கூத்து பக்தி சிரத்தையோடு கூடிய ஒரு சமயச்சடங்காகவே ஆற்றுகைப் படுத்தப்பட்டு வந்தது. இக்கூத்து ஆரம்பம் முதல் முடியும் வரை இவர்கள் மத்தியில் ஒரு சடங்கின் புனிதத்தன்மையோடு பேணப்பட்டுவருகின்றது.

மாசி மாதம் அமாவாசையின் பின்வரும் மூன்றாம் நாளில் கம்பம் பாலித்தல் என்னும் சடங்கோடு இக்கூத்து ஆரம்பிக்கப்படும். இக்கூத்தை நிகழ்த்தும் கூத்தர்கள் அனைவரும் நோன்பிருந்து காப்புக்கட்டி பக்தி சிரத்தையோடு இக்கூத்தனை நடாத்துவர். சில இடங்களில் ஊரவர் அனைவருமே விரதம் இருந்து காப்புக்கட்டி இந்நோன்பைப் பேணுவர். கூத்தில் பங்கு கொள்ளும் ஒருவரின் நலனுக்காக அவரது உறவுகளும் விரதம் அனுஸ்டிப்பர். இப்படியான புனிதம் நிறைந்த இக்கூத்து தமிழ் இனத்தின் மரபுச்சொத்து.

காமன்கூத்தைப் போன்று பிரமாண்டமான முறையில் பெரும் ஆள், பொருட்செலவிலும், காட்சி அமைப்பிலும் 16 நாள் கொண்டாட்டத்துடன் எந்தவொரு கூத்தும் நிகழ்வும் நடைபெறவில்லையென்பது உலகறிந்த உண்மையே. இது எமது பொக்கிசம் காத்தவராயன் கூத்தைப் போன்று காமன்கூத்தும் இன்று நாதியற்றுப் போய்விட்டது. தேடுவாரற்று கிடப்பில் போடப்பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டத்தகாத கலையாக ஒதுக்கி வைக்கப்பட்டுவிட்டது. இதனை அழியவிடாது காப்பாற்றுவது, பேணுவது முழு இலங்கை வாழ் மக்களின் தலையாய கடமையாகும்.

காமன்கூத்து ஒரு கதையை அடியொற்றிதாக அமைகின்றது. சிவன் தங்களது யாகத்தினை அழித்த பின்னர் பெரும் கோபத்தோடு இமயமலையிலே தவமிருக்க தேவலோகம் அனலால் அவதியுறுகின்றது. இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிவனின் தவத்தை அழிக்க இந்திரன் காமனைப் பணிக்கின்றான். இந்திரன் கட்டளைப்படி காமன் சிவனின் தவத்தினை அழிக்கப்போய் எரிந்து சாம்பலாகின்றான். பின் ரதிதேவி சிவனிடம் இரந்து வேண்ட மதன் உயிர் பெறுவதாகக் கதை அமைகின்றது.

கூத்தினைப்பழக்கும் அண்ணாவியார் காமன்மாஸ்ரர் எனப்படுகின்றார். இவரே கூத்தின் பிரதியை வைத்திருப்பார். இவரைச்சூழ பக்கப்பாட்டுக்காரரும், பக்கவாத்தியக்காரர்களும் அமர்வார்கள். தப்பு என்னும் வாத்தியமே இக்கூத்தின் பிரதான பக்கவாத்தியமாகும். இத்தப்பு வாத்தியத்துடன் "அலுக்கு" எனும் ஒருவகை வாத்தியமும் பாவிக்கப் படுவதும் உண்டு.

கம்பம் ஊன்றிய மூன்றாம் நாளில் காமன்கூத்து ஆரம்பமாகும். தினமும் இரவிலே பல மணிநேரமும் இவ் ஆட்டத்தினை நிகழ்த்துவர். இக்கூட்டத்திலே பாடப்படும் லாவணி (விவாதம்) ஒப்பாரி என்பன சிறப்புப் பெற்றவை. மொத்தத்தில் இக்கூத்து தேவலோகத்தில் நடத்தப்படுவது போன்ற பிரமையை மக்களுக்கு ஏற்படுத்தும் வல்லமை பெற்றது. இருளும் ஒளியும் இரண்டறக் கலந்து பூலோகம், தேவலோகம், மூவுலகமும் கட்டுண்ட நிலையில் கூத்து நிகழும். இந்த அற்புதக் காட்சியைக் காண கோடி கண்களே வேண்டும்.

காமன்கூத்தின் இறுதியில் காமன் இறந்ததாக ஒரு சாராரும், இறக்கவில்லை என்று இன்னொரு சாராரும் வாதிடுவார். எரிந்த கட்சி, எரியாத கட்சி இரண்டுக்கும் இடையிலான வினாவிடையில் அமைந்த தர்க்கம், தப்பு இசை, ஒப்பாரி எல்லாம் சேர்ந்து இக்கூத்தை ரம்மியமாக் கிவிடும். ஒளிரும் உடை, ஆடை, ஆபரணம், முடி, கவசம் எல்லாம் அழகுமயமே. காமன்கூத்தைப் போன்று பிரமாண்டமான முறையில் பெரும் ஆள், பொருட்செலவிலும் காட்சி அமைப்பிலும் 16 நாள் கொண்டாட்டத்துடன் உலகில் எந்தவொரு கூத்தும் நடைபெறவில்லை. இது தமிழினத்தின் கலைப்பொக்கிசம். இதனை அழியவிடாது காப்பாற்றுவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவது முழுஇலங்கைவாழ் தமிழ்மக்களின் தலையாய கடமையாகும். இலங்கை கலைமரபை அலங்கரித்த மரபுவழிக்கலைப் பொக்கிசங்கள் பல இருந்தாலும், மதவழிபாடு, கலைத்துவச்செழுமை, மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் உள்ளடங்கிய காமன்கூத்துக்கு இணை எதுவுமில்லை என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

காலத்தால் அழிக்க முடியாத தங்கச்சுரங்கமான காமன்கூத்து கலைஞர்களால் சரியாகப் பேணப்பட்டால், ஆடப்பட்டால் சர்வதேச அங்கீகாரம் பெறும் என்பது உறுதியானதே.

இன்று அருகிவரும் நாட்டுப்புறக்கலைகள் வரிசையில் காமன்கூத்தும் ஒன்றாகி விட்டது. இந்தக்கூத்தினை மீளுருவாக்கம் செய்யும் அண்ணாவிமாரை காண்பது அரிதாகி விட்டது. இக்கூத்துக்கான பிரதிகளும் ஆவணப்படுத்தப்படாதுள்ளன. மேலைத்தேய கலைவரவுகளுக்கு கொடுக்கும் ஆதரவை இந்த மரபுக்கலைகளும் வழங்க சம்மந்தப்பட்டோர் முன்வரவேண்டும்.

இதனை இலங்கைவாழ் கூத்து, இசை,நாடகக்கலைஞர்கள் கவனத்தில் எடுத்து இந்தக் கலைப்பொக்கிசத்தை காப்பாற்ற வேண்டியது அவர்களின் தலையாய கடமையாகும்.

*வ.ஏழுமலைப்பிள்ளை*
*மலையாளபுரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திப் பணியில் நான் முகம் கொடுத்த பிரச்சினைகளும் சவால்களும்

கிளிநொச்சி கல்விப் பிரதேசம் யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு 1983ம் ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வீ.ஆனந்தசங்கரி அவர்களது பெருமுயற்சியினால் கிளிநொச்சி தனியான கல்வி மாவட்டமாக ஆக்கப் பெற்றது.

இதில் கரைச்சி கண்டாவளை பளை பூநகரி ஆகிய கல்விக் கோட்டங்களில் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 24 பாடசாலைகள் கண்டாவளை கல்விக் கோட்டத்தில் உள்ளடங்குகின்றது.

01.01.80ம் ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாச்சாலையை நிறைவு செய்து கிளி/கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்திற்கு ஆங்கில ஆசியராக பல போராட்டங்களின் பின் நியமனம் பெற்றேன். அப்போது திரு.சி.வ.ஜயந்துரை அவர்கள் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இப்பாடசாலை 05ம் வகுப்பு வரையே இயங்கிக் கொண்டிருந்தது. இப்பாடசாலையிலேயே நான் ஆரம்பக்கல்வியை நிறைவு செய்தேன்.

இப்பாடசாலையில் ஓரிருவரைத் தவிர ஏனையோர் வறுமை காரணமாகவும் மேல்வகுப்புப் படிப்பதற்கான பாடசாலைகள் மிக தொலைவில் அமைந்திருந்தமையாலும் தங்களது படிப்பை 05ம் வகுப்புடன் நிறுத்தி பெற்றாருடன் வயல்வேலை, தோட்டச்செய்கை, மந்தை வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

இவை அதிபரது மனதிலும் என்னுடைய மனதிலும் மிகவேதனையை ஏற்படுத்தியது. இதனால் நாம் கா.பொ.த சாதாரண தரம் வரை வகுப்புக்கள் படிப்படியாக (வருடா வருடம்) வைத்து நடாத்தத் தொடங்கினோம். ஆனால் இதற்கான எந்த அனுமதியும் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை. அதிபரும் நானுமே சகல பாடங்களையும் கற்பித்து வந்தோம். 06 ஆண்டுகளின் பின் அவர்கள் G.C.E O/L வகுப்பை அடைந்தவுடன் அப் பரீட்சைக்கான மாணவரைத் தயார்ப்படுத்தல்களையும் நாமே மேற்கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலை G.C.E O/L வகுப்புள்ள பாடசாலையாக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு இல்லாமையால் எமக்கு G.C.E O/L பரீட்சைக்கான விண்ணப்பபடிவம் கிடைக்கவில்லை. அதிபர் அவர்கள் அயல் பாடசாலைக்கு வந்த படிவத்தில் ஒன்றை பெற்று வந்து பூரணப்படுத்தி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தார். அங்கிருந்து ஆண்டு 06 வைப்பதற்குரிய அனுமதிக்கடிதத்தை மறு தபாலில் அனுப்பி வைக்குமாறு கடிதம் கிடைத்தது.

நாம் அதிர்ந்து விட்டோம் அவ்வாறு அனுமதி எதுவும் எடுத்திருக்கவில்லை. இம்மாணவர்கள் பரீட்சை எழுத முடியாத நிலை தோன்றிவிடுமோ என்ற பயம் பெற்றாருக்கு எவ்வாறு பதில் கூறுவது என்ற ஏக்கம். எமக்கு வந்த கடிதத்தில் கையொப்ப மிட்டவர் பெயரை வாசித்தும் அறிய முடியவில்லை.

அதிபர் இப்பொறுப்பை என்னிடமே தந்து செலவாகும் பணத்தில் அரைவாசியை தான் தருவதாகவும் உறுதியளித்தார். நான் அன்றைய தினமே புறப்பட்டு கொக்குவிலில் வசிக்கும் எமது வட்டாரக் கல்வியதிகாரி திரு.யு.தங்கராசா அவர்களது வீட்டுக்கு சென்று நடந்தவையை கூறினேன். அவரும் அக்கடிதத்தை வாங்கி படித்து கையெழுத்திட்டவரின் பெயரை அறிய முயற்சித்து இறுதியில் சின்னத்துரையென அடையாளம் கண்டு கொண்டார்.

உடனே அவர் இவர் தன்னுடன் படித்த ஒருவர் எனவும் உனது சாவகச்சேரி வீட்டிற்கு அருகில் வசிப்பவர் எனவும் கூறி நாளை காலை 09 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நிற்குமாறும் தான் வருவதாகவும் கூறியிருந்தார். அவ்வாறு அடுத்த நாள் காலை அவரும் நானும் உதவிப் பரீட்சை ஆணையாளர் வீட்டிற்கு சென்று அவரைச் சந்தித்து விடயங்களைக் கூறியபோது ஆண்டு 06 அனுமதிக் கடிதம் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. அப்படியானால் அயல் பாடசாலை ஒன்றில் அம்மாணவர்களை பரீட்சைக்கு தோற்ற ஒழுங்கு செய்வதாகவும் கூறினார். ஆண்டு 06 வைப்பதற்கான கடிதத்தை கிளிநொச்சி கல்விப் பணிப்பாளரிடம் பெற்று வருவதே சிறந்த வழியென கூறினார்.

அப்போதைய கல்விப் பணிப்பாளர் அமரர்.ஜனாப்.M.M.மன்சூர் அவர்கள் பதவி உயர்வு பெற்று மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளராக திருகோணமலையில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். நான் அன்றைய தினமே திருகோணமலைக்கு சென்று நடந்தவற்றை முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் கூறினேன். அவர் என்னிலும் அதிபரிலும் அளவற்ற பாசம் கொண்டிருந்த காரணத்தால் உடனே கடிதத்தை ரைப் செய்து FRANK அடித்து வழங்கியிருந்தார். நான் அதனை எடுத்துக் கொண்டு கொழும்பிற்கு சென்று உதவிப் பரீட்சை ஆணையாளரிடம் சமர்ப்பித்து அடுத்த நாள் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதியைப் பெற்று வந்தேன்.

எமது முதலாவது தொகுதி மாணவர்களில் ஒருவர் சிவசிதம்பரம் இரத்தினேஸ்வரி அவர்கள் தற்போது பட்டதாரி ஆசிரியையாக கடமையாற்றுகின்றார். இதன் பின் இப் பாடசாலையில் படித்தவர்கள் பலர் அதிபர், உபஅதிபராக, ஆசிரியர்களாக, முகாமைத்துவ அலுவலராக, தபால் அலுவலர்களாக பணியாற்றி வருவது எனக்கு மிகவும் மனதிருப்தி அளிக்கிறது.

எனது அதிபர் அவர்கள் எனக்கு ஒப்புதல் அளித்தவாறு செலவினத்தின் பாதியை தர முற்பட்ட போது நான் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆரம்பக் கல்வியை தந்த பாடசாலை என்பதற்கு அப்பால் நான் பயிற்சிக் கலாசாலை நிறைவு செய்து தி/சம்பூர் மகா வித்தியாலயத்திற்கு நியமிக்கப் பெற்றேன். எனது குடும்ப நிலையைக் குறிப்பிட்டு கௌரவ அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் சிபாரிசுடன் கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்ததன் பெயரில் கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்திற்கு நியமிக்கப் பெற்றேன்.

1980ஆம் ஆண்டு யூன் மாத பாராளுமன்ற அமர்வில் அப்போதைய கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் இப் பாடசாலைக்கு என்னை நியமித்து தவறானது எனவும் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரை 05ம் வகுப்பிற்கு உட்பட்ட பாடசாலைக்கு நியமிக்க முடியாது எனவும் அவருக்கு 06ம் வகுப்பிற்கு மேல் உள்ள பாடசாலையில் கிழமையில் ஆக குறைந்தது 20 மணித்தியாலம் அவரது பாடத்தில் கற்பித்தலில் ஈடுபட வேண்டும் எனவும் அப்போது தான் அவருக்கான பயிற்றப்பட்ட தராதரத்திற்குரிய சம்பளம் வழங்க முடியும் எனவும் இதில் ஏதோ ஊழல் நடந்திருப்பதாக கேள்வி எழுப்பி இருந்தார்.

கௌரவ அமைச்சர் தொண்டமான் அவர்கள் இதற்கு பதில் அளிக்கும் வகையில் கலவெட்டித்திடல் பாடசாலை ஓர் மிகவும் பின் தங்கிய கிராமப்புற பாடசாலை இதற்கு வேறு ஆசிரியர்கள் எவரும் செல்லமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் அக் கிராமவாசி அத்துடன் **இப்பாடசாலையை ஏன் அவருடைய தரத்திற்கு கால கிரமத்தில் மாற்ற முடியாது என குறிப்பிட்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் அதனை மறுத்துப் பேச முடியவில்லை.** எனவே இப்பாடசாலையை தரம் உயர்த்துவதில் எனக்கு பாரிய பொறுப்பு இருந்தது.

01.01.90இல் நான் கண்டாவளை அரசினர் வித்தியாலயத்திற்கு அதிபராக மாற்றம் பெற்றேன். அன்று அப்பாடசாலை க.பொ.த சாதாரண வகுப்பு வரையுமே கற்பிக்கப்பெற்றது. 150 மாணவர் தொகைக்கு உட்பட்டதாகவே அமைந்திருந்தது. 09,10,11 வகுப்புக்களை தவிர ஏனைய மாணவர்கள் நிலத்திலேயே இருந்து கல்வி கற்றனர். ஆசிரிய ஆளணி பாரிய பற்றாக்குறையாகவிருந்தது. குறிப்பாக ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இருக்கவில்லை. தொண்டர் ஆசிரியர்களைக் கொண்டே இவ் வெற்றிடத்தை நிரப்பக் கூடியதாக இருந்தது.

இங்கும் அநேக மாணவர்கள் O/L வகுப்புடன் தங்களது கல்வியை நிறுத்தி பெற்றோருடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மேல் வகுப்புக்கள் படிப்பதனால் முரசுமோட்டை முருகானந்தா ம.விக்கு செல்ல வேண்டும். போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. 05இற்கு மேற்பட்ட ஆறுகளையே மாரிகாலத்தில் கடக்க வேண்டியிருந்தது. காடு அடர்ந்திருக்கும் இதனால் மாணவர்களுக்கு காட்டு மிருகபயம் இருந்தது.

அங்கும் இப்பாடசாலையை உயர்தரம் வரை ஆக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அப்போதைய கல்விப் பணிப்பாளர் எனது மதிப்பிற்குரிய திரு.க.கந்தசாமி அவர்கட்கு மேற்குறித்த விடயங்களை குறித்து விண்ணப்பித்தேன். இவர் அதனை நிராகரித்தது மட்டுமல்ல என்னை அழைத்து எச்சரித்தும் இருந்தார்.

ஆனால் இப் பாடசாலையில் A/L வகுப்பு ஆரம்பிப்பதற்கு முருகானந்தா வித்தியாலய அதிபரும் கொத்தணி அதிபருமான திரு.A.J.அந்தோனிப்பிள்ளை அவர்கள் கடும் எதிர்ப்பைக் காட்டியிருந்தார். கொத்தணி அதிபர் என்ற ரீதியில் அவரது சிபாரிசும் இதற்கு தேவைப்பட்டது. இதனால் அவருடன் எனக்கு இருந்த நீண்ட நாள் நட்பும் முறிவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நல்லகாலம் என்னவோ கல்விப் பணிப்பாளர் அவர்கள் 03 மாதத்தில் கலிபோர்னியாவிற்கு விடுதலையில் சென்று விட்டார். அவருக்கு அடுத்தாற் போல் கல்விப் பணிப்பாளர் பதவியை பொறுப்பேற்றவர் கோதை சின்னத்தம்பி வேலாயுதம் அவர்கள். அவர் எப்பொழுதும் தாயின் பெயரை முதன்மையாக எழுதுபவர். ஓர் அறிவுக் கடல் எனது ஆசிரிய தொழிலுக்கு முதலாவது அதிபர் எனவே தயக்கம் இல்லாமல் இவரிடத்தில் சென்று விடயங்களை முன் வைத்தேன். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார்.

A/L படிப்பதற்கு தகுதியான 15 மாணவர்கள் பெயர் O/L கல்வித்தகமை ஆகியவற்றுடன் முன் விண்ணப்பித்த விண்ணப்பத்தையும் இணைத்து தருமாறு கூறினார். என்னிடம் 06 மாணவர்களே தகுதி உள்ள மாணவர்கள் இருந்தனர். தகுதியுள்ள 04 மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் படிப்பதற்கு பெற்றார் வலியுறுத்தி விடுதலைப்பத்திரம் பெற்று சென்று விட்டனர். எனக்கு எதுவும் செய்ய முடியாது இறைவனை மன்றாடிக் கொண்டேன்.

இவ்விடயத்தில் வலுச்சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் இறைவனுக்கும் இருந்தது என்பது போல் தருமபுரம் மகா வித்தியாலயத்திற்கு விமானக் குண்டுகள் பொழியப்பட்டு பாடசாலை மூடப்பட்டது. அங்கு A/L படித்த எனது கிராம மாணவர்களை ஒன்று சேர்த்து கண்டாவளைப் பாடசாலையில் சேர்த்து பட்டியல் தயாரித்து விண்ணப்பத்தை புதிய கல்விப்பணிப்பாளரிடம் சமர்ப்பித்த போது நாளை நான் திருகோணமலைக்கு செல்வதாகவும் தன்னுடன் என்னை வருமாறும் கூறினார்.

நானும் அவரும் திருகோணமலை சென்று அவரது சிபாரிசுடன் விண்ணப்பத்தை மேலதிக மாகாணகல்விப் பணிப்பாளர் திரு.மனோகரனிடம் சமர்ப்பித்தேன். அவர் என்னுடன் முன்னமே பழகியவர் என்பதினால் இரண்டு நாட்களில் அதற்கான அனுமதியைத் தந்து உதவி இருந்தார். அனுமதியளித்து இருந்தாலும் A/L வகுப்பிற்கு கற்பிற்பதற்குரிய ஆசிரிய பற்றாக்குறை நிலவியது கல்விப் பணிப்பாளரது உதவியுடன் ஆசிரிய வளத்தை பெற்று முதல் தொகுதி மாணவர்களை தயார் செய்து பரீட்சைக்கு தோற்றுவித்தோம். மாணவர்கள் அனைவரும் (100வீத சித்தி) பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் தகுதியைப் பெற்றிருந்தனர்.

இக்கற்பித்தல் செயற்பாட்டில் முன்னைநாள் யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளரும் எனது மாணவனுமாகிய திரு.சி.மாணிக்கராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் அவரது துணைவியார் திருமதி.கௌரி மாணிக்கராசா ஆகியோரது அர்ப்பணிப்பான சேவை குறிப்பிடத்குரியது.

முதல் தொகுதி மாணவர்களில் கனகராசா லதீஸ்வரி அவர்கள் விரிவுரையாளராகவும் திரு.இலையத்தம்பி அவர்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் அங்கு படித்த இன்னும் பலர் பட்டதாரிகளாக தொழில் புரிவது எனது நெஞ்சுக்கு மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது. இதனால் தான் கண்டாவளை மகா வித்தியாலயம் வெளியிடும் வளைகதிர் நூலில் என்னை உயர்கல்வியின் தந்தை என குறிப்பிட்டுள்ளது.

இந்த வரிசையில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிடப்பட வேண்டும். அநேகமாக மாணவர்கள் நிலத்திலேயே இருந்து படித்து வந்தனர். யுத்த காலத்தில் ஆனையிறவுப் பாதை தடை செய்யப்பட்டு கொம்படி கண்டாவளைப் பாதையே பாவிக்கப்பட்டது. கந்தசாமி சேர் கலிபோர்னியாவிலிருந்து வந்துவிட்டார். வருட இறுதியில் திணைக்களத்திற்கான புதிய தளபாடம் அனைத்தும் கோவில் வயலுக்கு கொண்டு வரப்பட்டது.

அதிபர்கள் கூட்டத்தில் கல்விப்பணிப்பாளர் அவர்கள் தளபாடம் தேவையானவர்கள் கோவில் வயலிருந்து ஏற்றுமாறு கூறினார். மாரிகாலம் ஆரம்பித்து விட்டது. வள்ளங்கள் மூலம் தான் ஏற்ற வேண்டும். ஒருவரும் ஏற்ற முன்வரவில்லை. நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். எனது பாடசாலை எனது முன்னைய பாடசாலை ஆகியவற்றின் தேவையை பூரணப்படுத்திய பின்பே மிகுதி ஏனைய பாடசாலைகளுக்கு வழங்குவேன் என கூறிக்கொண்டேன். கல்விப்பணிப்பாளரும் அதனை ஏற்றுக் கொண்டார்.

25 வள்ளங்கள் ஒழுங்கு செய்து எனது பாடசாலையின் பெற்றோரின் முழுப் பங்களிப்புடன் சகல தளபாடங்களையும் இரண்டு நாட்களில் பாடசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். ஒருமுறை நான் வந்த வள்ளம் தளபாடத்துடன் கவிழ்ந்தது. வள்ள ஓட்டியும் பெற்றாரும் என்னைக் காப்பாற்றி மீளவும் தளபாடங்களை ஏற்றி வந்தமை மறக்க முடியாத ஒன்றாகும்.

பின்னர் கண்டாவளைக் கோட்டக்கல்விதிகாரியாக வந்த பின் சகல பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் என்னாலான பங்களிப்பைச் செய்து மாணவர்களுடைய அடைவு மட்டம் கூட ஏதுவாக இருந்துள்ளேன். எனது காலத்திலேயே மயில்வாகனபுரம், கல்லாறு ஆகிய இடங்களில் புதிய பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு வழிசமைத்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இடம்பெயர்ந்த மாணவர்கட்கு சுண்டிக்குளத்திலும் நல்ல தண்ணித்தொடுவாய், பேய்ப்பாறைப்பிட்டி ஆகிய இடங்களில் கிளைப் பாடசாலைகளை தொண்டர் ஆசிரியர்களின் உதவியுடன் நடத்தினோம். இவ்வாறான கல்விச் செயற்பாடுகள் என்னை இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1இற்கு உயர்த்தியது மட்டுமல்ல கண்டாவளைப் பிரதேச செயலகம் நடாத்திய கலாச்சார விழாவில் கலைஒளி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டேன். உண்மையில் நான் இதனை எதிர் பார்த்திருக்கவில்லை.

**எனது அன்பிற்கும் பெருமதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் திரு.த.முகுந்தன் அவர்களுக்கும் அவரது குழாத்தினருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.**

நான் கரைச்சி கோட்டக் கல்வி அலுவலராக கடமையாற்றிய காலத்தில் சகல கோட்டப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் குறிப்பாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை க.பொத.சாதாரண தர பரீட்சை, உயர்தர பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகள் உச்சமடைவதற்கு என்னால் ஆன பங்களிப்புக்களை வழங்கி வந்துள்ளேன். எனது காலத்திலேயே மாயவனூர் அழகாபுரி ஆகிய இடங்களில் புதிய பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வெற்றியும் கண்டுள்ளேன்.

கிளிநொச்சி வலயத்தின் கல்வி முகாமைத்துவத்திற்குரிய பிரதிக்கல்விப்பணிப்பாளராக கடமையேற்ற பின்னர் கிளிநொச்சி வலயத்தின் சகல பாடசாலைகளினதும் குறிப்பாக பூநகரிப் பிரதேச கறுக்காய் தீவு பாடசாலையில் உயர்தர வகுப்பு ஆரம்பித்த அதிபர் அமரர். சு.கணபதிப்பிள்ளை அவர்களது முன்மொழிவிற்கு மிகவும் ஏதுவாக இருந்து. அடிக்கடி அப்பாடசாலைக்கு நானும் எனது மேற்பார்வைக் குழுவினரும் சென்று வேண்டிய ஆலோசனைகளை நல்கி நல்ல பெறுபேறுகள் கிடைக்க வழிசமைத்துள்ளோம்.

அதேபோல் மிகவும் பின்தங்கிய பாடசாலைகளான வலைப்பாடு றே.க.வித்தியாலயம், இரணைமாதாநகர் பாடசாலை, வேரவில் இந்து மகா வித்தியாலயம், கிராஞ்சி அ.த.க. பாடசாலை போன்ற பல பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் எமது மேற்பார்வைக்குழுவினரின் பின்னூட்டல் மிக்க உதவியாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதி யுத்தகாலம் பெற்றோல் கிடைப்பது அரிதிலும் அரிது மண்ணெண்ணையின் விலை 1 லீற்றர் 300 ரூபா தொடக்கம் 400 ரூபா வரை எமது வாகனங்கள் மண்ணெண்ணையில் தான் இயங்க வைக்கப் பெற்றது.

பூநகரிப் பிரதேசத்திற்கு செல்வதானால் பெண் அலுவலர்கள் எனது வாகனத்திலும் ஆண் அலுவலர்கள் தங்களது உந்துருளிகளிலும் சென்று பூநகரி மத்திய கல்லூரியில் தங்கி எமது பணிகளை முன்னெடுத்தோம். மிக கஷ்டமான யுத்த காலப்பகுதியில் எமது பணிகளை முன்னெடுத்தாலும் அதனால் பயன்பெற்று உயர்பதவி வகிக்கும் இம்மாணவர்களைக் காணும்போது உண்மையில் நாம் மனநிறைவடைகின்றோம்.

**அனைத்திற்கும் இறைவனே துணை நின்றார் என்று கூறலாம்.**

*தேசமான்ய கந்தையா வைரமுத்து* (J.P)
*ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்*
*கல்வி முகாமைத்துவம்*
*முன்னாள் வட பிராந்திய அனர்த்த முகாமைத்துவ*
*இணைப்பாளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் எமது கலாசாரத் தனித்துவமும்

தமிழ் மக்கள் மிக நீண்ட காலமாக இலங்கையில் வாழ்ந்து வருகிறார்கள். நீண்டகால வரலாற்றைக்கொண்ட ஓரினம் தனித்துவமான பண்பாட்டினைக் கொண்டிருத்தல் அவசியம். ஓரினத்தின் அல்லது ஒரு குழுவின் தனித்துவத்தை நிர்ணயிக்கும் காரணிகளுள் அவ் இனத்திற்கோ அல்லது குழுவிற்கோ தனித்துவமான பண்பாடும் மிக முக்கிய ஒரு காரணியாகும்.

எமது பண்பாடு என்று எண்ணியதும் நம் மனக்கண் முன்னே சில கருத்துருவங்கள் தோன்றுகின்றன. சமூகவியல், மானிடவியல் துறைகளில் உயர் வழக்கு மாத்திரம் பண்பாடாகக் கொள்ளப்படுவதில்லை. பண்பாடு என்பது ஒரு மக்கட் கூட்டம் தமது சமூக வரலாற்று வளர்ச்சியின் அடியாகத் தோற்றுவித்துக்கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்த கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப்பெறுமானங்கள் ஆகிய யாவற்றிலும் தொகுதியாகும். ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி விஞ்ஞானம், இலக்கியங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்.

இவற்றுள் கலைகள் முக்கியமானவையாகும். ஒரு குழுவின் சமூக அமைவின் மிகத்தூரத்துப் பிரதிபலிப்பாக அமைவன கலைகள். ஒரு இனத்தில் அல்லது குழுவின் மத்தியில் காணப்படும் கலைகளின் பரிணாமத்தைக்கொண்டும் அவ்வினத்தின் தன்மை, அமைப்பு என்பவற்றைக் கணக்கிடவும் முடியும். வெள்ளத்தனையை மலர் நீட்டம் போல சமூகத்தனையவே கலைகளும் அமையும். கலைகளை ஆராய்தல் என்பது ஓர் ஆய்வாளனை இறுதியில் சமூகத்தை ஆராய்தலுக்கு கொண்டு சென்றுவிடும்.

ஓர் இனத்தின் அல்லது குழுவின் வளர்ச்சிப்போக்கில் அக்குழுவினுள் இருந்து அவ்வினத்திற்கோ அல்லது குழுவிற்கோ உரிய கலைகள் இயல்பாக எழுமாயினும் வலிமை வாய்ந்த அல்லது வளர்ச்சியடைந்த பிறிதோர் இனத்தின் தொடர்புகளும் அவற்றின் கலைத்தாக்கங்களும் குறிப்பிட்ட இனத்தின் கலைகளிற் பல மாற்றங்களை ஏற்படுத்தவும் கூடும். கட்டிடம், சிற்பம், ஓவியம், நடனம் போன்ற கலைகளைப் பொறுத்த வரை ஈழத்துத் தமிழரிடையே ஒரு நீண்ட பாரம்பரியம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கலைப்பாரம்பரியத்தை நிர்ணயிப்பதில் எமது அண்டை நாடான இந்தியா அன்றிலிருந்து இன்றுவரை பெருஞ்செல்வாக்கு செலுத்தி வருகிறது. எமது நாட்டுக் கலைகளில் மாத்திரமல்ல தென்னாசிய நாடுகள் அனைத்திலும் இச்செல்வாக்கினைக் காணலாம்.

இந்தியாவிலுள்ள கலையை மட்டுமே அறிவது இந்தியக்கலையின் பாதியையே அறிவதாகும் என்று சேர்-ஜோன் மார்சல் கூறுவர். இந்தியாவிலிருந்து வெளியே சென்று குடியேறிய கலையில் அதிகமான உத்வேகமும் கம்பீரமும் இருப்பதாக பேர்சி பிறவுஸ் கூறுவர். வணிகத்தொடர்பு, கலாசாரத் தொடர்பு ஆகியவற்றின் காரணமாகவே இந்தியச் செல்வாக்கு எமது கலைகளிற் பதிந்தது. கலாசாரத் தொடர்பில் ஓரம்சமாக சமயம் முக்கிய இடம்பெறுகின்றது. இவற்றுள் குறிப்பிடத்தக்களவு இந்துமதமும், பௌத்தமதமும் ஆகும். இந்த இரண்டு மதம் சார்ந்த கலைகளும் இம்மதங்களினூடாகவே நம் நாட்டுக்கும் வந்தன. எனினும் எமது நாடு இந்தியாவினின்று கடலாற் பிரிக்கப்படிருந்தாலும் எமக்கென நாம் வித்தியாசமான சமூகஅமைப்பு, வாழ்க்கைமுறை, வரலாறு என்பவற்றைப் பெற்றிருப்பதாலும் இந்தியாவினின்றும் வேறுபட்ட தனித்துவம் மிக்ககலைகளைக் கொண்டிருப்பதும் இயல்பு. இத்தகைய தத்துவம் மிக்க கலைகளுடன் இந்தியக்கலைகள் இணைந்து புதுப்பொலிவு பெற்ற தன்மையினை தென்னாசிய கலை வரலாறு காட்டுகின்றது. இவ்வகையில் இந்தியத்தன்மையும் தமக்கென்றோர் தனித்துவமும் காணப்படுவதுதான் ஈழத்தில் வாழும் தமிழர் கலையின் சிறப்பம்சமாகும்.

தமிழரின் பாரம்பரியம் இவ்வகையிற் புராதனமானது. அன்றில் இருந்து இன்றுவரை ஈழத்துத் தமிழரிடையே வளர்ச்சி பெற்று வந்த கலைகளை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் ஆராய்வது அவசியம். இதன் பெறுபேறாக தமிழரின் தனித்துவத்தை நாம் இனம் காண்பதுடன் புதிய திசைகளை நோக்கி அவற்றை வளர்க்கவும் முடியும்.

உதாரணமாக தமிழர் மத்தியில் வழக்கிலுள்ள நடத்தையும் சங்கீதத்தையும் எடுத்துக்கொள்வோம். இன்று பரதநாட்டியம் ஈழத்துத் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கலையாகக் கொள்ளப்படுகின்றது. கி.பி 10ம் நூற்றாண்டிலிருந்து இக்கலை தமிழரிடம் இருந்து வந்தது என்பதற்கு பதவியாவில் மொரகொட என்ற இடத்தில் காணப்படும் இந்துக் கோயில்களின் அடியிற் கண்டெடுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்களைக் கொண்ட ஒரு தூண் சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் நடமாடுபவர்கள் செதுக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் சிறப்பாக தமிழ் நாட்டில் இப்பரதக்கலை வளர்த்தற்கொப்பவே ஈடித்துத் தமிழர் மத்தியிலும் கோயிற் கலையாக இது வளர்ந்தது. கோயிற் கணிகையரிடம் வளர்ந்த இக்கலை பின்னாளில் தாசியரிடம் சென்று நலிவெய்தியது. பினனாளில் தமிழ்நாட்டில் இக்கலை உயரிடம் பிடித்தது. இன்று அக்கலை சமூக அந்தஸ்தின் சின்னமாகவும் கணிக்கப்படுவதை காண்கின்றோம். கற்றோரும் சமூகத்தில் உயர் நிலையிலிருந்தோரும் அக்கலையின்பால் ஈடுபாடு காட்டியமையால் அக்கலை இன்று வளர்ச்சியுற்று ஈழத்தில் வாழும் தமிழர் கலையாக தொலைக்காட்சியிலும் மங்கல நிகழ்ச்சிகளிலும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது. இப்பரத நடனம் போன்றதும், ஆட்டக்கோலங்கள் நிறைந்ததுமான கூத்துக்கள் ஈழத்தின் தமிழர் வாழ் பிரதேசங்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்து வசந்தன் கூத்து, முல்லைத்தீவு கோவலன் கூத்து, மடடக்களப்பு வடமோடிக்கூத்து, தென்மோடிக்கூத்து என்பவற்றில் ஆட்ட முறைகளுள்ளன. கிராமிய மக்களும் கல்வியறிவில் குறைந்தோரும் இக்கூத்துக்களை ஆடுவதால் இவை செம்மையற்றவையாகக் கணிக்கப்பட்டு கவனிப்பாரற்றுப் போயின. இவையும் நமது நடன வகைகளே. இன்னொரு வகையில் சொல்னால் பரதநடனத்தில் இந்தியச்செல்வாக்கு அபரிதமாக செறிந்திருக்க இவ்வகை நடனங்களில் ஈழத்துத் தமிழரின் தனித்துவங்கள் மேலோங்கி நிற்கின்றன.

சங்கீதத்திலும் கூட இதே தன்மையினைக் காண்கின்றோம். எமக்கென்று ஒரு நீண்ட சங்கீதப் பாரம்பரியம் உண்டு இன்று ஈழத்துத் தமிழரின் சங்கீதமாக பிரதிநிதித்துவப்படுவது கர்நாடக சங்கீதமே. இதில் ஒன்றும் தவறில்லை. அது சரியானதே. கற்றோரும் அந்தஸ்து மிக்கோரும் இதில் ஈடுபடுவதாலும் இயல்பாகவே சிறந்த நுணுக்கங்களை அது பெற்றிருப்பதனாலும் இது சிறப்பிடத்தை பெறுகிறது. எமது இசைமரபு பன்முகப்பட்டது. ஈழத்தில் தமிழர் வாழ் பிரதேசங்களில் எல்லாம் வெவ்வேறு விதமான இசைக்கோலங்களை காணமுடியும். அங்கு காணப்படும் சிறு தெய்வ வணக்க உடுக்கடிப்பாடல்கள், தொழில்செய்யும் போது பாடப்படும் பாடல்கள், நாட்டார் பாடல்கள் என்பன கிராம மக்களுடன் ஊறியவை. இவை தவிர பண்ணிசை, கூத்திசை, நாடகமேடைஇசை எனப்பல்வேறு இசைப் பாரம்பரியங்களும் எம்மிடையே வந்துள்ளன.அனால் இவை ஈழத்துத்தமிழரின் இசையாகப் பிரதிநிதித்துவப் படுத்துவதில்லை. எமது தனித்துவங்களைக் காட்டுகின்ற இவ் இசை மரபினை நாம் போற்றாமைக்கு அல்லது வளர்க்காமைக்கான காரணமும் உண்டு. அவை சமூகவியலின்பாற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வண்ணம் ஈழத்துத் தமிழரின் கலைத்தனித்துவத்தைக் காணும் முயற்சிகளும், பேணும் முயற்ச்சிகளும், வளர்க்கும் முயற்ச்சிகளும் 1960 களிலிருந்து மெல்ல மெல்ல மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் இன்றும் நாம் தென்னிந்திய மாயையினின்றும் முற்றாக விடுபட்டோமில்லை. அளவுக்கதிகமாக இங்கு வந்து குவியும் மூன்றாம்தர வீடியோக்கள், திரைப்படங்கள் இதற்குச்சான்றாகும். ஆனால் இன்றைய சூழலும் நெருக்கடியும் தேவையும் இங்குள்ள தமிழர்களைத் தாங்களே அறிந்து கொள்ளவேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன.

இன்றைய சமூக மாற்றித்தின் மத்தியில் கலைத்தனித்துவம் பற்றிய வாத பிரதிவாதங்கள் நிகழ்கின்றன. ஏற்கனவே எமது முன்னோடிகளால் தொடங்கப்பட்ட கலைப்பாரம்பரியத்தை மென்மேலும் முன்கொண்டு செல்லவேண்டியதும் இதுவரை உயர்ந்தோர் கடைக் கண்படாது கவனிப்பாரற்று கிடந்த தனித்துவம் மிக்க கிராமியக்கலைகள் வளர்க்கப்பட வேண்டியதும் தற்போது வளர்ச்சி பெற்றுள்ள கலை வடிவங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தப்பட வேண்டியதும் அவற்றினூடாக இங்குள்ள தமிழர்களின் வாழ்க்கைமுறை, போராட்டங்கள். முரண்பாடுகள் என்பன பிரதிபலிக்கப்பட வேண்டியதும் இன்றைய காலகட்டத்தில் வாழும் கலைஞர்களின் கடமையும் ஆகின்றது.

*யசோதினி ஞானசீலன்*
*மாசார், பளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுவாழ்வு

அமைதியாய் இருந்த மரம் சுழன்று அடித்து காற்றை அள்ளி வீசியது மீனாச்சி தோசை சுடும் சத்தம் மணியத்தின் காதுகளுக்குள் ஒருவித இசையாக ஒலித்துக்கொண்டிருந்தது. முன்பெல்லாம் கோவில் மணிகளும் ஒலிபெருக்கிகளுமே அந்த அமைதியான சூழலில் காற்றைக் கிழித்து இசைதரும் இப்போ அவை அனைத்தும் தடையானதால் தோசை சுடும் சத்தமே இசையாக கேக்கிறது. புரண்டு புரண்டு படுத்துப்பார்த்த மணியம் தூக்கத்தைக் கலைத்து கண்களைக் கசக்கி எழுந்து கொண்டான்.

சூரியன் கதிர்களை விசிப்பிரகாசமாகிக் கொண்டிருக்க மணியம் நீர்ப்பம்பியை இயக்கி மரவள்ளிக் கன்டுகளுக்கு நீர்பாய்ச்ச ஆரம்பித்தான். ஒதுக்குப்புறமான மணியத்தின் காணிக்குள் மரவள்ளி மட்டும் பெரும் விளைச்சலைக் கொடுக்கும். ஆகையால் மரவள்ளியை மட்டுமே பயிரிடுவான் அவை மூன்று மாதத்தில் நல்ல விளைச்சலைக் கொடுக்கத் தவறுவதில்லை.

வியாபாரிகள் மணியத்திடம் வந்து நேரடியாகவே கொள்முதல் செய்வார்கள் அதனால் அலைச்சலும் குறைவாக இருந்தது மணியத்திற்கு கிலோ ஒன்றுக்கு முப்பது தொடக்கம் நாப்பது வரையில் விலை போகும் அந்த வருமானம் மணியத்தின் குடும்பத்துக்கு போதுமானதாகவே இருந்தது. மணியத்துக்கு இரண்டு பிள்ளைகள் மூத்தவன் வெற்றி 1992 இல் ஆனையிறவுச்சமரில் வீரமரணம் அடைந்து விட்டான். இளையவன் மைந்தன் படித்து முடித்து விட்டு தனியார் கம்பனி ஒன்றில் பணிபுரிகின்றான். அவன் உழைப்பதை தன் செலவு போக மிதியை தாயிடம் கொடுப்பான் அல்லது தனது வங்கிக் கணக்கில் போட்டுக் கொள்வான். தேவையற்ற செலவுகளை அவன் விரும்புவதும் இல்லை.

மணியத்தின் மனைவி மீனாச்சி மணியம் செய்யும் வேலையை விட இரு மடங்கு அதிகமாகச் செய்வாள். அதை அவள் ஒருபோதும் பெரிதாக எடுத்துக்கொள்வதும் இல்லை. மணியம் தன் மனைவியை கஸ்ரப்பட விடக்கூடாது என நினைத்து காது கிழியக் கத்தினாலும் மீனாச்சி அதை பெரிது படுத்தாமல் செய்து முடிப்பாள். உடம்பாலும் மனதாலும் றொம்பவே தைரியசாலி. தண்ணி பாச்சி முடிய மதியம் பன்னிரெண்டைத் தாண்டியது. மணியம் கை, காலை அலம்பி விட்டு திண்ணையில் அமர்ந்த படி “மீனாச்சி சாப்பாட்டைப் போட்டு எடுத்து வாவன் இதிலயே இருந்து சாப்பிடுவம் நல்ல காத்து விழுகுது என மீனாச்சிக்கு குரல் கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாச்சியும் ஓமோம் உதிலயே இருங்கோ கொண்டோடி வாறன் என்றபடி சாப்பாட்டைப் போட்டு எடுத்து வந்து மணியத்தின் முன் வைத்தாள். மணியம் சாப்பிடத் தொடங்க அருகில் இருந்த மண்குடத்தைச் சரித்து ஒரு டம்ளரில் நீரை எடுத்து அருகில் வைத்து விட்டு "இஞ்சேருங்கப்பா உவன் மைந்தனுக்கு வயசு வந்துட்டு இனியும் உப்பிடியே வைச்சிருக்கேலாது சீதனத்தோட நல்ல பொம்புளையாப் பாத்து பேசி முடிச்சிட்டால் நல்லமென்டு தோனுது நிங்க என்ன நினைக்கிறீங்கள் என்றபடி கதையைத் தொடங்கினாள் மீனாச்சி. ஓமோம் மீனாச்சி நீ சொல்றதும் சரிதான் எதுக்கும் பிள்ளையிட்ட கேட்டு முடிவெடுப்போமேன் எனச் சொல்லி சாப்பாட்டுக் கோப்பையை மீனாச்சியின் கையில் கொடுத்து விட்டு கையைக் கழுவிவிட்டு மீண்டும் திண்ணையில் போய்ச் சரிந்தான் மணியம்.

கோப்பையைக் கழுவி வைத்து விட்டு வெளியில் வர மைந்தனின் உந்துருளி வீட்டுப்படலையில் வந்து நின்றது. மகனைக்கண்ட மீனாச்சி மீண்டும் உட்சென்று சாப்பாட்டை போட்டு எடுத்து வந்து மைந்தனிடம் நீட்டினாள். சாப்பாட்டை வாங்கிக் பொண்டு கதிரையில் அமர்ந்தான். அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் ‘‘ஏன் தம்பி வயசு கூடிற்றே போகுது உனக்கு ஒரு பொம்புள பாப்பம் என்டு அப்பா சொன்னார்". நான்தான் வேணாம் அவன் வந்த உடன கேட்டு முடிவெடுப்பம் என்டன், எனச் சொல்லி கணவனின் தலையில் பழியைப் போட்டு முடித்தாள் எதுவும் பேசாது சாப்பிட்டு முடித்து கோப்பையைக் கழுவி தாயிடம் கொடுத்து விட்டு அம்மா நான் மித்திரா என்ட ஒரு பொண்ண காதலிச்சிருக்கன் உங்களுக்கு ஓம் எண்டால் அவளையே நான் கல்யாணம் செய்யிறன் சம்மதம் எண்டாள் சொல்லுங்கோ எனச் சொல்லியபடி மீண்டும் வேலைக்குச் சென்றான். மீனாச்சி கோப்பையை வைத்து விட்டு என்னப்பா கேட்டியளே உவன் சொல்லிட்டுப் போறத என்னப்பா செய்யிறது என அலறியடித்தாள்.

மணியம் தூங்கியது பாதி தூங்காதது பாதியாய் எழுந்து கொண்டு இப்ப நான் என்னப்பா பண்ணணும் எண்டு சொல்லுறாய் அத சொல் என்றான் மணியம். சரி எனி என்னப்பா செய்யிறது அவன் ஆசைப்பட்டுட்டான் அவளையே பாத்து பேசி கட்டி வைப்பம் நாளைக்கே போய் பாப்பம் அவனுக்கும் சொல்லிவிடு எனச்சொல்லிவிட்டு சேட்டை எடுத்து பொட்டுக் கொண்டு கடைப்பக்கமாக நடக்கத் தொடங்கினார். வேலை முடித்து வீடு வந்த மைந்தனிடம் தம்பி மைந்தா, நாளைக்குப் போய் அந்த பொண்ணப் பாத்து பேசி முடிப்போம் எண்டுட்டுப் போறாரு நீ எதுக்கும் அந்தப் பிள்ளையிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிவிடு என என்றவாறு இரவுச்சாப்பாடு தயார் செய்யத் தொடங்கினாள் மீனாச்சி. ம்ம்... எனத் தலையசைத்து விட்டு தொலைபேசியில் மித்திராவுக்கு அழைப்பெடுத்தான் மைந்தன்.

மித்திரா வீட்டுக்கு ஒரே ஒரு செல்லப்பிள்ளை படித்து முடித்து வீட்டில் இருந்தாள். அச்சமயம் 30 வயதிற்கு மேற்பட்ட போராளிகள் திருமணம் செய்ய முடியும் என்ற அந்த அமைப்பின் கொள்கைக்கிணங்க போராளி ஒருவரை முறைப்படி திருமணம் செய்து கொண்டாள் அதன் பேறாக ஒரு ஆண்குழந்தையையும் பெற்றெடுத்தாள். ஓயாத அலை 3 சமரில் தன் கணவனை இழந்த மித்திரா தன் பிள்ளையுடன் தாயாரின் வீட்டில் வாழ்ந்து வருகின்றாள்.

மித்திராவும் மைந்தனும் ஒரே தொழில் நிறுவனத்தில் பணிபுரிந்த மையால் ஏற்பட்ட பழக்கமே காலப்போக்கில் காதலாகியது ஆரம்பத்தில் மித்திரா மைந்தனின் காதலை மறுத்திருந்தாள் மைந்தன் தன் தாய் தந்தையரின் அனுமதியுடன் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற காரணத்தால் அவள் சம்மதித்தாள்.

அம்மா போன் அடிச்சுட்டே இருக்கு ஓடி வாங்கோ என்றபடி போனைத் தூக்கிக் கொண்டு நடந்தான் தமிழ் கிணற்றடியில் நின்ற மித்திரா தன் மகனிடம் இருந்த போனை வாங்கி கதைத்தாள். சொல்லுங்கோ மைந்தன் என்ன ஏதும் அவசர அலுவலோ... ? இல்ல மித்திரா நாளைக்கு உங்க வீட்ட அப்பா அம்மா வாறீனமாம் உங்களைப் பாக்க அதுதான் சொல்லுவம் எண்டு எடுத்தன் எனச்சொல்லி முடித்தான். சரி மைந்தன் நான் அம்மாட்ட சொல்றன் நீங்க வாங்கோ எனச்சொல்லி அழைப்பைத் துண்டித்து விட்டு வீட்டிற்குள் சென்றவாறே.. அம்மா... அம்மா... நாளைக்கு மைந்தன்ர வீட்டுக்காரர் என்னப்பார்க்க வருகினமாம் வீட்ட வடிவா சுத்தம் செய்து விடுங்கோ நான் தமிழ்ட உடுப்பை அலம்பி காயவிட்டுட்டு வாறன் எனச் சொல்லி கிணற்றடி நோக்கி நடந்தாள். வீட்டைக்கூட்டிச் சுத்தம் செய்து முடித்த மித்திராவின் தாயார் பிள்ள நான் ஒருக்கா கோவிலுக்கு போய்ற்றுவாறன் என கோவில் சென்றாள் மித்திராவின் தாயார். பிள்ளையாரப்பா என் பிள்ளை சந்தோசமா வாழனும் அதுமட்டும் நடந்தால் நான் உனக்கு பொங்கல் ஆக்கிப் படைக்கிறன் எனச் சொல்லி வேண்டுதல் செய்து விட்டு வீடு திரும்பினாள்.

மறுநாள் காலை எழுந்து குளித்து வெளிக்கிட்டு நின்றாள் மித்திரா அம்மா தண்ணியை கொதிக்க வையுங்கோ ரீ ஊத்த இப்ப வந்திருவினமாம் என மித்திரா சொல்லி முடிக்க வீட்டு வாசலில் ஓட்டோ வந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியம் மீனாச்சி மைந்தன் மூவரும் இறங்கி உள்ளே வந்தனர். வாங்கோ வாங்கோ என வரவழைத்து கதிரையில் இருத்தினாள் மித்திராவின் அம்மா. தேநீரை ஊற்றி எடுத்து வந்து மூவருக்கும் பரிமாறினாள் மித்திரா.

தேநீரை குடித்து விட்டு ஓகே எங்களுக்கு பொண்ண பிடிச்சிருக்கு வாறமாசமே கல்யாணத்த வச்சுக்கலாம் உங்களுக்கு ஓகேவா என கேள்வி எழுப்பினார் மணியத்தார். அந்த நேரம் வெளியில் நின்ற தமிழ் ஓடி வந்து அம்மா இவையல் யாரம்மா ஏன் வந்திருக்கினம் என கேள்வியை அடுக்கிக் கொண்டே போனான். தமிழை எதுவும் கூறிவிடாமலே தமிழின் தலையை வருடியபடி நின்றாள் மித்திரா. அது உங்க தாத்தா எனக் கூறி தமிழைத் தூக்கிக்கொண்டான் மைந்தன்.

அப்பா இது மித்திராட குழந்தை தான் அவர் யுத்தத்தில் வீரமரணம் அடைந்து விட்டார். இப்ப மித்திராவும் குழந்தையும் தான் இருக்கினம் என உண்மையை எடுத்துச் சொன்னான். மௌனமாய் நின்ற மணியம் மெதுவாய் வெளியில் சென்றான் யோசித்து விட்டு மீண்டும் உள்ளே வந்து சரி தம்பி நீ தானே வாழப்போறாய் உனக்கு பிடிச்சிருந்தால் மருமகளையும் பேரனையும் நாளைக்கே கூட்டிவா எழுத்தை எழுதிடுவம் எனச் சொல்லி புறப்பட்டார்.

மணியத்தின் கையை இழுத்துப்பிடித்து என்னப்பா சொல்லுறியள் உங்களுக்கு மூளை ஏதும் குழம்பிப்போச்சே அவள் ஏற்கனவே கல்யாணம் செய்து மனுசனைப் பறிகுடுத்துட்டாள். இதில வேற பிள்ளையும் இருக்கு என்ர பிள்ளைட வாழ்க்கையை நாசமாக்கப் போறீங்களே இந்தக் கல்யாணம் நடக்காது நடக்கவும் விடமாட்டன் என்றவாறு மணியத்தை முந்திக்கொண்டு நடக்கத்தொடங்கினாள். மீனாச்சி கொஞ்சம் நில்லு நான் சொல்றத கேள் அதுகள் சந்தோசமா வாழட்டும் எனச் சொல்லி மீனாச்சியை இடை மறித்தான் மணியம்.

பாட்டி நானும் உங்களைப் போகவிடமாட்டன் என்றவாறு இரு கைகளையும் நீட்டி வழிமறித்தான் தமிழ் அந்த மழலையின் முகத்தைப் பார்த்ததும் தனக்குள் எழுந்த கோபங்களை மறந்தாள் மீனாச்சி கண்ணீர் பெருக தமிழை ஆரத்தழுவிக்கொண்டாள்.

*காவலூர் அகிலன்*
*கிளிநொச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின் தொன்மைக்கலை "பறைஇசை"

முச்சங்கத்தரியணை ஏறி மன்னர் முடிதொட்ட மூவரும் அடிதொற்றுப் போற்ற விச்சையால் அரசாண்ட மாதாவாம் செந்தமிழ் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ் கலையால் கலைவடித்து, காவியத்தால் உலகாண்ட எம்மினம் இலக்கியச் செல்வங்களாம் பார்புகளும் பத்துப்பாடல் ஏற்றம் மிகு எட்டுத்தொகை, அகநானூறு, புறநானூறு ஆன்றோர் போற்றும் ஐம்பெரும் காப்பியங்களும் அதனுடன் வாழ்வியல் கூறும் கதையான பறை இசையும் கொலுவிருந்து மனிதத்தை இயக்கி வந்துள்ளன. அந்த தொல் சீர்கலையான பறை ஒரு தமிழிசைக்கருவியாகும்.

இது தோலால் ஆன மேளமாகும். "பறை" என்ற சொல் பேச்சைக்குறிக்கும். பேசு எனப்பொருள்படும். "அறை" என்ற சொல்லில் இருந்தே பறை தோன்றியது.

பேசுவதை இசைக்கவல்ல தாளக்கருவி பறை எனப்பட்டது. பன்னெடுங்கால வரலாற்றை தன்னகத்தே கொண்டுள்ள பறை ஒரு இசைக்கருவி மட்டுமல்ல, தொல்குடித் தமிழ்ச்சமூகத்தின் சொத்து, தோலிசைக்கருவிகளின் தாய், தமிழினத்தின் தொன்மையின் அடையாளம். உழைக்கும் மக்களின் இசைக்களஞ்சியம். தமிழர் வாழ்வியலின் முகம் என வருணிக்கப்படும் பறைமுழக்கம் பறை இசையாகும்.

ஆடல், பாடல், தாளம், ஜதி, ராகம் அனைத்தும் சேர்ந்து மனிதனை கலைஞனாக்கி வாழ்வியலை கலையாக்கி காவியமாக்கும் பறை இசை ஓடும் இசையை ஒழுங்குபெற நிறுத்தி ஓர் அளவோடு, சீரோடு, ஒத்த அழகோடு நடக்க, இசைக்கு நடை கற்பிக்கும் கலை தான் இந்த பறை இசைக்கலை.

இக்கலையின் மகத்துவம் போட்டியை, பொறாமையை, பொய்யை, சூதை, சூழ்ச்சியை தாக்கி அழிக்கும் ஓசையைக் கொண்ட ஒரே கலை பறை இசைக்கலை தான்.

இது தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் இக்கலையும் கலைஞர்களும் தெய்வீகக் கலையைப் படைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறை ஆட்டம் என்பது தமிழர்களின் பாரம்பரியமான நடனமாகும். பறையாட்டம் உணர்ச்சி மிக்கது, மற்றும் எழுச்சி மிகுந்தது. அதிர்ந்தெழும் பறையின் ஓசைக்கேற்ப ஆடக்கூடியது என்பதால் பறையாட்டம் கிளர்ந்தெழும் உடல் அசைவுகளைக் கொண்டது. ஆதி மனித சமூகம் தங்கள் கூடுதலுக்காகவும், தங்கள் குழுவுக்கு ஆபத்துக்களை உணர்த்தவும், விலங்குகளிடமிருந்து தங்களை தற்காத்துக் கொள்ளவும் எழுப்பிக் கொண்ட சத்தம்தான் பறையாட்டத்தின் மூலம் எனக்கருதப்படுகிறது. இக்கலையின் வேறொரு மகத்துவம் என்னவென்றால் ஆவேசம், மகிழ்ச்சி, உற்சாகம், என உணர்ச்சிகளை எழுப்பி கேட்போரை ஒரே நேர் கோட்டில் இணைக்கும் சக்திவாய்ந்தது இக்கலை. பறை என்ற இசைக்கருவியை இசைத்து ஆடப்படுவதால் இது பறையாட்டம் என்று அழைக்கப்படுகின்றது. இது ஒரு போர் இசைக்கருவியாகவும் ஆதிகாலத்தில் பேணப்பட்டுள்ளது.

தோற்கருவிகளின் பொதுப்பெயராகப் பறை என்பது வழங்கப்பட்டுள்ளது. பறை என்ற சொல்லுக்குக் கூறு, சொல் என்ற பொருள்களில் இருக்கின்றன. மலையாளத்தில் பறைதல் என்பது சொல்லுதல் என்ற பொருளில் வழங்கிவருவதை இன்றும் காணலாம். தீட்டைப்பறை, தொண்டகச்சிறுபறை, தொண்டகப்பறை, அரிப்பறை, மன்றோல் சிறுபறை, பொருநர்பறை, மென்பறை, ஆடுகளப்பறை, எனப்பல பெயர்களில் சங்க இலக்கியங்களில் பறை குறிப்பிடப் பட்டுள்ளது.

இவற்றினை மாற்றி மாற்றி அடிப்பதன் மூலம் புதிய மெட்டுக்கள், சொற்கட்டுக்கள் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் தனித்தனி அடியென வைத்திருக்கின்றார்கள். சப்பரத்தடி, டப்பாஅடி, பாடல்அடி, சினிமாஅடி, ஜாய்ண்ட்அடி, மருள்அடி, சாமிசாட்டுதல், மாரடித்தல், வாழ்த்து அடி என ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்ப தாளங்கள் மாறுகின்றன. எனினும் இசைக்கப்படும் இசைக்கருவி ஒன்றுதான்.

**பறையின் வகைகள்**

**பறையின் இசையும் வடிவமும் நுணுக்கமாக வேறுபடுகிறது. அவற்றில் முக்கியமானவை**

- அரிப்பறை – அரித்தெழும் ஓசையையுடைய பறை
- ஆறெறிப்பறை – வழிப்பறி செய்வோர் கொட்டும் பறை
- உவகைப்பறை - மகிழ்ச்சியைக்குறிக்கும் பறை
- சாப்பறை – சாவில் அடிக்கப்படும் பறை
- சாக்காட்டுப்பறை - இறுதிச்சடங்கின்போது இசைக்கப்படும் பறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெட்டியான் பறை – சில விசேட காலங்களில் கொட்டும் பறை
- நெய்தற் பறை – நெய்தல் நிலத்திற்குரிய பறை
- பம்பை – நெய்தனிலங்கட்குரிய பறை
- மீன் கோட்பறை – நெய்தனிலப் பறை
- மருதநிலப்பறை – மருதநிலத்திற்குரிய பறை
- கல்லவடம் - ஒருவகைப்பறை
- குரவைப்பறை – குறிஞ்சி நிலத்திற்குரியது
- குறிஞ்சிப்பறை - குறிஞ்சி நிலத்திற்குரிய தொண்டகப் பறை
- தடறு – தொண்டகப்பறை
- குறும்பறை – குறும்பறை
- கொடுகொட்டி – ஒருவகைப்பறை
- கோட்பறை – செய்திகளை நகரத்தார்க்குத் தெரிவிக்கும் பறை
- தமுக்கு – செய்தி தெரிவிக்க முழங்கும் ஒருகட்பறை
- நிசாளம் - ஒருகட்பறை நிசாளந்துடுமை
- சூசிகம் - ஒருவகைப்பறை
- தக்கை – அகப்புறமுழவு மூன்றினுள் ஒன்றாகிய ஒருவகைப்பறை
- தடாரி – பம்மையென்னும் பறை
- பறைத்தப்பட்டை – தண்ணம், தம்பட்டம், திடும்
- திண்டிமம் - நாவாய்ப்பறை, திமிலை
- தலைப்பறை – யானை முதலியவற்றின் முன்னே கொட்டும்பறை
- படலை – வாயகன்ற பறை
- பண்டார மேளம் - அரச விளம்பரம் குறிக்கும் பறை
- பன்றிப்பறை – காட்டுப்பன்றிகளை வெருட்டக் கொட்டும்பறை
- முரசம் - வெருப்பறை, போர்பறைகள்
- பூசற்றண்ணுமை – பகைவருடன் போர்புரிவதற்காக வீரரை அழைப் பதற்கு கொட்டுமபறை
- முருகியம் - குறிஞ்சி நிலத்தில் முருகனுக்குரிய வெறியாட்டுப்பறை
- வேறியாட்டுப்பாறை – குறிஞ்சி நிலப்பறை
- வீராணம் - ஒருவகைப் பெரியபறை
- பஞ்சமாசத்தம் - சேகண்டி கைத்தாளம் காளம் என்றும் தத்தளி மத்தளி கரடிகை தாளம் காகளம் என்றும் இருவிதமாகச் சொல்லும் ஐவகைப்பறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் கூறுகளுடன் பறை

- ஒருமன்னன் எதிர்நாட்டுக்கு சென்று போர் புரிய முன் அங்குள்ள போர் புரியவிலாத மக்களை வெளியேற வேண்ட
- பெருகிவரும் புனலை அடைக்க
- உழவர் மக்களை அடைக்க
- வெற்றி தோல்விகளை அறிவிக்க
- வயல்களில் உழவு வேலை செய்வோருக்கு ஊக்கமளிக்க
- விதைக்க
- அறுவடைசெய்ய
- காடுகளில் விலங்குகளை விரட்ட
- மன்னரின் செய்திகளை மக்களுக்கு தெரிவிக்க
- இயற்கை வழிபாட்டில்
- கூத்துக்களில்
- விழாக்களில்
- இறப்பில்

எனப் பல்வேறு வாழ்வியல் கூறுகளுடன் பறை இணைந்து இயங்கியுள்ளதற்கான ஆதாரங்கள் உள்ளன. தற்காலத்தில் பறை ஒடுக்கப்பட்ட மக்களின் இசைக்கருவியாக உள்ளது. பறையர்கள் சாம்பவார் சமூகங்களைச் சேந்தவர்கள் இவ்விசைக்கருவியை இசைக்கிறார்கள் இதற்கு தப்பு என்ற பெயரும் உண்டு.

ஆனால் இன்று பறை இசையையும் பறை ஆட்டத்தையும் சாதியின் பெயரால் சமூகத்தின் பெயரால் ஒடுக்கி ஒரு புனிதமான தெய்வீகமான கலையை ஓரம்தள்ளி... இனம் கடந்த உறவோடும், மொழி கடந்த தெளிவோடும், மதம் கடந்த நேசத்தோடும் பாசத்தோடும் தமிழர் வாழ்வியலில் இரண்டறக்கலந்த ஆலயப்பறை பண்பாட்டு விழாக்களின் அம்சமாக விளங்கும் மணப்பறை மற்றும் பிணப்பறை, சடங்குப்பறை இன்று வடபுலத்தில் அழிவடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. பறை இசையையும், பறைமேள ஆட்டத்தையும் கலைஞர்களும், கலைக்குழுக்களும், கலை மன்றங்களும், ஏன் கலைக்கல்லூரிகளும் தொடுவதற்கு அஞ்சுகின்றார்கள். தமக்கும் சாதிச்சாயம் பூசப்பட்டுவிடும் என்ற அச்சத்தால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பறை இசையும் தப்பு ஆட்டமும் கலைஞர்களுக்கே சொந்தமானது என்ற மமதையுடன் கிளிநொச்சி காவேரிக் கலாமன்றம் அந்தக்கலையை அழியவிடாது காக்கும் இவ்வேளையில் கலைஞர்களும் இக்கலை பயில முன்வரவேண்டுமென்ற அவாவில் அரசாங்கமும் கலாசார அமைச்சுக்களும் ஆய்வுகளை மேற்கொண்டு வருவது தொல்சீர்க்கலைகளை அழிய விடாது காக்கும் மான்பு ஆகும்.

இது சாதிக்கானதல்ல ...
நல்ல சமூகம் உருவாகுவதற்கான பண்பாட்டுக் கலையாகும்.

புல்லினத்தையும், பல்மதத்தையும் இணைக்கும் பாலமான இந்த தொல்சீர்க்கலையை அழியவிடாது காப்பாற்ற கலைஞர்கள் உருவாக வேண்டும்.

இக்கலையை அழிய விடாது காப்பாற்றுவதற்கு நவீனகலை, பண்பாடு, சமூக அரசியல், கல்வி ஆகிய தளங்களில் கருத்தில் கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்டோர் இக்கலையின் மகத்துவத்தைப் பேணுவார்களேயானால் பறை இசையின் ஈராயிரம் ஆண்டு கடந்த வரலாற்று இருப்பு உறுதிப்படுத்தப்படும். பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், பாடநூல்களில் இக்கலையின் மகத்துவம் பேசப்பட வேண்டும். இது பறை இசையின் வலுவான முழக்கத்திற்கு வழிகோலுவதாக இருக்கும். பல்கலைக்கழக கல்வியிலும் பாடமாக அமைவதால் இக்கலையை அழிவிலிருந்து மீட்கலாம்.

E.T.மூவேந்தன்
*மலையாளபுரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கச்சி கோட்டையும் இன்றைய நிலையும்

இலங்கையை பொறுத்தவரைக்கும் வடமாகாணத்திற்கு என்று தனித்துவமான சில இயல்புகளும், பண்புகளும், பண்பாடுகளும் உரித்துடையனவாக இருக்கின்றன். தொல்லியல் மரபுரிமைகளும் உலகம் வியக்கும் பண்பாட்டுக் கலாச்சாரங்களும் வடமாகாணத்திற்கு உரித்துடையனவாகும். இவை வடமாகாணம் சார்ந்தும் வரலாற்றை வெளிப்படுத்தி நிற்கின்ற கண்ணாடிகளாக காணப்படுகின்றன. இவ்வாறான தொல்லியல் மரபுரிமைகளில் பிரதானமாக இரண்டு வகைகள் காணப்படுகின்றன.

1. சுதேச மக்களுக்கு உரியவை
2. ஆந்நியராட்சிக்கு உரியவை

சுதேச மக்களுக்கு உரியன என்னும் போது நமது நாட்டை ஆண்ட சிங்கள, தமிழ் அரசர்கள் மற்றும் அக்காலப்பகுதி மக்களுக்கு உரியனவாகும்.அந்நியராட்சிக்கு உரியன எனும் போது வேறு நாடுகளில் இருந்து வந்த ஆட்சியாளர்களினால் உருவாக்கப்பட்ட, பழங்கப்பட்டவைகள் ஆகும். அந்த வகையில் இயக்கச்சி கோட்டையானது அந்நியராட்சியின் வெளிப்பாடாக அமைந்து இருக்கின்றது. அது அந்நியராட்சியின் வெளிப்பாடாக அமைந்திருந்த போதிலும் கூட அக்கால கட்டிடக்கலை மற்றும் சமூகவாழ்வியல் வழக்கங்கள், சட்ட முறைகள் என்பவற்றை வெளிப்படுத்தி நிற்பதுடன் சுற்றுலாவியல் தொடர்பான வளர்ச்சிக்கும் ஒரு காரணமாக உள்ளது.

இந்த இயக்கச்சி கோட்டையானது இயக்கச்சியில் அமைந்து ள்ளதால் அவ்வாறு அழைக்கப்படுகின்றது. A9 என்ற யாழ்ப்பாணம் - கண்டி வீதி இயக்கச்சியை ஊடறுத்து செல்கிறது. இவ் வீதியில் முக்கிய திருப்பம் அமைந்துள்ள இடமே இயக்கச்சி சந்தி அகும். இயக்கச்சி சந்தியில் இருந்து சில நிமிடப் பயணங்களில் இயக்கச்சிக் கோட்டையினை அடைந்து கொள்ளக கூடியதாக உள்ளது. கோட்டையை விடவும் பிரசித்தி பெற்ற சில விடயங்கள் இயக்கச்சியில் இருப்பதால் தான் அது மேலும் ஈழத்தமிழர் வரலாற்றில் முக்கியம் பெற்றதாக இருக்கின்றது.

இயக்கச்சி என்றதும் நமக்கெல்லாம் “இயக்கர்” என்ற இனக்குழுவினரின் ஞாபகம் வந்துவிடுகிறது அல்லவா? மகாவம்சத்திலும், தீபவம்சத்திலும் கூட இயக்கர் இனக்குழுக்கள் தொடர்பில் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபவம்சத்தை பொறுத்த வரைக்கும் புத்தர் இலங்கைக்கு வரும்போது அமானுஷ்யர்கள் இலங்கையின் வடபகுதியில் இருந்தனர் என்றும் கூறுகின்றது. அதே போல் மகாவம்சம் ஆனது விஜயன் இலங்கைக்கு வரும்போது இயக்கர், நாகர் ஆகியோர் வடபகுதியல் வாழ்ந்ததாக கூறுகின்றது. இவ் இரண்டு மூலாதாரங்களை வைத்து நோக்குகின்ற போது இலங்கையின் வடபகுதியில் இயக்கர்கள் இருந்தமை உறுதிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான இயக்கர் குலத்தினர் வாழ்ந்த தொல்குடியிருப்புக் களில் ஒன்றாக இயக்கச்சி குடியிருப்பு காணப்படுவதாக பரணவிதான முதலிய வரலாற்றாசிரியர்கள் ஊகம் தெரிவிக்கின்றனர். மிகவும் பிரசித்தி பெற்ற நீர்க்கிணறுகள் இங்கே உண்டு. இத்தொன்மையான நீர் கிணறுகள் மரத்தினாலும் முருகைக்கற்களாலும் உருவாக்கப் பட்டுள்ளன. இப்பொழுதும் இவ்வாறான சில கிணறுகளில் இருந்து அயற்பிரதேசங்களுக்கான நீர் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

இவ்வாறான தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமான இயக்கச்சியில் தான் பைல் கோட்டை (PYl) அதாவது இயக்கச்சிக் கோட்டையும் அமைந்துள்ளது. இது ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட கோட்டையாக அடையாளம் காணப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க இன்னொரு விடயம் யாதெனில் இந்தக் கோட்டையில் இருந்து வடக்காக 3Km தொலைவில் வெற்றிலைக்கேணி கோட்டையும், தெற்கே 1Km தொலைவில் ஆனையிறவுக் கோட்டையும் அழிவடைந்த நிலையில் காணப் படுகின்றமைதான்.

**இன்றைய நிலை**

இயக்கச்சி கோட்டை இன்று மிகவும் பரிதாபமான நிலையில் காணப்படுகின்றது. முக்கால்வாசிப்பகுதிக்கு மேல் முற்றிலும் அழிவடைந்த நிலையில் இருபுறமும் கொண்டுள்ள சிறிய அமைப்புகளுடன் காணப்படுகின்றது. தொல்லியல் திணைக்களத்தினால் வேலியிட்டு பாதுகாக்கப்பட்டுள்ள போதும் இதுவரை அதனை பாதுகாப்பதற்கான எந்தவித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமாக இருந்தால் யாழ்ப்பாணக் கோட்டையைப் போல இதையும் ஒரு சுற்றுலா தளமாக பிரகடனப்படுத்த முடியும் என்பதில் எவ்வித ஐயமுமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றைய நிலைக்கு காரணம்**

யாழ்ப்பாணக் கோட்டைக்கு நெதர்லாந்து அரசினுடைய நிதிவழங்கப்படுவதால் அது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் இயக்கச்சிக் கோட்டைக்கு அவ்வாறான எவ்வித நிதி ஒதுக்கீடும் வழங்கப்படுவதில்லை என்பதுடன் வடமாகாண தொல்லியல் திணைக்களத்திற்கு என வருடந்தோறும் இலங்கை அரசால் ஒதுக்கப்படும் நிதியானது போதுமானளவில் இல்லை என்பதும் தெரிய வருகின்றது.

மேலும் சில அரசியல் மற்றும் இன ரீதியான காரணங்களை கருத்திற்கொண்டு இதனை புனரமைக்க யாரும் முன்வரவில்லையோ என்று எண்ணத்தோன்றுகின்றது. ஏனெனில் அண்மைக்காலமாக வடமாகாண தமிழர் பிரதேசங்களில் காணப்படுகின்ற இவ்வாறான மரபுரிமை மையங்கள் பல உதாசீனப்படுத்தப்பட்டு வருவதனை காணக்கூடியதாக உள்ளது.

இதை விட கிளிநொச்சி மாவட்டம் குறித்து பிரதேச மக்கள் விழிப்புணர்வின்றி இருப்பது பெரிதும் வருத்தத்திற்குரிய விடயமாகும். தங்கள் பிரதேசங்களின் சிறந்த வெளிப்பாடான மரபுரிமைகளை அவர்களே அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இயக்கச்சி கோட்டையின் ஒருபுறத்தில் கள்ளுத்தவறணை அமைந்திருப்பதனால் இரவு நேரங்களில் இதன் செயற்பாட்டினால் இயக்கச்சி கோட்டை மேலும் பாதிப்பிற்கு உள்ளாக சந்தர்ப்பம் நிறையவே உண்டு. சூழல் சார்ந்த பிரச்சனைகள் ஏற்பட்ட வண்ணமிருக்கின்றன. இவ்வாறாக காலமும், யுத்தமும் அழித்து இடிந்து போயிருக்கின்ற கோட்டையை பிரதேச மக்களும் சேதப்படுத்துவதை உடனடியாக தடுத்திடல் வேண்டும்.

**ஐதீகம்**

இக்கோட்டை தொடர்பாக இன்னோர் ஐதீகம் உள்ளது. மேற்படி கோட்டையானது ஒல்லாந்தர் காலத்திற்கு உரியது என வரலாறு நிரூபணம் செய்திருப்பதையும் தாண்டி இந்த ஐதீகமானது அப்பிரதேச மக்களின் செவிவழியாக பேணப்பட்டு வருகின்றது. இக்கோட்டை "குவேனி கோட்டை" (Kuveni fort) என்றும் அழைக்கப்படுகின்றது. ஏனென்றால் குவேனி தனது காலத்தில் இக்கோட்டையைக் கட்டி சுற்றிவர இருந்த பிரதேசங்களை ஆட்சி செய்தாள் என்று இப்பிரதேச மக்கள் நம்புகின்றனர். இது நம்பும்படியாக இல்லையென்ற போதும் இதற்கு அருகில் காணப்படும் சில பாழடைந்த வீடுகள் இயக்கர் குடியிருப்பு இருந்தமைக்கு சான்றாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எப்படி புனர்நிர்மாணம் செய்வது?**

நான் கோட்டையை பார்வையிட சென்ற நேரம் மாலை 4மணி அளவில் இருக்கும் உதிர்ந்து இடிந்தழிந்து போயிருக்கும் கூட ஏதோ ஓர் ஒளிக்கீற்று உண்டு என்று சொல்லிக்கொண்டிருந்தது. அந்தக் கோட்டை வேலியிட்டவர்களால் ஓர் பாதுகாப்பு மதிலை ஏன் அமைக்க முடியவில்லை என்று அது கேட்பதை போலிருந்தது. அது அந்நியர் ஆட்சியின் அறிகுறிதான் நான் அதை மறுக்கவில்லை. ஆனால் அது அமைந்திருப்பது நம் மண்ணில் அல்லவா? பேணவேண்டியதும் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதும் நாம்தானே.

புனர்நிர்மாணம் என்பது ஏதோ ஓர் வகையில் குறித்த மரபுரிமை மையத்தை நவீனரீதியில் மாற்றியமைப்பது தான். இயக்கச்சி கோட்டையை பொறுத்த வரைக்கும் அதன் எஞ்சியிருக்கும் பகுதிகள் கூட இடிந்து விழுந்திடுமோ என்று எண்ணத்தை தரும்படியாக உள்ளது. எனவே Conservation And treatment of stone முறைப்படி (கற்களின் புனர்நிர்மாணமும்) பராமரிப்பும்) இதனை பாதுகாப்பதே முதல் தேவையாக இருக்கின்றது. இது ஒரு கட்டிட சிதைவாக இருப்பதனால் "சாரம் கட்டுவதன் மூலம்" இதனை உடனடி அழிவில் இருந்து பாதுகாக்க முடியும் என்று நான் கருத்தினை முன்வைக்கின்றேன். மேலும் Diagnosis தொடர்பான செயற்றிட்டங்களும் கோட்டையில் முன்னெடுக்கப்பட வேண்டும். அதாவது கோட்டை கட்டப்பட்டிருக்கின்ற மூலங்கள் அல்லது பாறைகள் தொடர்பில் இனங்கண்டு அதற்கு ஏற்ப தொழில்நுட்பங்களை பிரயோகிப்பதே மிகச்சிறந்தது.

இவ்வாறான புனர்நிர்மாண செயற்பாட்டின் போது சுத்திகரிப்பு முறைகளை (Cleaning methods) நிச்சயம் பயன்படுத்த வேண்டும். இவ்வாறாக சுத்தப்படுத்தும் போது நீர் சுத்திகரிப்பு முறையினை பயன்படுத்தல் இலகுவானது என்பதுடன் திருப்திகரமான அழகியல் விளைவினையும் அதன் மூலம் பெறமுடியும் என்று தோன்றுகின்றது.

சுத்தம் செய்யும் முறையையும் அதனை பாதுகாக்க வேண்டிய முறையையும் மட்டும் எடுத்துச்சொல்லி விடுவதுடன் நமது கடமை முடிந்தது என்று சொல்லிவிட வரவில்லை• அதேபோல் வேலியிட்டு விட்டு வேலை முடிந்தது என்று தொல்லியல் திணைக்களமும் சொல்லிவிட முடியாது. மரபுரிமைகளை பாதகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள அமைப்புக்கள் கடமைகளை சரிவரச் செய்ய வேண்டியது அவசியம் என்பதை கூறவருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை புனர்நிர்மாணம் செய்தால் நான் உங்களுக்கு பயன் தருவேன். என்று கோட்டை சொல்வது போல நான் சுயசரிதையை கூறிவிட்டுப்போக விரும்பவில்லை. அனைவருமே பாதுகாக்க வேண்டும் முன்வரவேண்டும் என்கின்றேன்.

**புனர்நிர்மாணம் செய்வதன் நன்மைகள்**

இயக்கச்சி கோட்டையை புனர்நிர்மாணம் செய்தால் சுற்றுலா தளமாக அதனை அறிமுகப்படுத்தி அதனூடாக அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ள முடியும். உண்மையை சொல்வதென்றால் வடமாகாணத்தை பொறுத்த வரைக்கும் பலமரபுரிமை மையங்கள் கைவிடப்பட்டுள்ளன. அவற்றை எல்லாம் புனர்நிர்மாணம் செய்வதால் சுற்றுலா விருத்தியை அதிகரிக்க முடியும்.

இயக்கச்சி பைல் கோட்டையை பொறுத்த வரைக்கும் அது அமைந்துள்ள இடம் தெருப்பகுதியை விட்டு சற்று உள்ளே தள்ளி அமைந்துள்ளமையால் போக்குவரத்து தொடர்பான சிக்கல்கள் உள்ளன. இச்சிக்கல்களை காரணமாகக் கொண்டு அதனை வேறு இடத்தில் "மீள் கட்டுமானம்" செய்ய முடியும். இருப்பினும் கட்டுமானம் தொடர்பான உறுப்புரை சட்டங்களின்படி ஆராய்ந்து அதனை செயற்படுத்த வேண்டி உள்ளது. மேலும் தொல்லியல் திணைக்களத்தினூடாகவே இவற்றை மேற்கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே விதிகள், சட்டங்களுக்கு அமைய அழியும் அந்தக் கோட்டையை காப்பதும் மீட்பதும் நம் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

*செல்வி. பா. பாலாஜினி*
*யாழ். பல்கலைக்கழக மாணவி*
*கலாசார சுற்றுலாத்துறை*
*(Special of Cultural tourism)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிப் பிரதேச இடப்பெயராய்வு ஓர் அறிமுகம்

### ❖ இடப்பெயர்களின் தோற்றம் ஆய்வின் பயனும்

பண்டைக்கால மக்கள் நீர்க்கரை ஓரங்களிலும் காடுகளிலும் அலைந்து திரிந்து வேட்டையாடித் தமது உணவுத் தேவைகளைப் பெற்று வாழ்ந்த தொடக்க காலத்து நிலையில் அவர்கட்கு நிலையான இருப்பிட வசதிகளை அமைத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படவில்லை. காலம் செல்லச் செல்ல பண்பாட்டு வளர்ச்சியும், சமூகப் பொருளாதார தேவைகளும் சமூக ஒழுங்குகளும் ஏற்பட்ட நிலையில் நிலையான ஓரிடத்தில் இருந்து செயற்பட வேண்டிய இன்றியமையாத நிலை ஏற்படலாயிற்று அத்தகைய நிலையிலேயே இடப்பெயர்களின் தோற்றம் காரணமாயிற்று என்று கூறப்படுகின்றது.

அந்த வகையில் இப்பெயர்கள் இடப்பெயர்களைக் குறியீடு களுக்கும் பயன்படலாயிற்று எனக் கூறப்படுகின்றது. பண்டைக்கால மக்கள் தாம் வாழ்ந்த இயற்கையான இடங்களையே வாழ்வியற் சூழலாக அமைத்துக் கொண்டு தமது தொழில்களையும் அச்சூழலோடு இணைத்துக் கொண்டனர். தாம் வாழும் இடங்களை மற்றவர்கட்கு சுட்டிக்காட்டவும் இடப்பெயர்களைச் சூட்டிக்கொண்டனர். அன்றைய நிலையில் இயற்கை வளங்களே பெயர்க் கருவாக அமைந்திருந்தன. எனவே அவற்றின் அடியாக மரப்பெயர்கள், ஆற்றுப்பெயர்கள், நிலஇயல்புப்பெயர்கள், விலங்கு பறவைகளின் பெயர்கள் முதலியன இடப்பெயர்களாகக் குறிக்கப்பட்டன. அன்று தொடங்கிய பெயர் சூட்டும் பண்பாடு அதே சூழலில் தொடர்ந்தும் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைபெற்று தொடர்கின்றது என்பது சிறப்புக்குரியதாக அமைகின்ற தெனலாம். ஓரினத்தின் அல்லது பிரதேசத்தின் வரலாற்றை ஆய்வு செய்யும் போது அங்கே வாய்திறந்து பேசக்கூடியது. இடப்பெயர்கள் முதன்மை பெறுகின்றது. அன்றியும் அம்மக்களின் சமூக நடைமுறைகள், மரபுகள், ஒழுங்குகள், சமய ஒழுங்குகள், பழைய மரபுக் கதைகள், அரசியல் நடவடிக்கைகள், ஆட்சி ஒழுங்குகள் முதலான பல்வேறு கூறுகளை அறிந்து கொள்ளவும் இடப்பெயர்கள் வழிவகுக்கின்றன.

வடமாகாணத்தில் தொல்குடிகளாக ஆதி திராவிடர் வாழ்ந்திருக் கின்றனர். பண்டைநாள் தொடக்கம் பூநகரிக்கும் தமிழகத்துக்குமான பல்வேறு அடிப்படையிலான தொடர்புகள் இருந்திருக்கின்றன. தென்னிந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் பல்வேறு காலகட்டங்களில் தமிழர் குடியேற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரி வரலாற்றில் மறைந்து கிடக்கும் அல்லது மறைக்கப்பட்டிருக்கும் வரலாற்றுண்மைகள் இடப்பெயராய்வு மூலம் வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

இலங்கையின் பெருங்கற் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழர் குடியிருப்புக்கள், ஊர்கள், நகரங்கள், அரசுகள் தோன்றின. அந்த வகையில் கதிரமலையைத் தலைநகராகக் கொண்டு வட இலங்கையிற் தோன்றிய தமிழரசு பழமையும் முதன்மையும் பெறுகின்றது. வடபகுதி அந்தக் கதிரமலையே காலப்போக்கில் கந்தரோடையாக வழக்குப்பெற்றது. இலங்கையில் உள்ள பெருங்கற்பண்பாடும் தென்னிந்திய பண்பாட்டை ஒத்ததாகவும் அத்துடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இடப்பெயராய்வு தொடர்பாக இலங்கையில் தமிழ் இடப்பெயராய்வுகள் அறிவியல் அடிப்படையில் முழுமையாக இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் சைமன்செட்டி, சுவாமி ஞானப்பிரகாசர், S.W குமாரசாமி, ஹோர்ஸ்பேர்க், எஸ் சபாரத்தின முதலியார், ஜே.வி லூயிஸ் முதலியோர் யாழ்ப்பாண மாவட்டத்தின் இடப்பெயர்கள் பற்றி கி.பி 1834 தொடக்கம் 1950 வரை காலப்பகுதிகளில் கட்டுரைகளும் நூல்களும் எழுதியிருந்தனர். அவை யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்துப் பெயர்களும் அமையவில்லை. யாழ்ப்பாண மாவட்டத்தின் பூநகரியும் 1984 க்கு முன்னர் உள்ளடக்கப் பட்டிருந்தமையாலும், பூநகரி பாரம்பரிய கிராமங்களைக் கொண்ட பூர்வீக பிரதேசம் என்பதால் பூநகரியில் தொடர்பான ஆய்வு செய்யப் பட்டிருப்பதனையும் காணலாம்.

இடப்பெயராய்வு பற்றிய நோக்கில் “பூநகரி பிரதேசம் தொடர்பான இடப்பெயராய்வு செய்யும் ஆய்வாளரின் கன்னி முயற்சியாக” இருந்தாலும் ஆய்வுப் பிரதேசம் நீண்ட வரலாற்றுப் பின்னணியையும் தொல்பொருள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பல பாரம்பரிய உண்மைகளையும் பூர்வீக வரலாற்றுப் பின்னணியையும் வெளிப்படுத்தி உள்ளது. இப்பிரதேசத்தின் இடப்பெயர் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகக் கருதப்பட்டது. அந்த வகையில் பூநகரிப் பிரதேசத்தின் இடப்பெயர்களை ஆராயும் முகமாக செயன்முறைப்படுத்தப்பட்டது. பூநகரிப்பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்தின் ஓர் பிரதேச செயலாளர் பிரிவாகும். இங்கு 19 கிராம சேவகர் பிரிவுகள் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பின்வருமாறு கூறலாம் நல்லூர், ஆலங்கேணி, கொல்லகுறிச்சி, செட்டியகுறிச்சி, ஞானிமடம், மட்டுவில்நாடு கிழக்கு, பள்ளிக்குடா, மட்டுவில்நாடு மேற்கு, பரமங்கிராய், கௌதாரிமுனை, ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு, கரியாலை நாகபடுவான், பல்லவராயன்கட்டு, முழங்காவில், நாச்சிக்குடா, கிராஞ்சி, பொன்னாவெளி, (வலைப்பாடு, வேரவில்) இரணைதீவு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளையும் 100 மேற்பட்ட சிறு கிராமங்களையும் கொண்ட பிரதேசமாகும்.

- **பூநகரி**

பூநகரி என்ற பெயரைத் தமிழகத்தில் உள்ள திருநகரி என்ற இடப்பெயருடன் ஒப்பிட்டுக் கூறப்படுகின்றது. இவ் இடப் பெயரை குலசபநாதன் (1955:33) தமிழகத்தில் உள்ள பொன்னேரி என்ற இயற்பெயருடன் ஒப்பிட்டு பொன்னேரி, பூனேரி, பூனெரி, பூநரி என மருவி வழங்கிற்று என்றும் புனரி என்பதே இதன் பழைய பெயர் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் பூ+நகர்+இ= பூநகரி. பூ - பூத்தல், பூத்தல் என்பதற்கு – மலர்தல், தோன்றுதல், பொலிவுபெறுதல், பயனின்றிப் போதல், படைத்தல் என்ற பொருள்களுள் பூநகரி, பூநாகம் என்ற பெயரிலிருந்து வந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. இப்பிரதேசம் பண்டைய தமிழ் அரசின் அமைவிடமாக இருந்திருக்க வேண்டும் என்பதை தொல்பொருள் சான்றுகளாலும் பாழடைந்து கிடக்கும் நிலவள அமைப்பினாலும் நிறுவக்கூடியதாக இருத்தல் பூநகரியின் வரலாற்றுச் சிறப்பை கோடிட்டு காட்டுகின்றது. (ப.புஸ்பரத்தினம் 1933)

மேலும் இடப்பெயர்வு தொடர்பான வரலாற்றை நோக்கும் போது பெரிப்புலுஸ் (Perplus) தனது குறிப்பில் பூநகரியை Poubouke எனக் குறிப்பிட்டுள்ளார். பூதுாக்கி என்பதே ஆயிற்று எனக் குறிப்பிட்டு அதற்கு மகாவம்சம் விளக்கம் காண்கிறார் இராசநாயகம் முதலியார் (1926 – 114) ஜம்புகோளத்துறையிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் செல்லும் வழியிற் பூநகரி அமைந்துள்ளது. சங்கமித்தை வெள்ளரசக் கிளையுடன் இவ்வழியால் அநுராதபுரத்தை நோக்கிச் செல்லும் போது பூநகரி பூம்பந்தரால் அலங்கரிக்கப்பட்டிருந்ததென மகாவம்சம் கூறுகின்றது. இதனையே பெரிப்புலஸ் பூதுாக்கி எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த இடமே பின்னாளில் பூநகரி என மருவிற்று என இராசநாயகம் முதலியார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is also clear that produce or punagary which was a porting the time of PTOLEMY, or THELKEIR, identified as Kalmunai, had come into prominence. Incidently, it may be said, that this is a further circumstance in support of the view that periplus was anteroior in date to ptoiemy. Ptolemy who had however, heard of the name "Pouduke" assigned to it a place in the interior of the island and another further north than Madras.(S.Rasanayagam :1926:115)

மேலும் பூநகரி என்பதற்கு வரலாற்று புவியியல் அடிப்படையிலும் விளக்கம் கூறக்கூடியதாகவுள்ளது. பூநகரியை பூ+நகர்+இ எனப்பிரித்து, பூ-நிலம், நகர்-நகர்தல், இ-விகுதி எனப் பொருள் கொண்டு, யாழ்ப்பாண நிலத்தொடரில் இருந்து கடலால் பிரிக்கப்பட்டு நகர்ந்த நிலப்பகுதியே பூநகரி எனப் பெயர் பெற்றது. என்றும் கூறப்படுகின்றது. கு+நகரி எனும் இடப்பெயர் போத்துக்கேயர் காலத்தில் போத்துக்கேய மொழியில் "புநெறிம்" எனவும் அழைக்கப்பட்டது. இவ்வாறு பூநகரி பல சிறப்பு தொன்மைகளையும், உண்மைகளையும் கொண்டு விளங்குகின்றது.

- **நல்லூர்**

இக்கிராமம் பூநகரிச் சந்தியிலிருந்து பூநகரி பரந்தன் வீதியில் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ளது. நல்லூர் வளமான மருதநிலத்தூராக காணப்படுவதால் "நெல்லூர்" என்றே இடப்பெயர் இருந்ததாகவும் பின்னர் மருவி நல்லூராகவும் வந்ததாகக் கூறப்படுகின்றது. மருத நிலமாகையால் நெல் வயல்கள் பரந்து விரிந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரை இருப்பதாலும் நெல்பெருமளவில் விளையும் ஊராக காணப்படுவதாலும் வீடுகளிலும் நெல் குவிந்து கூடை கூடையாக இருந்ததாலும் ஏனைய ஊர்களில் இருந்து வந்து நெல்லுப் பெற்றுச் செல்லும் களஞ்சியமாகவும் சிறப்புப் பெற்றதாலும் இவ்வூருக்கு நெல்லூர் என வழங்கலாயிற்று என்பார்கள்.

மேலும் கூறுமிடத்து பண்டைத்தமிழரின் குடியேற்றப்பகுதிகளில் ஒன்றாகப் பூநகரி நல்லூர்ப்பகுதி விளங்கிற்று என்பதற்கு இங்கு அகழ்வாரட்ச்சி மூலம் கிடைத்த புதைபொருட்கள் சான்றாதாரங்களாகும். அத்துடன் பண்டைய குடியிருப்பு இருந்தமை தெளிவாகின்றது. இது தொடர்பாக க.குணராசா (1999 – 65) கூறுவது மேலும் ஆராயத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.10ம் நூற்றாண்டளவில் பூநகரிப் பிரதேசம் சோழரின் ஆடச்சிக்கு உட்பட்டிருந்தது. என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. அவ்வேளையில் அப்பிரதேசத்தின் சோழப் பிரதிநிதியாக இருந்த புவனேகபாகு பூநகரியில் இன்று விளங்குகின்ற நல்லூர் என்ற பகுதியில் தனது மாளிகையை அமைத்திருந்தான். உண்மையில் இன்று கிடைக்கின்ற ஆதாரங்களிலிருந்து பூநகரியில் இன்று இருக்கின்ற பிரதேசமே தமிழர் அரசின் புராதன நல்லூர்எனக்கொள்வதில் தவறில்லை. தென்னிந்தியாவில் பல ஊருக்கு நல்லூர் எனப் பெயருள்ளது. இந்தப்பிரதேசத்துக்கும் சோழரால் இடப்பட்டிருந்தது எனக்கொள்ளலாம். இவ்வாறு நல்லூர் கிராமத்தின் இடப்பெயர்கள் தொடர்பாக மேற்படி விடயங்கள் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். (பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்)

➢ **முழங்காவில்**

முழங்கால் + வில் முழங்காவில் எனப் பெயர் வழங்குவதாயிற்று இங்குள்ள பள்ளமான நிலங்களில் முழங்கால் அளவிற்கு நீர் எப்போதும் நிறைந்திருப்பதால் இப்பெயர் தோன்றியது எனப்படுகின்றது. இருப்பினும் இங்கு இது தொடர்பாக கதை ஒன்று உள்ளது. 1 ம் நூற்றாண்டுக்கு முன்னர் வரட்சி நிலவிய காலத்தில் இங்குள்ள நீர்நிலைகளில் நீர் வற்றி மனிதர்கள் ஏனைய உயிரினங்கள் எல்லாம் நீரில்லாமல் கஸ்ரப்பட்டன. அவ்வேளையில் முழங்காவில் விநாயகர் ஆலயத்திற்கு அருகில் கிணறு வெட்டப்ட்டதாகவும் அங்கு பல நாட்கள் ஆழமாக வெட்டப்பட்டும் நீர் கிடைக்காததால் அப்பகுதி மக்கள் விநாயகரை நினைத்து மனமுருகி கிணற்றுக்கு பொங்கல் செய்து படைத்ததாகவும் காலை கிணற்றடியில் வந்து பார்க்கும் போது கிணற்றுக்குள் முழங்காமல் இடிவிழுந்து நீர் நிறைந்து காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனால் முழங்காமல் இடி விழுந்து நீர் நிறைந்திருந்ததால் முழங்காமல் என்பது மருவி முழங்காவில் என்ற இடப்பெயர் வந்ததாகவும் கூறுகின்றார்கள். இங்கு முழங்கா என்பதற்கு "ஒலிக்காத" எனப் பொருள் கொண்டு ஒலியலையற்ற நீர் நிலை உள்ள இடம் எனக் கொள்ளவும் அங்குள்ள இயற்கைநிலை வாய்ப்பாக உள்ளது எனலாம்.

➢ **வேரவில்**

வேரவில்+வில்= வேரவில் வேரல்= சிறு மூங்கில் = அரிசிவேரல் வேலி வேர்க்கோட்பலவின்... எனத் தொடங்கும் குறுந் தொகைப்பாடல் வரியில் வரும் "வேரல் வேலி"என்ற வழக்காறு இவ்விடப்பெயரை நினைவு படுத்துகின்றது. எனவே, வேரல்+வில் என்பது இடைக்குறையாய் வேரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிற்று வேரவில் பெயருடைய சிறுகுளமும் இங்கே உண்டு "பூநகரி" பகுதியின் பல்லவராயன் கட்டுக்கு மேற்கே அமைந்துள்ள பழைய குடியிருப்பு இடங்களில் வேரவில் என்ற ஊரும் ஒன்றாகும். இது பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவின் சிறுநகர்ப்பகுதியேயாகும் மேலும் வேரவில் பிரதேசத்தை வேரல் ஆச்சி என்பவர் கிராம ஆட்சியாக சிற்றரசு நடத்தி வந்ததாகவும் அவரின் பெயரில் பல சிறுகுளங்கள் அமைத்ததாகவும் இதனால் அவரின் பெயர் மருவி வேரல்+ வில் வேரவில் ஆக மாறியதாக கூறப்படுகின்றது. இக்கிராமம் பூநகரிச் சந்தியில் இருந்து பூநகரி மன்னார் வீதியில் 20Km சென்று பல்லவராயன்கட்டு சந்தியிலிருந்து மேற்கு நோக்கி 10Km சென்றால் கிராஞ்சியை அடுத்து வருவது வேரவில் கிராமம் ஆகும். இக்கிராமத்தை ஈழவூர் என்றும் கூறப்படுகின்றது. சங்ககாலப் புலவர் ஈழத்துப் பூதந்தேவனார் இவ்வூரான வேரவிலைச் சேர்ந்தவர் எனக்கூறப்படுகின்றது. (பூநகரி தொல்பொருளாய்வு பக்கம் - 40) இதனால் ஈழவூர் வரலாற்றுக் காலத்தில் கூறப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்வூருக்கு அண்மையில் ஈழவன்குடா (இலவன்குடா) எனப்படும் குடா என்னும் கிராமம் காணப்படுகின்றது. இதனை இப்பொழுது இலவன்குடா என அழைக்கப்படுகின்றது. ஈழம் என்ற சொல் இங்கிருந்துதான் பிறப்பெடுத்தது என்று கூறப்படுகின்றது.

➢ **பல்லவராயன்கட்டு**

பல்லவன் இராயன் கூட்டு பல்லவராயன்கட்டு இது குளமும் பெரும் கிராமம் பூநகரிச் சந்தியில் இருந்து 25 – 27 மீற்றர் சென்று கிழக்குப் பக்கம் உள்ள பழம் பெரும் கிராமம் பல்லவராயன்கட்டு என்னும் ஊர் அமைந்துள்ளது. பல்லவராயன் கட்டு எனும் பெயரில் ஓர் ஆறும் ஓடுகிறது. இந்த ஆற்றின் குறுக்கே அணைகட்டு உருவாக்கப்பட்டதே பல்லவராயன் கட்டுகுளமாகும். இக்குளத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்விடப்பெயர் தோற்றம் பெற்றுள்ளது. பண்டைக்காலத்தில் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தரைவழியாக மக்கள் சென்ற பொழுது பல்லவராயன்கட்டு ஒரு தரிப்பிடமாக அமைந்திருந்தது. காஞ்சிப்பல்லவரோடு கொண்டதாக அநுராதபுரத்திலே அரசுரிமை இழந்த மானவர்மன் பல்லவ நரசிம்மனிடம் உதவி கேட்ட அவனது தமிழ்ப்படை ஒன்று இச்சிங்கள மன்னனுக்கு உதவியாக இலங்கைக்கு வந்தது அடிப்படையின் ஒருபகுதி இப்பகுதியல் பாசறை அமைத்து தங்கியிருந்ததாக கூறப்படுகின்றது. இதன் காரணமாக இவ்வூரை பல்லவராயன்கட்டு என அழைத்திருந்ததாக என பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (1962 – 104) கூறுவது பொருத்தமாகலாம் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லையாதீவு

பூநகரியின் கொல்லகுறிச்சிப் பகுதியில் இவ்விடம் அமைந்துள்ளது. இத்தீவுப்பெயர் நிலம் அல்லது நிலவளத்துடன் தொடர்புபட்டுத் திரிந்து வழங்குகின்றது. இவ்விடத்தின் கீழ் சல்லி கிண்டி எடுக்கப்பட்டதால் சல்லித்தீவு என்ற பெயர் முன்பு வழக்கிலிருந்தது என்பர். இங்கு கண்ணகி அம்மன் ஆலயம் உண்டு. கண்ணகியம்மனை "செல்லி" எனவும் வழங்குவதுண்டு. எனவே, செல்லி கோவிலில் உள்ளதீவு செல்லையாதீவு என்றும் வழங்கிற்று பின்பு அக்கோயிலிலுள்ள பூசகராகிய செல்லையா என்பவரின் பெயரால் இத்தீவு செல்லையாதீவு எனப்பெயர் பெற்றதெனக் கூறுவர். இவ்வாறான சல்லித்தீவு, செல்லித்தீவு செல்லையாதீவு என இத்தீவின் பெயர் வழங்கி வந்தமையை அறியக்கூடியதாகஉள்ளது. அத்துடன் கண்ணகி அம்மனின் சிலை இந்தியாவில் இருந்து கஜபாகுமன்னன் இவ்வழியாகச் செல்லும் போது இவ்விடத்தில் தங்கிச் சென்றதால் இங்கு இக்கண்ணகி அம்மன் குடிகொண்டதாகவும் இங்குள்ள மூத்தோர்கள் உரைக்கின்றனர். இப்பிரதேசம் பூநகரியின் வடகிழக்குப் பிரதேசத்தின் தம்பிராயின் வடக்குப் பக்கமாகவும் அமைந்துள்ளது.

## கல்முனை

கல்+முனை=கல்முனை இக்கிராமம் பூநகரிக் குடாவில் வடமுனையிலுள்ள ஓரிடமாகும். இப்பிரதேசம் பூநகரிச் சந்தியிலிருந்து மேற்குத் திசைநோக்கி சென்று ஆலடிச்சந்தியால் 18Km செல்லவரும் கிராமமாகும். இவ்விடம் சிறியகடல் முனையாக இருந்தும் கடலரிப்பினால் அரித்துவிடமுடியாதவாறு கற்றன்மை கொண்ட இடமாகக் காணப்படுகிறது. தொலமி (Ptolemy : AD 150) இவ்விடத்தை தலைக்கொரி (Talacory) என்று குறிப்பிட்டுள்ளார. Talacory என்பதே அதாவது கூர்முனையை கல்முனையாக மருவிற்று என்று இராசநாயகம் முதலியார் எழுதியுள்ளார். (1926 – 113) இவ்விடத்தில் பழய அழிபாடுகளும் உரோம நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புவியல் வரைபட ஆசிரியரான கிரேக்கநாட்டின் தொலமியின் கருத்தை ஈர்த்த இவ்விடம் புகழ் பெற்று விளங்கியிருக்க வேண்டும் அதன் காரணமாக தொலமி இவ்விடத்தை தனது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார் எனலாம். இப்பிரதேசத்தின் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தினை நோக்கும் போது 15ம், 16ம் நூற்றாண்டில் எழுந்த "கோகிலசந்தேஸய" என்ற சிங்கள் "குயில்விடுதூது" பிரபந்தத்தில் 1450ல் கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் படையெடுத்த செம்பகப் பெருமாள் (சப்புமல்குமரய) படைகள் வந்தபாதை வழியாக குயில் பரந்து கல்முனையூடாக சென்றதாக கூறப்படுகின்றது. (பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்) இந்தவகையிலும் இவ்இடப்பெயர் சிறப்பிடம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சுண்ணாவில்**

பூநகரியில் இருந்து தெற்கே A32 17Km தூரத்தில் அமைந் துள்ளது. சுண்ணாவில் என்ற பெயருடன் குளம் ஒன்றும் உள்ளது. இக்குளத்தின் பெயராலேயே இப்பெயர் தோற்றம் பெற்றதாக கூறப்படுகின்றது. இங்கு 1983 கலவரத்துடன் மலையகத்தில் இருந்து வந்த மக்கள் குடியேறி விவசாயத்தில் ஈடுபட்டு வந்தார்கள். இப்பொழுது மீளக்குடியேற்றத்தின் பின்னர் அம்மக்களின் குடிகள் வேறு இடங்களில் பெயர்ந்துள்ளார்கள்.

- **கறுக்காய்த்தீவு**

இப்பிரதேசம் பூநகரிச் சந்தியில் இருந்து வடமேற்குப் பகுதியில் 08Km தூரத்தில் ஞானிமடத்துக்கு கிழக்குப்பகுதியில் அமைந்துள்ளது. இங்கு கறுக்காய்தீவு என கூறப்படுகின்றது. கமத்தொழிலே பெரும்பாலானர்வகளின் தொழிலாகும். பூநகரியின் மொட்டைக்கறுப்பன் அரிசி இங்குதான் அதிகமாக செய்கையாற்றப்படுகின்றது. ஒருசிறு பகுதியினர் கடற்றொழிலையும் மேற்கொள்கின்றனர். இங்கு 100 வருடங்களுக்கு முன்னர் தென்னஞ்சோலையாக இருந்ததாகவும் காணப்படுகின்றது. தீவு என்று கூறப்பட்டாலும் தீவாக இல்லாமல் நிலத்துடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. செட்டியகுறிச்சி கிராமஅலுவலர் பிரிவில் அமைந்துள்ளது. மேலும் இங்கு “கறுக்கா” என்னும் ஒருவகைமரம் நின்றதாக அதன் பெயரால் கறுக்காய்தீவு என்ற இடப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

- **ஞானிமடம்**

ஞானிமடம் பூநகரிச் சந்தியில் இருந்து உள்ளே 4Km தூரத்தில் அமைந்துள்ளது. இங்குநெடுந்தொலைவில் இருந்து செல்லும் பயனாளிகள் தரித்து நின்று களைப்பாறிச் செல்லும் வசதிகளுடன் மடங்கள் அமைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றத. அந்தவகையில் கச்சாய், நாகதேவன்துறை ஊடாகவரும் பயனாளிகள் இங்குள்ள மடங்களில் தங்கிச்சென்றதாக கூறப்படுகின்றது. அத்துடன் இம்மடங்களில் ஞானிகள் மடம் காலப்போக்கில் ஞானிமடம் என்று பெறப்பட்டு வழங்கப்படுவதாக கூறப்படுகின்றது.

- **கொல்லர்குறிச்சி**

கொல்லர்+குறிச்சி=கொல்லகுறிச்சி இப்பெயர் தொழில் நிலையப் பெயரால் அமைந்திருப்பதைக் காணலாம் ஆரம்பத்தில் இத்தொழில் நிலை பெற்றோர்களே குடியிருப்பதாக கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ➢ குறிஞ்சி ஈற்று இடப்பெயர்கள்

குறிஞ்சி ஈற்று இடப்பெயர்கள் அதிகமாக இங்கு இடம் பெற்றதற்குரிய இடப்பெயர் வழங்கப்பட்டுவருவதனைக் காணலாம். குறிஞ்சி, நலத்தூர் என்ற வழக்காறுகள் வரலாற்றுக் காலத்திலேயே இலக்கியவழக்குப் பெற்றவை. தொடக்க காலத்தில் குறிஞ்சி என்பது குறவர் குடியிருப்பை சுட்டுவதாக கூறப்பட்டாலும் பிற்காலத்தில் மற்றைய குலத்தோர் வாழும் சிற்றூர்களுக்கு குறிக்கப்பட்டன. ரா.பி.சேதுப்பிள்ளை (1906-6) குறிஞ்சி பெயருடைய இடப்பெயர்கள் குறிஞ்சி நாடாகிய சேரநாட்டிலேயே பெரிதும் வழக்கிலுள்ளன. எனவே குறிச்சியீறு அமையும் இடப்பெயர்கள் குறிஞ்சி நாடாகிய சேர நாட்டிலேயே தோற்றம் பெற்று பின் தமிழர் வாழும் பகுதியிலும் இடம்பெற்றதாயிற்று இது தென்மராட்சியிலும் பூநகரியிலும் மட்டுமே "குறிச்சி" என்ற தனிஊர்ப்பெயர்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

### ➢ செட்டியகுறிச்சி

இப்பெயர் பண்டைய காலத்தில் செட்டிநாடார் மற்றும் செட்டிகள் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. மேலும் அண்மைக் காலத்தில் வாழ்ந்தார்கள் பின்னர் குடிபெயர்ந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இக்கிராமம் ஞானிமடத்துக்கும் கறுக்காய்த்தீவுக்கும் இடையில் உள்ளது.

### ➢ சித்தங்குறிச்சி

சித்தன் குறிச்சி இக்கிராமம் பூநகரியின் வடக்காக 4Km தூரத்தில் ஞானிமடத்தில் மேற்காகவும் உள்ளது. சித்தன்+குறிச்சி= சித்தன்குறிச்சி இங்கு விஷ்ணுபுத்திர சித்தர்கள் வாழ்ந்ததால் சித்தன் குறிச்சி என வழங்கலாயிற்று மற்றும் சித்தன் என்ற தலைவன் ஒருவன் வாழ்ந்ததால் அவன் பெயரால் சித்தன்குறிச்சி என இவ்விடப்பெயர் வாழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது. காலப்போக்கில் இவ்விடப்பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

### ➢ மறவகுறிச்சி

மறவர்+குறிச்சி=மறவகுறிச்சி இப்பிரதேசத்தில் மறவர்கள் அதிகமாக வாழ்ந்ததால் மறவகுறிச்சி எனப் பெயர் பெற்றது. மேலும் வரலாற்று அடிப்படையில் கூறுவதாயின் நாகதேவன்துறையை ஆண்ட நாகதேவனின் சகோதரன் அன்னதேவன் நல்லூர் சாமிப்புலத்தில் தான்பெற்ற வயல் காணியில் இம்மறவர்களை குடியேற்றியதாகவும் கூறப்படுகின்றது. இதனால் இன்றும் அன்னதேவன் வயல் என்ற நாமம் இன்றும் வழங்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **மட்டுவில் நாடு**

நாடு என்பது இறமை கொண்ட ஒருபரந்த பகுதியைக் குறிக்கும் இச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் வழக்குப்பெற்று காணப்படுகின்றது. சோழர் காலத்தில் உள்ளூராட்சி முறைக்கு இடப்பட்ட பெயராக கருதப்படுகின்றது. சோழப் பேரரசின் ஆட்சியில் பூநகரிப் பிரதேசத்தையும் கைப்பற்றியதோடு தமது நடவடிக்கைக்குப் பயன்படுத்தியுள்ள பெயர்களே இன்று சான்று பகர்கின்றன. இம் மட்டுவில்நாடு என்ற இடப்பெயராகும். சோழர் காலத்து ஆட்சியில் ஆரியர் இட்ட இடப்பெயராக கூறப்படுகின்றது. இப்பிரதேசம் பூநகரிக்கும் பரமன்கிராய்க்கும் இடையிலுள்ள மருத நிலத்தூராகும். மட்டுவில்நாடு சோழர் ஆட்சிக்காலத்தில் அவர்களின் வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த இடமாக மட்டிவாழ் என்ற மட்டுவில்நாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது. இவ்விடத்தில் கட்டிடம் சிதைவுகளும் கிடைத்த நாணயங்களும் உறுதிப்படுத்தப்படுகின்றன. (ப.புஸ்பரட்ணம்-64) பூநகரிப் பிராந்தியத்தில் கடற்கரையை அண்டியுள்ள கிராமம் ஒன்று மட்டுவில்நாடு என அழைக்கப்பட்டு வருகின்றது. ஒருகிராமத்தை அல்லது ஓர் குறிச்சியை நாடு என அழைக்கும் மரபு சோழர் ஆட்சிகாலத்தில் பெருமளவு பின்பற்றப்பட்ட அம்சமாகும். இதை நோக்கும் போது சோழர் கல்வெட்டில் வரும் மட்டிவாழ் என்ற இடம் பூநகரி மட்டுவில் நாட்டையே குறித்ததெனக்காணலாம் என்கிறார் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்.

➢ **அத்தாய்**

அத்தாய் என்ற கிராமம் பூநகரிச் சந்தியில் இருந்து தென் கிழக்கே 5Km தூரத்தில் உள்ள கிராமமாகும். அத்து+ஆய்=அத்தாய் அத்தை என்பது கற்றாளைச் செடியைக் குறிப்பதாகும். அத்தா என்பது அன்னமுன்னாப் பழத்தைச் சுட்டும் போர்த்துக்கேயச் சொல் என்பதும் ஈண்டும் நோற்றத்தக்கது இவ்வாறு அத்தாய் என்பதற்கு கூறப்படும் பல்வேறு சொற்பொருள் விளக்கங்களும் இப்பெயர் தமிழிலிருந்து தோற்றம் பெற்றது என்பதை நிறுவுகின்றன. (1912) வயல்வெளிகள் நிறைந்த மருத நிலத்து ஊராகும் முற்றாக சைவமக்களால் நிறைந்து காணப்பட்டது. இவ்வூரில் தற்பொழுது மக்கள் குறைந்தளவில் குடியிருக்கின்றனர்.

➢ **பள்ளிக்குடா**

இப்பிரதேசம் பூநகரிச் சந்தியிலிருந்து தென்மேற்கே 4Km தூரத்தில் அமைந்துள்ளது பெரும்பாலும் கடற்றொழில் செய்வோரை கொண்ட மீனவக் கிராமம் ஆகும் பல்+இ=பள்ளி ஒரு அடிச்சொல்லினின்றும் பிறந்தவையாகும். சங்க இலக்கியங்களிலும் அகத்தியன் பள்ளி, காட்டுப்பள்ளி, நண்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான தமிழ்ப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் பள்ளி என்பது இடம், சிற்றூர் இடைச்சேரி, நகரம், முனிவராச்சிரமம், சைன, புத்தமதக்கோயில், வேலைக்களம், மக்கட்படுக்கை, தூக்கம் முதலியவற்றைக் குறித்து நிற்கிறது தமிழகத்தில் பள்ளி ஈற்றுப் பெயர்கள் பெரிதும் காணப்பட்ட போதிலும் ஈழத்தில் இலங்கைப் பெயர்கள் மிக அரிதாகவே காணப்படுகிறது. ஒன்று பள்ளிக்குடா மற்றையது பச்சிலைப்பள்ளி என்பவையாகும். மேலும் பள்ளிக்குடா என்பதை இங்கு முஸ்லீம் மக்களின் பள்ளி இருந்தால் பள்ளி என்ற சொல்லும் இப்பிரதேசம் குடா என்ற பெயர் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகினறது. இங்கு பள்ளிவாசல் வணக்கத்தலம் இருந்ததால் பள்ளிக்குடா என்ற இடப்பெயர் வந்ததாக கூறப்படுகின்றது. இருப்பினும் பல்லவர் காலத்தில் பள்ளிக்குடா என்ற இடப்பெயர் வந்ததாக கூறப்படுகின்றது. இருப்பினும் பல்லவர் காலத்தில் பிளக்கத்தில் உள்ள பெயராக பல்லவர்குடா என அழைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அது மருவி பள்ளிக்குடா என வழங்கப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

➢ **பொன்னாவெளி**

பொன்+ஆ+வெளி=பொன்னாவெளி பசுமந்தைகள் மேயும் புல்வெளிகள் நிறைந்த இடம் என விளக்கம் கூறப்படுகின்றது. இப்பிரதேசம் பல்லவராயன்கட்டுச் சந்தியிலிருந்து மேற்கே வேரவில் வரையும் 12Km சென்று வேரவிலில் இருந்து வடக்கே 5Km சென்றால் இருக்கும் பிரதேசமாகும் பூநகரியின் மிக முக்கிய கிராமங்களில் ஒன்று பொன்னாவெளியாகும். இது பண்டைக்காலத்திலிருந்து சைவ உடையார்கள் எனும் சமூகத்தவர்கள் வாழ்ந்து வந்த வராலாற்று சிறப்பு மிக்க பழம் பெரும் பிரதேசம் . இங்கு வரலாற்று சிறப்பு மிக்க திருவெண்ணை சிவன் ஆலயம், விநாயகர் ஆலயம். கண்ணகை ஆலயம் முதலியன இப்பிரதேசத்தின் பிரதான சான்றாதாரங்களாகும். இங்கு சுண்ணாம்பு கற்களில் கட்டப்பெற்ற வீடுகள் ஆலயங்கள் இன்றும் சான்றுபகிர்கின்றன. இப்பகுதி பூர்வீக குடியிருப்பிடம் என்றும் கூறப்படுகின்றது. இங்கு பசுக்கூட்டம் பெருமளவில் காணப்பட்டன. கிளிநொச்சி கல்விவலயத்தில் முதலாவது பாடசாலையாக விளங்குகிறது. 1886ம் ஆண்டு இப்பாடசாலை அறுமுகநாவலர் ஆரம்பித்ததாகவும் கூறப்படுகின்றது. இங்கு குடியிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் கற்றறிந்த பெரியோர்களாக விளங்குகின்றனர். மேலும் அரசபுரத்தில் கோட்டை அமைத்து ஆட்சி செலுத்திய அல்லிராணியின் மருமகன் "பொன்னன்" இவ்வெளியை ஆட்சி செய்ததால் பொன்னனின் பெயரால் பொன்னன்வெளி என்பது காலப்போக்கில் பொன்னாவெளி என இவ் இடப்பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது. இன்று இப்பிரதேசத்தின் மக்களின் குடியகன்று மக்களற்ற சூனியப்பிரதேசமாகக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ➢ சாமிப்புலம்

புலம் என்பது திராவிட மொழிச்சொல்லாகும். இச்சொல் தமிழில் புல்+அம்=புலம் எனக் கூறப்படுகின்றது. புலம் என்றால் இலைகளால் வேயப்பட்ட குடிசைகளையுடைய ஊர் எனவும் பொருள் இங்கு சன்னியாசிகள் எனப்படும் சைவச்சாமிகள் குடிசைகள் அமைத்து குடியிருந்ததாகவும் இது நாளடைவில் சாமிகள் புலம் என்று அழைக்கப்பட்டு பின்னாளில் சாமிப்புலம் எனப்படுகின்றது. இக்கிராமம் பூநகரி பரந்தன் வீதி 13km தூரத்தில் அமைந்துள்ளது. மருதநிலத்தூராகிய இவ்வூரில் நெற்பயிர்ச் செய்கையே பெருமளவாக விளையக்கூடிய பிரதேசமாகும். நெல் அதிகமாக விளைவதால் புலம் என்பதற்கு விடியற்காலையில் உழவன் செல்லிபுலம் ஆதலால் அது காரணப்பெயராகவும் அமையலாம் எனப்படுகின்றது. இப்பிரதேசம் பூநகரிச் சந்தியில் இருந்து கிழக்காக நல்லூரை அடுத்து காணப்படும் பழமைபெரும் கிராமமாகும். இப்பிரதேசம் நாகதேவனின் தம்பி அன்னதேவனின் ஆட்சிப்பிரதேசமாக இருந்ததாக கூறப்படுகின்றது.

### ➢ தம்பிராய்

இப்பிரதேசம் பூநகரிச் சந்தியில் இருந்து கிழக்கே 4Km தூரத்தில் உள்ளது. பராய் என்பது ஒருவகை மரம் தவீது இக்கொல்லுக்கு வருமாறு மூலம் காண்கின்றார். பர =பரவுதல் (சுமேரியன்) விரித்தல், பரபு (தமிழ்) =பரவுதல் (தவீது : 1இல் 30) பராய் என்பது Paper tree என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் என்கிறார். இங்கு பராய் மரங்கள் நிறைய நின்றதாகவும் ஒவ்வொன்றும் தம்மால் வளைத்துப்பிடிக்க முடியாத தம்மடக்கிப்பிடிக்க முடியாத பெரிய அச்சா மரங்கள் காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த பராய் மரங்களை இங்கு வாழ்ந்த மக்கள் தம்மால் தம்மடக்கி சுற்றில் இரண்டு கையால் பிடிக்க முடியாத பெரியமரங்களாக இருந்ததால் காலப்போக்கில் தம்பிராய் ஆக அழைக்கப்பட்டு பின்னாளில் மருவி தம்பிராய் என வழங்கப்படுகின்றது.

### ➢ ஆலங்கேணி

இக்கிராமம் பூநகரிச் சந்தியில் இருந்து கிழக்கே 8Km தூரத்தில் பரந்தன் பூநகரி வீதியில் அமைந்துள்ளது. இங்கு ஆலமரங்கள் நிறைந்து காணப்படுகின்றது. அத்துடன் துரவுகள் எனப்படும் கேணிகள் நிறைய காணப்படுகின்றது. இதனால் ஆலங்கேணி எனும் இடப்பெயர் காணப்படுகின்றது. தோட்டச் செய்கைக்காக மாடுகள், ஆடுகள் முதலிய வளர்ப்பு மிருகங்களின் தேவைக்காக வெட்டப்பட்ட துரவுகள், கேணிகள் இங்கு அதிகமாக இருந்துள்ளன. இன்றும் தூர்ந்த நிலையில் கேணிகள் காணப்படுகின்றன. அத்துடன் இப்பிரதேசத்துக்கும் ஆரியம் பொந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்துக்கும் இடையிலேயே வடக்காக உப்பு விளையும் உப்பளம் காணப்படுகின்றது. இங்கு வருடா வருடம் பெருந்தொகையான உப்பு விளைச்சல் பெற்றிருப்பதைக் காணலாம்.

➢ **மண்ணித்தலை**

இப்பிரதேசம் பூநகரியில் இருந்து மேற்கே 16km தூரத்தில் வினாசியோடைக்கும் கல்முனைக்கும் இடையேயுள்ள பழம் பெரும் பூர்வீகக் கிராமமாகும். மணல் மேடுகளை தலையாகக் கொண்டு மணல் மலைகளே வியாபித்து இருப்பதால் இக்கிராமத்தை மணல் மலை என்று வழங்கி வந்ததாகவும் அது மருவி இன்று மண்ணித்தலை என்று வழங்கி வருகின்றது. இங்கே சோழர் காலத்தில் கட்டிடக்கலை அம்சங்களுடன் கூடிய சிவாலயம் ஒன்று காணப்படுகின்றது. மண்மலையும் பனந்தோப்புக்களும் நாவல் மரங்களும் சூழ்ந்திருக்கும் இப்பிரதேசத்தில் மண்ணுள் புதையுண்டு இருப்பினும் இடிந்த நிலையில் குறிப்பிட்ட எச்சங்களுடன் காணப்படுகின்றது. மண்ணித்தலையின் மகிமை மணல் மலையுடன் கூடிய சிவாலயமாகும். இருப்பினும் 2000 வருடங்களுக்கு முற்பட்ட தொல்பொருள் ஆதாரங்கள் காணப்படுவதாக பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார்.

➢ **வினாசியோடை**

வினாசியோடை இக்கிராமம் பூநகரியில் இருந்தும் மேற்கே 14Km தூரத்தில் கௌதாரி முனைக்கும் மண்ணித்தலைக்கும் இடைப்பட்ட பிரதேசமாகும். இங்கும் மண்மலைகள் தலை தூக்கியிருப்பதைக் காணலாம். இக்கிராமம் வினாசி என்பவரின் காணியாகக் காணப்பட்டதாகவும் பின் இக்கிராமம் அவரின் பெயரால் வினாசியரின் ஓடை என வழங்கப்பட்டு வந்ததாகவும் அது மருவி வினாசியோடை என இவ்விடப்பெயர் வழங்கிவருவதாகவும் கூறப்படுகின்றது. இங்கும் மண்மலைகளும், பனந்தோப்புகளும், நாவல் மரங்களும் பரவலாகக் காணப்படுகின்றது.

➢ **கௌதாரிமுனை**

இக்கிராமம் பூநகரிச் சந்ததியிலிருந்து மேற்கே 12Km தூரத்தில் உள்ளது. இங்கு மண்மலைகள் குறைந்திருந்திருந்தாலும் பனஞ்சோலையும் நாவற்காட்டுடன் பற்றைக்காடும் பரந்து காணப்படுகின்றது. இங்கு "கௌதாரி" எனும் பறவை அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் முனையாகக் காணப்படும் இந்நிலப்பரப்பில் கௌதாரிகள் அதிகமாகக் காணப்படுவதால் கௌதாரி முனை என வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மண்ணித்திலைக்கு தெற்கே கௌதாரி முனையில் 1882 காலப் பகுதிக்குரிய புராதன பிள்ளையார் ஆலயம் ஒன்று காணப்படுகின்றது.

### ➢ கரியாலை நாகபடுவான்

இக்கிராமம் ஜெயபுரத்துக்கு தெற்குப்பகுதியிலும் பல்லவராயன்கட்டுக்கு தென்மேற்கிலும் முழங்காவிலுக்கு வடக்குப் பகுதிக்கும் இடையில் அமைந்துள்ள பகுதியாகும். இங்கு இரண்டு கிராமங்கள் இணைந்த இணைப்பேயாகும். கரியாலை, நாகபடுவான் இரண்டும் இணைந்து கரியாலைநாகபடுவான் என வழங்குகின்றது. கரியாலை என்று கரியநிறமுள்ள யானைகள் பெருமளவில் இங்கு வந்து போவதால் கரியானை மருவி கரியாலை என வழங்கிற்று என்றும் நாகபடுவான் என்பது நாக வழிபாடு தொன்று தொட்டு வணக்க முறை இருப்பதாலும் இங்கு நாகபாம்புகள் படுக்கையாக பெருமளவில் தரித்து இருப்பதால் நாகம் படுப்பான் என்பது மருவி காலப்போக்கில் நாகபடுவான் என வழங்கலாயிற்று எனக்கூறப்படுகின்றது. இங்குள்ள ஆதிப்பழங்குடிகளான நாகர்கள் பல்லாண்டுகாலம் ஆட்சிசெய்து வாழ்ந்து வந்ததால் “நாகவூர்” என இருந்த பெயர் கால ஓட்டத்தில் நாகபடுவான் என இவ்விடப்பெயர் வழங்கப்பட்டதாகவும் பின்னர் கரியாலை, நாகபடுவான் இரண்டும் இணைந்து கரியாலைநாகபடுவான் என வழங்கப்பட்டுவருகின்றது.

### ➢ ஜெயபுரம்

இப்பிரதேசம் பூநகரி பிரதேசத்தில் இருந்து தெற்கு நோக்கி A32 பாதையில் 23Km தூரத்தில் மன்னார் வீதியின் கிழக்கு நோக்கிய பகுதியும் அமைந்துள்ளது. இக்கிராமம் 1983 ஆம் ஆண்டு யூலைக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழருக்காக அன்றைய உதவி அரசாங்க அதிபர் ஜெகநாதனால் உருவாக்கப்பட்டதாகும். உதவி அரசாங்க அதிபரின் பெயரால் ஜெகபுரம் நாளடைவில் ஜெயபுரம் என வழக்கில் வழங்கி வருகின்றது.

### ➢ நாச்சிக்குடா

இக்கிராமம் பூநகரிச் சந்தியில் இருந்து A32 வீதியில் தெற்க நோக்கி 27Km தூரத்தில் 1Km சென்றால் வருவது இக்கிராமம் ஆகும். இப்பிரதேசம் பாரம்பரிய தமிழர் பிரதேசமாக இருந்தாலும் கடந்த சுமார் 150 ஆண்டுகளான முஸ்லீம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் நாச்சியார் என்ற கப்பல் வந்தடைந்ததாகவும் அக்கப்பலின் பெயரால் நாச்சியார் குடா என வழங்கி வந்த பெயர் காலப்போக்கில் மருவி நாச்சிக்குடா என வழக்கத்தில் உள்ளதாக கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **குழிழமுனை**

இப்பிரதேசம் பூநகரிச் சந்தியில் இருந்து தெற்கு நோக்கி A32 வீதியில் 27Km தூரத்தில் இருந்து நாச்சிக்குடாச் சந்தியில் மற்றும் 19ஆம் கட்டைச் சந்திக்கு முறையே வடமேற்கிலும் மேற்கிலும் உள்ளது. இங்கு குமிழமரங்கள் பெருவாரியாக இருந்ததாலும் இதன் தரைத்தோற்றம் கடலுக்குள் முனைவாக இருப்பதாலும் குமிழமுனை என்பது மருவி குமிழமுனை என்று இவ் இடப்பெயர் வழங்கி வருகின்றது. இங்கு பழமை வாய்ந்த அம்மன் கோயிலும், விநாயகர் ஆலயமும், கிறிஸ்தவ தேவாலயமும் காணப்படுகின்றது.

➢ **நொச்சிமுனை**

இப்பகுதி குமிழமுனைக்கு மேற்கே காணப்படுகின்றது. இங்கு நொச்சி மரங்கள் அதிகமாகக் காணப்படுவதால் நொச்சி முனை என்று வழங்கப்படுகின்றது.

➢ **இரணைதீவு**

பூநகரி பிரதேசத்தின் கிராமங்களில் மக்கள் குடியிருந்த தீவு இரணைதீவாகும். இத்தீவு நாச்சிக்குடாவின் தென்மேற்கே உள்ள இரண்டு தீவுகளின் இணைப்பாகும். நாச்சிக்குடாவில் இருந்து 12 கடல்மைல் தொலைவில் உள்ள மீனவ மக்களைக் கொண்ட தீவாகும். இரண்டு தீவுகள் இணைந்திருப்பதால் இரணைதீவு என கூறப்படுகின்றது. குருதீபம் என அழைக்கப்படும் இவ் இரணைதீவு மக்கள் கடற்றொழிலை பரம்பரைத் தொழிலாகக் கொண்டிருக்கும் மக்களனைவரும் பண்டைய பரவர் மரபுகளை இன்றும் கட்டிக் காப்பவர்களாக திகழ்ந்து வருகின்றனர்.

கடலாடும் திறனும் கடற்றொழில் பற்றும் உடல் பற்றிய அறிவும் அனுபவமும் திருப்பவனிகளில் மீன் கொடிக்கு கொடுக்கும் அக்கறையும் கல்லறைகளில், தோணிகளில், வீடுகளில்,வள்ளங்களில், மீன்கொடியைப் பொறிக்கும் வழமையும் போரினால் தாக்கப்பட்டாலும் பாண்டிய இராட்சியத்தின் பரம்பரைச் சொத்தான குருகுலப்பரவர் கொடி மீன் கொடியை இன்றும் ஏற்றியும் போற்றியும் வருகின்றனர். இரணைதீவு ஏனைய கடற் தொழிலாளர்களுக்கும் கடலோடிகளுக்கும் தஞ்சம் கொடுப்பதால் உபசாரத்தீவு என்றும் அழைப்பர். இந்திய அரசர்களின் ஆட்சியிலும் அந்நியரின் ஆட்சியிலும் குதிரைகள் இங்கு கட்டி வளர்க்கப்பட்டதால் "குதிரைத்தீவு" (பேரித்தீவு) என்றும் அழைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இத்தீவிற்கு அரேபிய நாடுகளில் இருந்து வரும் பறவைகள் குளிர்காலங்களில் இங்கு வந்து தங்குவதுண்டு இங்கு இப்பறவைகளை கண்ணி (வலை) வைத்துப் பிடிப்பார்கள். இதனால் இத்தீவை கண்ணித்தீவு என்றும் கூறுவர். இது மூப்பர் இராசேந்திரப் பெரியாரின் வாய் மொழிச் செய்தியாகும்.

இங்கு ஆமைகள் வளர்ப்பதாலும் தீவின் மேற்குப் புறத்தில் ஆமைகள் முட்டையிட்டு குஞ்சுகள் பொரித்து கூட்டிச்செல்லும் இதனால் ஆமைத்தீவு என்று அழைப்பர். இதனை மூப்பர் அமிர்தநாதன் அவர்களின் வாய்மொழிச் செய்தியாகும். மேலும் "வள்ளித்தீவு, விழாத்தீவு, மீன்தீவு, சீனத்தீவு, பட்டித்தீவு, பாண்டியன்தீவு, உல்லாசத்தீவு, சீதைத்தீவு, குருகுல அன்னத்தீவு" என இத்தீவின் இடப்பெயர் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் இரணைதீவு என்று அழைக்கப்பட்டாலும் இங்கு மூன்று தீவுகள் காணப்படுகின்றது. தூரத்தில் இருந்து பார்த்தால் இரட்டைத்தீவு போல் சின்னத்தீவும் பெரியதீவும் தோற்றமளிக்கும் சின்னத்தீவுக்கும், பெரியதீவுக்கும் இடையே உள்ள கிழக்குத்தீவு தெரிவதில்லை. அதனால் மூன்று தீவுகளுக்கும் இரணைதீவு என்றே (ஒல்லாந்தர் காலத்தில்) பெயரிட்டனர். (Twin Island)

- **வலைப்பாடு**

இக்கிராமம் பூநகரியில் இருந்து தெற்குநோக்கி A32 வீதியில் இருந்து 23Km தூரம் சென்று பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து மேற்குநோக்கி 8Km வேரவிலை அடுத்து 10Km தூரத்தில் வரும் மீனவர் கிராமம் வலைப்பாடு ஆகும். வலை + பாடு = வலைப்பாடு. இங்கு கடற்றொழிலை பாடு என்று கூறுவர். இவர்கள் இப்பிரதேசத்தில் தொழில் நிமித்தம் வலை பாய்ந்து பின்னர் அதனை பார்த்து வருவதற்காக "பாடு" செல்வார்கள். அதனால் வலையை பாடுபார்க்கச்செல்வதால் வலை, பாடு இரண்டு சொற்களும் இணைந்து வலைப்பாடு என்று வழங்கி வருவதாகக் கூறுகின்றார்கள். நெய்தல் நிலமாகிய வலைப்பாடு கிராமம் நூறு சதவீதம் கத்தோலிக்கர்களையும் கடற்றொழிலையும் கொண்டது. "இரணைதீவு" வலைப்பாடு போன்ற கிராமங்களில் வசிப்போரின் மூதாதையர் பரவர்குடி (புலையர்குடி) பகுதியில் இருந்து குடியேறியதற்கு சான்றுகள் உள்ளன. இவர்களுக்கும் இரணைதீவு குடிமக்களுக்கும் நெருங்கிய தொடர்பும் உறவும் இருக்கினறன. தற்பொழுது இவ்விடத்தில் மக்கள் குடியிருப்புக்கள் காணப்படாவிட்டாலும் இங்குள்ள புளியன் துறைமுக அழிபாடுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் செறிவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் குடியிருப்புக்கள் இருந்ததற்குரிய சான்றுபகர்கின்றன. (ரோசிரியர் புஸ்பரட்ணம் - பூநகரி தொல்பொருள் ஆய்வு பக்கம் 67, படம் 47)

### ➢ கிராஞ்சி

இக்கிராமம் பல்லவராயன்கட்டு சந்தியில் இருந்து நேர் மேற்கே 8Km தூரத்தில் உள்ளது. தென்சோலையும் பனந்தோப்பும் நிறைந்து காணப்படும். பலவகைத் தொழிலைக் கொண்ட மக்கள் வாழும் கிராமமாகும். இங்கு "கிரஞ்சி" என்ற மரம் பெருவாரியாகக் காணப்பட்டதாகவும் இதனால் கிரஞ்சி என்று அழைத்தனர். பின்னர் காலப்போக்கில் "கிராஞ்சி" என்று இவ் இடப்பெயர் வழக்கில் வழங்கி வருவதாக கூறுகின்றார்கள். இம்மக்கள் கடற்றொழில், சீவல், விவசாயம், வியாபாரம், பன்னவேலை முதலிய தொழில்களைச் செய்வார்கள்.

### ➢ நாகமுனை

இம்முனை வலைப்பாட்டுக்கு மேற்குப் பகுதியில் வலைப்பாட்டுக்கும் கீரிக்குடாவுக்கும் இடையில் உள்ளது இங்கு வரலாற்றுக் காலத்தில் வந்திங்கு வாழ்ந்ததாகவும் இங்கு நாகவழிபாடு இருந்ததாகவும் இதனால் நாகமுனை எனப்பெயர் கொண்டது எனக்கூறப்பட்டது. மேலும் கூறுவதாயின் நாகர்கள் ஆட்சி செய்த வரலாற்றுப் படிமங்களாக இன்றும் முருகைக்கற்களாலும் செங்கற்களாலும் கொண்ட துறைமுகம் கட்டிட அமைப்பு முதலியன இன்றும் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

### ➢ எருமைதீவு

இத்தீவு மக்களற்ற பற்றைக் காடுகளைக் கொண்டது. இத்தீவு வலைப்பாட்டுக்கு தெற்கே கடற்தீவாக உள்ளது. எருமை படுத்திருப்பது போன்று இருப்பதால் இதனை எருமைத்தீவு என்பார்கள்.

### ➢ பரமங்கிராய்

பரமங்கிராய் பூநகரிச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கி பூநகரிச் சங்குப்பிட்டி வீதியில் 6Km தூரத்தில் அமைந்துள்ளது. இங்கு பரமன்கிராய் என்ற இடம் கிராய் மரங்கள் இருந்ததாலும் உருவாகியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. மேலும் பரமன் என்பது சிவனின் நாமத்தால் ஏற்பட்டதென்பர் இங்கு பரமன் எனும் நாமத்தால் சிவ ஆலயம் இருந்ததாகவும் அந்த நாமத்தின் அடிப்படையில் பரமங்கிராய் என இவ் இடப்பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ➢ செம்மங்குன்று

செம்மன் குன்று A32 வீதியில் பூநகரிச் சந்தியில் இருந்து 8மு அ தூரத்தில் அமைந்தள்ளது இக்கிராமம் செம்மண் குன்றுகளால் பரவலாகக் காணப்பட்ட தரைத்தோற்றத்தைக் கொண்டதாகவும் அதனால் செம்மண் குன்றுகளால் பரவலாகக் காணப்பட்ட தரைத்தோற்றத்தைக் கொண்டதாகவும் அதனால் செம்மண்குன்று என்றுஅழைக்கப்பட்டதாகவும் நாளடைவில் அப் பெயர் மருவி செம்மபங்குன்று என இடப்பெயர் வழங்கி வருவதாகவும் கூறப்படுகின்றது.

### ➢ பல்லாய்

இக்கிராமம் பூநகரிச் சந்தியில் இருந்து தெற்கே A32 வீதியில் சென்று செம்பன்குன்று கிராமத்தின் கிழக்கெல்லையில் அமைந்துள்ள பாரம்பரிய அம்சங்களைக் கொண்ட கிராமம், இங்கு குளம் ஒன்றும் உள்ளது. இப்பிரதேசம் பல்லவர் காலத்தில் ஆட்சிக்குட்பட்டிருந்ததாக இதனால் இதன் பெயர் பல்லாய் என்றும் பல்லாய்க்குளம் என்றும் பெயர் பெற்றதாக பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார்.

### ➢ பள்ளகட்டுவான்

இக்கிராமம் பூநகரிச் சந்திக்கு தென்மேற்கே 4ஆம் கட்டைக்கு கிழக்குப் பகுதியில் அத்தாய் கிராமத்துக்கு தெற்கு எல்லையில் உள்ள பழம்பெரும் கிராமமாகும். இக்கிராமம் பள்ளமான பிரதேசமானதாகப் பள்ளங்களைை மறித்துப் பயிர் செய்து செல்வம் பெருக்கியதாக கூறப்படுகின்றது. மேலும் படலை கட்டுவான் என்ற பெயர் வரலாற்றுக் காலத்தில் இருந்ததாகவும் காலப்போக்கில் பள்ளகட்டுவான் என வருவதாகவும் கூறுகிறார்கள். அத்துடன் இக்கிராமம் பல்லவரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்ட காரணத்தால் பல்லவராயன்கட்டு பள்ளகட்டுவான் என்று பெயர் பெற்றிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அந்த வகையிலேயே பள்ளகட்டுவான் என இவ் இடப்பெயர் வழங்கப்பட்டு வருகின்றது.

### ➢ தியாகம் (தியாகசூளம்)

இக்கிராமம் பூநகரிப் பரந்தன் வீதியில் நல்லூாரின் தென்கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. இப்பெயர் சோழமன்னர் ஆட்சிக்காலத்தில் சிறப்புப்பெற்றிருக்கலாம். என்று பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தனது பூநகரி தொல்பொருள் ஆய்வில் குறிப்பிடுகின்றனர். தியாக சமுத்திரம், தியாக ஏரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாக குளம் என்பன சோழராட்சியில் தமிழ்நாட்டில் இருந்ததாகவும் அப்பெயர் இங்கும் வந்திருக்கிறது என்று கூறுகின்றார். அந்த வகையில் தியாக குளம் எனும் இடம் பெயர் ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

➢ **இலவன்குடா (ஈழவன் குடா)**

இப்பிரதேசம் கிராஞ்சியின் தென்கிழக்கு எல்லையில் உள்ளது. இக்குடாக்கடல் தொழிலுக்கு மிக வாய்ப்பாக உள்ளது. இவ்விடம் ஈழவூரின் தொடர்புடன் உள்ளதாகவும் பல்லவர் ஆட்சிக்காலத்தில் இவ் இடப்பெயர் உருவாகியதாகவும் கூறப்படுகின்றது. ஈழவூரின் கிழக்கே உள்ளதால் இரண்டு கிராமங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஈழவன்குடா நாளடைவில் மருவி இலவன்குடா என இடப்பெயர் வழங்கப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

**இடப்பெயர் ஆய்வு முடிவுரை**

பூநகரிப் பிரதேசத்தின் இடப்பெயர்களின் விளக்கங்கள் பற்றி வரலாறு, மொழி, பண்பாடு நாட்டார் வழக்கியல் முதலியவற்றின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. இடப்பெயர்கள் அனைத்தும் இயற்கை நிலைப்பெயர்கள், செயற்கை நிலைப்பெயர்கள் என இருபெரும் பிரிவுகளாக பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் இப்பெயர்கள் மரம், செடிகள், விலங்கு, பறவை,தெய்வம், மானுடம், ஊராட்சி, குடியிருப்பு, நிலப்பயன்பாடு, நிலவியல்பு, நீர், நிலம், முதலியவற்றின் கூறுகளுடன் இணைத்து பெயராக்கம் பெற்றுள்ளமை நன்கு விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெரும் பிரிவின் கீழும் இடபெறும் துணைப்பகுதிகளில் அமைந்துள்ள அனைத்துப் பெயர்களும் விரிவாக புதுப்புது விளக்கங்கங்களுடன் அணுகியாராயப்பட்டுள்ளன.

இயற்கை நியதிகளுக்கு ஆளனி இயற்கை வளங்களையே தம் வாழ்நாள் துணையாக்கிக் கொண்ட பண்டைக்கால மனித இனங்கள் இயற்கை வளம் செறிந்த இடங்களையே தமது குடியிருப்புக்களாக ஆக்கிக் கொண்டன. உலகின் மூத்த நாகரிகங்களும் அவ்வாறே ஆற்றங்கரைகளில் குடியேற்றங்களைக் கொண்டன. அதன் நிலையிலேயே வளர்ச்சி பெற்றனவாகும். பண்டைய மனிதர் தம் வாழ்வை வளமாக்கிக்கொள்ள முனைந்த போது நீர்நிலைகளைத் தேடி குடியேறிய போது அங்குள்ள ஆறு, குளம், மரம், செடி, நதி, தானியம் முதலான இயற்கை நிலை பெயர்களையே முன்னெட்டாக அல்லது பின்னெட்டாக வைத்து தாம் வாழ்ந்த இடங்களுக்கும் பெயர் வழங்கலாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து வரலாற்று நூல்கள் பலவும் நாகர்கள் பற்றிய செய்திகளுடனே தொடரப்படுகின்றன. கி.மு 6ம் நூற்றாண்டிலே இலங்கையின் மேற்குக்கரையில் வல்லமை வாய்ந்த அரசுகளாக நிலைபெற்றன. அதனாலேயே வட இலங்கையில் பூநகரியில் நாகபடுவான், நாகமுனை ஆகிய இடங்களில் பழங்குடிமக்களாகிய நாகர்கள் வாழந்ததற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அதன் அடிப்டையிலேயே இவர்கள் நாமங்கொண்ட இடப்பெயர் நாகபடுவான் என்று வழங்கி வருகின்றது.

நாகபடுவான் பிரதேசத்தில் நாகர்களின் பூர்வீக குடியிருப்புக் களின் அடையாளங்கள் அரச ஆட்சி செய்த கட்டிட படிமங்கள் இன்றும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. அத்துடன் நாகமுனை என்னும் கரையோர முனைப்பகுதி கிராமத்தில் துறைமுக இடிபாடுகளும் கோட்டை கொத்தளங்கள் இருந்த இடங்களும் குளங்களும், நீச்சல்தடாகங்களும் தூர்ந்த நிலையில் காணப்படுகின்றன. தொல்பொருள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் போது மேலும் பல உண்மைகள் வெளிக்கொணரப்படலாம். இவை மண்ணோடு மண்ணாக அந்நியரால் அழிவு ஏற்படுத்துவதற்கு முன் புதைபொருள் ஆராட்சி மேற்கொள்ளும் பொழுது ஆதிக்குடிமக்களாகிய நாகர்களின் வாழ்வியல் கலாச்சாரம் வெளிப்படும் என்பது புலனாகின்றது.

இதே போன்று வீரபாண்டிய முனை, பல்லவராயன்கட்டு, பேய்முனை, ஈழவூர், ஈழவன்குடா, புலையர் குடா, மட்டுவில்நாடு, பறையர்குளம், பொன்னாவெளி, பறையர்காடு, பாலாவி, அரசபுரம், பத்தினிப்பாய், நல்லூர், தியாகம், பரமன்கிராய், ஆவரம்சாட்டி, நாகதேவன்துறை, அன்னதேவன் வயல், குதிரைகட்டின தீவு, பூவாளி, செம்பன்குன்று முதலிய இடங்கள் தொல்பொருள் ஆய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். அப்பொழுது தான் இடப்பெயர்களின் முதன்மையையும் பூர்வீகத்தையும் தமிழர் பாரம்பரியத்தின் பழமையையும் உலகிற்கு வெளிப்படுத்த முடியும். மண்ணித்தலை கிராமத்தின் ஆய்வு பல உண்மைகளை வெளிப்படுத்தி நிற்பது போல மேற்படி கிராமங்களை ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவையை எதிர்பார்த்து இப்பிரதேசம் காத்திருக்கின்றது.

இவ் ஆய்வின் மூலம் தமிழகத்துக்கும் ஈழத்தின் பூநகரிக்கும் இடையே உள்ள உறவு பண்டைக்காலம் முதல் இருந்து வந்துள்ளது என்பதும் தமிழகத்தில் இருந்து வந்து குடியேறி தத்தம் இடப்பெயர்களை குடிபெயர்ந்து வாழ்ந்த இடங்களுக்கு இட்டு வழங்கினர் என்பதும் அறியப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம், பெயர் ஒற்றுமை உடையதாகக் காணப்படும் இருநாட்டு மக்களுடைய கலை பண்பாடு நடவடிக்கைகள், குடும்பஉறவுகள் என்பன மேலும் ஆய்வுக்குரியனவாகும். இவ் ஆய்வு சமூக வரலாற்றுச் செய்திகளை ஆய்வின் மூலம் பெறப்பட்டதாகும்.

இடப்பெயராய்வில் மொழிநிலையை நோக்கும் போது இப் பெயராக்கத்தில் ஒருவரையான முறையில் மொழி கையாளப்பட்டுள்ளன. இயற்கையின் விடயங்களை செயற்கைக்கூறு என்ற வாய்ப்பாட்டு அடிப்படையில் இடத்தின் முதன்மை நோக்கில் பெயர்க்கூறுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பெயர்கள் ஆழ்ந்து நோக்கும் போது இப்பகுதியின் மொழிவழக்கு இப்பெயர்களிலிலேயே பதிவாகி இருத்தலைக் கண்டுகொள்ளலாம். மொழியின் வழமான சொல்லாட்சிகளால் இடப்பெயர்கள் ஆக்கம் பெற்றது. கால ஓட்டத்தில் அவை எவ்வாறு ஒலிமாற்றம் பெற்றன என்பதனையும் காணலாம்.

மேற்படி விடயத்தை மொழியியலாளர் ஆய்வு மேற் கொள்பவராயின் பேச்சு வழக்கு அடிப்படையிலான மொழி வரலாற்று உண்மைகள் இப் பெயர்களின் வழியாக அறிந்து கொள்ள வாய்ப்புக்கள் உண்டு. பூநகரியில் தளம் அமைத்துக் கொண்டு பண்டைநாளில் பழங்குடியிருப்புக்களும், அரசுகளும் நிலைபெற்றிருந்தன என்பதற்குரிய தரவுகள் இவ் ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதே வேளையில் அச்சுற்றாடல்களில் அமைந்த இடப்பெயர்கள் தூய தமிழ்ப்பெயர்களாக அமைந்துள்ளதையும் அறியப்பட்டுள்ளது. இந்த வகையில் ஈழவூர், ஈழவன்குடா முதலிய இடங்களின் தொன்மையும் பழமையும் பெருமை சேர்த்த சங்கப்புலவரான ஈழத்துப் பூதந்தேவனார் ஈழவூரில் இருந்தே இந்தியா சென்று முதல்த் தமிழ்ச்சங்கத்தில் அங்கம் வகித்த புலவராக இருந்துள்ளார் என்பது வரலாற்று ஆசிரியர்கள் பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். இதனையே பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்களும் குறிப்பிட்டுள்ளார். (பக்கம் 40) அந்த வகையில் நோக்கும் போது "ஈழம்" என்ற நாமம் இலங்கையில் இப்பெயர் பெறுவதற்கு பூநகரியின் ஈழவூர், ஈழவன்குடா முதலான இடப்பெயர்கள் காரணமாக இருந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறு இடப்பெயராய்வு என்ற ஆய்வாளரின் கன்னி முயற்சியாக மேற்கொள்ளப்பட்டது. பல இடர்கள் மத்தியில் கள ஆய்வு மூலமும் பேராளர்களின் நூல்கள் மூலமும் பேராளர்களின் செவ்வி மூலமும் மூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களின் வாய்மொழி மூலமும் இன்றைய இளைஞர் கருத்துக்கள் மூலமும் பெறப்பட்டு தொகுக்கப்பட்ட விடயங்களாகும். இந்த ஆய்வின் மூலம் பல உண்மைகளும், தொன்மைகளும், புதுமைகளும் வெளிக்கொணரப் பட்டுள்ளன என்பது ஆய்வாளரின் வெளிப்பாடாகும். மேற்குறிப்பிட்ட பல பாரம்பரிய கிராமங்கள் தொல்பொருள் ஆய்விற்கு எதிர்பார்த்திருப்பதை இவ் இடப்பெயராய்வின் மூலம் வேண்டப்படுகின்றது.

*திரு. பொன்னம்பலம் விஜயநாதன்*
*(முதுகல்விமாணி, முதுகலைமாணி,*
*தமிழ்க் கல்விமாணி, கல்வி முகாமைத்துவ டிப்ளோமா,*
*பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா,)*
*சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,*
*வலயக் கல்விப் பணிமனை,*
*கிளிநொச்சி*

**தகவலாளிகள்**

- திரு அ.ஜெயசீலன் - அதிபர் இரணைதீவு
- திரு தீ.யஸ்ரின் - ஆசிரியர்
- திருமதி ச.சதாசிவம் - அதிபர் ஓய்வுநிலை வயது 82
- திரு ப.புஸ்பரட்ணம் - பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகம்
- திரு கா.குலசேகரம் - ஓய்வுநிலை அதிபர்
- திரு க.வடிவேலு - ஓய்வுநிலை அதிபர்
- திரு சு.கணபதிப்பிள்ளை - ஓய்வுநிலை அதிபர்
- திரு தா.கிருக்ஷ்ணபிள்ளை - வயது 65 நல்லூர்
- திரு தாமோதரம்பிள்ளை - வயது 75 ஆலங்கேணி
- திரு இ.முத்துக்குமாரு - வயது 80 நல்லூர்
- திரு வேலாயுதபிள்ளை - வயது 75 சாமிப்புலம்
- திரு தீத்துாசப்பர் - வயது 70 வலைப்பாடு
- திரு.ஐ.இராமநாதன் - வயது 70 முழங்காவில்
- திரு ரொபேட்கெனடி - அதிபர் குமிழமுனை
- திரு கிருஸ்ணபிள்ளை - வயது 60
- திரு க.பொன்னம்பலம் - வயது 87 நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திரு கதிரவேலு - வயது 82 நல்லூர்
- திரு பொன்னுச்சாமி - வயது 85 பல்லவராயன்கட்டு
- திரு சி.கிருஸ்ணபிள்ளை - வயது 62 கிராஞ்சி
- திரு முத்துலிங்கம் - வயது 65 கிராஞ்சி
- திரு ஐ.இரகுநாதன் - வயது 65 கிராஞ்சி
- திரு ஐ.கேசவன் - அதிபர், கிராஞ்சி
- திரு கு.அமுதலிங்கம் - ஆசிரியர், வேரவில்
- திரு சு.செல்வரத்தினம் - ஆசிரியர், வேரவில்
- திரு குழந்தைவேலு - வயது 60 வேரவில்
- திரு தர்மலிங்கம் - இறப்பு, பிறப்பு பதிவாளர், பொன்னாவெளி
- திரு நித்தியானந்தராசா - ஓய்வுநிலை பிரதேச செயலாளர், பொன்னாவெளி
- திரு தி.இராசநாயகம் - ஓய்வுநிலை அரசஅதிபர்
- திரு ப.நடேசமூர்த்தி - அதிபர், முழங்காவில்
- திரு அமுதன் - வயது 65 குமிழமுனை
- திரு ச.பாலசுப்பிரமணியம் - வயது 65 நல்லூர்
- திருமதி சர்வேஸ்வரி - உபதபாலதிபர், சிவபுரம்
- திருமதி நி.பரிமளம் - வயது 30 சிவபுரம், கிராஞ்சி
- திருமதி ரஜிதா - சிவபுரம், கிராஞ்சி
- திரு கதிரமலை - வயது 50 செம்மன்குன்று
- திரு இ.செல்வராசா - வயது 59 பிரதேச செயலகம்
- திரு சங்கர் - அதிபர், விநாசியோடை
- திருமதி ம.பத்மநிதி - ஆசிரியர், செல்விபுரம்
- திருமதி ப.கனகராசா - ஓய்வுநிலை ஆசிரியர்
- திரு தமயந்தி - ஆசிரியர், பல்லவராயன்கட்டு
- திரு சிறிகாந்த் - அதிபர், நாச்சிக்குடா
- திரு பொன் தில்லைநாதன் - ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்
- திரு குணரட்ணம் - ஓய்வுநிலை கூட்டுறவு உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**


- குலசேகரம்.கா - பூநகரி தொண்மைக்கல்வி வரலாறு பட்டம் பின் படிப்பு ஆய்வுக்கட்டுரை – 1992
- புஸ்பரட்ணம்.ப - பூநகரிப் பிரதேச தொல்பொருள் ஆய்வு யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு – 1991
- பூந்துணர் - கலாச்சாரப் பேரவை வெளியீடு பூநகரி பிரதேச செயலகம் 2014, 2013
- சிற்றம்பலம் சி.க - யாழ்ப்பாண இராட்சியம் 1982
- பத்மநாதன்.சி - ஆட்சிமுறை யாழ்ப்பாண இராட்சியம் 1982
- இந்திரபாலா.கா - வன்னிக் காட்டில் கரு அரண்மனை தினபதி வெளியீடு -1973
- பாலசுந்தரம்.இ - யாழ்ப்பாண இடப்பெயராய்வு
- கணபதிப்பிள்ளை.க - இலங்கை வாழ் தமிழர் வரலாறு 1956
- இந்திரபாலா.க - யாழ்ப்பாண இராட்சியத்தின் தோற்றம் 1972
- சிற்றம்பலம் சி.க - வரலாற்று அறிமுகம் யாழ்ப்பாண இராட்சியம் - 1992 வலைப்பாடு தூய அன்னாள் ஆலய திறப்பு மலர் -2013
- பாண்டியன் பெர்னான்டோ.க - குருதீபம் இரணைதீவு மாதாநகர் USA - 2011




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களும் அவற்றின் வளர்ச்சிப் போக்கும்

கிளிநொச்சி மாவட்டத்தின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பவர் உயர்திரு ம.ஸ்ரீகாந்தா ஆவார் இவர் யாழ்மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து பின்னர் காணி நீர்பாசன மின்சக்தி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகப் பணியாற்றியவர். திரு.ம.ஸ்ரீகாந்தா (O.B.E) அவர்களை கிளிநொச்சி மாவட்டத்தில் அநேக குடியேற்றத்திட்டங்களை உருவாக்க அரும்பாடுபட்டு உழைத்தார் பூநகரியிலும் கிராஞ்சி, முழங்காவில், கரியாலை நாகபடுவான் போன்ற குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்தார். கிளிநொச்சியில் இவரால் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்ற திட்டங்களான ஸ்கந்தபுரம், உருத்திரபுரம் போன்ற குடியேற்றதிட்டங்கள் துரித வளர்ச்சியை நோக்கி செல்ல பூநகரி குடியேற்ற திட்டங்களும் குறிப்பிடதக்க வளர்ச்சியை அடைந்தன.

### கிரஞ்சிக் குடியேற்றத்திட்டம்

பூநகரி கிராஞ்சிக் குடியோற்றத்திட்டம் 1955இல் ஆரம்பிக்கப்பட்டது. மத்தியதர வகுப்பினருக்கு என ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் 10 - 15 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த ஒருசிலரே காணி பெற்றுக் கொண்டனர். பின்னர் தொடங்கப் பெற்ற 5 ஏக்கர் திட்டத்தில் 100 வரையான குடும்பங்களுக்கு காணி வழங்கப்பட்டது. இக்குடியேற்ற திட்டம் ஒரு சவாலாகவே அமைந்தது. யாழ் நகரை அண்டிய குருநகர் போன்ற இடங்களில் இருந்து வந்தோர் மீளவும் யாழ்பாணம் வந்துவிட்டனர் இந்நிலையில் பகிரத பிரயத்தனம் செய்து தீவுப்பகுதியில் இருந்து குடும்பங்கள் அழைத்து வரப்பட்டனர். நயினாதீவை சோர்ந்தவர்கள் கூடுதலாக இங்கு குடியேறினர்.

காணி அபிவிருத்தி திணைக்களம் (Land Development Department) இக்குடியேற்ற திட்ட கட்டமைப்பை பொறுப்பெடுத்தது. அவர்கள் இங்கு முகாம் அமைத்து செயற்பட தொடங்கினர். காடுவெட்டி துப்புரவு செய்தல், வேலி போடுதல், கிணறு அமைத்தல் போன்ற பணிகளை செய்ததுடன் நடுகைக்கான தென்னை நாற்றுக்களையும் எடுத்து வந்து வழங்கினார் உதவித்திட்டத்தில் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன. யுத்த அனர்த்தங்களின் போது எல்லா வீடுகளும் அழிந்து போயின. நான்கு ஐந்து வீடுகள் இன்னும் எஞ்சியிருப்பதைக் கான முடிகின்றது. கிராஞ்சிக் கிராமம் இன்று ஒரு தென்னை வலயமாகத் தோற்றம் அளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வாதாரம்**

இங்குள்ள மக்கள் தென்னை பனைகளில் இருந்து கணிசமான வருமானத்தை ஈட்டுகின்றனர் மீன்பிடி விவசாயத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். கணிசமான அளவு கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

**மின்சாரம்**

பூநகரிக்கு எக்காலத்திலும் கிடைக்கப் பெறாத மின்சார வசதி 2014 - 2015 இல் கிடைக்கப்பெற்றுள்ளனர்.

**போக்குவரத்து**

ஆரம்பத்தில் தட்டிவான் சேவையே நடைபெற்றது. பல்லவாயன்கட்டு சந்தி மன்னார் வீதியில் இருந்து கிராஞ்சிவரையான வீதி (8Km) புனரமைக்கப்பட்டது சீர் கெட்டு இருக்கிறது. மட்டுப் படுத்தப்பட்ட அளவில் போக்குவரத்து வலைப்பாடு வரை நடைபெறுகின்றது.

**கல்வி**

கா.பொ.த (சா/த) வரை கிராஞ்சி அ.த.க பாடசாலையில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பல்கலை உயர்கல்வி வாய்ப்பினை இங்கு உள்ள மாணவர் சிலர் பெற்றுவருகின்றனர். போருக்கு பின் மீள் குடியேற்றத்தின் பின் வீட்டு வசதிகளை பெற்று இக்கிராமம் வளர்ச்சியை நோக்கி செல்கிறது, இது ஒரு தனிக்கிராம அலுவலர் பிரிவாகும். இது பண்டைக் காலத்தில் குடியிருப்பாக விழங்கினது எனலாம்.

**முழங்காவில்**

பூநகரி மன்னார் வீதியில் முழங்காவில் கிராமம் அமைந்துள்ளது. முழங்காவில் குடியேற்றத்திட்டம் 1957 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது 5 ஏக்கர் திட்டமாகும். தரை கீழ் நீரை கொண்டிருப்பதால் உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு உகந்த இடமாக விளங்குகின்றது. பாடசாலை, ஆஸ்பத்திரி, வீதிகள், தபாலகம் போன்ற உட்கட்டமைப்புடன் இக்குடியேற்றதிட்டம் அமைக்கப்பட்டு வளர்ந்து வருகின்றது. மன்னார் யாழ்பாணம் போன்ற இடங்களுக்கு வாழைக்குலை மரக்கறிகள் போன்ற உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டன. 1978 இல் இங்கு படித்த வாலிபர் திட்டம் உருவாக்கப்பட்டது. (Educated yoult scheme) முதலாவது கட்டத்தில் 90 பேருக்கும் 5 ஏக்கரையும் சமகட்டத்தில் 160 பேருக்கும் காணி வழங்கப்பட்டது யாழ்பாண மாவட்டம் பிரதேச செயலகங்கள் ஊடாக பயனாளிகள் மட்டுப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டு இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை வசதிகள் D.D.C (Project) செய்து கொடுக்கப்பட்டது. இளைஞர்கள் உற்சாகமாக விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர் நாட்டுச் சூழ்நிலை (அசாதாரன சூழ்நிலை) காரணமாக இத்திட்டத்தை விட்டு அநேகர் வெளியேறி வெளிநாடு சென்றனர். இதனால் இத்திட்டம் உரிய இலக்கை எட்டவில்லை எனலாம்.

**போக்குவரத்து**

ஆரம்பத்தில் தட்டிவான் சேவை சங்குபிட்டித் துறையில் இருந்து மன்னார் வரை இடம் பெற்றது பேராதனை சங்குப்பிட்டி கடல் இடைவெளியே படகு சேவையும் (Boat) பாதைச் சேவையும் (Ferry) இடம் பெற்றது தனியாரின் மட்டுப்படுத்தப்பட்ட வான் சேவையையே மக்கள் நம்பி இருந்தனர் பின் மன்னார் C.T.B சாலையினர் போக்குவரத்தை ஆரம்பித்தனர்.

**மின்சாரம்**

மீள்குடியோற்றத்தின் பின் (2010, 2014) தொடக்கம் மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**கல்வி**

முழங்காவில் மகாவித்தியாலயம் தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது இங்கு ஆரம்பக் கல்வியில் 475 மாணவர்களும் அதன் மேற்பட்ட பிரிவுகளின் 700 மாணவர் வரை கற்கின்றனர். முழங்காவில் ஒரு தனிக்கிராம அலுவலர் பிரிவாகும்.

**சமூகம்**

இங்குள்ள செல்வ யோக சித்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ கிருஷ்ணா ஆலயம் என்பன வளர்ந்து வரும் ஆலயங்களாகும். அறநெறி பாடசாலைகள் கலைமன்றங்கள் இங்கு சிறப்பாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது அரச அதிபர் திரு.ம.ஸ்ரீகாந்தா உதவி அரசாங்க அதிபர் முருகேசம்பிள்ளை மாவட்ட காணி அலுவலர் திரு.க.பொன்னம்பலம் போன்றோர் இக்குடியேற்றத்தின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பு செய்தனர். சென் பெஸ்கோ தனியார் தொழில்நுட்பக் கல்லூரி இளைஞர்களுக்கு பல்துறைகளில் பயிற்சி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கரியாலை நாகபடுவான் குடியேற்றத்திட்டம்**

கரியாலை, நாகபடுவான் ஆகிய இரு குளங்களையும் இணைத்து ஒரு குளக் குடியிருப்புதிட்டமாக இக்குடியேற்ற திட்டம் 1962 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இக்குடியேற்றத் திட்டத்தில் இரண்டு ஏக்கர் மேட்டு நிலமும், 2 ஏக்கர் வயற்காணியும் வழங்கப்பட்டது. 650 ஏக்கர் நிலத்தில் சிறுபோகம் (நிர்பாசனம்) செய்யப்படுகிறது ஆரம்ப கட்டத்தில் 613 குடும்பங்களுக்கு காணி வழங்கப்பட்டது, கிணறு, காடுவெட்டி துப்பரவு செய்தல் போன்ற வேலைகளுக்கு நிதி உதவி அரசால் வழங்கப்பட்டது வீடுகள் அமைத்து கொடுக்கப்படவில்லை குறிப்பிட்ட காலத்திற்கு குடியேறிய குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கப்பட்டது. கரியாலை நாகபடுவான் குளக்கட்டு போதிய உயரம் இன்மையால் 14$^{0}$ நீரையே சேமிக்க முடிவதாய் உள்ளது.

**கல்வி**

சோலை 1, சோலை 2 என இரு பாடசாலைகள் இயங்குகின்றன.
(5 ஆம் ஆண்டுவரை)

**மீள் குடியேற்றம்**

2010 இல் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. வீட்டுத்திட்டம், மின்வசதி கிடைத்துள்ளது. இப்பொழுது அடிப்படை வசதிகளைப் பெற்ற இக்கிராமம் வளர்ச்சி அடைந்து வருகிறது. இத்திட்டத்தில் காணி பெற்றவர் சிலர் கைவிட்டு சென்று விட்டனர் தீவகம் வாதரவத்தை போன்ற இடங்களில் இருந்தும் பூநகரியில் இருந்தும் வந்து குடியேறியவர்கள் நிரந்தரக் குடிகளாகவுள்ளனர். இக்குடியேற்ற திட்டத்தை விருத்தி செய்ய கரியாலை நகாபடுவான் குளம் விஸ்தரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் பல்லவராயன் கட்டுப் பகுதியில் கைவிடப்பட்டு இருக்கும் தரிசு நிலங்களில் பயிர் செய்ய முடியும், குமுள முனை (பூநகரி) வரை நீர்பாசன வசதியை ஏற்படுத்த முடியும்.

**ஜெயபுரம் குடியேற்றத்திட்டம்**

1983 யூலைக் கலவரத்தை தொடர்ந்து இப்பகுதியில் மலையக மக்கள் 1984இல் குடியேறினர். ஆரம்பக்கட்டத்தில் 448 குடும்பங்கள் குடியேறின. இவர்களுக்கான வாழ்வாதாரத்தை வழங்குவதில் சர்வோதய அமைப்பு, விஸ்வகிந்து, பரிசத், கியூடெக் போன்ற அமைப்புக்கள் முன்நின்று உழைத்தனர். வீடுகள், கிணறுகள், வீதிகள் அமைத்து கொடுக்கப்பட்டன. 1984இல் கிளிநொச்சி தனி மாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மாவட்டத்தின் முதல் அரசாங்க அதிபர் திரு ஜெயநாதன் அவர்களின் பெயரை நினைவு கூருமுகமாக ஜெயபுரம் எனப் பெயரிடப்பட்டது. தும்புருவில் என்ற இடமாக ஜெயபுரமாக மாறியது.

வளங்கப்பட்ட மேட்டுக்காணி (3.ஏ) உடன் 1 ஏக்கர் வயற்காணி பண்டிவெட்டியில் வழங்கப்பட்டது. தேவன் குளம், வன்னேரிக் குளம் பண்டி வெட்டிக்குளம் இணைந்த குளவேலைத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இதனால் இவர்களுக்கு வழங்கப்பட்ட நெற்காணி 550 ஏக்கரிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவில்லை நெற்செய்கைக்கான காணி பயன்பாட்டில் இல்லாது போனது பின்னடைவாகியது. 1995 யாழ்பாண இடம் பெயர்வில் கணிசமானோர் ஜெயபுரம் பகுதியில் தஞ்சம் அடைந்திருந்தனர். நிலைமை சரியானதும் இவர்கள் குடாநாடு திரும்பினர். நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழலில் இங்கு குடியேறிய மலையக குடும்பங்களில் ஒரு பகுதியினர் மீண்டும் இந்தியா நோக்கி புலம் பெயர்ந்தனர்.

**கல்வி**

ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் தற்போது 400 பிள்ளைகள் வரை கல்வி கற்கின்றனர். ஜெயபுரம் வடக்கு தெற்கு என இரு கிராம அலுவலக பிரிவுகளை ஜெயபுரம் கொண்டிருக்கின்றது. ஜெயபுரம் குடும்பங்களுக்கு நெற்காணி (திருத்தப்பட்டு) வழங்கப்படுவது வாழ்வாதார நோக்கில் முக்கியமாகும்.

4 ஆம் கட்டை, நெற்புலவு முட்கொம்பன் ஆகியவையும் பூநகரியில் ஆரம்பிக்கப்பட்ட சிறு குடியேற்றத் திட்டங்களாகும். இவை கிராமங்களாக வளர்ச்சி அடைந்து வருகின்றன முட்கொம்பன், 4ம் கட்டை கிராமங்கள் தெங்கு பயிரிடப்பட்டுள்ளது. 4 ஆம் கட்டை (விநாயகபுரம்) முட்கொம்பன் மகாவித்தியாலங்கள் இயங்குகின்றன முட்கொம்பன் மகாவித்தியாலயத்தில் 900 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

கிளிநொச்சியிலும், பூநகரியிலும் ஆரம்பிக்கப்பட்ட ஸ்கந்தபுரம், உருத்திரபுரம், திருவையாறு இராமநாதபுரம், வன்னேரி, பாரதிபுரம், கனகபுரம், கனகாம்பிகைக்குளம், ஜெயந்திநகர், விஸ்வமடு, தர்மபுரம், யாவும் குடியேற்றதிட்டங்களே ஆகும். இரணமடுக்குளத்தை மையமாக வைத்து அநேக குடியேற்றங்கள் பெருவளர்ச்சியை கண்டன பூநகரியை பொறுத்தவரை குடியேற்றங்கள் சாதாரண முன்னேற்றத்தையே கண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்காவில் கரியாலைநாகபடுவான் குடியேற்றத்திட்டங்களை சிறப்பான உட்கட்டுமான நிர்மான திட்டங்களினால் மேலும் நன்கு வளர்ச்சி பாதையில் இட்டு செல்ல முடியும். பல்லவராயன்கட்டு குளம் மீளப்புனரமைத்தல், கைவிடப்பட்ட பூநகரி மாளாபூக்குளத்தை மறுசீரமைத்தல் செயல்வடிவம் பெறும் போது ஒட்டுமொத்தப் பூநகரிப் பிரதேசமுமே விவசாயத்தில் சொழிப்புறும் என விதந்துரைக்கலாம்.

*கா.கார்த்திகா*
*தகவல் : நாகமுத்து நமசிவாயம்*
*ஓய்வுநிலை காணி அலுவலர்*
*மா.செயலகம் கிளிநொச்சி*
*சோ.க.தம்பிப்பிள்ளை - மொழிப்பெயர்பில்*
*இல. பாராளுமன்றம் ஓய்வுநிலை*
*பிருந்தாவனம் - கிராஞ்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிப் பிரதேசத்தில் அருகிவரும் நிலையிலுள்ள அருங்கலைகளை பேணிப்பாதுகாத்தல்

## நாட்டுக் கூத்துக்கலை

மனிதன் நாகரீமடையாத காலத்திற்கு முன்பும் விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சிகள் ஏற்படுவதற்கு முன்பும் உலகில் உள்ள அத்தனை இனங்களும் தமக்கென ஒரு தனித்துவமான கலைப் பாரம்பரியத்தினை கொண்டிருந்த நிலை காணப்பட்டது. ஈழத்து தமிழ்க் கிராமங்களிலே இந்நாட்டுக்கூத்துக்கள் நாகரிகத்தையும் பண்பையும் உயிரையும் ஓங்கி வளர்த்து வந்தது. இயற்கையோடு இணைந்து நின்று வாழ்வெனும் உயிரூற்றுடன் ஒன்றி நின்று நாட்டுக் கூத்துக் கலைஞர்கள் இத்தகைய கலையம்சத்தைப் படைத்துள்ளனர். நாட்டுப்புற மக்களின் கலையாக எண்ணப்பட்ட இக்கலை வடிவம் 1950களுக்குப் பிறகு அறிஞர்கள், அரசியல்வாதிகள், ஆய்வாளர்கள் என பலதரப்பட்டவர்கள் பார்வை இவற்றின் மீது பட்டிருந்தது. இதற்குப் பின்னர் கூத்துக்கலை புதிய வியூகங்களையும், மாற்றங்களையும், நுட்பங்களையும் தன்னகத்தே பெற்றுக்கொண்டது. ஓலைச் சுவடிகள், நூல்வடிவங்கள் வாயிலாக இக்கலையம்சத்தின் நம்பிக்கைகள், நடைமுறைகள், அரங்கேற்ற முறைகள் என்பவற்றினை அறிய முடியுமாக இருந்தது.

1984இற்கு முன் பூநகரிப் பிரதேசம் யாழ்ப்பாணத்துடன் இணைந்திருந்தமையினாலும் அதற்கான போக்குவரத்து கடல்வழியாக இருந்தமையாலும் தனக்கென தனித்துவ கூத்துப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒதுக்குப் புறமாக இருந்தது. குறைந்தது ஒவ்வொரு கிராமத்திற்கு ஒவ்வொரு அண்ணாவிமார் என்ற முறையில் கூத்துக்கலை வளர்க்கப்பட்டிருந்தது. பூநகரியில் இருந்து இந்தியா சென்று முறையாகக் கற்று அங்கு ஆடி பிரசித்தி பெற்று அதே கூத்துக்களை பூநகரியில் பழக்கி மேடையேற்றியுள்ளனர்.

முன்னைய காலங்களில் இக்கூத்துக்கள் தெய்வ நம்பிக்கையுடன் நோய்கள் நீங்கவும், செல்வம் செழிக்கவும், குழந்தைச் செல்வம் பெருகவும், தெய்வக் குற்றங்கள் களையவும் விரதம் இருந்து மேடையேற்றப்பட்டன. நோய்களிலே குறிப்பாக சின்னமுத்து, அம்மை, கொப்பளிப்பான் முதலிய நோய்களிலிருந்து தம்மைப்பாதுகாக்க இக் கலையம்சம் நிகழ்த்தப் பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இக்கலையம்சமானது ஒரு இரவுக்கூத்து, இரு இரவுக்கூத்து, மூன்று இரவுக்கூத்து என்று ஏழு மணிக்குத் தொடங்கி மறுநாள் காலையில் ஐந்து ஆறு மணிக்கு முடிவடையும். மக்கள் மனம் சலிக்காது மிகுந்த பக்தியுடன் சிரத்தை யுடனும் மேடையேற்றினார்கள், பார்வையிட்டனர். இத்தகைய கலை வடிவங்களுடாக சமய அறிவையும், அறநெறிகளையும் போதித்து மக்களை நன்னெறிக்கு உயர்த்தலே நோக்கமாக கொண்டிருந்தது. அது மட்டுமல்ல கிராம மக்களின் ஒற்றுமையையும், குடும்ப உணர்வையும் மேம்படுத்தி நிலைநாட்டக் கூடிய வலுவுடையதாக செயற்பட்டிருந்தது. மக்களின் சிறந்த பொழுது போக்கு ஊடகமாகவும் பயன்படுத்தப் பட்டிருந்தது. தனது கிராமத்தின் அல்லது சமயத்தின் சிறப்புக்களையும், ஐதீகங்களையும், புராணங்களையும் எடுத்துக்காட்டும் கருவியாகவும் அவைகளை அடுத்த தலைமுறைக்கு அளிக்கும் வாய்க்காலாகவும் விளங்கியிருந்தது.

இக்கூத்தானது நாட்டுக்கூத்து, நாட்டைக்கூத்து, கூத்து, கிராமியக் கூத்து என பல்வேறு சொற் பதங்களைக் கொண்டு பிரதேசத்திற்குப் பிரதேசம் அழைக்கப்பட்டிருந்தது. இவற்றின் சமய வழிபாட்டுத் தன்மை யைக் கொண்டு கத்தோலிக்க மதம் சார் நாட்டுக்கூத்து, இந்துமதம் சார் நாட்டுக் கூத்து என இரண்டாகவும் ஆட்டத்தன்மை பாடல்களை மையமாகக் கொண்டு வடமோடி, தென்மோடி, வசந்தன், காத்தவராயர் எனவும் அழைக்கப்பட்டிருந்தன.

பூநகரிப் பிரதேசத்தில் வலைப்பாடு, இரணைமாதாநகர், இரணைதீவு போன்ற பிரதேசங்களில் கத்தோலிக்க மதத்தினர் செறிந்து வாழ்வதுடன் வடமேட்டில் அமைந்த கூத்து இரணைதீவு செபமாலை மாதா ஆலயம், நாச்சிக்குடா யாகப்பர், வலைப்பாடு புனித வேளாங்கன்னி ஆலயங்களின் திருவிழா, ஒளிவிழா மற்றும் பொது விளாக்களில் பல நாட்டுக் கூத்துக்கள் மேடையேற்றப்பட்டன.

கத்தோலிக்கமதம் சார் நாட்டுக்கூத்துக்களாக ஞானசௌந்தரி, செபத்தியார், எஸ்தாக்கியார், புனித அந்தோனியார், அருளப்பர், கோலியாத், இம்மனுவேல், சந்தியோகுமையோர், புனித பொண்ணுலக செபமாலை, வரப்பிரசாதம், தேவசகாயம், புனிதவதி, விசயமனோகரன், தர்மபிரகாசர், செபமாலை மாதா, கண்டி அரசன், மரியதாச, ஆட்டுவன்னியன், சித்தாத்துரை போன்றவை காணப்படுகின்றன. இவற்றை விட நொண்டிக்கூத்து புதிய நாட்டைக்கூத்துக்கள் போன்ற னவும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்களை பழக்குவதற்கு இரணைதீவு, வலைப்பாடு, நாச்சிக்குடா போன்ற இடங்களில் பல அண்ணாவிமார்கள் இருந்தனர். அந்தவகையில் மருசீலன், சூசைசந்தியா, வைத்தி சின்னப்பு, சீமான், சிந்தாத்துரை, சந்தியாப்பிள்ளை, பக்திநாதன், செபஸ்திசந்தியா, அன்ரனிதாஸ் என பல அண்ணாவிமார் தமது பணியை மேற்கொண்டிருந்தனர். இவர்களில் ஒரு சிலரே தற்போது உயிர் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நாட்டுக்கூத்துக்களுக்கான கொப்பிகள் யாழ்ப்பாணம் (பாசையூர்), மன்னார் (பள்ளிமுனை) போன்ற இடங்களில் இருந்து எடுக்கப்பட்டு நாட்டுக்கூத்துக்கள் தயாரிக்கப்பட்டன. ஒரே கூத்து வெவ்வேறு அண்ணாவிமார்களால் படிக்கப்பட்டதுடன் கூடுதலாக "ஞானசௌந்தரி" நாட்டுக்கூத்து இப் பிரதேசத்தில் பெரிதும் இடப்பிடித் துள்ளது. கத்தோலிக்க மக்களது இக்கலை மீதான ஓர்மம் பற்றுக் காரணமாக பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இன்று வரை இக்கலை அம்சம் நிலைத்து நிற்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்க மதம் சார் நாட்டுக் கூத்துக்கள் தொடங்கமுன் தலைவர் ஏட்டுடன் முன்னே செல்ல அதனைத் தொடர்ந்து நடிகர்கள் ஆலயத்திற்குச் சென்று முழந்தாள்படியிட்டதும் குருவானவர் ஆசீர்வதித்து காப்புக்கட்டி மேடையில் தோன்றமுன் வாசலில் வெள்ளைத்துணி பிடித்து மறைத்து நிற்க அண்ணாவியாரால் சபை விருத்தம் பாடப்படும். பின்னர் புதுமுக ஆட்டத்தருவை பாடி பாத்திரங்களில் ஆட்டத்தையும் அண்ணாவியார் ஆரம்பித்து வைப்பார். புதுமுக தரு பாடிய பின்னரே வெள்ளைத்துணி அகற்றப்படும். ஆட்ட முடிவில் மங்களம் பாடி கூத்து நிறைவு பெறும். பூநகரி பிரதேசத்தை பொறுத்தவரை அதிக கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கள் மேடையேற்றப் பட்டிருந்தது.

இந்து மக்களது வழிபாட்டுத் தெய்வங்களுடன் தொடர்புடைய "காத்தவராயன்கூத்து" செல்லித்தீவு, செட்டியகுறிஞ்சி, தம்பிராய் போன்ற இடங்களில் செழிப்புற்றுக் காணப்பட்டிருந்தது.

காத்தவராயன்கூத்து அருவிவெட்டு முடிந்ததும் அண்ணாவியார் நடிகர்களைஅழைத்து பாட்டு எழுதிக் கொடுப்பார். ஏடுகள், கொப்பிகள் பயன்படுத்தப்பட்டன. பாட்டு எழுதிக் கொடுத்தலை "ஏடுக்கொடுத்தல்" என அழைத்திருந்தனர். பழக்கத் தொடங்கி முப்பது நாட்கள் விரதம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனுக்கு வேப்பிலைக் கும்பம் வைத்து முக்கிய பாத்திரம் ஏற்று நடிப்பவர்கள் அதனை ஆலயத்திற்குக் கொண்டு சென்று அம்மனுடைய சரித்திர வரலாற்றில் காப்பு பாடுதல் இடம் பெற்று இதில் விநாயகரை மேடைக்கு அழைத்துச் சென்று மேடையின் முன்பகுதி கிழக்குப் பக்கமாக கும்பம் வைத்து விளக்கேற்றி கற்பூரம் கொழுத்தி பின்னர் ஏடு படிப்பார்கள். பின்னர் ஆட்டம் இடம் பெற்று காப்புப் பாடுதலுடன் ஆட்டம் நிறைவுறும்.

காத்தவராயன்கூத்து இந்து சமய வழிபாட்டுடன் ஒன்றிணைந்து காணப்பட்டிருந்தது. இக்கூத்து தாழ்ந்த குலத்தில் பிறந்த காத்தவராயன் அரசிளங்குமாரியான ஆரியப்பூமாலையை மணம் முடித்ததை அடிப்படையாகக் கொண்டிருந்தது இப்பிரதேசத்தில் இன்று வரை பல காத்தான்கூத்து அண்ணாவிமார்கள் வாழ்ந்துள்ள போதிலும் ஓரிரு அண்ணாவிமார்களே உயிருடன் வாழ்கின்றனர். தற்போது உயிருடன் அல்லாத அண்ணாவிமார்களான சண்முகம் சுப்பையா, சின்னத்தம்பி வேலன் , சுக்கன் கதிராமு, வேலன் சின்னத்துரை, கந்தையா சிவராசா, சாமு தம்பிமுத்து, வட்டன் பொன்னம்பலம் குறிப்பிடத் தக்கவராவார்கள். இன்னும் கலைப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அண்ணாவியர்களாக அண்ணாவி மகாலிங்கம், சின்னப்பு செல்வரத்தினம், சண்முகம் இரத்தினேஸ்வரன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

பூநகரிப் பிரதேசத்தில் கண்ணகை அம்மன் வழிபாடு, முத்துமாரி அம்மன் வழிபாடு காத்தவராயன் வழிபாடு முதலிய வழிபாடுகளுடன் இக் காத்தவராயன்கூத்து பிரசித்தி பெற்றிருந்தது. ஆரம்பகாலங்களில் உடுக்கையடித்து காத்தவராயர் பாடும் வழக்கம் இருந்தது. காத்தவராயர் ஆலயத்திலே காத்தவராயராக அலங்கரிக்கப்பட்டவர் காத்தவராயர் பாடலைப்பாட உருநிலை ஏற்பட்டு காத்தவராயர் தெய்வமாக மாறி அபிநயித்த நிகழ்வுகள் இப்பிரதேச பகுதியில் இடம்பெற்றிருந்தது.

இக்கூத்துக்கலை செல்லியாதீவு அம்மன் பங்குனி குளித்தியின் போதும் கரியாலை நாகபடுவான் அம்மன், குளக்கட்டு நரசிம்ம வைரவர், முழங்காவில் கண்ணன் கோவில், கரடிக்குன்று நாகபூசணி அம்மன், நாகபடுவான் அம்மன், வேரவில் வெள்ளிப்பள்ளத்து விநாயகர், கிராஞ்சி அம்மன், நல்லூர் பெரும்படை அம்மன், மேளாய் கண்ணகை அம்மன் முதலிய ஆலயங்களில் நடாத்தப்பட்டமைக்கான ஆதாரங்கள் அப்பகுதி முதியவர்களின் வாய்மொழி மூலமாக கிடைத்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக இப்பிரதேச நாட்டுக்கூத்துக்கள் ஒருபக்கம் பார்ப்போரை மையப்படுத்தியதாக அமைந்திருந்தது. இதற்காக வட்டக் கொட்டில்கள், வயற்பிட்டிகள் என்பன பயன்படுத்தப்பட்டிருந்தன. இரவு நேரங்களில் மண்ணெண்ணை விளக்கு, பெற்றோல் மாக்ஸ், என்பன பயன்படுத்தப்பட்டன. ஒரு பக்கம் பார்ப்போர் கொண்ட அரங்கில் பல்வேறு காட்சிகள் மூலம் விடிய விடிய ஆடப்பட்டது. துள்ளல் அல்லது சிந்து நடையில் பாடல்கள் அபிநயங்கள் காணப்பட்டிருந்தமையால் சிந்து நடைக்கூத்து எனவும் அழைக்கப்பட்டிருந்தது. உடுக்கு, மிருதங்கம், ஆர்மோனியம் முக்கிய இசைக்கருவிகளாக இசைக்கப்பட்டன.

இவ்வாறு இக்கூத்துக்கலையானது பூநகரிப் பிரதேசத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வந்துள்ள போதும் இன்றைய காலகட்டத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய வகையில் ஒரு ஒரு சில அண்ணாவிமார்களால் ஒரு சில இடங்களிலேயே பின்பற்றப்படுகின்றது என்பது மனவருந்தத்தக்கது. இவ்வாறு இக்கலையானது மருவிப் போவதற்கு பல காரணங்கள் வழிசமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் நோக்குமிடத்து

1. நவீனத்துவமும் நவீன தொடர்பாடலும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக 1970களுக்குப் பிறகு தொடர்பாடல் கருவிகளான வானொலி, தொலைக்காட்சி முதலியன மக்களுக்கு பொழுதுபோக்கு சாதனமாக வீடுகளை அலங்கரித்தமையைக் குறிப்பிடலாம்.

2. போர் பயங்கரவாதம் அரசியல் அடாவடித்தனங்கள் காரணமாக மக்களிடத்தே நின்மதி குன்றிய மனநிலை, இடப்பெயர்வு ஒரே கிராமம் ஒரே மக்கள் என்ற கூட்டு வாழ்வு சிதைந்து போனமை, பொருளாதாரம், உயிர் உடமைகள் இழப்புக்கள் அதனால் ஏற்பட்ட வறுமைநிலை பேணப்பட்டு வந்த நாட்டுக்கூத்துக் கொப்பிகள், ஏடுகள் இடப்பெயர்வில் விட்டுச்சென்றமை, முதலிய பல போர்க்காரணங்கள் கலைஞர்களால் மேற்கொண்டு இத்தகைய செயற்பாடுகளை செயற்படுத்த முடியாது போனது அத்துடன் கலைப்பணியாற்றி வந்த கலைஞர்கள் பற்றாக்குறை இத்தகைய கலை வடிவங்கள் அருகிவர காரணமாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருளாதார பிரச்சினை பெரும் சவாலாக உருவெடுத்தமை குறிப்பிடப்பட வேண்டியது. பொருளாதாரத்தினை ஈட்டிக் கொள்ளவதே மக்களது பிரதான குறிக்கோளாக விளங்கியது. எனவே இக்கலைக்கான ஒப்பனை, உடை, மேடையமைப்பு இவற்றுக்குரிய பொருட்களுக்கான விலை அதிகரிப்பு இத்தகைய கலைவடிவங்கள் நலுவத்தொடங்க காரணமாயின.

அது மட்டுமல்ல முன்னைய காலங்களில் ஆறுமாத காலம் பொருளாதார தேவைக்கு தொழிலில் ஈடுபட்டிருந்தனர். ஆறுமாத காலம் ஓய்வாகவே இருந்துள்ளனர். எனவே ஓய்வாக இருந்த மக்களால் இக்கலை வடிவங்களை வளர்க்க காலம் போதுமாய் இருந்தது. ஆனால் இன்று இந்நிலைமாறி ஆண், பெண் இருபாலரும் வருடம் முழுவதும் தொழில் செய்து குடும்பத்தை வறுமை நிலை இல்லாமல் செவ்வனே கொண்டு செல்லவே நேரம் போதுமாய் உள்ளது. அதனால் பாரம்பரிய கலை வடிவங்கள் எழுச்சி பெறாமல் பின்னடைவில் செல்ல ஏதுவாகின.

4. கல்வியும் அதனூடாக தொழில்வாய்ப்பு என்பவற்றை இலக்காகக் கொண்ட கிராம மக்கள் உருவாகிய சூழலில் கல்வி உயர்நிலையில் உள்ளதைக் காணலாம். புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்ப வசதிகள், அறிவியல் என பல தளங்களிலும் மாற்றமும் வளர்ச்சியும் பாடத்திட்டங்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் செற்பாடுகளிலும் மாறுதல் ஏற்பட காரணமாயின இதனால் கல்வியில் முழுமையான கவனம் சென்றதுடன் இத்தகைய கலைப்பாரம்பரியம் 2ஆம் பட்சமாக நோக்கப்பட்டது. காலை, மாலை வகுப்புக்களுக்கு மாணவர்கள் செல்வதால் கற்றலிலே அதிக நேரத்தினை செலவிடுவதன் காரணமாக இவ் வடிவங்களை பயிலுவதற்கு மாணவர்களுக்கு நேரம் போதாது போனமை இத்தகை வடிவங்கள் அருகிவர காரணமாயின.

5. கலையை வளர்க்கும் கலைஞர்களது குடும்ப உறவுகள் கலைப் பிரவேசத்திற்கு ஈடுபாடு கொள்ளாமை காரணமாகவும் பாரம்பரியமாக இக்கலைகளை பழக்கி வந்தவர்களை பிள்ளைகள் தடுப்பதும் தமக்கு கௌரவப்பிரச்சனையாக எண்ணுவதும் கல்வியில் ஏற்பட்ட போட்டித் தன்மையால் கலைஞர்களே தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு பயிலுவதற்கு விரும்புவதில்லை அத்துடன் பிள்ளைகளும் நாட்டம் செலுத்துவதில்லை. இதனால் இக்கலைவடிவத்தைத் தக்கவைப்பது சிரமமாக உருவாகியுள்ளது.

6. அன்றைய காலகட்டத்தில் கலைப் பணியாற்றிய கலைஞர்கள் உயர்மட்டத்தில் மதிக்கப்பட்டனர். இன்று உரிய சமூக அந்தஸ்து கிடைப்பதில்லை. கேலி, கிண்டல் பதிலுக்குக் கிடைக்கின்றது. கலைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களை இளம் தலைமுறையினர் நகைச்சுவைத் தன்மையோடு கேலி செய்வதும் அவதூறாகப் பேசுகின்ற நிலைமையும் சில இடங்களில் அவதானிக்க முடிகின்றது. இதனால் கலைஞர்கள் இக்கலையினை ஆற்றுகை செய்வதற்கு முன்வராத நிலமை ஏற்பட்டுள்ளது.

7. பெண்கள் பல திறமைகளைக் கொண்டிருந்தாலும் தமது திறமைகளை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. பெண்கள் கூடுதலாக தெய்வக்குற்றம் அந்தஸ்த்துக்கு இழிவு என கருதப்பட்டது. பெண்களது கலைப்பங்களிப்பு இன்மையும் இத்தகைய வடிவங்கள் அருகிப் போக காரணமாய் அமைந்திருந்தது.

8. அன்று தொட்டு இன்று வரை புதிய விடயங்களை கற்றுக் கொள்ள மிகவும் முனைப்புச் செலுத்தி வருகின்ற மக்கள் வழமையாக பார்த்து வந்த பாரம்பரிய வடிவத்தைத் தாண்டி புது வடிவம் வெளிவரும் போது ஈர்ப்பு ஏற்படுகின்ற தன்மை இதனால் ஒரு கலை வடிவத்திற்குள் இன்னொரு வடிவத்தை புகுத்தும் தன்மையினால் நவீனம் சார்ந்து வேறு கலைப் பாணியில் வெளிவரும் தன்மை இதுவும் பாரம்பரியம் அருகிவர காரணமாய் இருந்தது.

9. கலைஞர்களது ஒத்துழைப்பு ஆரம்பத்தில் அதிகரித்திருந்தது. இன்று தானும் தனது உயர்வும் எனத் தனித்து இயங்குவதால் கூட்டாகச் செயற்படுகின்ற தன்மை சாத்தியமற்றுப் போகின்றது.

10. அர்ப்பணிப்புள்ள ஒரு சில அண்ணாவிமார்கள் மீண்டும் இக் கலை வடிவத்தை செயற்படுத்தி மேடையேற்றி இருப்பினும் போதிய பார்வையாளர்கள் இன்மையும் கவலைக்கிட மளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பல காரணங்களால் இன்று நாடடுக்கூத்துக் கலையானது மிகவும் செயற்பாடு இழந்து நிற்பதை கண்ணூடாக அவதானிக்க முடிகின்றது.

இக் கூத்துக்கலையினை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்ல வேண்டியுள்ளதால் இவற்றினைத் திரும்பவும் உயிரூட்டு வதற்கான வழி வகைகளைத் தேடிக்கண்டுபிடித்து பின்பற்றுவதனூடாக தொடர்ந்தும் அக்கால மக்களின் இயல்பு வாழ்வுடன் இணைந்த இக் கலை வடிவத்தை பேணிப்பாதுகாத்துக் கொள்ள முடியும். அந்த வகையில் நோக்குமிடத்து

அண்ணாவிமார்களால் செயற்படுத்தப்படும் இக்கலைச் செயற்பாடுகளை அளிக்கச் செய்த பின்னர் அது சார்ந்த விடயங்களைத் தேடிக் கண்டுபிடித்து ஆவணப்படுத்துவது கட்டாயமானதாகும். அதாவது நல்ல நூல் வடிவிலோ அல்லது இறுவட்டுக்கள் வடிவிலோ பாதுகாத்துப் பேணுதல் ஆவணங்களைக் கையளித்தல் போன்ற விடயங்ளினூடாக இவ்வாறான கலையம்சங்களை நிலைத்து நிற்க செய்ய முடியும்.

ஒரு கிராமத்துக்கு ஒரு கலாமன்றம் என்ற அடிப்படையில் கலாமன்றங்களை நிறுவுவதுடன் கலாமன்றச் செயற்பாடுகளில் பாரம்பரிய கலைகளைப் பேணும் வகையிலான செயற்பாடுகளுக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பது இப் பிரதேசத்தைச் சார்ந்த கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகாரசபையின் பொறுப்பாகும்.

கலாமன்றங்களுக்கிடையே இத்தகைய கலையம்சங்களுக்கு இடையேயான போட்டிகளை அமுல்ப்படுத்தி வெற்றி பெறுபவர்களிற்கு பரிசில் வழங்க வேண்டும். இத்தகைய கலை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு நிரந்தர கலைப்பணியாளராக சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

மேலும் கலைஞர்களைப் புகழ்ந்து பாராட்டுகின்ற போது இத் துறையில் கூடிய கவனம் செலுத்துகின்ற தன்மை ஏற்படும் அந்த வகையில் அவர்களுக்கு பாராட்டு விழாக்களை ஒழுங்கு செய்து கௌரவிப்புக்களைச் செய்தல் வேண்டும். இவ்வாறே பாராட்டுக்களை நடாத்தி உரிய சன்மானங்களை வழங்கும் போது அவர்கள் மன மகிழ்ச்சி காரணமாக முன்னுள்ள காலத்தைவிட கலையை வளர்ப்பதில் மும்முரமாக செயற்பட ஏதுவாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த சமூகத்தினர் பிரதேசத்தில் உயர்குடியினராக காணப்படு பவர்களும் ஒன்று சேர்ந்து பாரம்பரிய கலைகளில் ஈடுபடுகின்ற வேளை இக்கலைகள் புத்துணர்வு பெற்று வளர்ந்து இப்பிரதேச சமூகத்தினரிடையே பயில் நிலையில் காணப்படும் கலாசாரப்பேரவை மற்றும் கலாசார அதிகாரசபையின் ஊடாக ஒவ்வொரு கலைச் செயற்பாடுகளுக்கும் கலைவடிவம் கொடுப்பவர்களாக பொறுப்பளிக்கப் பட்ட உத்தியோகத்தர்கள் செயலாற்ற வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களிடையே, ஆசிரியர்களிடையே இத்தகைய கலைச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இது சம்மந்தமான பாடப்பரப்புகளை பாடவிதானங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆலயத்திருவிழாக்களின் போது அதிக பணம் கொடுத்து பாட்டுக்கச்சேரிகள் நடாத்துவதற்குப் பதிலாக இத்தகைய கூத்துக்களை நடாத்துவதன் ஊடாக இக் கலைப்பாரம்பரியத்தினை தொடர்ந்து பேணுவதற்கு முடியும்.

பொதுவாக எந்தவொருகலையும் மக்கள் இரசனைக்கு ஏற்ப படைக்கப்படுவது அவசியம் எனவே இக்கலைவடிவமானது மீளுருவாக்கம் செய்யப்பட்டு மேடையேற்றும் போது கலை ஆர்வலர்கள் அதிகரிப்பை கூட்ட முடியும்.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள், கலாசார பேரவை, அதிகாரசபை, ஆலயநிர்வாகத்தினர், சனசமூக நிலையங்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்கள், ஆய்வாளர்கள் எனப்பலரும் முன் வந்து நிதியுதவி வழங்கி ஊக்கப்படுத்துவதன் ஊடாக இத்தகைய கலை வடிவங்களை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

*திருமதி. ம. கவிதா*
*அபிவிருத்தி உத்தியோகத்தர்*
*பிரதேச செயலகம்*
*பூநகரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்றத்திட்டங்களில் கனகபுரம் படித்த வாலிபர்குடியேற்றத்திட்டத்தின் வளர்ச்சி

வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தையும், தெற்கே வவுனியா மாவட்டத்தையும், கிழக்கே முல்லைத்தீவு மாவட்டத்தையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டு ஓங்கியுயர்ந்த தென்னந்தோப்புக்களையும், செந்நெல் வயல்நிலங்களையும் கற்பக தருக்களெனப் போற்றப்படுகின்ற பனைகளையும் பன்நெடுங் காடுகளையும் கடல்கள், கடல்நீரேரிகள், குளங்கள், ஆறுகள், வாய்க்கால்கள் போன்ற நீர்மூலங்களையும், உப்பளங்களையும் உழைக்கின்ற மனிதவளத்தினையும் கொண்ட இயற்கை எழில்மிகு மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் விளங்குகின்றது.

இலங்கையின் மனிதக்குடியிருப்பின் தொடக்கப் புள்ளியாக வரலாற்ராசிரியர்களாலும் முதுநிலை எழுத்தாளர்களாலும் அடையாளப்படுத்தப்படுகின்ற இப்பிரதேசம் இரணைமடுக்குளம், அக்கராயன்குளம், கல்மடுக்குளம், வன்னேரிக்குளம், கரியாலை நாகபடுவான்குளம், புதுமுறிப்புக்குளம், பிரமந்தனாற்றுக்குளம், கனகாம்பிகைக்குளம் என்பனவற்றினை மூலதனமாகக்கொண்டு அமைந்திருப்பதனால் விவசாய உற்பத்திகளுடன் இணைந்த வாணிப நகரமாக விளங்குவதையும் அவதானிக்கலாம்.

குடியிருப்புக்களற்ற காடுகளாகவும், புதர்களாகவும் காணப்பட்ட இம்மாவட்டத்தின் பலபகுதிகள் காடுகள் வெட்டப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டமையால் குடியேற்றத்திட்டங்கள் மூலமாக அபிவிருத்தி அடைந்த மாவட்டம் என்று கூறுவதும் மிகப்பொருத்தமானதாகும். கிளிநொச்சி மாவட்டத்தின் நில அபிவிருத்தியிலும், விவசாய பொருளாதார அபிவிருத்தியிலும், சமூகபண்பாட்டு கலாசார மேம்பாட்டிலும் இக்குடியேற்றமுறையானது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிரந்தரக் காணிகளற்றோரும், குடிநீர்வசதி இல்லாத பிரதேசங்களில் குடியிருந்தோரும், உவர்நிலப் பகுதிகளில் வசித்தோரும் இக்குடியேற்றத்திட்டங்களில் உள்வாங்கலாயினர். பின்னர் விவசாய நோக்கத்திற்காகவும், தொழில் முயற்ச்சியின் காரணமாகவும் பலர் குடியேறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலம் முதல் இன்றுவரை குடியான்கள் குடியேற்றத்திட்டம், மத்திய வகுப்பினர் குடியேற்றத்திட்டம், படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம், கிராம விஸ்தரிப்புத்திட்டம் என்ற அடிப்படையில் கட்டம் கட்டமாக மக்கள் இப்பிரதேசத்தில் குடியேற்றப்பட்டனர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டில் ஏற்பட்ட இனங்கலவரங்களின் காரணமாகவும் வன்செயல்களின் காரணமாகவும் மலைநாட்டுப் பிரதேசம் மற்றும் வேறுமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் குடியேறியமை மற்றும் குடியேற்றப்பட்டமையும் குடியேற்றத்திட்டங்கள் அதிகரிப்பதற்கு காரணமாயிருந்தன என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

1936ம் ஆண்டு கணேசபுரத்தில் ஆளுக்கு 5ஏக்கர் வயல் நிலமும், இரண்டு ஏக்கர் உயர்நிலமும் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு நூற்றுஎட்டுப்பேர் குடியமர்த்தப்பட்டனர். இக்குடியேற்றவாசிகளே கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது குடியேற்றவாசிகளாக குறிப்பிடப்படுகின்றனர். பின்னர் நான்கு ஏக்கர் வயல் நிலமும், நான்கு ஏக்கர் மேட்டு நிலமும் என்ற அடிப்படையில் நூற்றுத் தொண்ணூற்றி இரண்டு (192) பேருக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு குடியேற்றப்பட்ட உருத்திரபுரம் 10ம் வாய்க்கால் கிராமமானது இரண்டாவது குடியேற்றமாக அறிமுகப்படுத்தபபட்டது. 1951 ஆம் ஆண்டு எட்டாம் வாக்கால் பகுதியில் 108 குடும்பங்களும் 1952 ஆம் ஆண்டு 394 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டனர்.

படித்தவாலிபர் குடியேற்றத்திட்டம் என்ற வரையறையில் 1954ஆம் அண்டு வட்டக்கச்சி சிவிக்சென்ரர் பகுதியில் மூன்று ஏக்கர் வயல் நிலமும், இரண்டு ஏக்கர் உயர்நிலமும் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு 89 பேர் குடியமர்த்தப்பட்டனர். பின்னர் பகுதி பகுதியாக குளங்களை அண்டிய பகுதிகளில் மேட்டுநிலங்களிலும் பல குடியேற்றத்திட்ங்கள் ஏற்படுத்தப்பட்டன. இக்குடியேற்றங்களால் காடுகளால் சூழ்ந்திருந்த பிரதேசங்கள் தொடர் குடியிருப்புக்களாகவும், நெற்களஞ்சியங்களாகவும் வளர்ச்சியடைந்ததுடன் தருசு நிலங்கள் நெல்வயல்களாகவும், மேட்டு நிலங்கள் விவசாய நிலங்களாகவும், பண்ணைகளாகவும் மாற்றமுற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950ஆம் ஆண்டுகளில் வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்காக பெரும்பாலான வடபகுதி மக்கள் தென்னிலங்கைக்கு தொழில் தேடிச் சென்றனர். அங்கு அவரவர் தகைமைகளுக்கேட்ப தொழில்களைப் பெற்று சம்பாதிக்கலாயினர். பாடசாலைகள் மற்றும் திணைக்களங்களில் அரச உத்தியோகத்தர்களாக பணிபுரிந்தனர். பெருந்தோட்டங்கள். மற்றும் வணிகநிலையங்களில் வேலை செய்ததுடன் சொந்தமாக பலர் வணிக நிலையங்களை அமைத்து வியாபாரம் மூலம் முன்னேற்றம் கண்டனர். தமது கடின உழைப்பாலும் புத்திசாதுரியமான செயற்பாடுகளாலும் எல்லா நிலைகளிலும் சிறப்புற்று விளங்கினர்.

1958 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக தென்னிலங்கையில் தொழில் புரிந்து வந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அரச, தனியார்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் வியாபாரிகள் வடக்கு, கிழக்குப் பகுதிக்கு கப்பல் மூலம் அப்பிவைக்கப்பட்டனர். இதனால் தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியானது. தென்னிலங்கையிலிருந்து வடபகுதிக்கு கிடைக்கப்பெற்ற வருவாய்களும், இறக்குமதிகளும் குறைவடையத் தொடங்கின. இச்சந்தர்ப்பத்தில் தன்னிறைவுப் பொருளாதாரத்தினை மேம்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

இவ்வாறான சூழலில் தமிழரின் பாரம்பரிய தொழிலான விவசாயத்தினையும், கால்நடை வளர்ப்பினையும், மீன்பிடியினையும் விருத்தி செய்வதன் மூலம் நமது தேவையினை நிறைவு செய்து கொள்வது மட்டுமன்றி வருமானத்தினையும் ஈட்டிக்கொள்ளலாம் எனப்பலரும் சிந்திக்கத் தொடங்கினர். இச்சிந்தனைகளை செயற்படுத்துவதற்கும் அதனூடாக பயனடையும் இளைஞர்கள் முன்வரவேண்டுமென பெரியோர்கள் பலரும் கூறிவந்தனர்.

ஆன்மீக ஞானியான யோகர் சுவாமிகள் யாழ் மாவட்டத்தில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்களை கிளிநொச்சியில் குடியமர்த்த ஆவனசெய்யுமாறு யாழ்ப்பாண மாவட்டமும் கிளிநொச்சி மாவட்டமும் இணைந்திருந்த அக்காலப்பகுதியில் அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு.ம.ஸ்ரீகாந்தா அவர்களிடம் கேட்டுக்கொண்டார். இச்சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுத்து ஊக்குவிக்கும் முகமாக மேட்டுநிலப்பயிர்ச்செய்கை, விவசாயம் மற்றும் கோழிவளர்ப்பு, கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபட விரும்புகின்ற இளைஞர்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகளும் அரச உதவிகளும் வழங்கப்படும் என்று அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்துக்களை செவிமடுத்த இளைஞர்களில் சிலர் வன்னிப் பிரதேசத்தில் குடியேற விருப்பம் தெரிவித்தனர். அதனடிப்படையில் 1958ஆம் ஆண்டு ஆவணிமாதம் 22 ஆம் திகதி அவர்களை அழைத்து வந்து புதுமுறிப்பு றோட்டீஸ் புகையிரதக் கடவைக்கு அருகில் முதல் முதலாக காட்டினை வெட்டி "இளங்கதிர் குழு வாழ்க்கைப் பண்ணை" எனும் பெயரினைத் தாங்கிய கனகபுரம் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தினை அரசாங்க அதிபர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்தில் ஒரு ஏக்கர் வயற்காணியும் ஐந்து ஏக்கர் மேட்டுக்காணியும் என்ற அடிப்படையில் இளைஞர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

யானை, கரடி, பன்றி போான்ற காட்டு விலங்குகளின் அடாவடித் தனங்களுக்கும், கொடிய பாம்புகள் போன்றவற்றின் அச்சுறுத்தல்களுக்கும், மத்தியில் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் காடுகளை வெட்டி வதிவிடம் அமைத்து மேட்டு நிலப்பயிர்ச்செய்கையான விவசாயத்தில் ஈடுபட்டு வந்ததுடன் பண்ணைகளை அமைத்து கோழி வளர்ப்பினையும் மேற்கொண்டு வந்தனர். சிறிது காலத்தின் பின்னர் இக்குடியேற்றத்திட்டத்தில் மேலும் பலரை இணைக்கும் வேலைத்திட்டமாக இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம், ஒன்பதாம், பத்தாம், பதினோராம் பண்ணைகள் உருவாக்கப்பட்டு மேலும் பலர் உள்வாங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். இப்பதினொரு பண்ணைகளிலும் மொத்தம் 132 பேர் வசித்து வந்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் தென்பகுதி மரக்கறிகள் சந்தைப் படுத்தப்பட்ட கிளிநொச்சி சந்தையில் கனகபுரம் விவசாயிகளின் மரக்கறிகள் இடம்பிடிக்குமளவுக்கு கனகபுரம் மக்கள் விவசாயத்தில் சிறப்பாக ஈடுபட்டு வந்தனர். கோழிப்பண்ணைகளை அமைத்து கோழிவளர்ப்பினை மேற்கொண்ட இவர்கள் கிளிநொச்சி சந்தையில் கோழிகள், முட்டைகள் என்பவற்றினை விற்பனை செய்ததைவிட பெருந்தொகையான முட்டைகளை வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வந்தனர்.

விவசாய உற்பத்திப் பொருட்களையும் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளையும் விற்பனை செய்வதற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன இவர்களுக்கு கைகொடுத்தன. வெளிநாட்டு பிரமுகர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள், பொது அமைப்புக்கள் சங்கங்கள் எனப்பலர் இக்கிராமத்தின் வளர்ச்சியினை கேள்வியுற்று வந்து பார்வையிட்டதுடன் பாராட்டியும் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது இம்முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றன இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கொடுப்பனவுகள் எனபனவற்றினை வழங்கி ஊக்கமளித்தன. இவ்வாறு செழிப்புற்று பொன்விளையும் பூமியாக விழங்கிய இக்கிராமத்திற்கு "கனகபுரம்" என்ற பெயரினையும் இரணைமடுக்குளக் கரையில் எழுந்தருளியிருந்து இம்மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருந்த அம்பிகைக்கு கனகாம்பிகை என்றும் பெயர் சூட்டப்பட்டது.

கனகபுரம் படித்த வாலிபர் குடியேற்றத்திட்ட மக்களின் வளர்ச்சியினை கண்ணுற்ற பலர் குடியேற்றத் திட்டங்களுக்குள் உள்வர ஆர்வம் காட்டியமையினால் விசுவமடு, முத்தையன்கட்டு, திருவையாறு ஆகிய இடங்களிலும் படித்த வாலிபர்குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு பலர் குடியமர்த்தப்பட்டனர். இக்கால கட்டத்தில் படித்த மகளீருக்கான திட்டங்களையும் அறிமுகப்படுத்த வேண்டுமென பலர் கோரிக்கையிட்டதற்கு அமைய மிருசுவில் பகுதியில் படித்த மகளீர் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டு யுவதிகள் குடியமர்த்தப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாறு கனகபுரம் கிராமம் செழிப்புற்று வளர்ந்த போதிலும் வரட்சியினால் ஏற்பட்ட நீர்ப்பற்றாக்குறை காட்டு விலங்குகள் போன்றவற்றின் அட்டகாசங்களாலும் கனகபுரம் குடியேற்றவாசிகளால் தொடர்ந்தும் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டது. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வீட்டுத்தோட்டமாக பயிற்செய்கையினை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். அரசாங்கத்தின் தன்னிறைவுப் பொருளாதாரத்தினால் கோழிகளுக்கு ஏற்படுகின்ற மருந்துகளுக்கு தடைவிதிக்கப்பட்டது அத்துடன் அதிக வெப்பம் காரணமாக கோழிக்குஞ்சுகள் இறக்கத் தொடங்கின எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டும் இதில் வெற்றிபெற முடியாமல் போனதால் கோழி வளர்ப்பும் கேள்விக்குறியானது. இதனால் குடும்ப வருமானம் வீழ்ச்சியுறத் தொடங்கியது. விவசாயம் மற்றும் நெற்செய்கை என்பவற்றினை மேற்கொள்வதற்காக கிணறு மற்றும் குளங்களில் ஏற்பட்ட நீர்ப்பற்றாக்குறையினை நிறைவு செய்வதற்காக குழாய்க்கிணறுகள் வெட்டப்பட்ட போதிலும் அவையும் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. அயலிலுள்ள அம்பாள்குளம், கந்தன்குளம், கனகபுரம்குளம் என்பன புனரமைக்கப்பட்டன. அவையும் எதிர்பார்த்த பலனைத் தராததால் நெற்செய்கை பண்ணுவதும் கடினமான காரியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்தினை ஈட்டிக்கொள்வதற்காக பலர் வேலை தேடி அலைந்தனர். பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், பரந்தன் இரசாயனத் தொழிச்சாலை போன்றவற்றில் வேலைக்கு இணைந்தனர் சிலரே விவசாயம் மற்றும் கோழி வளர்ப்பில் ஈடுபட்டனர் இருப்பினும் இக்குடியேற்றத்தில் வசித்தவர்கள் வேலைதேடி வெளியே சென்றபோதும் அங்கேயே வசித்து வந்தமை சிறப்புக்குரியதாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் அடிக்கடி ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக இப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து வெளியே சென்ற போதும் மீண்டும் திரும்பி வந்து இங்கேயே குடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிற்பட்ட காலங்களில் ஏற்பட்ட சமுக, பொருளாதார, அரசியல் தாக்கங்களின் காரணமாக இவர்களது கூட்டுவாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இங்குள்ள காணி நிலங்கள் பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு தனித்தனியாக வாழும் முறை உதயமானது. இதனால் வேறு பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு இப்பகுதியில் வந்து குடியேறத்தொடங்கினர்.

இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பொருளாதார நிலையில் மட்டுமல்ல கல்வியறிவிலும் உயர்நிலையினைப் பெற்று விளங்கியிருந்தனர். இக்கிராமத்தில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல பட்டதாரிகள் உருவாகி கிராமத்திற்கு மட்டுமன்றி நாட்டிற்கே பெரும் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர். திரு.நா.சோதிநாதன் அவர்கள் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இங்கிருந்து படித்து உயர்பட்டம் பெற்று ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக சேவையாற்றியமை மட்டுமன்றி கனகபுரம் கிராமத்தின் வளர்ச்சிக்கும் எழிச்சிக்கும் முக்கிய கர்த்தாவாக அன்றிலிருந்து இன்றுவரை செயற்பட்டுக் கொண்டிருப்பதுடன் பல சமுகநலப் பணிகளையும் ஆற்றிவருகின்றமை இவ்விடத்தில் நினைவு கூறப்படுவது பொருத்தமானதாகும்.

வே. மார்க்கண்டு, செல்லையா, நல்வேல்நாதன், நா.நடராசா, சு.கதிர்காமத்தம்பி, பா.குலசேகரம், பொ.தம்பிராசா, கோபாலபிள்ளை, சி.கனகேந்திரம் செ.குஞ்சிதபாதம், அ.கனகரத்தினம் நா.சண்முகம், மு.சீவரட்ணம் கு.கதிரேசுத்தம்பி, ஜி.ஜே.சபாநாதன், பரஞ்சோதி, பொன்னம்பலநாதன், ம.ஜெரோம்பிராங், ஜே.எம்.பி.வால்டர், பற்றிக்குணநாயகம், ஆர்.பி.இராசநாயகம், இமானுவேல், என்.சுப்பிரமணியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.பி.மரியரத்தினம் போன்றவர்கள் இக்கிராமமும் மக்களும் பேரோடும், புகளோடும் நல்வாழ்வு வாழ அயராது உழைத்துக் கொண்டிருக்கும் உத்தமர்களாக இனங்காணப்படுகின்றனர்.

இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு மேற்குறிப்பிட்டவர்களுடன் அரச அதிகாரிகள், நலன்விரும்பிகள் மட்டுமன்றி இக்கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இளைஞர் முன்னேற்றக்கழகம், கனகபுரம் விளையாட்டுக்கழகம், இளைஞர் விவசாயக்கழகம், கால்நடை அபிவிருத்திக்கழகம், ஸ்ரீகாந்தா முன்பள்ளி, ஸ்ரீகாந்தா சனசமுகநிலையம், கரைச்சி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், சிக்கனக் கூட்டுறவுச்சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், அறநெறிப்பாடசாலை போன்ற சமுக நலன் சாரந்த அமைப்புக்கள் கிராமத்தின் முன்னேற்றத்திற்காக அரும்பணி ஆற்றியுள்ளன.

இக்கிராமத்திலுள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்காக கட்டடம் ஒன்றினை அமைத்து 1969 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தினை வைபவரீதியாக ஆரம்பித்து மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளுக்கு அத்திவாரம் இடப்பட்டது. ஆறு மாணவர்களுடன் ஆரம்பமான கற்றல் செயற்பாடுகள் படிப்படியாக அதிகரித்து 1972 ஆம் ஆண்டு 272 மாணவர்களும் 1980 ஆம் ஆண்டு 565 மாணவர்களும் என மாணவர்களின் தொகை அதிகரித்தது. பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர்கள் சங்கம் என்பன ஸ்தாபிக்கப்பட்டதுடன் மாணவர்களை உள்ளடக்கி மாணவர் மன்றம், கலைமன்றம் என்பனவும் அமைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகளும் சிறப்பாக இடம்பெற வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டன.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த(சா/த) பரீட்சை மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சை என்பவற்றில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை பெற்றிருப்பது இப்பாடசாலையின் சிறப்பான கல்விச்செயற்பாட்டினை பறைசாற்றுகின்றது. இப்பாடசாலையில் கல்வி பயின்ற பலர் உயர்கல்வியினைப் பெற்று பொறியியலாளர்களாக, வைத்தியர்களாக, அதிபர்களாக, ஆசிரியர்களாக, திணைக்களங்களின் அதிகாரிகளாக இம்மாவட்டத்திலும் வெளிமாவட்டங்களிலும் கடமையாற்றியுள்ளதுடன் பலர் தற்பொழுதும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

றோயல் கல்வி நிலையம், பொதிகை கல்வி நிலையம், வீனஸ் கல்வி நிலையம், ஆங்கிலக் கல்வி நிலையம், எடிசன் கல்வி நிலையம், சிவபூமி பாடசாலை போன்ற தனியார் கல்வி நிலையங்களும் ஸ்ரீகாந்தா முன்பள்ளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றது மட்டுமல்லாமல் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களிலுள்ள விளையாட்டுக் கழகங்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற்று விளையாட்டுக்கழகத்திற்கு மட்டுமல்லாது கிராமத்திற்கும், மாவட்டத்திற்கும், நாட்டிற்கும் பெருமையினைப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த படித்த வாலிபர் குடியேற்றத்திட்டங்களில் முதலில் குடியேற்றப்பட்ட குடியேற்றத்திட்டமாக கனகபுரம் படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம் அமைந்த காரணத்தாலும் எந்தவித திட்டமிடலும், தூரநோக்கும் இல்லாமல் குடியேற்றப்பட்ட திட்டமாக இத்திட்டம் இருந்த போதிலும் யுத்த அனர்த்தங்களால் பலமுறை இடப்பெயர்வுகளை சந்தித்த போதிலும் பல்வகைச் சிறப்புக்களையும் பெற்று, சமூக பொருளாதார அபிவிருத்திகளில் முன்னேற்றமடைந்து அனைத்துத் துறைகளிலும் எழுச்சி பெற்று மூன்று தலைமுறைகளைக் கண்டு அறுபதாவது அகவையில் காலடியெடுத்து வைத்திருப்பது அவ்வூர் மக்களின் அயராத உழைப்பிற்கும் அர்ப்பணிப்பான சேவைக்கும் கிடைத்த வெற்றியாகும்.

*காசிநாதர் இராசதுரை BA(Hons), MA*
*மாவட்ட கலாசார உத்தியோகத்தர்*
*கிளிநொச்சி மாவட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணைகள்**

1. திரு க.குணராசா - கிளிநொச்சியின் கதை
கிளிநொச்சி கந்தசாமிக்கோவில்
மகா கும்பாபிசேக மலர்
ஆலய பரிபாலனசபை
வெளியீடு – 1990

2. திரு ப.முகுந்தன் - கரை எழில்
கலாசாரப் பேரவையும் பிரதேச
செயலகமும், கரைச்சி - 2014

3. திரு ப.முகுந்தன் - கரை எழில்
கலாசாரப் பேரவையும் பிரதேச
செயலகமும், கரைச்சி – 2013

4. திருமதி றூ.கேதீஸ்வரன் - கிளிநொச்சி மாவட்ட
தொன்மையின் மூலங்கள்
மாவட்டச் செயலகமும்
பண்பாட்டுப் பேரவையும்,
கிளிநொச்சி - 2014

5. திரு க.சுந்தரலிங்கம் - வன்னி வரலாறும் பண்பாடும் -
2014

6. நேர்காணல்கள் - ஊர்ப்பெரியவர்கள், அதிகாரிகள்,
கிராம உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு

வானூறி மழை பொழியும்
வயலூறிக் கதிர் விளையும்
தேனூறிப் பூவசையும்
தினம் பாடி வண்டாடும்
காலூறும் அழகு நதி
கவிபாடிக் கரையேறும்.
பாலூறும் நிலம் கூட
பசியாறும் இரணைமடு

தேரோடித் தெருமிளிரும்
திருவோடி ஊரொளிரும்
இறையோடும் உயர்பக்தி
மதமோடி உறவாடும்
வேரோடிக் கலை வளரும்
விரலோடித் தாளமிடும்
பாரோடிப் பொருள் வெல்லும்
பொன்னோடும் இரணைமடு

சேறோடி நெல்விளைத்து
ஊரோடி உணவளித்து
யாரோடி வந்தாலும்
பண்ணோடு வரவிசைந்து
நீரோடி வளர்வாழை
நிலமோடி இலை விரிக்க
ஓடோடி விருந்தோம்பி
விண்ணோடும் இரணைமடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மணக்கும் வெற்றிலைக்கும்
வயல்மணக்கும் குளமிருக்கு
காய்மணக்கும் தென்னைக்கும்
கைமணக்கும் ஏறெடுத்து
சேய் மணக்கும் பாலெடுத்து
சிகை மணக்கும் பெண்ணுக்கும்
தாய் மணக்கும் பண்புக்கும்
தரம் மணக்கும் இரணைமடு

தலையாட்டுக்கும் பொம்மைக்கும்
அழகூட்டும் பாட்டுக்கும்
கலையூட்டும் கவிலுக்கும்
சிலை காட்டும் கோயிலுக்கும்
மழை கூட்டும் மண்ணுக்கும்
பிழை யோட்டும் தமிழுக்கும்
நிலை நாட்டும் புகழோடு
எழில் காட்டும் இரணைமடு

*அ. மங்களராசா*
*பாரதிபுரம்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறியும் அண்மைக் காலப் போக்கும்

"ஆன்மீகம்" என்ற சமுத்திரத்தின் பாலைக் குடிக்க விளையும் பூனை போல நான் எழுதும் இவ்விடயமும் இன்று உண்மையில் உத்தமராய் வாழும் பல உள்ளங்களுக்கு உன்னத இறைவனின் அருட்கடாட்சம் பெற வேண்டி அவர்களின் அறம் சார் சேவைக்கு தலைசாய்ந்து தொடர்கின்றேன்.

இன்றைய சமுதாயம் ஓடிக்கொண்டிருக்கின்றது. பணம், பதவி, படிப்பு என எல்லாமே அவசரமாய் முடிக்க வேண்டியவையாகிப் போய் மனிதன் அறத்தை மறந்தவனாய் அழிவைத் தேடும் அவலங்கள் இன்று மிகுதியாய் போய் கிடக்கிறது உலகம் நின்று நிதானிக்கக் கூட நேரமில்லை ஏன் உண்ண உறங்கக் கூட நேரமில்லை எனும் போது அறத்திற்கு எங்கே நேரம்?

அன்றைய தமிழன் நில்லென்றால் மழை நிற்கும் செல் என்றால் கடல் வழிவிடும். இயற்கையையும் தன்னையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்து காரியம் சாதித்தான். காயத்திரி மந்திரங்களின் ஊடாக காரியங்களை சித்திபெறச் செய்தான். காய்கனிகளை உண்டு கவலையின்றி வாழ்ந்தான். காலை எழுந்தது முதல் நித்திரைக்கு செல்வது வரை, ஏன் நித்திரையிலும் கூட இறை சிந்தனையும் தூய எண்ணமும் கொண்டு செயலாற்றினான் பிறந்தது முதல் இறக்கும் வரை ஏன் இறந்த பின்னும் கூட ஒருவன் எப்படி எவ்வாறு வாழ வேண்டுமென ஒதுக்கப்பட்ட அழிக்கமுடியாத பாரம்பரியத்தை கொண்டவர்கள் ஆனால் நாங்கள் இன்று அவற்றைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டு Face book இல் தேடிக் கொண்டிருக்கும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை வேதனைக்குரியது.

விரதங்கள், பண்டிகைகள், சடங்குகள், என வகுத்து அதனூடாக ஒரு நெறிவாழ்வை வாழ்ந்து காட்டி சென்ற பரம்பரைகளில் வந்த நாங்கள், இன்று அறம் என்றால் என்ன விலை? எனக் கேட்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

விரதங்கள் இன்று வேடிக்கையாகின பொழுது போக்காகவும் யாரும் எவரும் விரதம் இருக்கலாம். மனச்சுத்தம் இல்லை புறத்தூய்மை இல்லை பெயரளவில் "நான் விரதம் பிடிக்கின்றேன்" பின்னால் சினிமா படங்கள், சீரியல்கள் என பொழுது போக்கினால் மனத் தூய்மை எங்கே வரும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிகைகள் பட்டாசு வெடிகளாய் சூழலை மாசுபடுத்த பகிர்ந்துண்ணல் போய் பார்டிகள் வந்து விட்டன பசித்தவருக்கு உணவளிக்காமல் நன்றாய் புசித்தவருக்கு மீண்டும் உணவளித்து உபசரிப்போராய் எம்மவர் மாறியதை எப்படி சொல்வது?

சடங்குகள் எல்லாம் சம்பிரதாயமாய் போய் எட்டு மணி நேரம் மண்டபத்தினுள் அடங்கிப் போய் விட்டது. ஏழைகளுக்கு உதவுவது Face book இல் like வாங்க மட்டுமாய் மாறிப்போய் விட்டது. கோயில் திருவிழாக்களில் பக்தி மயம் போய் வீடியோ, செல்பிகளின் வெளிச்சம் குடியேற, ஆலயம் அமையும் தூய்மையும் அகன்று போகின்றன ஆவணப் படுத்தல்களில் ஆர்வம் அதிகமாக ஆண்டவனும் செல்பேன்களில் சிக்குண்டு தவிப்பதை நாம் உணர்வோமா?

Face book இல் அம்மாவை அணைத்து முத்தமழை பொங்க போட்டோக்கள், வாழ்த்துக்கள் ஆனால் தனிமையால் வாடும் பெற்றோருக்கு தண்ணீர் கொடுக்க ஆளில்லை கணவன் மனைவியின் கண்பட்டுப் போய் விடும் ஆனால் வீட்டில் தினமும் குடியும் கூச்சலுமாய் குடும்பம் சந்தி சிரிக்கும் அழகாய் நாலு சுவருக்குள்ளும் நடக்கும் விடையங்களை உலகம் முழுவதும் பார்க்க விடுவதில் அப்படி என்ன சந்தோசம்?

பிள்ளையைப் பெற்றுவிட்டால் ஓராயிரம் கற்பனைகள் பிஞ்சு மனங்களை சுதந்திரமாய் சிந்திக்கவிடாது தம்விருப்பை திணிப்பவர்கள் தான் அதிகம் பள்ளிப்பருவம் என்றால் சொல்லவும் வேண்டாம் பகல் முழுதும் பள்ளி மாலை ரியூசன் இரவில் பேசனல் கிலாஸ் பிள்ளை குந்தியிருக்க நேரமில்லை மனம் விட்டு பேசக்கூட அனுமதி மறுக்கப்படுகின்றது. பின்னர் சிறுவர் துஸ்பிரயோகம் பெண்கள் துஸ்பிரயோகம் என விழா எடுப்புக்களை மேடைப் பேச்சுக்களும் ஆய்வு கட்டுரைகளும் இங்கே அடிப்படை ஆட்டம் காண்கிறது.

பாடசாலைகள் வீடுகளில் வழங்க முடியாத வளர்க்க முடியாத விடையங்களை சிறுவர் கழகங்கள் அறநெறி பாடசாலைகள் நாடுதோரும் உருவாக்கப்பட்டு நற்பணி ஆற்றுகையில் அதனால் பயனடைவோர் எத்தனை பேர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தையும், கணிதத்தையும், விஞ்ஞானத்தையும் ஊட்டுகின்ற பெற்றோர் அறத்தை ஊட்ட தவறுகின்றனர். தனது பிள்ளை படித்து பட்டம் பெறவேண்டுமே என எதிர்பார்ப்போர் பண்பாடு பெறவேண்டாமே என சிந்திப்பதில்லை சிலரது ஏழைகளுக்கு உரிய விடையமாக பார்க்கின்றனர் சில கல்வி கூடங்களில் அதிகாரிகள் ஆசிரியர்கள் அறநெறிக்கு செல்லும் மாணவர்களை கேலி செய்கின்றனர் தண்டிக்கின்றனர் "காவியுடை அணிந்து கொள்ளப்போகிறாயா" "ஆட்டம் என்றால் காணும்" நீ மேளமடிக்கத்தான் சரி) போன்ற வார்த்தைகளால் அறநெறி பாடசாலைக்கு வரும் மாணவர்கள் அவமானப்படுத்தப் படுகின்றனர்.

எனவே இன்றைய சமுதாயத்தின் அபாய நிலையை கருத்தில் கொண்டு எமது சமயம் பண்பாடு கலாசாரம் என்பன அழிந்து போகாமல் காக்கவேண்டியது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும் அதற்கு உறுதுணையாக இருக்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னோடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துளைத்து எமது அறத்தை நிலைநாட்டி மீண்டும் எம் பண்பாட்டுக் கருவூலங்களை கட்டி எழுப்புவது தமிழர் ஒவ்வொருவரதும் ஆத்மார்த்தமான செயலாகும்.

**"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**

*திருமதி வராகினி ஜெகதீஸ்வரன்*
*பெறுப்பாசிரியர்*
*பெரியகுளம் குளக்கட்டு ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி மண்ணில் கத்தோலிக்கம் - ஒரு வரலாற்றுப் பார்வை (சுருக்கம்)

இயல், இசை, நாடகம் எனும் முக்கலையோடும் ஆயகலைகள் அறுபத்து நான்கினோடும் இயைந்து இணைந்தது மனித வாழ்வு. இயற்கையோடு இரண்டறக் கலந்த இறை இயல்களை வாழ்வியலாக்கி மனித வாழ்வின் இலக்கணங்களை வகுத்து வாழ்வது தமிழர் மரபு. இறைவனோடு சங்கமித்து எம் உடல் பொருள் ஆவியனைத்தையும் ஆட்கொள்ளும் அகிலத்தின் மகாசக்திக்குள் இட்டுச் செல்லும் வாயில்களாக உலகின் மதங்கள் செயற்படுகின்றன என்றால் அது மிகையாகாது. இலங்கையில் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்கள் தத்தம் மதங்களின் வழிபாட்டு முறைகளில் மனிதனை இறைவரோடு ஒன்றிக்கச் செய்யும் பணிகளைச் செவ்வனே மேற்கொண்டு வருகின்றன. அவ்வகையில் "கிளிநொச்சி மண்ணில் கத்தோலிக்கம்" பற்றி நோக்கும் போது 16ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலேயே கத்தோலிக்க மதத்தின் பரம்பல் கிளிநொச்சியை அண்டிய பகுதிகளில் ஆரம்பமாகியமையைக் காணமுடிகின்றது.

16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று அரசுகள் இருந்தன. வன்னிப் பகுதியில் பெயரளவில் கண்டியரசனின் கீழ் காணப்பட்டது. ஆயினும் கிளிநொச்சிப் பகுதிகள் பெருமளவில் காடுகளாகவே காணப்பட்டன. பூநகரி, பளை போன்ற பகுதிகளில் காலப்போக்கில் சிறியளவில் குடியிருப்புக்கள் உருவாகின. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பளை, பூநகரி போன்ற பகுதிகளில் கத்தோலிக்கத் திருச்சபை அறிமுகமானது. 17ஆம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாணம், மன்னார், மாதோட்டப் பகுதியில் ஏற்பட்ட சமய சமூக மாற்றங்களின் தாக்கமானது வன்னிப் பகுதியிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. 1934ஆம் ஆண்டு பூநகரி எனும் கிராமத்திலிருந்த கொஞ்சேஞ்சி மாதா ஆலயம் பிரான்சிஸ்கன் சபைக்குருக்களின் பாரமாரிப்பில் இருந்ததாக பிரான்சிஸ்கன் சபையினரின் பதிவுகள் குறிப்பிடுகின்றன. அவ்வாறே பளை மறைத்தளத்தில் 1626இல் இயேசுசபைக் குருக்களின் பணி பற்றிய ஆதாரங்கள் உண்டு. 1640இல் குடாநாட்டிலிருந்து பல காரணங்களால் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்ற கத்தோலிக்கக் குடும்பங்கள் சிறுசிறு குழுமங்களாக வாழத்தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகப் பளை போன்ற எல்லையோர மறைத்தளங்களை இயேசுசபைக் குருக்களில் ஒருவரே பாரமரிக்க வேண்டியிருந்ததாக பதிவுகள் குறிப்பிடுகின்றன. அக்கால கட்டத்தில் கற்களால் கட்டப்பட்ட ஆலயங்கள் எதுவும் இருக்கவில்லை. கத்தோலிக்கர் வாழ்ந்த இடங்களில் சில கொட்டில் கோவில்கள் இருந்திருக்கலாம்.

வன்னிப் பகுதியில் அடர்ந்த காட்டுப் பகுதியாக இருந்தமையாலும் திருடர், வனவிலங்குகளால் ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயங்கள் இருந்தமையாலும், குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் காடுகளில் மறைந்திருந்து பொருட்களை சூறையாடியதாலும் குருக்கள் மக்கள் வசித்த இடங்களைத் தேடிச் சென்று பணியாற்றுவது ஆபத்து நிறைந்ததாக இருந்தது. இதனால் இங்கிருந்த கத்தோலிக்கர் தமது ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டனர். மறைக்கல்வி, திருமுழுக்கு, முதல்நன்மை, திருமணம் போன்ற திருவருட் சாதனங்கள் இல்லாது நீண்டகாலம் இருக்கவேண்டியேற்பட்டது. இவ்வாறான பகுதிகளுக்கு நீண்ட இடைவெளிகளில் மக்களைச் சந்திக்கவரும் குருக்களின் பணி போதாததாக இருந்தாலும் அவ்வாறு பணி செய்ய வரும் குருக்களுக்கு இம்மக்களுக்குப் பணிசெய்வது பெரும் சுமையாக இருந்தது. அவ்வாறு வரும் குருக்களின் பணி ஒரு நல்லாயன் பணியாக, காத்திரமானதாக, நல்ல கிறிஸ்தவர்களுக்கு அமிர்தமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நெருக்கடி மிகுந்த காலங்களில் குருக்கள் தங்கியிருந்து பணியாற்ற முடியாத வேளைகளில் குருவானவர் ஒரு கத்தோலிக்க குடியிருப்பை விட்டு அடுத்த குடியிருப்பிற்குச் செல்லும் போது தொடர்ந்தும் அங்கு வசிக்கும் கத்தோலிக்கருக்கு மறைக்கல்வி புகட்டவும், கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் உறுதிப்படுத்தவும், ஆசிரியர்களையும். புனித சவேரியார் காலத்திலிருந்து தமிழ்ப் பகுதிகளில் குருக்கள் இல்லாத கிராமங்களில் மக்களின் கிறிஸ்தவ வாழ்வைக் கண்காணித்து வந்த கணக்குப் பிள்ளைமாரையும் ஏற்படுத்திச் சென்றனர். இவர்கள் தான் இப்பகுதியில் குருக்கள் இல்லாத போது கத்தோலிக்கரின் ஆன்மீக வாழ்வின் காவலராயிருந்தனர்.

17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் போர்த்துக்கேயர் வெளியேற்றப்பட்டதுடன் கத்தோலிக்கக் குருக்களும் வெளியேற்றப்பட்டதனால் இலங்கைக் கத்தோலிக்கர் அனைவரும் பாதிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் வன்னிப் பகுதியில் வசித்த கத்தோலிக்கர் நீண்டகாலம் எதுவித பராமரிப்போ, திருப்பலிகளோ, விசுவாச உறுதிப்படுத்தல்களோ இல்லாதிருந்ததால் கணிசமான தொகையினர் தமது பழைய வாழ்க்கை முறைகளுக்கும், மதத்திற்கும் திரும்பினர். தொடர்ந்து ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர் தம்மதத்தை சுகந்திரமாகப் பின்பற்ற முடியாதிருந்த போதும் மத அடையாளங்களைப் பேணி வந்தனர்.

மேலும் யாழ்குடாநாட்டில் ஏற்பட்ட கலாபனைக்கும் கட்டாய மதமாற்றத்திற்கும் முகம்கொடுக்க விரும்பதாக சில கத்தோலிக்கர் வன்னிப்பகுதிக்கு குடிபெயர்ந்தனர். இவர்களுள் 700 கத்தோலிக்கரும் 07பிரான்சிஸ்கன் சபை குருக்களும் அடங்குவர். இவர்கள் பூநகரியூடாக மடுப்பகுதியைச் சென்றடைந்தாகக் கூறப்படுகின்றது. 1689ஆம் ஆண்டில் யோசேவ்வாஸ் அடிகளாரைப் பிடிக்க முயன்ற டிசம்பர் நள்ளிரவுத் திருப்பலியின் பின் முடுக்கிவிடப்பட்ட குருவேட்டையினால் அவரைப் பாதுகாப்பாக வன்னியூடாக அழைத்துச் சென்றனர். இப்பயணத்தின் போது சில நாட்கள் வன்னிப் பகுதியில் தங்கியிருந்து கத்தோலிக்கரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தியிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதன்பின் மாதோட்டம், பூநகரி ஆகிய இடங்களிலும் யாழ்ப்பாணத்திலும் அவர் ஏறக்குறைய 10 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் ஒரிற்றோரியன் சபைக்குருக்கள் வரத்தொடங்கியதால் அவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப இலங்கை பல மறைத்தளங்களாகப் பிரிக்கப்பட்டது.

1696ஆம் ஆண்டு பெற்றோ பெர்ராவோ அடிகளாருக்கென பிரிக்கப்பட்ட பகுதியில் பூநகரிப்பகுதியும் அடங்கியுள்ளது. இக்காலப்பகுதியில் இலுப்பைக்கடவை, கோவிற்குளம், பல்லவராயன்கட்டு, பூநகரிப் பகுதியில் கோயில்களும் கத்தோலிக்கக் குடியிருப்புக்களும் இருந்துள்ளன. 1796இல்ஆங்கிலேயர் வருகையுடன் கத்தோலிக்கருக்கு மதச் சுகந்திரம் அளிக்கப்பட்டது. 1905ஆம் ஆண்டு ஏற்பட்ட அபிவிருத்தியில் வடபகுதிக்கான தொடருந்துப் பாதையும் A9 பாதையும் ஆரம்பிக்கப்பட்டமையுடன் கிளிநொச்சிப் பகுதி வளர்ச்சியடைய அத்திவாரமிடப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வன்னியிலிருந்த குளங்கள் புனரமைக்கப்பட்டன. இதனால் நெற்செய்கை சிறப்பாகி ஒளிமயமான எதிர்காலம் உருவாகும் எனவும், கிளிநொச்சியில் குடியிருக்கும் படியும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த பாதுகாவலன் பத்திரிகை தொடர்ந்தும் எழுதி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான குடியேற்றங்களுக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுக்குமாறு சகல அரச அதிபர்களையும், ஆளுநர்களையும் பத்திரிகை தூண்டியது.

இத்தகைய ஊக்குவிப்புக்களினாலும் போக்குவரத்துப் பாதைகள், குளங்கள், புனரமைப்புப் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இடம்பெற்றமையாலும் மக்கள் வசிக்கக் கூடிய பகுதியாக கிளிநொச்சிப் பகுதி உருமாற்றம் பெற்றது. இதனால் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலிருந்தும் குறிப்பாக நெடுந்தீவிலிருந்து கணிசமான தொகை மக்கள் கிளிநொச்சி, உருத்திரபுரம், கரடிப்போக்கு, வட்டக்கச்சி, பரந்தன், தர்மபுரம் உடையார்கட்டு, கண்டாவளை, விசுவமடு, முத்துஐயன்கட்டு போன்ற இடங்களில் வந்து குடியேறினர். இவர்களில் கணிசமான தொகையினர் கத்தோலிக்கர்களாக இருந்தனர். இவர்கள் தாம் குடியேறிய பகுதிகளில் ஆலயங்களை அமைத்து வழிபாடுகளை மேற்கொண்டனர். இதுவரைகாலமும் பளை, பூநகரி போன்ற பகுதிகளில் மாத்திரம் இருந்த கத்தோலிக்க மதம் இத்தகைய குடியேற்றங்களின் பின் கிளிநொச்சியில் பரவ ஆரம்பித்தது. இதுவே கிளிநொச்சியில் கத்தோலிக்க மதத்தின் ஆரம்பமாக இருந்தது எனலாம். இவ்வாறு குடியேற்றங்களை அண்டி ஆரம்பிக்கப்பட்ட ஆலயங்கள் பெரும்பாலும் மண்சுவர்களாலும், கிடுகுகளாலுமே அமைக்கப்பட்டன. காலப்போக்கில் இவ்வாலயங்கள் கற்களால் நிர்மாணிக்கப்பட்டன.

1931ஆம் ஆண்டில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் கிளிநொச்சிக்கு வந்திருந்த போது அங்கு ஒரு கொட்டிலில் ஆலயம் இருந்ததாகவும், பள்ளமாக தண்ணீர் நிற்கக் கூடியதாக இருந்த அவ்வாலயத்திற்கு ரூபா35 செலவில் புற்றுமண் போட்டு உயர்த்தியதாகவும் அவரது பதிவுகளில் காணக்கிடக்கின்றது. மீண்டும் 1934ஆம் ஆண்டில் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் மடு பெருநாளுக்குச் செல்லும் போது இங்கிருந்த மக்களின் பங்களிப்போடு யூலை24ஆம் திகதி இவ்வாலயத்தில் திருவிழா கொண்டாடப்பட்டது. ஆயினும் இங்கு காணப்பட்ட ஆலயம் வலுவற்றதாக இருந்ததால் அதே ஆண்டில் அவ்வாலயம் காற்றில் தாக்குப் பிடிக்க முடியாமல் சரிந்து விழுந்ததாகவும், இதனால் 1935ஆம் ஆண்டில் அவ்வாலய திருவிழா கொண்டாடப்படவில்லை எனவும் காணக்கிடக்கின்றது. சுவாமி ஞானப்பிரகாசரைத் தொடர்ந்து அவருக்கு இருந்த யோசப் சூசைநாதர் அ.ம.தி (1906-1963) அவர்கள் தற்போதுள்ள கிளிநொச்சி மற்றும் சூழவுள்ள ஆலயங்களின் வளர்ச்சியில் முக்கிய பங்குவகித்தார் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்ரி செல்வரட்ணம் அ.ம.தி.(1918-1971) அடிகளாரின் பணிகள் கிளிநொச்சியில் கத்தோலிக்கத்தின் வளர்ச்சியின் அர்ப்பணிப்பான பணியாகும். 1954இல் கிளிநொச்சிப் பங்கிற்கு அனுப்பப்பட்ட இவர் இங்கு வாழ்ந்த மக்களின் ஆன்மீக வளர்ச்சியில் காத்திரமான தாக்கத்தைச் செலுத்தினார். இக்காலகட்டத்தில் கிளிநொச்சி நகரப்பகுதியில் அமைந்துள்ள புனித திரேசாள் ஆலயத்தை தலைமைப் பங்காகக் கொண்டு சூழவுள்ள பங்குகள் இயங்கத்தொடங்கின.

கிளிநொச்சியில் கத்தோலிக்க மதத்தின் வளர்ச்சிப்பணியில் முக்கியமான பணித்தளமாக விளங்கியது உருத்திரபுரம் ஆகும். இதற்குக் கீழும் பல உப மறைத்தளங்களும் ஒரு சிறுவர் இல்லமும் இருந்தன. இச்சிறுவர் இல்லம் இன்றும் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. 1960இல் இப்பங்கிற்கு அருட்பணி மரியாம்பிள்ளை இம்மானுவேல் அ.ம.தி அவர்கள் அனுப்பப்பட்டார். இவர் நான்கு வருடங்கள் காத்திரமான பணியாற்றி பல துறைகளிலும் இப்பங்கினைச் சிறப்பாக வளர்த்தார். 1970களுக்குப் பின் கிளிநொச்சிப் பகுதிகளில் உள்ள பங்குகளும் ஒரு நிலையான அமைப்பைப் பெறலாயின. 1983 - 2009 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரினால் கிளிநொச்சி மாவட்டம் பேரிழப்பைச் சந்தித்தது. இக்காலப்பகுதியில் பல தடவைகள் இடம்பெற்ற இடப்பெயர்வுகள், போரின்வடுக்களால் மக்களின் வாழ்விடங்கள் உட்பட வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது. இக்கால கட்டங்களில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய கரித்தாஸ் கத்தோலிக்க நிறுவனத்தினதும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களினதும் பங்களிப்பு மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பெரிதும் உதவியது. குறிப்பாக 1996ஆம் ஆண்டு கரித்தாஸ் (மனித முன்னேற்ற நடுநிலையம்) அமதிபுரம் பகுதியில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியதோடு அப்பகுதியில் தமது அலுவலகத்தை அமைத்து மக்களின் அவலங்களோடு பங்குகொண்டது. இதே காலப்பகுதியில் மக்களின் உளவியல் ஆன்மீக மேம்பாட்டினை மையமாகக் கொண்டு அன்னை இல்ல தொண்டர்கள், அருட்தந்தையர், அருட்சகோதரிகளினதும் தொண்டர் அடிப்படையில் அமைந்த ஊழியர்களுடன் உள ஆற்றுப்படுத்தல் பணியினையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் 2010ஆம் ஆண்டு மீள்குடியேறிய மக்கள் தமது அபிவிருத்திகளை மேற்கொண்டதுடன் ஆலயங்கள் வழிபாடுகள் புத்துயிர் பெறத் தொடங்கின. இக்காலகட்டத்தில் மக்களின் உள ஆற்றுப்படுத்தல், வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புதல், இறைநம்பிக்கையைக் கட்டியெழுப்புதலில் குருக்களினதும், அருட்சகோதரிகளினதும் பணி மிகமுக்கியமானதாகக் காணப்பட்டது. 2017 வரை கிளி/முல்லை மறைக்கோட்டங்களின் பொறுப்பு வாய்ந்த பணித்தளமாக கிளிநொச்சி பங்கு காணப்பட்டது. 2017இன் பின் கிளிநொச்சி தனியொரு மறைக்கோட்டமாகப் பிரிக்கப்பட்டது. தற்போது கிளிநொச்சி, உருத்திரபுரம், அக்கராயன்குளம், வட்டக்கச்சி, பரந்தன், தர்மபுரம், பளை, கிளாலி, பூநகரி, வலைப்பாடு, குமுழமுனை, முழங்காவில் ஆகிய 12 பங்குகளிலும் 80 பதிவு செய்யப்பட்ட ஆலயங்களையும் தன்னுள் கொண்ட மறைக்கோட்டமாக கிளிநொச்சி விளங்குகின்றது.

தற்போது அருட்பணி ஜெ.யேசுதாஸ் அடிகளார் குருமுதல்வராக இருந்து கிளிநொச்சியில் கத்தோலிக்க மறையின் வளர்ச்சிக்கு பங்காற்றி வருகின்றார். இவரோடு இணைந்து கரித்தாஸ் நிறுவனம், அன்னை இல்லம், ஏனைய கத்தோலிக்க பாடசாலைகளும் ஆரோகணம் இளைஞர் இல்லம், “உதயதீபம்” சிறுவர் இல்லம் உருத்திரபுரம், அன்பகம் சிறுவர் இல்லம் முழங்காவில் ஆகியனவும், கத்தோலிக்க மத விழுமியங்களுக்கு பங்காற்றுவதுடன் மக்களை ஆன்மீக வழியில் நடத்திச் செல்வதிலும் காத்திரமான பங்காற்றுகின்றன.

செல்வி. உ.லூரிஸ்மேரி
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
மாவட்ட செயலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்து போகும் வாழ்க்கையிலும் கடந்து போகாத கடவுச்சீட்டு

நாலுபுறமும் கடலால் சூழப்பட்ட நாட்டில் வசிக்கின்றோம். சூரியன் அஸ்தமிக்காத சாம்ராட்சியத்தின் கீழ் எமது நாடும் பிரித்தானியாவின் ஆளுகைக்குள் கீழ் இருந்த காலங்களில் கடவுச் சீட்டு (Passport) தேவைப்படாத ஒன்றாக இருந்திருக்கலாம். நாடு சுதந்திரமடைந்த காலம் முதலே பாஸ்போட் எனப்பட்ட கடவுச்சீட்டு தேவைப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது.

உங்கட மகனை நான் அனுப்புகிறேன். அவற்ர புத்தகத்தையும், 50000 ரூபா காசை அட்வான்சாகவும் தாங்கோ. ஓம் தம்பி சொன்ன மாதிரி செய்யிறன். எம்மவரின் புலம்பெயர்வு காலத்தில் சாதாரணமாகப் பேசப்பட்ட வசனங்களில் ஒன்று. ஏஜென்ஸிமாருக்கும் எமக்குமான உரையாடல்களில் இச்சொற்கள் சர்வசாதாரணமாகவே வரும் அது என்ன புத்தகம். பாடப்புத்தகம், பாஸ்போட் (கடவுச் சீட்டு - Passport), மோட்டார் வாகனப் பதிவுப் புத்தகம். ஆகியவை எம்மால் புத்தகமென கூறப்படும் புத்தகங்களாகும். எம்மவருக்கும் புத்தகம் எனப்படும் பாஸ்போட்டுக்கும் இரத்தமும் சதையுமான உறவு ஒன்று உள்ளது.

பலாலி விமான நிலையம் ஊடாக நாம் வெகு சுதந்திரமாக இந்தியாவுக்குப் போய் வந்த ஒரு காலம் இருந்தது. 1974 ஆம் ஆண்டு எனது அப்பாவை பலாலி விமான நிலையம் வரை சென்று இந்தியா பயணமாக வழியனுப்பி வந்தது ஞாபகத்திற்கு வருகிறது. அப்போது பாஸ்போட் இல்லாமல் அவசர காலப்பத்திரம் என்ற ஒரு முறை பயன்படுத்தும் ஆவணம் மூலமாக பயணத்தை மேற்கொண்டோரும் உள்ளனர்.

நாளாந்தம் காலை 10 மணிக்கு பலாலி விமான நிலையத்திலிருந்து தமிழகத்தின் திருச்சி விமான நிலையத்திற்கு விமானமொன்று புறப்படும். அதில் யாழ்ப்பாணத்தில் வெட்டப்பட்ட கிடாய் ஆட்டின் இறைச்சியை விமான நிலைய ஊழியர்கள் மூலமாகத் தமது உறவுகளுக்கு கிரமமாகக் கொடுத்து விட்டோரும் உள்ளனர். கொடிகாமத்திற்கு அங்கால கறுப்பா சிவப்பா எனத் தெரியாமல் தமது ஊருக்குள் முடங்கி வாழ்ந்த காலமொன்றும் இருந்தது. 1977 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம் வந்தது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு இலங்கையர்கள் தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்று கைநிறைய உழைக்கும் நிலை வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது பாஸ்போட் எடுப்பதற்கான ஆள்களின் தொகை சடுதியாகப் பல மடங்கு அதிகரித்தது. அதனால் அரசாங்கம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு என மட்டும் குறித்த பாஸ்போட்டை வழங்கும் முறையைக் கொண்டு வந்தது.

மத்திய கிழக்கு எனப்பட்ட மேற்காசிய அரபு நாடுகளில் உழைத்த பணம் நாட்டின் நாலா பகுதிகளிலும் புதுப் பணக்காரக் குடும்பங்களை உருவாக்கியது. காலச் சக்கரம் உருண்டது. போர் மேகங்கள் கருக்கொள்ள தப்பிக் கொள்வதற்காக வெளிநாடுகளுக்கு எம்மவர் போகத் தொடங்கும் நிலைமை 1980 களின் ஆரம்பத்தில் வந்தது. அப்போது பாஸ்போட்டின் தேவை எழுந்தது. கச்சேரி எனப்பட்ட மாவட்டச் செயலகங்கள் ஊடாக மட்டும் பாஸ்போட்டிற்கு விண்ணப்பிக்கும் முறை இருந்தது. அப்படி விண்ணப்பித்தால் 3 மாத கால அளவில் பாஸ்போட் வந்தது. நேரடியாகக் கொழும்பு சென்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினுள் உள்ளால் அலுவல் பார்த்து ஓரிரு நாள்களில் பாஸ்போட் எடுக்கும் வழக்கமும் இருந்தது.

புளத்சிங்கள தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராக வந்த றொனிடி மெல் வரவு செலவுத் திட்டத்தின் நிதிப் பற்றாக்குறைக்கு நிதி பெறும் வழிகளில் ஒன்றாக ஒரே நாளில் பாஸ்போட் பெறும் முறை ஒன்றை 1980 களின் ஆரம்பத்தில் கொண்டு வந்தார். பாஸ்போட் அலுவலகத்தில் அவரைப் பிடித்து இவரைப் பிடித்து இலஞ்சம் கொடுத்து பாஸ்போட்டை ஓரிரு நாள்களில் பெறுகின்றனர். அதை ஏன் அரசாங்கத்திற்கு வருமானமாக மாற்றக் கூடாதென நினைத்து இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தார். இத்திட்டம் பெரும் முன்னோடித் திட்டமாகப் பார்க்கப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்காக வழங்கப்பட்ட பாஸ்போட்டை சகல நாடுகளுக்கும் செல்வதற்கான நடைமுறையாக பொன்ட் சைன் எனப்பட்ட பிணை நிற்கும் நடைமுறை ஒன்றை அரசாங்கம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தி இருந்தது. இதன் படி குறிப்பிட்ட மட்டத்திற்கு மேலாக மாதச் சம்பளம் பெறும் ஒருவர் தமது நியமனக் கடிதம், சம்பள விபரப் பட்டியல் ஆகியவற்றைக் கொண்டு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு செல்லல் வேண்டும். அங்கு வைத்து உரிய படிவத்தை நிரப்பி சகல நாடுகளுக்கும் செல்வதற்கான பாஸ்போட் தேவைப்படுபவருக்கான பிணை எனப்பட்ட பொன்ட் சைன் (Bond Sign) வைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாஸ்போட்டில் பொன்ட் வைத்தவருக்கு என மாவட்டக் குறியீட்டு ஆங்கில எழுத்துடன் ஓர் இலக்கம் ஒதுக்கப்படும். அது பாஸ்போட்டில் குறிக்கப்படும். ஒருவருக்கு மாவட்டக் குறியீட்டுடன் ஒரு இலக்கம் ஒதுக்கப்பட்டால் வேறு ஒருவருக்கு அது வழங்கப்பட மாட்டாது. உதாரணமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் பொன்ட் சைன் வைத்தால் அவருக்கு துகு 00121 என இலக்கம் ஒதுக்கப்படும். அது போல அரசுக்கு வருமான வரி கட்டுபவர்களும் பொன்ட் சைன் செய்ய முடியும். அவருக்கும் இதே போன்ற நிபந்தனைகளும் உண்டு. அரச உத்தியோகத்தரின் சம்பள அளவுக்கும், வருமான வரி கட்டுபவர்களின் வருமான அளவுக்கும் ஏற்ப பொன்ட் சைன் வைக்கக் கூடிய தகுதி எண்ணிக்கை கூடும். பெரும்பாலும் ஒருவர் இரண்டு மூன்று பேருக்கு மேல் சைன் வைக்க விரும்புவதில்லை. ஏனெனில் வெளிநாட்டுக்குச் செல்பவர் திரும்பி வராவிட்டால் பொன்ட் சைன் வைத்தவர் தான் அதறகுரிய பிணைப் பணத்தைக் கட்ட வேண்டும். இதனால் பொன்ட் சைன் வைப்பவர்கள் தமக்கென ஒரு தொகைப் பணத்தை வாங்கிக் கொண்டு பிணை வைத்தார்கள்.

நிதி அமைச்சரான றொனி டிமெல் பின்னாளில் வரவு செலவுத் திட்டப் பிரேரணை மூலமாக சகல நாடுகளுக்குமான கடவுச் சீட்டைப் பெறுவதற்கான பொன்ட் சைன் முறையை நீக்கி விட்டார். அதன்படி மத்திய கிழக்கு நாடுகளுக்கான பாஸ்போட்டுக்கு ஒரு கட்டணமும், சகல நாடுகளுக்குமான பாஸ்போட்டுக்கு ஒரு கட்டணமும் அறவிடும் நடைமுறையைக் கொண்டு வந்தார். இது இலங்கையர் யாவருக்கும் சிறந்த ஓர் முறையாக இருந்தது. முன்பு பம்பலப்பிட்டியில் பாஸ்போட் பெறும் அலுவலகம் இருந்த போது காலை 6 மணிக்கே சனக் கூட்டம் அலைமோதும். வல்லரசுப் பனிப் போர்க் காலம் இருந்த போது கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி முரண்பாடுகள் தீவிரமாக இருந்தது. மேற்கு ஜேர்மனி கிழக்கு ஜேர்மனிய மக்களை வசியப்படுத்தி பேர்லின் எல்லைச் சுவரேறிக் குதிக்க வைத்தது. அதற்குப் பழிவாங்க கிழக்கு ஜேர்மனி இலங்கை போன்ற போர் மேகம் சூழ்ந்த நாடுகளிலிருந்து ஆள்களை தனது நாடு ஊடாக மேற்கு ஜேர்மனி போக வழிவிட்டது. எம்மவர் பல ஆயிரம் பேர் மேற்கு ஐரோப்பா போக கிழக்கு ஜேர்மனி தாராள உபயம் தந்தது. ஒருவரது பாஸ்போட்டை இன்னொருவர் உடமையாக வைத்திருப்பது சட்டப்படி குற்றம். ஆனால் ஏஜென்ஸிமார் பலரது பாஸ்போட்டை தமது உடமையாக வைத்திருப்பது சர்வ சாதாரணமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்போட்டில் தலைமாற்றி இன்னொருவரை அனுப்புவதனை ஹெல்மட் என அழைத்தார்கள். புலம் பெயர்ந்த பல இலட்சம் பேர் இன்று பிரித்தானியா, ஜேர்மனி, சுவிற்சலாந்து, சுவீடன், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என தாம் வாழ்ந்த நாடுகளின் பிரசையாகி அந்த நாடுகளின் பாஸ்போட்டுடன் சிறிலங்கா விசா பெற்று வருவது சாதாரண ஒன்றாகி விட்டது. கொழும்பு, கண்டி, அநுராதபுரம் ஆகிய இடங்களில் மட்டுமிருந்த பாஸ்போட் வழங்கும் அலுவலகங்கள் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்பாக மாகாணத்திற்கு ஒரு அலுவலகம் என அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டு விட்டது. வட மாகாணத்திற்குரிய அலுவலகம் வவுனியாவில் உள்ளது.

01.01.2019 ஆம் திகதி முதல் மத்திய கிழக்கு நாடுகளுக்காக பாஸ்போட் வழங்கும் முறை நீக்கப்பட்டு சகல நாடுகளுக்கான (All Countries) பாஸ்போட் மட்டுமே வழங்கும் நடைமுறையை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. பலாலி, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு போன்ற பிராந்திய விமான நிலையங்கள் இயங்கத் தொடங்கி விட்டன. அதிலும் பலாலி விமான நிலையம் 17.10.2019 முதல் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் என்ற பெயரில் இயங்கத்தொடங்கி விட்டது. வடபகுதி மக்களின் வாழ்வில் வாழ்க்கைத்தர உயர்வில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இது அமையப் போகிறது. இலங்கை இந்தியக் கலைஞர்களது பண்பாட்டுப் பரிமாற்றங்கள் இலகுவாகவும் வேகமாகவும் நடைபெறும் காலம் வந்து விட்டது.

*வேதநாயகம் தபேந்திரன்*
*மாவட்ட சமூக சேவைகள் அலுவலர்*
*கிளிநொச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட மரபுரிமைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவா பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org